ஜோதி

ஆசிரியர் வெ. சாமிநாத சர்மா

சுடர் 3 பிரமாதி௵ ஆவணி௴ செப்டம்பர்-1939 கதிர் 2

அடுத்த பக்கங்களில்

நமது நியாய சபை		1
எந்தெந்த நாட்டில் எவ்வளவு எவ்வளவு தங்கம் இருக்கிறது?		12
உலகத்திலே என்ன நடக்கிறது?	—கார்ட்டூன்கள்	13
எறும்பு—மனிதன்—இயற்கை —	ந. பழனிவேலு	16
சரியான தலைமை வேண்டும்—ட்ரோட்ஸ்கியின் கருத்து	—சமன் லால்	17
இன்றைய சமுதாயம் சீரழிந்து கொண்டு வருகிறதா? அப்படியானால் அதைத் தடுப்பது எப்படி?	—கங்கா பிரசாத்	22
தமயனின் கடிதம்—6	—தேவிதாசன்	31
அக்கா (தொடர்கதை)	—எம். வி. வேங்கட ராமன்	33
கம்பர்—உவமைப் பகுதி	—கா. லக்ஷ்மிநரசிம்மன்	41
இந்திய தேசீய இயக்கம்—எப்படி ஆரம்பித்தது?	—ஜி. டி. காரெட்	44
பார்லிமெண்ட் எப்படி நிருவாகம் செய்கிறது?	—மு. துரைசாமி	49
குழந்தை மகாராஜா	மொழி பெயர்த்தவர்:—பொ. திருகூட சுந்தரம் M. A. B. L.,	54
சுதந்திரத்தின் தேவைகள் யாவை? ஸன்-யாட்-ஸென்னின் பிரசங்கங்கள்	—வெ. சா.	55
வில்ஸனுடைய பதினான்கு தத்துவங்கள் என்ன?	—"அரசியல் மாணாக்கன்"	67
சமஷ்டி அரசியல் நிர்வாகம்	—கே. வி. ராமசுப்ரமண்யம் B. A. B. L.,	69
கண்ணால் காண்பதுவும் பொய்யா?	—"விஞ்ஞான போதகர்"	83

ஸத்யேந்திர ப்ரசன்ன சின்ஹா —"ஒரு காங்கிரஸ்வாதி" 91
துலாக்கோல் —புத்தக விமர்சனம் 93
வியாபாரக் கப்பல்களின் விவரம் — 96
கவுண்ட் லியோ டால்ஸ்டாய்—அவர் தம் மனைவிக்கு எழுதின கடைசி நிருபம். —ச. முனிஸ்வாமிப்பிள்ளை 97
புராதன எகிப்து —"துரோணன்" 99
மனக்கோயில்—கடவுள் வாழிடம் —எஸ். கே. நாராயண ஐயர் B. A., B. L. 101
உடலும் உயிரும் வித்வான்—எஸ். உமைதாணுபிள்ளை 104
காதற் பிரிவு —மு. ரா. வி. 105
வல்லரசுகளின் கப்பற் படை பலம் 107
அன்றுட உலகம் 108
டான்ஜிக் 113

அனுபவ ஜோதிஷர்

இவர் பல பிரபுக்களால் உண்மைப் பலன்களுக்காகப் பரிசுகள் பெற்றவர். எதிர் காலத்தைப் பற்றி 3 கேள்விகளுக்கு ரூபா 1. மேல் கேள்வி 1-க்கு அணு 8. ஜாதகம் கணிக்க ரூபா 2. மாதவாரி, ஒரு வருடப் பலன் யெழுத ரூ. 5. ஆயுள் பூராவாகப் பலன் யெழுத ரூ. 25. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை.

Lt col. கிரஹாம் சேடன் ஹட்சிசன் D. S. O. M. C. 'W. பிளான்' 'சாபு' இவைகளின் ஆசிரியர் லண்டன், 19-12-38-ல் தெரிவிப்பதாவது:

இவர் தெரிவிக்கும் ஜோதிட பலன்கள் மிக அதிசயிக்கத் தக்க, உண்மையான அனுபவத்திலிருந்து வருகின்றன. எனக்கு மிகவும் முக்கியமான சில விஷயங்களில் இவர் மிகத் தெளிவான அடையாளங்களைத் தெரிவித்தார். அதன் மூலமாக நான் சௌகரியம் அடைந்து வருகிறேன்.

விலாசம்:—பிரபசர் காழியூர்-

கோவிந்தாச்சாரி,

3-2, பிராடீஸ் ரோட், மயிலாப்பூர், சென்னை.

ஜோதி பப்ளிஷிங் கம்பேனி லிமிடெட்டால் பிரதி இங்கிலீஷ் மாதம் முதல் வாரம் வெளியிடப் பெறும்.

"ஜோதி"

வருஷ சந்தா

பர்மாவுக்கு	4—0—0
இந்தியாவுக்கு	4—8—0
மலேயா முதலிய எல்லா வெளி நாடுகளுக்கு	6—0—0

தனிப் பிரதி

பர்மா, இந்தியா	0—6—0
வெளி நாடுகளில்	0—8—0

— ஏஜெண்டுகள் எங்கும் தேவை —

விளம்பரங்கள் முதலிய விபரங்கட்கு நேரே எழுதுக

ஜோதி பப்ளிஷிங் கம்பெனி லிமிடெட்,
நெ. 47, 31-வது வீதி,
இரங்கூன்.

NOVEL SCHEME! UNIQUE SCHEME!!

MOST

PROFITABLE

AND

CHEAP

ADVERTISING LINE.

FOR

Business Men Dealing in various goods

and

desiring to advertise their goods

IN MANY PAGES.

IN

"JYOTHI" (D. Crown 1x8) 5″×7¼″

Write for Particulars

TO DAY

TO

THE JYOTHI PUBLISHING COMPANY LTD.,

47, 31ST STREET, RANGOON.

AND

Reserve your pages.

டாக்டர் ஸன்-யாட்-ஸென்

ஜோதி

கதிர் 3 செப்டம்பர்—1939 சுடர் 2

எண்ணம்

கண்ணுயிரம்படைத்தவனும் எண்ணித்தான் ஆக வேண்டும். புந்தி நிரம்பி விட்டாலும், சிந்தனை என்பது கடுகளவும் இல்லா விட்டால், அவன் நடை பிணம் போன்றவனே. ஏனென்றால், எண்ணந்தான் மனித சக்திகளின் ஊற்று; காரிய சாதனையின் விளைநிலன்; லட்சியத்திலே நம்மைக் கொண்டு சேர்ப்பிக்கிற கைகாட்டி மரம். ஆகவே, முதலில் நாம் எண்ண வேண்டும்; அந்த எண்ணம் வலுவடைந்து அதில் நமக்கு நம்பிக்கை விழ வேண்டும். அந்த நம்பிக்கை, தானாகவே, நம்மை ஒரு காரியத்தில் இறங்குமாறு அழைத்துக் கொண்டு போகும். இறங்குகிற காரியத்தில் வெற்றியேற்படுமா, தோல்வி யுண்டாகுமா வென்ற கேள்வி அப்புற மிருக்கட்டும். காரியத்தைச் செய்ய வேண்டியதுதான் நமது கடமை. அதன் பலாபலனைப் பற்றிக் கவலைப்பட நமக்கு உரிமையில்லை. கர்ம க்ஷேத்திரத்திலே பிரவேசித்து அங்கு வெற்றி காண வேண்டுமென்று விரும்புகிற ஒரு தனி மனிதனுக்கே, சிந்தனா சக்தி மிகவும் அவசியமாயிருக்கிறபோது, சுதந்திர மில்லாத ஒரு தேசத்திற்குச் சிந்தனா சக்தி எவ்வளவு அவசியமானது என்பதை நாம் சொல்லத்தேவையில்லை. தெரியாமலா ஓர் ஆங்கில அறிஞன், 'ஒரு தேசம் சிந்திக்கத் தொடங்கிவிடுமானால் அதனைத் தடுக்க யாராலும் முடியாது' என்று கூறினான்?

சிந்தனைக்கு, எண்ணத்திற்கு எவ்வளவு சக்தி யிருக்கிறதென்பதை நாம் உணர்ந்து கொண்டு விட்டோமானால், நாம் உடனே எண்ணத்தொடங்கி விடுவோம்; சிந்தனை செய்ய ஆரம்பிப்போம். அப்படியானால், இந்தியர்களாகிய நாம் எண்ணுவதே யில்லையா, சிந்திப்பதேயில்லையா வென்று சிலர் நம்மைப் பார்த்துக் கேட்கக்கூடும். இந்தக் கேள்விக்கு 'ஆம்' என்றுதான்நாம் பதிலளிக்க வேண்டியிருக்கிறது. நமக்கு இன்னும் சுயமாக எண்ணுந்திறனே ஏற்படவில்லையென்பதற்கு அத்தாட்சி, இன்னும் நாம் அந்நிய ஆதிக்கத்தின் கீழ் இருப்பதுதான். நாம் எண்ணுகிறோம்; நமக்குச் சிந்தனை யில்லா

மலில்லை. எண்ணுவதும், சிந்திப்பதுந்தான் நமது பாரம்பரைச் சொத்துக்களாயிற்றே. இல்லாமலா, 'எண்ணாத எண்ண மெல்லாம் எண்ணியெண்ணி' என்று பாடிப்போயினர் பக்தர் கூட்டத்தினர்? ஆனால் உளுத்துப்போன மரத்தைக் கொண்டு வீடு கட்டுவது போல, செல்லரித்துப் போன, கிழட்டுத்தனம் வாய்ந்த எண்ணங்களைக் கொண்டு சுயராஜ்யக் கோட்டையைப் பிடிக்கப் பார்க்கிறோம். நடக்கிற காரியமா இது? எண்ண வேண்டும் என்று சொன்னால் முற்போக்கான எண்ணங்களை எண்ண வேண்டு மென்பதுதான் இங்கே பொருள்.

எதற்காக இவ்வளவு தூரம் கூறுகிறோம்? நமது எண்ணத்திலே புரட்சி ஏற்பட வேண்டுமென்பதற்குத்தான். புரட்சி என்ற சொல்லைக் கேட்டவுடன், சிலருக்கு, ஆயுதமலை, ரத்த ஆறு, போல்ஷ்வெஸம் முதலிய கனவுகள் தோன்றி அவர்களை அலைக்கழிக்கின்றன! பாவம்! இப்படிப்பட்டவர்கள் நமது இரக்கத்துக்குத்தான் உரியவர்கள். ஒவ்வொரு நாளும், நமது தனிப்பட்ட வாழ்க்கையிலாகட்டும், நமது குடும்ப வாழ்க்கையிலாகட்டும், நமது சமுதாய வாழ்க்கையிலாகட்டும் எத்தனையோ புரட்சிகள் நடைபெற்றுக் கொண்டுதான் வருகின்றன. இவைகளை நாம் அநுபவித்து விடுகிறோம். கண்ணால் காண்பதில்லை. இதனால், இவை, நமக்குப் புரட்சிகளாகத் தோன்றுவதில்லை.

பரம்பரையாகக் குடுமி வைத்துக் கொண்டிருந்தவர்கள் என்ன காரணத்தினாலோ 'க்ராப்' வைத்துக்கொள்கிறார்கள். இஃதொரு நாகரிகப் புரட்சியல்லவா? கட்டை வண்டியிலேறிச் சென்ற நாம் இப்பொழுது ஆகாய விமானத்தில் பறந்து செல்கிறோம். இது விஞ்ஞானப் புரட்சியல்லவா? முற்காலத்தில் நமது மூதாதையர்கள், தங்கள் எண்ணங்களைக் கவிதைகளாகவே வெளிப்படுத்திக் கொண்டு வந்தார்கள். இப்பொழுது நாம் வசன நடைக்குத்தான் மதிப்புக் கொடுக்கிறோம். இது கலைப் புரட்சியல்லவா? இதுபோலவே, மனதிலே புரட்சி நிகழலாம்; வாக்கிலே புரட்சி உண்டாகலாம்; காயத்திலே புரட்சி தோன்றலாம். இப்படியே, அரசியல் புரட்சியென்றும், மதப் புரட்சியென்றும் சமுதாயப் புரட்சியென்றும் பலபடப் பகுத்துக் கூறலாம். ஆக, புரட்சி என்றால் என்ன? புரளுதல், ஒரு நிலையினின்று மற்றொரு நிலைக்கு மாறுதல் என்று அர்த்தம். அரசியலில் மாறுதல் வேண்டுகிற போது புரட்சி என்று சொல்கிறோம். கலை வளர்ச்சி சம்பந்தப்பட்ட மாறுதலை மறு மலர்ச்சி யென்கிறோம். விஞ்ஞானத்தைப் பொறுத்த மாற்றத்தை ஆராய்ச்சி என்கிறோம். ஆக எல்லாம் புரட்சிதான். அப்படியிருக்க, புரட்சி என்ற வார்த்தையைக் கேட்டு ஏன் மதிமயங்கிக் கதி கலங்க வேண்டுமோ தெரியவில்லை.

நமது எண்ணத்திலே புரட்சி ஏற்பட வேண்டுமென்று மேலே சொன்னோமல்லவா? அதனைச் சற்று விரிவுபடுத்திக்கூற விரும்புகிறோம். மனிதர்க ளெல்லோரும் மனிதத் தன்மையோடுகூட நடக்க வேண்டும். அப்படியானால் அந்த மனிதர்கள் வசிக்கும் சமுதாயமானது ஒழுங்காக இயங்குதல் வேண்டும். சமு

தாய ஒழுங்குக்கு அரசியல் சுதந்திரம் இன்றியமையாதது. எனவே, அரசியல் சுதந்திரமே நமது லட்சியமல்ல; லட்சியத்தையடைவதற்குரிய மார்க்கந்தான். ஒழுங்கான சமுதாயத்தை அமைத்துக்கொள்வதற்குத்தான் நாம் அரசியல் சுதந்திரம் வேண்டுகிறோம். பின்னதை அடையாவிட்டால், முன்னதை அடைய முடியாது.

அரசியல் சுதந்திரம் பெறுவது மேலானபடி; அதற்கும் மேலான படி லட்சியம் வாய்ந்த சமுதாயத்தை அமைப்பது. ஆனால் இவைகளுக்கெல்லாம் முதற் சோபானமாயிருப்பது என்ன? எந்த அரசியலானது, நம்மைச் சுதந்திரம் பெறவிடாமல் தடை செய்து நிற்கிறதோ அந்த அரசியலைப்பற்றியும், எந்தச் சமுதாயப் பழக்க வழக்கங்கள், நம்மை உண்மையான பிரஜைகளாகவும் மனிதத்தன்மையோடு கூடிய மனிதர்களாகவும் ஆக விடாமல் தகைந்து நிற்கின்றனவோ அந்தச் சமுதாயப் பழக்க வழக்கங்களைப் பற்றியும் நாம் கொண்டிருக்கும் எண்ணங்கள் மாற வேண்டும். அவைகளை எந்தப் பார்வையால் பார்க்கிறோமோ அந்தப் பார்வையையே திருப்ப வேண்டும். அதாவது, தற்போதைய அரசியலைப் பற்றியும் சமுதாயத்தைப் பற்றியும் நாம்* கொண்டிருக்கிற எண்ணத்தில் புரட்சி ஏற்பட வேண்டும். இருப்பதைச் சீர்திருத்த வேண்டுமென்ற எண்ணந்தான் இப்பொழுது இந்தியாவில் பெரும்பாலும் குடி கொண்டிருக்கிறதே தவிர, இருப்பதை மாற்றி யமைக்க வேண்டுமென்ற எண்ணம் இன்னும் உண்டாகவில்லை. உள்ள பொருளுக்கு வியாக்கியானந்தான் செய்கிறோமே தவிர, புதிய சிருஷ்டியொன்றையும் செய்யவில்லை. நமது தேசிய ஸ்தாபனமாகிய காங்கிரஸிலும், அதன் அங்கங்களாகிய அ. இ. கா. கமிட்டி, காரியக் கமிட்டி இவைகளிலும் நிறைவேற்றப்படுகிற தீர்மானங்களே தேசம் சீர்திருத்த மனப்பான்மையில் தோய்ந்து கிடக்கிறதென்பதற்குத் தகுந்த சாட்சியாகும். இந்தத் தீர்மானங்கள், இதுவரை, யாரையும் அசைத்துக் கொடுக்கவில்லை. நம்மையே, அவை, கண்ணைத் திறந்து பார்க்குமாறு செய்யவில்லையென்றால், யாரைக் குறித்து இந்தத் தீர்மானங்கள் நிறைவேற்றப்படுகின்றனவோ அவர்களையா அவை அசைத்துக் கொடுக்கப் போகின்றன? தவிர, இந்தச் சீர்திருத்த மனப்பான்மை இருப்பதினால்தான், நம்முடைய அரசியல் வாதங்களும் முன்னுக்குப் பின் முரணாயிருக்கின்றன. 'மகத்தான பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தோடு, இருப்பதா இறப்பதா என்று போராடிக் கொண்டிருக்கிற நாம்' என்று ஓரிடத்திலே தீர்மானத்தை நிறைவேற்றுகிறோம். ஆனால் 'தேசம் இப்பொழுது போராட்டத்திற்குத் தயாராயில்லை'யென்று மற்றோரிடத்தில் கூறுகிறோம். இதனால் நமது நிலை இன்னதென்று தெரியாத ஒரு திகைப்பு ஏற்படுகிறது. இதற்குக் காரணம், நமது மனப்பான்மையிலுள்ள கோளாறுதான். இதனாலேயே, இந்த மனப்பான்மை மாற வேண்டுமென்று கூறுகிறோம். எண்ணத்திலே புரட்சி ஏற்பட வேண்டுமென்று சொல்வதெல்லாம் இதுதான்.

உலக சரித்திரத்தை நாம் ஆராய்ந்து பார்க்கிறபோது, மானிட ஜாதியின் எண்ணமானது, ஒவ்வொரு காலத்தில் ஒவ்வொரு விதமாகப் பண்பட்டு வந்திருக்கிறது. ஒரு மனிதன், என்ன நிலையில், எந்த விதமான சுற்றுப்புறத்தின் நடுவில் வைக்கப்பட்டிருக்கிறானோ, அவைகளைப் பொறுத்தே அவனுடைய எண்ணமும் அமைகிறது. அந்த எண்ணம் வளர்வதும் தேய்வதும் அந்தச் சுற்றுப் புறத்தைப் பொறுத்ததே. இப்படியேதான் ஒரு சமுதாயமும். நமது இந்திய ஜன சமுதாயத்தை எடுத்துக்கொள்வோம். நம்முடைய வாழ்வின் எந்த அம்சத்தை எடுத்துக்கொண்டு பார்த்தாலும் அதற்கு அடியிலே ஒரே விதமான நீரோட்டந்தான் ஓடிக் கொண்டிருக்கிறது. அதுதான் மதம். எதற்கெடுத்தாலும் மதத்தின் துணையை நாடுகிறோம். அறிந்தே இப்படிச் செய்கிறோமா என்றால் அப்படியுமில்லை. நம்மையறியாமலே, நம்மை அந்த மத உணர்ச்சி தன்னிடத்தில் அடைக்கலப்படுத்திக் கொண்டிருக்கிறது. அதாவது, மதத்தைப் பற்றிய எண்ணம், மதப்பற்று, மத நம்பிக்கை அவ்வளவு ஆழமாக நம்மிடத்திலே பதிந்து போயிருக்கிறது. அரசியல் பிரசாரத்தில், நம் கருத்துக்கு மாறுபட்டவர்களைப் பரிகசிக்கிறபோதும், நம்மைச் சேர்ந்தவர்களைத் தூக்கி வைத்துப் பேசுகிறபோதுங்கூட, மதத் தொடர்பு கொண்ட புராண இதிகாசங்களிலே வரும் பேர்வழிகளை உதாரண புருஷர்களாக இழுத்துப் போட்டுக் கொள்கிறோமே தவிர, சரித்திரத்திலே வந்த, நமது நிகழ்கால வாழ்க்கைக்கு வழி காட்டக் கூடிய புருஷர்களின் பெயர்களை உபயோகிக்கிறோமில்லை. காவிரியையும் கங்கையையும் இணைக்க வேண்டுமென்று யாராவது சொன்னால், உடனே பகீரதனுடைய பெயர்தான் நமக்கு ஞாபகம் வருகிறதே தவிர, காவிரியைத் திருப்பி அணை போட்ட கரிகாற் பெருவளத்தான் என்னும் தமிழ்நாட்டு மன்னனுடைய நினைவு வருவதேயில்லை. பண்டித ஜவஹர்லால் நேரு, இலங்கைக்குப் போய் திரும்பி வந்தால், ஹனுமானைப்போல் திரும்பி வந்தார்; அங்கதனைப்போல் திரும்பி வந்தார் என்று ஸ்துதி பாட ஆரம்பிக்கிறோம். உபமான, உபமேயம் எவ்வளவு தூரம் பொருத்தமானதென்பதைக்கூட நாம் ஆலோசிப்பதில்லை. அறிவு நிறைந்த தலைவர்களுடைய நிலைமையே இப்படியிருக்கிறதென்றால், சாதாரண ஜனங்களின் நிலைமையைக் கேட்க வேண்டியதில்லை. ஊரிலே காலரா மும்முரமாக இருக்கிறதென்றால், தெய்வத்திற்குத் திருவிழா நடக்கிறது. வீட்டிலே யாருக்காவது ஜுரம் வந்து படுத்துக் கொண்டிருந்தால், திருப்பதி ஏழுமலையானுக்கு மஞ்சள் துணியில் காசு முடிந்து வைத்துப் பிரார்த்தனை செய்கிறோம். கூலிக்கு உழைக்கப்போன இடத்திலே, வேலை கிடைக்காமற் போனால் 'கடவுள் கண் திறக்கவில்லை' என்று சொல்லி நாம் கண் மூடிப்படுத்துவிடுகிறோம். நாம் பணம் ஜமால் செய்து வைத்திருந்த பாங்கி முறிந்துவிட்டதேயானால் 'இந்தப்பாழாய்ப் போன கடவுள் நம்மைத்தானா பரிசோதிக்கவேண்டும்' என்று கடவுளைச் சபிக்கிறோம். அன்றாட அலுவல்களில் நாம் உபயோகித்து வரும் பழ

மொழிகளை ஆராய்ந்து பாருங்கள். கடவுள், மதம், புராண இதிகாசங்கள் முதலியன நம்மை எவ்வளவு தூரம் இறுக்கிப் பிடித்து வைத்துக் கொண்டிருக்கின்றன வென்பது நன்கு தெரியும்.

கடவுளிடத்திலேயோ, மதத்தினிடத்திலேயோ நமக்குத் துவேஷமில்லை. அதற்கு மாறாக கடவுட் பக்தியும் மதப்பற்றும் நமக்கு நிரம்ப உண்டு. ஆனால் கடவுட் பக்தியோ, மதப்பற்றோ நமது பார்வையை மறைத்துவிடக் கூடாதென்பதுதான் நமது கட்சி. மதம், மனிதனுடைய சொந்த விஷயம். ஆத்ம சாந்திக்காகவோ, மனத் திருப்திக்காகவோ ஒருவன் மதம் சம்பந்தப்பட்டமட்டில் எப்படி வேண்டுமானாலும் நடந்து கொள்ளட்டும். அதைப்பற்றி யாருக்கும் எந்தவிதமான ஆட்சேபமும் இருக்க முடியாது. ஆனால் மதத்தை அரசியலிலே கொண்டு புகுத்தி, அதன் விளைவாகச் சமுதாயமானது பண்பட்ட பாதையில் செல்லவொட்டாதபடி தகைந்து விடக்கூடாதென்றுதான் நாம் கூறுகிறோம்.

மதத்தோடு பிணைந்து போயிருக்கிற இந்த மனப்பான்மை இந்தியாவுக்கு மட்டுந்தான் விசேஷமானதா என்று சிலர் கேட்கக்கூடும். அப்படியில்லை. ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு காலத்தில் இந்த மாதிரியான மனப்பான்மை ஏற்பட்டிருந்திருக்கிறது. உதாரணமாக ஐரோப்பாவில், கி. பி. பதினாறாவது நூற்றாண்டு வரை, மதத்தின் செல்வாக்கு சமுதாயத்தின் ஒவ்வொரு துறையிலும் பரவி யிருந்தது. இந்த உலகத்திலே நடக்கிற ஒவ்வொரு சம்பவத்தையும், 'கடவுள் சித்தம்' என்றுதான் ஜனங்கள் சொல்லி வந்தார்கள். உலகம் உருண்டையாயிருக்கிறதென்று சொன்னதற்காக, கொலம்பஸ் மத விரோதியாகக் கருதப்பட்டான். ஆனால் பிற்காலத்தில் விஞ்ஞான வளர்ச்சி ஏற்பட ஏற்பட மனிதனுடைய எண்ணமும் மாறுதலடைந்தது. இயற்கைச் சக்திகளோடு போராடிப் போராடிப் பெறுகிற அநுபவந்தான், மனிதனுடைய மனோபரிபக்குவத்தை அளந்துகாட்டும் கருவியா யமைகிறது. இந்தப் போராட்டத்தின் பரிணாமந்தான் விஞ்ஞானம். நாகரிகம் வர வர அபிவிருத்தி யடைந்து கொண்டு வருகிறதென்று நாம் சொல்கிறோமே, அதன் பொருள்தானென்ன? மனிதன் இயற்கையோடு போராடி அதன் மீது வெற்றி கொள்வதோ, அல்லது அதனைத் தனது பணியாளனாக வைத்துக் கொள்வதோதான் நாகரிக வளர்ச்சியின் சரித்திரமா யிருக்கிறது. இயற்கையின் மீது மனிதனை வெற்றி கொள்ளச் செய்வது எது? விஞ்ஞானம். விஞ்ஞான அறிவு பெருகப் பெருக, மனிதன், இயற்கையின் அந்தரங்கங்களை யெல்லாம் பரிசோதனை செய்து பார்க்க ஆரம்பிக்கிறான். அப்பொழுது அவன் அறிவு விசாலப்படுகிறது; மனம் விரிகிறது. மதப்பற்றினின்றும் விடுதலை யடைய விழைகிறான். அப்படியே விடுதலை பெற்று சுதந்திர புருஷனாக ஆகிறான். இப்படிச் சுதந்திர புருஷனாக வந்த நிலையில் இவனுக்கு ஒரு மகத்தான பரிசோதனை நடக்கிறது. மனிதன், தான் அடைந்த இந்தச் சுதந்திரத்தை தன்னலத்திற்காக வல்லாமல் பிறர் நலத்திற்காகப் பயன்படுத்த வேண்டும். அப்படிப்பயன்படுத்தாமல்

போனால், அந்தச் சுதந்திரமே அவனை அழித்து விடுகிறது. தற்பொழுது, மேனாட்டார், மேலே சொன்ன பரிசோதனையில் தேறாமல் போய்த்தான், பரஸ்பர அழிவுக்கு அடி கோலிக் கொண்டிருக்கிறார்கள். இந்தியர்களாகிய நாம் இதிலிருந்து ஒரு பாடங் கற்றுக் கொள்வது அவசியம். அந்தப் பாடத்தைக் கற்றுக் கொள்வதற்கு முன்னர், அட்சராப்பியாசம் போன்றது எண்ணப் புரட்சி. இந்த ஆரம்ப பாடத்தைக் கற்றுக் கொள்ள வேண்டுமென்றுதான் நாம்கூறுகிறோம். அதாவது, ஐரோப்பா கண்டத்தில் சுமார் நானூறு வருஷங்களுக்கு முன்னால் ஏற்பட்ட எண்ணப் புரட்சி, மனோவிகாசம், மறுமலர்ச்சி, இப்பொழுது நமது நாட்டிலே ஏற்பட வேண்டுமென்று கூறுகிறோம். இதைச் சிறிது விண்டு சொன்னால், நானூறு வருஷங்களுக்கு முன்னால் ஐரோப்பா இருந்த நிலையில் இப்பொழுது—இந்த இருபதாவது நூற்றாண்டில்—நாம் இருக்கிறோம். அந்தோ! நாம் எவ்வளவு வேகமாக முன்னேற வேண்டி யிருக்கிறது!

தெய்வத் திருவருள்தான், இந்தியாவையும் இங்கிலாந்தையும் ஒன்று கூட்டுவித்தது என்ற கொள்கையில் நமக்கு நம்பிக்கையில்லை. அப்படியே, இந்தியா சுதந்திரம் பெறுவதற்கு அந்தத் தெய்வத்திருவருளின் துணைதான் தேவை என்ற நம்பிக்கையிலும் நமக்கு நம்பிக்கையில்லை. நமது முயற்சியிலேதான் நமது விடுதலை இருக்கிறது. அப்படி முயற்சி செய்வதற்கு முன்னர் சரியான அஸ்திவாரம் போடவேண்டும். அதுவே நமது எண்ணத்திலே மாற்றம்; புரட்சி.

* * *

வெற்றி?

ஸ்ரீ சுபாஷ் சந்திர போஸ் மூன்று வருஷ காலம், எந்த காங்கிரஸ் ஸ்தாபனத்திலும் உத்தியோகம் வகிக்கக்கூடாதென்று வார்தாவில் கூடிய காங்கிரஸ் காரியக் கமிட்டி தீர்மானித்து விட்டது. ஸ்ரீ போஸ், இனி, சாதாரண நான்கணா அங்கத்தினராக வேண்டுமானால் இருக்கலாம். அஃது அவருடைய இஷ்டம். காரியக் கமிட்டிக்கு அதைப்பற்றிக் கவலை யில்லை. இந்தத் தீர்மானத்தைத் தமது தலை மீது சுமத்திக்கொண்ட ஸ்ரீ சுபாஷ் பாபுவினிடம் நாம் இரக்கங் காட்ட வில்லை. ஆனால், இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றிய காரியக் கமிட்டியின் துணிச்சலை நாம் உண்மையிலேயே பாராட்டுகிறோம். அப்படி அவர்களைப் பாராட்டுவதற்கு முன்னர், மகாத்மா காந்தியைத்தான் நாம் அதிகமாகப் பாராட்டவேண்டி யிருக்கிறது. ஏனென்றால், அவர்தான் இந்தத் தீர்மானத்தை எழுதி காரியக் கமிட்டி முன்னர் ஆஜர்படுத்தினார். பிறகு, அதற்கு ஆட்சேபனை இருக்குமா? இருக்கத்தான் முடியுமா? நாம் வகித்திருக்கும் ஸ்தானம் சாசுவதமானது; அதை யாரும் அசைக்க முடியாது; மற்றும், அரசாங்கத்தின் நிருவாகப் பொறுப்பு, அநேக மாகாணங்களில் நமது வசத்திலேயே இருக்கின்றது; என்பன போன்ற எண்ணங்கள் நிறைந்த ஒரு திண்ணிய மனப்பான்மைதான், இந்த மாதிரியான ஒரு தீர்மானத்திற்கு அங்கீகாரம் அளித்திருக்க முடியும். எப்படியும் அஹிம்சை வெற்றி பெற்று விட்டது; சுபாஷ் சந்திர போஸ்

விரட்டப்பட்டு விட்டார். திரிபுரியில் ஆரம்பித்த வேட்டை வார்தாவில் வந்து வெற்றிகரமாக முடிந்தது.

காரியக் கமிட்டி தீர்மானத்தின் விளைவாக சுபாஷ் சந்திர போஸ் கீழே விழுந்து விடவில்லை. நல்ல வேளையாக அவரை ஜன சக்தி தாங்கிக் கொண்டது. திரிபுரி காங்கிரஸ் தலைவர் தேர்தலின்போது, அவருக்கு சாதகமாயில்லாதவர்கள்கூட, இப்பொழுது அவர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்துக்கொண்டிருப்பதை ஆட்சேபிக்கத் தொடங்கி யிருக்கிறார்கள். ஜன சக்தி, எப்பொழுதுமே சாசுவதமாகத் தங்களுக்கு அடிமையாயிருப்பதாக முச்சலிக்கா எழுதிக்கொடுத்திருக்கிறதென்று தற்போதைய காங்கிரஸ் தளகர்த்தர்கள் நினைத்துக்கொண்டிருப்பார்களானால், சூரத் காங்கிரஸின்போது ஏற்பட்ட பிளவிலிருந்து அவர்கள் இன்னும் சரியான பாடங் கற்றுக் கொள்ளவில்லையென்றுதான் சொல்லவேண்டும்.

ஒரு விஷயத்தைப்பற்றி நாம் தீர்ப்புக் கூறுவதற்கு முன்னர், அதனைப் பல கோணங்களிலிருந்து ஆராய்ச்சி செய்த பின்னரே தீர்ப்புக் கூறவேண்டும். நாம் கூறுகிற இந்த தீர்ப்பு, சட்டத்திற்கு முரண்பட்டதாயில்லாமலிருக்குமா? தருமநியாயத்திற்கு விரோதமில்லாமலிருக்குமா? இந்தத் தீர்ப்பினால் ஏற்படும் பலா பலன்கள் விபரீதமாயில்லாமலிருக்குமா? இந்த மூக்கோணங்களில் நின்று, நாம் செய்கிற தீர்ப்பைக் கணித்துப் பார்க்க வேண்டும். முதல் கோணத்திற்குச் சட்டம் ஞானம் அதிகம் வேண்டும்; இரண்டாவது கோணத்திற்கு விசால இருதயம் வேண்டும்; மூன்றாவது கோணத்திற்கு ராஜதந்திர ஞானம் வேண்டும். இந்த மூன்றிலே முதலாவதான சட்ட ஞானம் காரியக் கமிட்டியினிடம் நிரம்ப இருக்கிறது. அதை யாருமே மறுக்க முடியாது. காரியக் கமிட்டி நிறைவேற்றுகிற தீர்மானங்களிலிருந்தே இது விகசிதப்படவில்லையா? ஆனால் தேசத்தின் துரதிருஷ்ட வசமாக, இந்தச் சட்ட ஞானத்தின் கீழ் செயலாற்றும் திறனும், ராஜதந்திர அறிவும் பதுங்கிக் கிடக்கின்றன!

ஸ்ரீ சுபாஷ் பாபுவின் விஷயமாகக் காரியக் கமிட்டி செய்திருக்கிற தீர்ப்பை மேலே கூறப்பட்ட மூன்று கோணங்களிலிருந்தும் சிறிது கவனிக்கலாமா? காங்கிரஸ் சட்டத்தை நாம் ஆராய்ச்சி செய்து பார்த்த வரையில், அ. இ. கா. கமிட்டி நிறைவேற்றுகிற தீர்மானங்கள், திட்டங்கள் முதலியன அநுஷ்டானத்திற்கு வராமல் எந்த ஒரு நபரேனும் முட்டுக் கட்டை போடுவாரானால், அந்த நபர் மீதுதான் காரியக் கமிட்டி ஒழுங்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாமென்று இருக்கிறது. பிரஸ்தாப விஷயத்தில் ஸ்ரீ போஸ், அ. இ. கா. கமிட்டி தீர்மானங்களுக்கு முட்டுக் கட்டை போட்டாரா அல்லது மேற்படி தீர்மானங்களைக் கண்டித்தாரா வென்று பார்த்தால், கண்டித்துத்தான் இருக்கிறாரே தவிர, முட்டுக் கட்டை போடவில்லை. எந்த ஒரு ஜனநாயக ஸ்தாபனத்திலும், ஒரு விஷயத்தைப் பற்றி எதிர்த்துப் பேசவோ, கண்டிக்கவோ, அங்கத்தினர் அனைவருக்கும் உரிமையுண்டு.

ஆனால் விஷயத்திற்கு விரோதமாகத் தான் நடக்கக் கூடாது. சட்ட ரீதியாகப் பார்த்தால் ஸ்ரீ போஸ், சாதாரண இந்த ஜனநாயக உரிமையைத்தான் உபயோகித்துக் கொண்டிருக்கிறார். அப்படி அவர், இந்த உரிமையை உபயோகித்தது, ராஜதந்திரமல்லாததாக இருக்கலாம். அவர், இப்படிச் செய்தது, அவருடைய சூனிய ராஜ தந்திரத்தையே காட்டுகிறதென்று 'ஜோதி'யின் சென்ற கதிரிலேயே நாம் சுட்டிக் காட்டியிருக்கிறோம். ஆனால் அதற்காக அவரைச் சட்டத்தைக் கொண்டு தண்டிக்கக்கூடாதென்பதே நமது வாதம்.

இரண்டாவது கோணமாகிய தரும நியாயத்திலிருந்து கவனிப்போம். ஸ்ரீ போஸ், தியாகத் தீயில் நன்றாகக் குளித்தெழுந்தவர். இரண்டு முறை காங்கிரஸ் தலைவராகத் தெரிந்தெடுக்கப்பட்டவர். இரண்டாவது முறை தலைவராகத் தெரிந்தெடுக்கப்பட்ட போழ்து, உரிமைச் சக்திகள் அனைத்தும் ஒன்று சேர்ந்து கொண்டு அவரை எதிர்த்தன. ஆயினும் அவர் வெற்றியே பெற்றார். இஃதொன்றினாலேயே, அவரிடம் தேசம் ஒரு வகையாகவேனும் மதிப்பு வைத்திருக்கிறதென்பது நன்கு புலப்படவில்லையா? இந்த மதிப்புக்காவது, காங்கிரஸ் தளகர்த்தர்கள் மதிப்புக் கொடுத்திருக்க வேண்டாமா? தவிர, ஸ்ரீ போஸ், காந்தியம் என்கிற தபோவனத்தின் எல்லையிலிருந்து ஓர் அடி கூட அப்புறம் எடுத்து வைக்கவில்லை. காந்திய வட்டத்திற்குள் தான் அவரும் சுற்றுகிறார். ஆனால் கொஞ்சம் வேகமாகச் சுற்றி வருவோமே என்பதுதான் அவர் கட்சி. காங்கிரஸினிடம் அவர் கொண்டுள்ள பக்தி மேலீட்டினால், அவர் சில சமயங்களில் கொஞ்சம் மிடுக்காக, தலை நிமிர்ந்து பேசியிருக்கலாம். இது தவறா? அப்படி அவர் மிடுக்காகப் பேசியதும், அவரிடத்தில் இயற்கையாயமைந்த சுபாவமா? இல்லவே இல்லை. அவர், தமது முதுகெலும்பில் வலுவில்லையென்பதை, திரிபுரி காங்கிரஸிலேயே நிரூபித்துக் கொண்டு விட்டார். ஆனால் சாதுவான பசுவும், தன்னை அடிக்க வந்தவர்களை முட்டித் தான் பார்க்கிறது. அதைப் போல், காங்கிரஸ் தளகர்த்தர்களின் ஊசிக் குத்தல்களைப் பொறாமல், அவர்—ஸ்ரீ போஸ்—சிறிது மிடுக்காகப் பேசியிருக்கலாமே தவிர, வேறு காரணம் இருக்க முடியாது. இவைகளையெல்லாம் மனதில் கொண்டு, சிறிது விசால திருஷ்டியுடன் காங்கிரஸ் தளகர்த்தர்கள், ஸ்ரீ போஸின் நடவடிக்கையை கவனித்திருப்பார்களானால், இந்த ஒழுங்கு நடவடிக்கையில் இறங்கியிருக்கமாட்டார்கள்.

மூன்றாவது கோணமாகிய ராஜ தந்திரத்தின் மீது சிறிது நின்று பார்ப்போமா? ஸ்ரீ போஸ், எப்படி ராஜதந்திரமற்ற முறையில் நடந்து கொண்டு தம்மீது ஒழுங்கு நடவடிக்கையை வருவித்துக் கொண்டாரோ, அப்படிப்போலவே, காங்கிரஸ் தளகர்த்தர்களும் ஸ்ரீ போஸ் விஷயத்தில் ராஜதந்திர மற்ற முறையில் நடந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் ராஜதந்திரிகளாயிருந்தால், 9-7-39ல் நடைபெற்ற எதிர்ப்புக் கூட்டங்களை பொருட்படுத்தாமலிருக்க வேண்டும். அந்தக் கூட்டங்களில், தேசத்தின் தீவிர சக்திகளெல்லாம் ஒன்று சேர

வில்லையென்பதை நாம் ஏற்கனவே எடுத்துக் கூறியுள்ளோம். சிதறிப் போயிருக்கிற இந்தச் சக்திகளைக் கண்டு, 'காங்கிரஸ் சேனாதிபதித்துவம் சலசலப்புக் கொள்ளாது' என்று நாம் நம்பினோம். ஆனால் அது சலசலப்புக் கொண்டு விட்டதுபோல் தெரிகிறது. காரியக் கமிட்டியார், ராஜதந்திரமற்ற இந்த ஒழுங்கு நடவடிக்கையினால், தேசத்தின் தீவிர சக்திகளை ஒன்று சேருமாறு உற்சாகப்படுத்தியதோடு, ஸ்ரீ போஸின் செல்வாக்கையும் மேல் தூக்கிக் கொடுத்திருக்கின்றனர் என்பதுவே நமது அபிப்பிராயம்.

பொதுவாக, ஸ்ரீ சுபாஷ் சந்திர போஸ் மீது எடுத்துக்கொள்ளப்பட்ட இந்த ஒழுங்கு நடவடிக்கை காரணமாக, காந்தீயத்தின் செல்வாக்கு குறைந்துவிடுமென்றே நாம் அஞ்சுகிறோம். திரிபுரி காங்கிரஸ் தலைவர் தேர்தலின் போது, டாக்டர் பட்டாபியின் தோல்வி என் தோல்வியென்று மகாத்மா காந்தி கூறினார். இப்பொழுது ஸ்ரீ சுபாஷ் சந்திர போஸ் மீது கொண்ட வெற்றி யாருடைய வெற்றி?

* * *

யுத்தமா?

பிரதி வருஷமும், இந்த ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்கள் சாபக்கேடான மாதங்கள் போலிருக்கிறது! சென்ற வருஷம், ஜெக்கோ—ஸ்லோவேகியாவை ஜெர்மனி ஜீரணித்துக் கொள்வதற்கு முகாந்திரமாக எப்படி யுத்த நெருக்கடி ஏற்பட்டதோ அதுபோலவே, இந்த வருஷத்திலும், டான்ஜிக்கும் போலந்தும் மறைந்து போவதற்கு முகாந்திரமாக யுத்த நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. ஆனால் நம்மைப் பொறுத்த மட்டில, இந்த யுத்த நெருக்கடி, நெருக்கடியாகவே இருந்து கழிந்து போகுமே தவிர, உலக யுத்தமாக மூண்டு விடாதென்று தான் கருதுகிறோம்.

உலக யுத்தம் மூளுமாவென்ற பிரச்னை தீவிரமாக எழுவதற்கு முக்கிய காரணம் ஜெர்மனிக்கும் ருஷ்யாவுக்கும் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட ஒப்பந்தந்தான். இந்த விஷயத்தில் ஹிட்லரும், ஸ்டாலினும், தங்களுடைய சிறந்த ராஜதந்திரத்தைத் தெளிவாக உலகினுக்கு நிரூபித்து விட்டார்கள்.

சென்ற நான்கு மாத காலமாக, பிரிட்டனுக்கும் ருஷ்யாவுக்கும், ஒப்பந்தம் நிறைவேற்றிக் கொள்வதன் சம்பந்தமாக சமரஸப் பேச்சுகள் நடைபெற்று வந்தன. பிரிட்டிஷ் ராணுவ தளகர்த்தர்களும் ருஷ்ய ராணுவ தளகர்த்தர்களும் கலந்து பேசினார்கள். இன்று, அல்லது மூன்று நாளில், அதம பட்சம் ஒரு வாரத்தில் ஆங்கிலோ—சோவியத் ஒப்பந்தம் நிறைவேறிவிடும் என்று அவ்வப்பொழுது உலகினிற்கு அறிவித்து வரப்பட்டது. இந்தச் சமரஸப் பேச்சுகள் நடைபெற்று வந்த அதே சமயத்தில், ருஷ்யாவுக்கும் ஜெர்மனிக்கும் ரகசியமாக சமரஸப் பேச்சுகள் நடைபெற்று வந்ததாகத் தெரிகிறது. உலகத்தின் கவனத்தையெல்லாம் ஒரு புறத்தில் திருப்பி விட்டு, வேறொரு புறத்தில் தங்கள் காரியத்தைச் சாதித்துக் கொள்வதில் நாஜி சர்வாதிகாரியும், சோவியத் சர்

வாங்கிகாரியும் எவ்வளவு சாமர்த்திய சாலிகள் என்பதை இது நன்கு எடுத்துக் காட்டுகிறது.

இந்த ஜெர்மன்—சோவியத் ஒப்பந்தத்தின் விளைவுகளை வரிசைக் கிரமமாகக் கூறுவோம் :—

1. பொதுவுடமைக் கொள்கை பரவாமலிருப்பதற்கும், அதன் சக்திகளை எதிர்த்துப் போராடும் பொருட்டும், ஜெர்மனி, ஜப்பான், இத்தலி ஆகிய மூன்று நாடுகளும் சேர்ந்து செய்து கொண்ட 'ஆண்டி—கோமிண்டர்ன் பாக்ட்' (Anti—Comintern Pact) உடைந்து விட்டது. இதனை உடைத்த பெருமை ஸ்டாலினைச் சேர்ந்தது.

2. ஜெர்மனியோடு ருஷ்யா ஒப்பந்தஞ் செய்துகொண்டு விட்டதனால், ஜெர்மனிக்கும் ஜப்பானுக்கும் இடையே அவநம்பிக்கையைக்கிளப்பி விட்டு விட்டான் ஸ்டாலின்.

3. ஜப்பான் ஜெர்மனியிடம் அவநம்பிக்கை கொண்டுவிட்டது என்பது இப்பொழுது பகிரங்கமாகி யிருக்கிறது. இதுகாறும் பிரிட்டனிடம் ஜப்பான் காட்டி வந்த மிடுக்கு இப்பொழுது தளர்ந்திருப்பதை யாருமே எளிதில் கண்டுணரலாம். டீன்ட்ஸின் முற்றுகையும், ஹாங்காங் முற்றுகையும் இப்பொழுது தளர்த்தி விடப்பட்டிருக்கின்றன. இவைகளுக்கெல்லாம் காரணம் என்ன? ஜெர்மனி மீது ஜப்பானுக்குள்ள அவநம்பிக்கைதான். ஒரு நண்பன் கைவிட்டு விட்டாலும் மற்றொரு நண்பனையாவது பகைத்துக் கொள்ளாதிருக்க வேண்டுமல்லவா?

4. இனி, ஜெர்மனி, கிழக்கு ஐரோப்பாவிலும், ருஷ்யா, கீழ் நாட்டிலும் தங்கள் கைகளை முறையே விரித்துக் கொள்ளும். ஜெர்மனி, போலந்தைத் தான் வசப்படுத்திக் கொள்வதற்கு ருஷ்யா ஒரு தடையா யிருக்குமோ வென்று இதுகாறும் கருதி வந்தது. இனி அதற்கு இந்தப் பயமில்லை. ஜெக்கோஸ்லோவேகியாவுக்கு ஏற்பட்ட கதி டான்ஜிக்குக்கும் போலந்துக்கும் வெகு சீக்கிரத்தில் ஏற்படுமானால் அதைக் குறித்து யாருமே ஆச்சரியப்பட வேண்டியதில்லை. ருஷ்யாவின் ஆதரவு இல்லாமல் போலந்துக்கு பிரிட்டன் எவ்வித உதவியும் செய்ய முடியாது. இப்பொழுது ருஷ்யா ஒதுங்கி விட்டதனால், பிரிட்டனும் போலந்துக்கு உதவி செய்யாது. எனவே போலந்து ஜெர்மனியோடு ஐக்கியப்பட வேண்டியதுதான்.

5. ஜெர்மனி போலந்தை ஆக்கிரமித்துக் கொண்டுவிடுமானால் அது ருஷ்யாவைப் பாதிக்காதா என்று சிலர் கேட்கலாம். பாதிக்காது என்றுதான் கூறுவோம். ஏனென்றால் ஜெர்மனியினுடைய ஆசை, ஐரோப்பாக் கண்டத்துக்குள்ளேயே எப்படி அடங்கி யிருக்கிறதோ, அப்படியே ருஷ்யாவுக்கும் ஐரோப்பாவுக்குப் புறம்பாக—சிறப்பாக தன் தென் கிழக்குப் பிரதேசத்தில்தான்—ஆசை பரவி யிருக்கிறது. ஆசியா கண்டத்தின் கிழக்குப் பாகத்தில் தன் இஷ்டப்படி நடந்து கொள்ள ஜெர்மனி விட்டுவிடுமானால் ஐரோப்பாவில் ஜெர்மனி அதனிஷ்டப்படி நடந்துக் கொள்வதை ருஷ்யா தடுக்காது.

6. ஜப்பான் இப்பொழுது பிரிட்டனிடம் சுமுகம் காட்டுவதற்கு மற்றொரு முக்கியமான காரணம் என்ன

வென்றால் எங்கே சீனாவில்தான் பரப்ப விரும்பும் ஆதிக்கத்திற்குப் போட்டியாக ருஷ்யா வந்துவிடப் போகிறதோ என்ற கவலைதான். ஏற்கனவே பொது உடைமைக் கொள்கைக்கு சீனா ஒரு பண்பட்ட நிலமாயிருந்திருக்கிறது. இதனால் ருஷ்யாவின் செல்வாக்கு சீனாவில் மிகச் சுலபமாகப் பரவிவிடும் என்று ஜப்பான் நினைக்கிறது. இதனாலேயே மற்றொரு ஏகாதிபத்தியத்தின் துணையை நாடுகிறது.

7. சிலர் நினைக்கலாம், ஸ்டாலின் ஜெர்மனியோடு ஒப்பந்தம் செய்து கொண்டதனால் தன் பொது உடைமை லட்சியத்தைக் கைவிட்டு விட்டான் என்று. இதற்கு ஸ்டாலின் என்ன பதில் கூறுவான் என்பது நமக்குத் தெரியாது. ஆனால் ஸ்டாலினைப் பொறுத்தமட்டில் ஜெர்மனியோடு ஒப்பந்தம் செய்து கொண்டாலும் செய்துகொள்ளாவிட்டாலும், பிரிட்டனோடு ஒப்பந்தம் செய்துகொண்டாலும், செய்து கொள்ளாவிட்டாலும் எல்லாம் ஒன்றுதான். ஏனென்றால் இரண்டு நாடுகளும் பொதுவுடைமைத் தத்துவத்தை எதிர்த்து நிற்கின்றவை. இது ஸ்டாலினுக்கு நன்றாகத் தெரியும். யாருடன் (தற்காலிகமாக?) ஒப்பந்தம் செய்துகொண்டால் கை மேல் பலன் கிடைக்குமென்று யோசித்துப் பார்த்தே அவன் இந்த ஒப்பந்தத்தைச் செய்திருக்கிறான். இதனால் அவன் தன் பொதுவுடைமை லட்சியத்தைக் கைவிட்டு விட்டானா என்பது நமக்குச் சந்தேகமாயிருக்கிறது.

8. பிரிட்டன் இனி என்ன செய்யப்போகிறது? ஜெர்மனி என்னவோ தற்போது மேற்கு ஐரோப்பாவில் தன் திருஷ்டியைச் செலுத்தாது. அப்படி இருக்க பிரிட்டன் தானே வலிய ஜெர்மனியுடன் சண்டைக்குப் போக முடியாது. பிரான்சும் அப்படியே சும்மா இருந்துவிடும். கீழ் நாட்டிலே தங்களுடைய உரிமைகளுக்கும் செல்வாக்குக்கும் ஏதேனும் ஊறு நிகழும் என்று தெரிந்தால் தான், பிரிட்டனோ பிரான்ஸோ யுத்தத்தில் இறங்கும். அப்படி சமீபத்தில் ஏற்படுவதற்கான ஹேஷ்யங்கள் ஒன்றும் நமக்குப் புலனாகவில்லை. இதனால் தற்போதைய நெருக்கடியானது உலக யுத்தமாக மூளாது என்று மறுபடியும் கூற விரும்புகிறோம்.

9. ருஷ்யாவும், ஜெர்மனியும் ஒப்பந்தம் செய்துகொண்டு விட்டதனால் அதிகமான ஆபத்து யாருக்கென்றால், ருமேனியா, யூகோஸ்லோவியா, பல்கேரியா முதலிய தென் கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்குத்தான். ஏற்கனவே ருமேனியாவின் மீது ஜெர்மனி பொருளாதார விஷயத்தில் ஆதிக்கம் செலுத்த புறப்பட்டிருக்கிறது. 23-3-1939ல் நிறைவேற்றப்பட்ட ஜெர்மன்–ருமேனிய பொருளாதார ஒப்பந்தத்தைக் காண்க. அப்படியானால் போலந்துக்குப் பிறகு ருமேனியாவா என்ற கேள்வி எழுவது நியாயமேயல்லவா?

10. இந்தக் குழப்பத்தில் இத்தலி என்ன செய்யும்? முஸோலினியின் ராஜ தந்திரம் எப்பொழுதுமே எளிதில் புரிந்து கொள்ளக்கூடாத அவ்வளவு கடினமானது. எதியோப்பியாவில் அவன் கண்ட வெற்றியும் கடினமானது தானே. சமீபத்தில் அவன் அல்பேனியாவை ஸ்வீக

ரித்துக் கொண்டது எளிதிலே நிறைவேறி விட்ட காரியமாயிருந்தாலும் அதற்கு முன்னர் அல்பேனியாவைப்பற்றி அவன் கொண்டிருந்த மனப்பான்மை தான் என்ன என்பதை யாருமே தெரிந்து கொள்ள முடியவில்லை. அப்படியே யூகோஸ்லாவியாவிடத்திலும் அவன் என்ன மனப்பான்மை கொண்டிருக்கிறானென யாருக்குத் தெரியும். யூகோஸ்லாவியாவின் ரீஜெண்டான பால் மன்னன் ரோம் பெர்லின் அச்சின் வல்லமையில் மயங்கி நிற்பவன் என்பதை மட்டும் இங்குக் குறிப்பிட விரும்புகிறோம்.

பொதுவாகக் கூறுகிற போது நாஜீயமும் போல்ஷ்வெஸமும் ஒன்றுக்கொன்று முட்டிக்கொண்டுமடிந்து போகும் என்றும், அது வரையில் நாகரிக தேவதைக்கு யுத்தச் சிலம்பை கட்ட விடாமல் பார்த்துக் கொள்வதோடு சமாதான தூபமும் போட்டு வரலாம் என்றும் ஜனநாயக வல்லரசுகள் கருதி அப்படியே நடந்தும் வந்தன. அவைகளுக்கு இப்பொழுது பெரிய ஏமாற்றம் ஏற்பட்டிருக்கிறது. ஆனால் இந்த ஏமாற்ற நிலையிலே வெகுண்டு போய் அவை யுத்த மணியை அடிக்குமா? மணி அடிப்பதற்காகக் கையை ஓங்கலாம். மணி என்னவோ அடிக்கப்படமாட்டாது.

எங்கெந்த நாட்டில் எவ்வளவு எவ்வளவு தங்கம் இருக்கிறது?

நாடு			பவுன் மதிப்பு
அமெரிக்கா	....	....	2,600,000,000
இங்கிலாந்து	....	....	540,000,000
பிரான்ஸ்	....	....	480,000,000
ஹாலந்து	....	....	200,000,000
ஸ்விட்ஜர்லாந்து	....	....	135,000,000
ஸ்பெயின்	....	....	105,000,000
பெல்ஜியம்	....	....	100,000,000
அர்ஜன்டைன்	....	....	88,000,000
ஸ்வீடன்	....	....	56,000,000
பிரிட்டிஷ் இந்தியா		....	55,000,000
ஜப்பான்	....	....	54,000,000
இத்தலி	....	....	42,000,000
கானடா	....	....	38,000,000
தென்னாப்பிரிக்காயூனியன்		....	38,000,000
ருமேனியா	....	....	25,000,000
நார்வே	....	....	20,000,000
ஜெக்கோஸ் லோவேகியா		....	19,000,000
ஜாவா	....	....	16,000,000
ப்ரேஜில்	....	....	7,000,000
ஜெர்மனி	....	....	6,000,000

உலகத்திலே என்ன நடக்கிறது?

யுத்த தேவன் இப்படிக் கொக்கரிப்பானு வென்று
எல்லாரும் கவலைப்பட்டுக் கொண்டிருக்கிருர்கள்.

யுத்தத்தை நிறுத்தவே யுத்தம் ஏற்பட்டதாக **1914**ம் வருஷத்தில் சொல்லப்பட்டதே. அதெல்லாம் போய் யாகப் போய் விட்டதாவென்று சமாதான தெய்வம் ஏங்கிக்கொண்டிருக்கிறது.

23-8-39ல் ருஷ்யாவுக்கும் ஜெர்மனிக்கும் சிநேக ஒப்பந்தம் நிறை வேறியது. பாவம், ஸ்ரீ சேம்பர்லேன் முகத்தைத் திருப்பிக் கொண்டு விட்டார்.

ஆவணிமீ கரு

எறும்பு—மனிதன்—இயற்கை.

ந. பழனிவேலு

உழவர் செல்லும் வழியிற் சாய்ந்த
செழுமாங் கிளையின் நுனியில் ஒரு நாள்
உணவை நாடி ஊர்ந்தே சென்ற
தினையள வுள்ள சிற்றெறும் பொன்று
அயர்வோ டேகும் உழவர் வரவை
பெருமூச்சுடனே நோக்கிப் பேசும்:-

“நாள் முழுதும் நான் நடந்து நடந்து
கால்கள் ஓய்ந்து போயிற் றெனது
வீடும் தொலைவில் உளது; துணைவர்
தேடும் நேரம் ஆயிற் றெனவே
போதும் மனிதர் வாகன மேறி
ஏதுத லில்லம் இனி தாம் வழியே!”

என்றிவ்வாறு எண்ணும் எறும்பு
சென்ற தோர் உழவன் சிரமேற் றவி
இருந்த ததனை அவனும் அறியான்.
நிமிர்ந்துட் கார்ந்த எறும்பும் ஆங்கே
மனிதச் சவாரி செய்கையில் உள்ளம்
இனிதாய் மாற எழுந்தது கனவும்.

“ஆஹா! என்னைச் சுமந்து செல்லும்
வாகனம் மனிதன்! வலியோன் நானே;
அறிவால் யாவும் ஆளலா மென்ற
பெரியோர் திருமொழி பெரிதும் உண்மை;
உருவிற் சிறியன் எனினும் யானே
அறிவிற் பெரியன் ஆதலால் தானே.

“மலைபோல் வளர்ந்த மாபெரு மனிதன்
தலைமீதேறிச் சவாரி செய்கின்றேன்.
எறும்பின் அடிமை மனிதன்! இவனை
விரும்பின் அழிவும் செய்வேன்” என்றே
கடித்தது. உழவன் கரத்தாலதனை
எடுத்து நசுக்கி மாய்த்தே கினனே.

அறிவால் இயற்கை வசமா மென்ற
பெருமை தவறு; பெரிதாம் இயற்கை
முழுதும் அடக்கி ஆளுந் திறனோர்
பொழுதும் முடியா தறிமின்; மனிதர்
தமையே ஈன்ற தாயும் இயற்கை.
அமையும் அறிவும் அவள்தந் ததுவே.

சரியான தலைமை வேண்டும்—ட்ரோட்ஸ்கியின் கருத்து

—சாமன் லால்

ஸ்ரீ சாமன் லால், பத்திரிகைத் தொழிலில் நிரம்ப அநுபவமுடைய ஓர் இந்திய அறிஞர். இவர், தற்போழ்து அமெரிக்காவிலுள்ள மெக்ஸிகோவில் அஞ்ஞாதவாசம் போல் தனிவாழ்க்கை நடத்திவரும் ஸ்ரீ லியோன் ட்ரோட்ஸ்கியைச் சந்தித்துப் பேசிய வரலாற்றை இக்கட்டுரையில் தெரிவிக்கிறார்.

ட்ரோட்ஸ்கி ஒரு பழைய பசலியென்றும், அவருடைய செல்வாக்கெல்லாம் போய் விட்டதென்றும், உலக அரசியல் விவகாரங்களைப் பற்றி அவர் கூறும் அபிப்பிராயங்களுக்கு மதிப்பே இல்லையென்றும் இந்தியாவிலுள்ள சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள். இந்த அபிப்பிராயம் எவ்வளவு தவறானது என்பது அவரை நேரில் சந்தித்து அவருடன் சம்பாஷித்துப் பார்த்தவர்களுக்குத்தான் தெரியும். உலகத்தில் எத்தனையோ புரட்சிக்காரர்கள் இருக்கிறார்கள். அவர்களில்பெரும்பாலோர் அரைக்கணமாவது ஓய்வு பெருமல் இருக்க மாட்டார்கள். ஆனால் ட்ரோட்ஸ்கிக்கோ ஓய்வென்பதே கிடையாது. ருஷ்யாவில் ஸ்டாலின் ஆட்சியை ஒழித்து உலகப் புரட்சியை உண்டாக்க வேண்டுமென்ற தம் எண்ணம் கைகூடவேண்டுமென்று சதா கனவு கண்டு கொண்டிருக்கிறார். சாதாரணமாக, தேசப் பிரஷ்டம் செய்யப்பட்டவர்கள் சோர்ந்து போய் தனிமையிலே காலங் கழிக்க விரும்புவார்கள். ஆனால் ட்ரோட்ஸ்கியோ எப்பொழுதும் உற்சாகமாகவே இருக்கிறார். தம்முடைய எண்ணங்கள் விரைவில் கைகூடுமென்ற தன்னம்பிக்கை இவருக்கு நிரம்ப இருக்கிறது.

பத்து வருஷங்களுக்கு முன்னால் ட்ரோட்ஸ்கியின் புகழ் உச்சஸ்தானத்தில் இருந்தது. இப்பொழுதோ எல்லோராலும் வெறுக்கப்படுகிற புருஷராக இருக்கிறார். ஆயினும் இவருடைய மனோ உறுதி குன்றவில்லை. இவருடைய புன் சிரிப்பில் களங்கம் ஏற்படவில்லை. இதனால் இவர் ஒரு அசாதாரணமான மனிதர் என்று தெரிகிறதல்லவா?

ருஷ்யாவில் ஜார் ஆட்சி நிலவியிருந்தபோது ட்ரோட்ஸ்கி பல முறை சிறைவாசம் அநுபவித்திருக்கிருர். இரண்டு முறை ஸைபீரியாவுக்கு அனுப்பப்பட்டு இரண்டு முறையும் தப்பி வந்திருக்கிறார். 1917-ம் வருஷம் ருஷ்யாவில் புரட்சி ஏற்பட்ட

போது. ட்ரோட்ஸ்கி அமெரிக்காவி லுள்ள நியூயார்க் நகரத்தில் வெளி யான ஒரு ருஷ்யப் பத்திரிகையின் ஆசிரியர் குழுவில் ஒருவராயிருந்தார். ருஷ்யாவில் ஜார் ஆட்சி வீழ்ந்தது. அமெரிக்காவிலிருந்த ட்ரோட்ஸ்கி யின் நண்பர்கள் சிலர் இவருக் கென்று பணம் வசூலித்து அதைக் கொண்டு இவரைக் கப்பலேற்றி ருஷ் யாவுக்கு அனுப்பினார்கள். ருஷ்யா சென்றதும் போல்ஷ்விக்க சேனையின் பிரதம சேனாதிபதியாக நியமிக்கப்பட் டார். பின்னர் ருஷ்ய சோவியத் அரசாங்கத்தின் அன்னிய நாட்டு மந்திரியானார். இந்தக் காலத்தில் இவருக்கிருந்த செல்வாக்கு வேறு யாருக்கும் இருக்கவில்லை. பின்னர் ஸ்டாலினுக்கும் இவருக்கும் பகைமை ஏற்பட்டு ஒருவருக்கொருவர் வஞ்சம் தீர்த்துக்கொள்ளக்கூடிய நிலைமைக்கு வந்தார்கள். ஸ்டாலின் அதிகார பதவி யேற்ற பிறகு ட்ரோட்ஸ்கியை தேசப்பிரஷ்டம் செய்துவிட்டான்.

1929-ம் வருஷம் ஸ்டாலினால் பிரஷ்டம் செய்யப்பட்ட ட்ரோட்ஸ்கி முதலில் துருக்கிக்குச் சென்று ப்ரிங் கிபோ தீவில் ஒரு தனி வீட்டில் வசித்துக் கொண்டிருந்தார். ஆனால் அங்கும் இவருக்கு அமைதி ஏற்பட வில்லை. ஏனென்றால் அந்த வீடு திடீரென்று தீப்பற்றி எரிந்து சாம்ப லாகிவிட்டது. இந்தக் காலத்தில் ட்ரோட்ஸ்கி அருமையான தொரு நூல் எழுதி அதைப் பூர்த்தி செய்து கையெழுத்துப் பிரதியாக வைத்திருந் தார். இதனை வெளியிடும் உரிமையை அனுமதிப்பதற்காக ட்ரோட்ஸ்கி முப் பது லட்சம் ரூபாய் பெறுவது என்று எல்லா ஏற்பாடுகளும் செய்து முடிவடைந்திருந்தன. ஆனால் மேற் படி வீட்டுடன் இந்தக் கையெழுத்து பிரதியும் சாம்பலாகிவிட்டது. இதன் பின்னர் ட்ரோட்ஸ்கி பிரான்ஸுக்குச் சென்றார். அங்கே இவருடைய நடவடிக்கைகள் பிடிக்காமல் பிரெஞ்ச் அரசாங்கத்தார் இவரை நார்வே தேசத்திற்கு அனுப்பினார்கள். நார்வே அரசாங்கத்தாரும் ஸ்டாலி னுக்கு விரோதமாக இவர் செய்து வரும் பிரசாரத்தை விரும்பாமல் இவருடைய சுதந்திரத்தைப் பறி முதல் செய்து தனியாக ஓரிடத்தில் காப்பில் வைத்தார்கள். இப்படி யிருக்கிறபோது, மெக்ஸிகோ நாட் டுக் குடியரசின் தலைவனான லஜாரோ கார்டெனாஸ் இவருக்கு அழைப்பு அனுப்பி தன்னாட்டில் வந்து வசிக்கு மாறு கோரினான். அப்படியே ட்ரோட்ஸ்கியும் மெக்ஸிகோவுக்கு வந்து சேர்ந்தார். இங்கு வந்து சுமார் இரண்டு வருஷத்துக்கு மேலா கிறது. இந்த இரண்டு வருஷ காலத் தில் இவருடைய செல்வாக்கு மிகப் பெருகி யிருப்பதோடு சரீரமும் நல்ல புஷ்டி யடைந்திருக்கிறது. இவர் கோயாக்கான் என்ற கிராமத்தில் ஒரு பெரிய மாளிகையில் வசிக்கிறார். உலகப் பிரசித்தி பெற்ற ஓவிய நிபுண னான டீகோ ரிவேரா என்பவனுடைய மாளிகை இது. ட்ரோட்ஸ்கியின் வாசத்துக்கென்றே இதனைத் தனி யாக விட்டிருக்கின்றான். இந்த மாளிகை ஒரு பெரிய கோட்டை என்றுதான் சொல்ல வேண்டும். மெக்ஸிகோ அரசாங்கத்தைச்சேர்ந்த சுமார் 30 போலீஸ்காரர்கள் இந்த மாளிகையின் முன் வாசலில் ஆயுத பாணிகளாய் சதா பாராக் கொடுத் துக் கொண்டிருக்கிறார்கள். தவிர

மாளிகையின் உட்புற மிருக்கிற ட்ரோட்ஸ்கியின் அந்தரங்கக் காரிய தரிசிகள் மற்ற வேலையாட்கள் முதலிய எல்லோரும் எப்பொழுதும் ஆயுத பாணிகளாகவே இருக்கிறார்கள். ஸ்டாலினுடைய வேலையாட்களின் சூழ்ச்சிகளுக்கு ட்ரோட்ஸ்கி இரையாகாமலிருக்கும் பொருட்டே இந்த பந்தோபஸ்து செய்யப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

ஒரு நாள் மாலை 6 மணிக்கு நான் ட்ரோட்ஸ்கியைச் சந்திப்பதாக ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது. ட்ரோட்ஸ்கியின் பிரெஞ்சு காரியதரிசி ஒருவர், நான் தங்கியிருக்கும் இடத்திற்குவந்து ட்ரோட்ஸ்கியின் பேட்டிக்காகஎன்னை அழைத்துக் கொண்டு போனார். போகிற வழியில்ட்ரோட்ஸ்கியின் மாளிகைக்கு அருகாமையில் நான்கு பக்கத்துத் தெருக்களும் சந்திக்கிற நாற்சந்தி இடமொன்றிருக்கிறது. இங்கேதான் போலீஸ் பாரா இருக்கிறது. இந்தப் போலீஸ்காரர்கள் எப்பொழுதும் ஆபத்தை எதிர் பார்த்துக் கொண்டிருப்பது போல் உஷாராகவே இருக்கிறார்கள். மாளிகை அருகாமையில் சென்றேன். முதல் 'கேட்டு' உட்பக்கம் பூட்டப்பட்டிருந்தது. என்னை அழைத்து கொண்டு வந்த பிரெஞ்சுக் காரியதரிசி 'கேட்டு'க்குப் பின் புறம் பாராக் கொடுத்துக் கொண்டிருந்த காவலாளியிடம் ஏதோ குசு குசுவென்று சொன்னார். அவனும் உடனே 'கேட்டை'த் திறந்து விட்டான். முதலில் நுழைகிற இந்தக் கேட்டு வாசலே ஒரு மோட்டார் லாயம் மாதிரி இருந்தது. இரண்டு பக்கங்களிலும் காவலாளிகள் ஆயுத பாணிகளாய் விரைப்புடன் நின்றார்கள். இவர்களைப் பார்த்து எனக்கு ஒருவித அச்சம் தோன்றியதென்பதை நான் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். உள்ளே சென்றதும், ஒரு பெரிய முற்றம் இருந்தது. அங்கு வைக்கப்பட்டிருந்த ஒரு புஸ்தகத்தில் என்னுடைய பெயர், நான் வந்த நேரம் முதலிய விவரங்களெல்லாம் எழுதி வைத்தேன். இங்கிருந்து நேராக ட்ரோட்ஸ்கியினுடைய அறைக்கு அழைத்துச் செல்லப்பட்டேன். ஒரு பெரிய மேஜைக்குப் பின்னால் அவர் உட்கார்ந்திருந்தார். மேஜையின் மீது ருஷ்ய, ஜெர்மன், மெக்ஸிகன், இங்கிலீஷ் முதலிய பாஷைகளில் வெளியான பத்திரிகைகள் பரப்பிக் கிடந்தன. ஒரு பக்கத்தில் கட்டுரைகள் எழுதுவதற்காகவும், ரேடியோ பிரசங்கங்கள் செய்வதற்காகவும் அவர் தயாரித்து வைத்த குறிப்புகள் இருந்தன. இன்னொரு புறத்தில் ஒரு கத்தை 'ப்ரூப்' வைக்கப்பட்டிருநதது. சமீபத்தில் ட்ரோட்ஸ்கி வெளியிடப் போகும் 'உலகப் புரட்சி' என்ற புத்தகத்தின் 'ப்ரூப்' என்று தெரிந்துகொண்டேன். நான் உள்ளே நுழைந்ததும் ட்ரோட்ஸ்கி புன் சிரிப்போடு எழுந்து நின்று என்னை வரவேற்று கை குலுக்கி எதிரே இருந்த ஓர் நாற்காலியில் உட்காரச் சொன்னார். 'நாமிருவரும் சம்பாஷிக்கிற போது என்னுடைய காரியதரிசி இங்கே இருப்பதில் உங்களுக்கொன்றும் ஆட்சேபமில்லையே' என்று ட்ரோட்ஸ்கி என்னைக் கேட்டார். எனக்கு எவ்விதமான ஆட்சேபணையும் கிடையாதென்றும், நான் எவ்வித ரகசியமும் பேச வரவில்லையென்றும் பதில் கூறினேன்.

காரியதரிசியும் அறையின் கதவு அருகில் துப்பாக்கி சகிதம் நின்று கொண்டு எங்கள் சம்பாஷணையைக் கேட்டுக் கொண்டிருந்தார். சுமார் ஒரு மணி நேரம் நாங்கள் சம்பாஷித்தோம்.

ட்ரோட்ஸ்கியை நான் சந்திப்பதற்கு முன்னர் என்னைப் பற்றி அவர் தெரிந்து கொள்ள வேண்டுமென்பதற்காக நான் எழுதியிருந்த 'அழிந்து கொண்டிருக்கிற ஏகாதிபத்தியம்' என்றபுஸ்தகத்தை அவருடைய காரியதரிசி அன்று காலையில்தான் அவரிடம் கொண்டு போய்க் கொடுத்திருந்தார். நான் போன போது அந்தப் புஸ்தகம் அவருக்கு முன்னால் மேஜைமீதிருந்தது. நான் சென்றவுடன் ட்ரோட்ஸ்கி அந்தப் புஸ்தகத்தைக் கையிலெடுத்துக் கொண்டு, 'காந்தியின் கூட்டுறவு பிரிட்டனுக்கு ஏற்பட்டிருந்தும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் அழிந்துவிடும் என்று நினைக்கிறீர்கள் இல்லையா?' என்று கேட்டார். அதே மூச்சில் கொஞ்சம் கோபத்துடன் 'ஊம், அப்படியானால் ஹிட்லரோடு காந்தி சண்டை போடப் போகிறார்' என்றார். இதைக் கேட்டதும் எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. மஹாத்மா அந்த மாதிரி ஒன்றும் சொல்லவில்லையே என்ற சிந்தனையில் ஆழ்ந்தேன். 'மஹாத்மா காந்தி அப்படியொன்றும் சொல்லவில்லையே' என்று நான் கூறினேன். ட்ரோட்ஸ்கியோ மஹாத்மாவினுடைய அறிக்கை ஒன்றைத் தாம் படித்ததாகவும், அதில் ஹிட்லரோடு தாம் சண்டை போடுவதற்குத் தயாராக இருப்பதாக அவர் தெரிவித்திருப்பதாகவும் கூறினார். அந்தச் செய்தி தவறாயிருக்கக்கூடுமென்றும் மஹாத்மா காந்தியின் அஹிம்சா தர்மத்திற்கு அது விரோதமென்றும் நான் கூறினேன். ஆனால் ட்ரோட்ஸ்கியோ தாம் கூறியதையே வற்புறுத்திக் கூறிக்கொண்டே 'காந்தி ஹிட்லரோடு சண்டை போடுவதற்குப்பதிலாக ஏன் கிரேட் பிரிட்டனோடு சண்டை போடக்கூடாது?' என்றார். என்னுடைய மேற்படி நூலின் அட்டைப் புறத்தில், காந்தியடிகளின் உருவப்படம் வரையப்பட்டிருந்தது. இந்தப் படத்தைச்சுட்டிக் காட்டிக்கொண்டே, ட்ரோட்ஸ்கி, 'காந்தி, முதல் தரமான ஒரு சந்தர்ப்பவாதி. உங்களைப் போன்ற இளைஞர்கள், இரண்டாந்தரத்துச் சந்தர்ப்பவாதிகள்' என்றார். இதே மூச்சில், அமெரிக்காவின் தலைவரான ரூஸ்வெல்ட், பண்டித ஜவஹர்லால் நேரு முதலியோரும் சந்தர்ப்பவாதிகளென்றும், இந்தியா விடுதலை பெற வேண்டுமானால், அது, சந்தர்ப்பவாதிகளின் தலைமையிலிருந்து விலகிக் கொள்ள வேண்டுமென்றும் கூறினார். நான் இந்த அபிப்பிராயத்தை மறுத்து, காந்தி சமரஸமாகப் போகக் கூடியவராயிருந்த போதிலும், அவர்தான் இப்பொழுது இந்தியாவிலேயே மிகச் செல்வாக்குள்ள தலைவரென்றும், எந்த விதமான இயக்கமும் அவருடைய ஒத்துழைப்பின்றி நடைபெறாதென்றும் அழுத்திச் சொன்னேன். அவர், இதற்குப் பதிலாக, 'உங்களைப் போன்ற இளைஞர்கள், சுயமாகச் சிந்தித்துக் காரியங்களைச் செய்யாமல் போனால், இந்தியாவுக்கு விமோசனமே கிடையாது என்று சொன்னார். மேலும் அவர் கூறியதாவது:—

"இந்தியாவிலுள்ள பாமர ஜனங்கள், உலகத்திலேயே மிக அருமையான ஜனங்கள். அவர்களுடைய உண்மை நிறைந்த களங்கமற்ற சுபாவம், லட்சியத்திலே அவர்கள் கொண்டிருக்கிற நம்பிக்கை, தலைவர்களிடத்தில் அவர்கள் காட்டுகிற பக்தி, அவர்களின் தியாக புத்தி முதலிய அருங் குணங்கள் பெரிதும் பாராட்டத்தக்கன. ஆனால் இந்தியாவுக்கு, தகுதியான தலைவர் இல்லாதது குறைவாயிருக்கிறது. இந்தியாவின் தலைமையானது, சூனியமாகவும், அடிக்கடி ஆட்டங் கொடுத்துக் கொண்டும் இருக்கிறது."

(அ. பி. ப.)



லியோன் ட்ரோட்ஸ்கி

இன்றைய சமுதாயம் சீரழிந்து கொண்டு வருகிறதா?

அப்படியானல் அதைத் தடுப்பது எப்படி?

——கங்கா பிரசாத்

அரசியல் அறிவில் வளர்ச்சி பெற்று வரும் தற்போதைய இந்தியாவில், அபேதவாத தத்துவத்தைப்பற்றிய எண்ணமும் வளர்ந்து வருவதை நாம் காண்கிறோம். அபேதவாத தத்துவத்தை காரிய ரூபத்தில் நடத்திக் காட்டும் திடசித்தமுள்ளவர் ஒரு சிலரே இன்று இந்தியாவில் தென்படலாம். ஆனல் அந்தத் தத்துவத்தைப்பற்றிய எண்ணம் தினேதினே வளர்ந்து வருவதை ஒருவரும் மறுக்க முடியாதல்லவா?

நம்முடைய தேசத்தின் சிறிய சிறிய கிராமங்களிலுங்கூட தற்போது இந்தத் தத்துவத்தைப் பற்றி பேசப்படுகிறது. இந்த அபேதவாத தத்துவத்தைப் பற்றி விவாதிக்கப்படுவதை• ஜனங்கள் மிக ஆவலுடன் கேட்கிறார்கள். பொருளாதாரத் துறையிலே நசுங்குண்டு அமுங்கிக் கிடக்கும் இந்தியா, இந்த அபேதவாத தத்துவத்தின் ஸ்பரிசத்தால் புத்துணர்ச்சி பெற்று வருவதை ஸ்பஷ்டமாக நாம் பார்க்கிறோம். இந்தத் தத்துவம் நம்முடைய கனவுகளையெல்லாம் நனவாக்கிவிடுமென நம்புகிறோம். உலகத்திலே இது ஒரு புதிய தத்துவமானதால் கவர்ச்சிகரக்கூடியதா யிருப்பது சகஜந்தான். ஆனல் எந்த ஒரு விஷயமும், பொது ஜனங்களிடத்திலே பிரசாரம் செய்யப்பட்டு அவர்களுடைய பூரண ஆதரவைக்கொண்டே அந்த விஷயம் காரிய ரூபத்தில் நடைமுறையில் அனுஷ்டிக்கப் படுகிறது. ஆனல் ஒன்றுமட்டும் நிச்சயம். உலக நாகரிக மேடையிலே, மற்ற தேசங்களுக்குச் சமதையாகவாவது தலை நிமிர்ந்து நிற்பதற்கு இந்த அபேதவாத தத்துவம் வழி காட்டுமானல், அழுகிக் கிடக்கும் தன்னுடைய சமூகக் கேடுகளுக்கு இது பரிகாரமாயிருக்குமானல், தன்னுடைய பழைய நாகரிக மென்னும் விலங்குகளையும் உடைத்தெறிந்துவிட்டு, இந்த அபேதவாத தத்துவத்தை ஆலிங்கனம் செய்து கொள்வதற்கு நமது பாரத பூமி பின் வாங்காது; பின் வாங்கவும் முடியாது.

சமுதாய அமைப்பிலே மாறுதலைச் செய்வதென்றால் அது லேசான காரியமில்லை. ஆனால் இந்த மாறுதலை ஒருவரும் தடைப்படுத்தி விடவும் முடியாது. இந்த மாறுதல் இயற்கையாகவே நியமமாக ஏற்படக்கூடிய விளைவுதான். இந்த மாறுதலை, மற்றொரு பெயரால் அழைப்பதானால் புரட்சி என்றும் சொல்லலாம். புரட்சி இரண்டு வகைப்பட்டதாகும். ஒன்று, நமக்குப் பிரத்தியட்ச ரூபமாகத் தெரியும்படி நிகழ்வது. அதாவது, மழை, வெயில், குளிர், உஷ்ணம், இவைகளால் பூமி, அடிக்கடி இயற்கையாகவே மாறுதலடைந்து வருவதை நாம் பிரத்தியட்சமாகக் காண்கிறோமில்லையா? மற்றொன்று திடீரென்று நிகழும் மாறுதல். பூகம்பம், எரிமலை முதலியன இந்த வகையைச் சேர்ந்தவை. இவை நாம் எதிர்பாராதவாறு பெரிய புரட்சியை ஏற்படுத்தி விடுகின்றன. இந்த மாறுதல்கள் தினே தினே நியாயமாக நடைபெற்றுக்கொண்டேதானிருக்கின்றன. ஆனால் இந்த மாறுதல் சமுதாயத்தின் ஏதாவது ஒரு பாகத்தையேனும் தாக்கும் பட்சத்தில நாம் மருண்டு போகின்றோம்.

புரட்சி, அல்லது மாறுதல் என்று கூறுகிறார்களல்லவா, அது ஒரு தேசத்திலோ, அல்லது ஒரு சமூகத்திலோ திடீரென்று உண்டாகும் காரியமல்ல. அப்படி அதைத் திடீரென்று உற்பத்தி செய்யவும் முடியாது. ஆனால் கண் முன்னே ஒவ்வொரு தேசத்திலும், அல்லது சமூகத்திலும் எத்தனையோ புரட்சிகள் நடந்து முடிந்து விட்டன; நடந்துகொண்டிருக்கின்றன. இவை காரிய ரூபத்தில் நடைபெறும்போது, இவற்றின் விளைவுகள் வெளித் தோன்றும் போதுதான் புரட்சி என்று பகிரங்கமாகப் பார்க்கிறோம். ஆனால் இந்த புரட்சி உண்டாவதற்கான காரணங்கள் ஏற்கனவே, உள்ளூர இயற்கையாக வேலை செய்துகொண்டிருந்தன என்பதை நாம் முக்கியமாக ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்.

ஒவ்வொரு மனிதனும் சமூகத்தின் ஒரு பாகம். சமூகம் என்பது என்ன? மனிதர்கள் சேர்ந்த ஒரு சேர்க்கை, அல்லது ஸ்தாபனம். இந்த ஸ்தாபனத்தில் மனிதர்கள் இயற்கையாகவே ஒருவருக்கொருவர் உதவியாளர்களாகப் பிணைக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்கள் அநுதினம் வேலை செய்ய வேண்டும். ஒவ்வொருவருடைய வேலைக்கும் கூலி கிடைக்கும்படி சம்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. உதாரணமாக, நம்முடைய பாரத தேசத்தின் ஒரு கிராமத்தை எடுத்துக்கொள்வோம். அந்த கிராமத்தை ஒரு சமூகமாக வைத்துக்கொள்வோம். அங்கு, கணக்கன், அம்பலம், தலையாரி, ஆசாரி, குயவன், வண்ணான், நாவிதன், குடும்பன், தோட்டி என்ற ஒன்பது கூத்தர்களிருக்கிறார்கள். கிராமத்தின் ஒரு பாகந்தான் இந்த ஒன்பது கூத்தர்களும். இவர்கள் ஒவ்வொருவரும் தினம் வேலை செய்யவேண்டும்; அப்படியே செய்கிறார்கள். அந்த வேலை ஒவ்வொருவருக்கும் உதவியாக அமைந்திருக்கிறது. ஆனால் கொஞ்சம் கூர்ந்து நோக்கினால் அந்த உதவிக்குப் பிரதியாக மேற்படி கூத்தர்

களில் ஒவ்வொருவருக்கும் கூலி கிடைக்கிறது. இந்தச் சமூகத்தில் ஏதாவதொர் அங்கம் பழுதாய்ப் போனால் சமூகமே இயங்காது. அதாவது சமூகம் நடைபெற வேண்டுமானால் மேற்படி ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் வேலையைச் செய்ய வேண்டும். நாவிதன் அவன் தொழிலைச் செய்யவில்லையானால் என்னாகும்? கிராமவாசிகள் மீசையும் தாடியுமாய்க் காட்சி யளிப்பார்கள். அதாவது சமூகத்தில் ஏதோ கோளாறு ஏற்பட்டுவிட்டது. இந்த ஒரு கிராமத்திற்குக் கூறிய உதாரணத்தைக் கொண்டு உலகம் பூராவுக்கும் பார்த்துக் கொள்ளலாம். இந்த விதமாக உலகம் பூராவும், உழைப்பு, பலன் என்ற சூத்திரத்தால் கட்டப் பட்டிருக்கிறது. இப்படியே உலக நிகழ்ச்சிகளின் பலன் சமுதாயத்தை யும், உலகம், சமுதாயம் இவை இரண்டினுடைய பலன் ஒவ்வொரு தனி மனிதனையும் முறையே சாருவதாகும்.

உலகத்தின் ஜன சமுதாயத்தை இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கலாம். மனிதனுக்குத் தேவையான, அதாவது அவனுடைய வாழ்வுக்குப் போதுமான சகல பொருள்களும் உலகத்தில் பரவிக் கிடக்கின்றன. அந்தப் பொருள்கள் ஒவ்வொரு மனிதனுக்கும் தகுந்தவாறு நியமமாகக் கிடைப்பதற்கு சட்டம் மூலம் பாதுகாப்பளிக்க வேண்டும். இந்த விதமான ஒரு ஜன சமுதாயத்தை உலகத்தில் ஸ்தாபிக்கவேண்டும் என்பவர்கள் ஒரு சாரார். இவர்களை பௌதிக வாதிகள் அல்லது உலகாயத வாதிகள் என்று கூறுகிறார்கள். இன்னொரு சாரார், இந்த உலகத்தை யல்லாமல் மற்றோர் உலகம் உண்டென்று நம்புகிறவர்கள். அதனை யடைய வேண்டுமென்று ஆவல் கொண்டவர்கள். இவர்களை ஆத்மவாதிகள் என்று அழைக்கிறார்கள். பௌதிகவாதி, அரசியல் நீதி மூலம், உலகத்திலே சுகத்தையும் அமைதியையும் நிலை நாட்ட விரும்புகிறான். இந்த உலகத்தைத் தவிர இன்னொரு உலகத்தைப்பற்றி அவன் கவலைப்படுவதில்லை. ஏன், அவன் அதை நம்புவதுமில்லை. ஆத்மவாதி இந்த உலக விஷயங்களை ஏற்றுக்கொண்டாலும், இதைத் தவிர இன்னோர் உலகத்தைப்பற்றி பூரணமாக நம்புகிறான். அந்த உலகத்தின் சுகத்தைப் பெறுவதற்கு இந்த உலக வாழ்க்கையிலே யாதொரு கேடும் இருக்கக் கூடாதென்றும் அவ்விதம் ஏதாவது ஒரு குறை நேரிடின் அந்த உலகத்தின் பயன்குறையுமென்றும் ஆத்ம வாதி கூறுகிறான். உதாரணமாக, கல்வியை எடுத்துக் கொள்ளுவோம். ஒவ்வொருவரும் கல்வி கற்க வேண்டும்; அப்போதுதான் இந்த உலகத்திலே ஆனந்தமாக வாழலாம் என்று பௌதிக வாதி கூறுகிறான். ஆனால் ஆத்மவாதி, ஒவ்வொருவரும் கல்வி கற்க வேண்டும்; அப்போது தான் ஆத்மப்பிரகாசம் ஏற்படும்; அந்த உலகத்தின் பலன் கிடைக்கும் என்று கூறுகிறான். மற்றும் ஆத்மவாதி, தான் சொல்லும் மோட்சப் பிராப்திக்கு இந்த உலக வாழ்க்கையிலே அனுஷ்டிக்க வேண்டிய சில நியமங்களை வரையறுக்கிறான். அதாவது, பக்தி, மும்மலங்களை வெல்லுதல் முதலியன. மற்றவர்களிடத்திலே துவேஷம் கொள்ளாதவன் எவனோ, எவனுக்கு, சத்துரு அல்லது

மித்துரு - என்ற பேதமில்லையோ, எவன் கோபத்தை வென்றவனோ, ஆசையாத, கலங்காத அறிவுள்ளவன் எவனோ, சுக துக்கங்களைச் சமமாகப் பாவிப்பவன் எவனோ, எவன் ஆசை அற்றவனோ அவனே பக்தன்; அல்லது மும்மலங்களையும் வென்றவன். அப்படிப்பட்ட பக்தனும் இந்த உலகத்தில் வாழ்வதினிமித்தம் காரியங்களைச் செய்ய வேண்டியவனாயிருக்கிறான். இல்லையானால் ஜன சமுதாயத்திலே அவனும் ஒருவனாயிருக்க முடியாதல்லவா? ஆனால் ஒரு பக்தன், ஜன சமுதாயத்தால் மிகவும் போற்றிக் கொண்டாடப்படுகிறான். தங்களுக்கு வழி காட்டியாக ஜனங்கள் அவனை மதிக்கிறார்கள். சமுதாய சம்பந்தப்பட்ட விஷயத்தில், ஆத்மவாதி; பௌதிகவாதி, அதாவது அபேதவாதி இருவருடைய அபிப்பிராயமும் ஒன்றுதான். அது எப்படி என்பதைக் கீழே விளக்குவோம்.

ஆத்ம வாதியின் கட்சி	அபேதவாதியின் கட்சி
1—இந்த உலகம் பகவானுடைய மாயை; இங்கு நடைபெறுபவை அந்தப் பகவானது திருவிளையாடல்; இந்த உலக சேவையே ஈசுவர சேவை.	1—இந்த உலகம் கடவுளின் மாயையல்ல; அவருடைய திருவிளையாடலுமல்ல. மனிதன் தன்னுடைய சக்தியிலேதான் பூரண நம்பிக்கை கொள்ள வேண்டும். இந்த சித்தாந்தத்தின் அர்த்தம், ஒவ்வொரு மனிதனிடமும், அவனுடைய சாமர்த்தியத்திற்குத்தகுந்தவாறு வேலைவாங்கி, அவனுடைய வாழ்க்கைத் தேவைக்குத் தகுந்தவாறு கொடுத்தல் என்பதே,
2—ஒவ்வொரு மனிதனும் யாகம் செய்யவேண்டும். அதுவே, அவன் இந்த உலகத்திலே வாழ்ந்து கொண்டிருக்கிறான் என்பதைக் குறிக்கும். (யாகம் என்பதை இங்கு கர்மம் என்ற பொருளில் கொள்ளல் வேண்டும்)	2—ஒவ்வொரு மனிதனும் உழைக்க வேண்டும். அதுவே, மனிதன் இந்த உலகத்திலே வாழ்ந்து கொண்டிருக்கிறான் என்பதைக் குறிப்பதற்கு மிகவும் அவசியமானது.
3—கர்மம் இயற்கையின் விளைவு. அந்த இயற்கை ஒவ்வொருவரையும் பலவந்தமாக வேலைசெய்விக்கிறது.	3.—இயற்கையின் உயிர் மனிதன். அதனுடைய பிடிப்பிலிருந்து இவன் விலக முடியாது. மனிதன் இயற்கையை உபயோகித்துக் கொள்ளுகிறான். ஆனால் முடிவில் அதனிடமே சரணாகதி அடைகிறான்.
4—கீதையிலே கூறியிருப்பதாவது:— ஆதியிலே பிரம்மாவானவர், யாகத்தின் மூலமாக ஜீவர்களை உற்பத்திசெய்து, இந்த	4.—இயற்கையினுடைய சக்தி, ஒவ்வொருவருடைய உழைப்பினும் மனித சமுதாயத்திற்குக் கிடைக்கிறது. மனித

யாகத்தின் மூலமாக நீங்கள் விருத்தியாகுங்கள். இதுவே உங்களுடைய காமதேனு. இதனால் நீங்கள் தேவர்களுக்குத் திருப்தி செய்யுங்கள். அவர்கள் உங்களைத் திருப்தி செய்வார்கள். இந்த விதமாக ஒருவருக்கொருவர் திருப்தி செய்வித்து பரமசந்தோஷ முடையவர்களாயிருங்கள்.

5—யாகத்தினால், சந்தோஷம்கொண்ட தேவர்கள் உனக்கு, நீ வேண்டிய பொருளை அளிக்கின்றனர். அந்தத் தேவர்கள் சந்தோஷம் கொண்டு கொடுக்கும் பொருள்களை அவர்களுக்குத் திருப்பி உதவாது தானாகவே எவன் அனுபவிக்கிறானோ அவன் திருடன். (கீதை)

சமுதாயம் இந்த சக்தியால் விருத்தியடைகிறது. மனிதனும் உழைப்பு என்ற ஒரு கயிற்றால் சமுதாயத்தில் பிணைக்கப் பட்டிருக்கிறான். எப்பொழுது இந்தக் கயிறு பலவீனமாகிறதோ, அதாவது உழைப்பு குறைகிறதோ அப்பொழுது மனித சமூகத்திலே ஆட்டம் உண்டாகிறது; அமைதி குலைகிறது;

5—தான் உழைக்காது, மற்றவர்களுடைய உழைப்பில் எவன் ஜீவிக்கிறானோ அவன் பரசிரம ஜீவி. மனித சமுதாயத்தின் திருடன் அவன். அவனுடைய இந்தத் திருட்டுத்தனத்தை அகற்றி அவனிடம் கிரமமான வேலை வாங்கவேண்டும்.

ஆத்ம வாதி, அபேதவாதி இருவருடைய கொள்கைகளையும் நாம் மேலே துலக்கி யிருக்கிறோம். பொதுவாக—அதிலும் சிறப்பாக இவர்கள் எந்த இத்தில் வித்தியாசப் படுகிறார்களென்றால், ஆத்மாவிலிருந்துதான் இயற்கை உற்பத்தியானதாக ஆத்மவாதி கூறுகிறான். ஆனால் அபேதவாதியோ, இயற்கையிலிருந்துதான் ஆத்மா உற்பத்தியானதாகவும், இயற்கையைவிட்டு ஆத்மா விலகி யிருக்க முடியாதென்றும் கூறுகிறான். ஆனால், மனித சமுதாயத்தின் பரஸ்பர சம்பந்தத்தில் இவர்கள் இருவருடைய எண்ணமும் ஒன்றாயிருக்கிறது.

'யாவும் கட்வுள் மயம்' 'அவனன்றி ஓரணுவும் அசையாது' என்று கூறப் படுகிறது. இப்படிச் சொல்வது சரியா, தவறாவென்று வாதம் செய்வதாயிருந்தால் அஃதொரு பெரிய சிக்கலாக முடியும். இது . வார்த்தைகளைக் கொண்டோ அல்லது உதாரணங்களைக் கொண்டோ நிரூபிக்க முடியாத சங்கதி. கடவுள் இருக்கிறார் என்று ஸ்தாபிப்பதற்கு எத்தனை வாதங்கள் கூறப்படுகின்றனவோ, அஃதே போன்று கடவுள் இல்லையென்று ஸ்தாபிப்பதற்கும் கூறமுடியும். பொதுவாக இஃது ஒவ்வொருவருடைய அனுபவத்தையும் நம்பிக்கையையும் பொறுத்த விஷயம். ஆஸ்திகர்களுங் கூட விஞ்ஞான வளர்ச்சியில் நம்பிக்கையும் சிரத்தையும் வைக்கிறார்கள். அபேதவாதி, கடவுள் பக்தனாயிருந்து கொண்டே அபேதவாத சித்தாந்தத்தை அனுஷ்டிப்பவனாயிருக்கலாம். ஆனால் சில பேர், அபேதவாத தத்துவம் அமுலுக்கு வரும் பட்சத்தில் நம்முடைய புராதன நாகரிகம், கலை முதலியன அழிந்தே போகும்; கடவுளே இல்லையென்று ஆகிவிடும் எனப் பயப்படுகிறார்கள். இஃது இவர்களுடைய அறியாமைதான். மனித சமுதாயத்தின் வாழ்வுக்கு, அதன் வளர்ச்சிக்கு இவை விரோதமில்லை

யானுல், அதன் வாழ்வுக்கு இவை அவசியமாயிருந்தால், இவை அழிந்து போகுமென்றோ, அழிக்கப்படுமென்றோ பயப்படத் தேவையேயில்லையல்லவா ?

பௌதிக வாதியும், ஆத்ம வாதியும் மனித சமுதாயத்தின் தற்கால அழிவுக்கு எவை எவை காரணமோ அவற்றை அகற்ற வேண்டுமென்பதிலும் சமுதாயத்தை வாழ்விக்க வேண்டுமென்பதிலும் ஒத்த எண்ணமுள்ளவர்களாகவேயிருக்கிறார்கள். சமுதாயத்திலே ஒவ்வொரு மனிதனும் முன்னுக்கு வருவதற்கு பூரணமான வசதியிருக்க வேண்டுமென்பதில் இந்த இருவருக்கும் வேற்றுமையான எண்ணமே கிடையாது. அறியாமை, அவநம்பிக்கை, தரித்திரம், துன்பம் இவைகள் எந்தச் சமுதாயத்தில் மலிந்திருக்கின்றனவோ, அந்தச் சமுதாயத்தில் கடவுள் பக்தியும் இல்லாமற்போகும் என்று ஆத்மவாதி கருதுகிறான். வயிற்றுப் பாட்டுக்கே திண்டாட்டமாயிருக்கும் போது கடவுளைப்பற்றி யார் கவலைப்படுவது? எழுந்திருக்க முடியாத அவ்வளவு நோயுள்ள சரீரத்தை உடைய ஒருவன் யோகம் செய்ய வேண்டுமென்றால் அது சாத்தியமான காரியமா? இதிலிருந்து நாம் ஒரு திடமான முடிவுக்கு வருவதற்கு யாதொரு கஷ்டமுமில்லை. நாம் ஒரு பூரணமான, குறைவற்ற ஜன சமுதாயத்தை நிர்ணயிக்க விரும்புகிறோம். அப்படியானுல் அந்தச் சமுதாயம் எப்படிப் பட்டதாயிருக்கும்?

உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க வீடு, குறைவற்ற கல்வி, அரசியல் அதிகாரம், ஆத்மீக வளர்ச்சி, நம்முடைய சுதந்திரத்தில் பிறர் யாரும் அல்லது எந்த தேசத்தாரும் தலையிட நினைக்கக்கூட முடியாத பலம், இவைகள் நிறைந்த ஒரு ஜன சமுதாயத்தை நிர்மாணிக்க நாம் விரும்புகிறோம். இதைப் பெறுவதற்கு எந்த வழி நமக்கு ஏதுவாயும் சரளமாகவும் இருக்கிறதோ அதை நாம் அங்கீகரிப்போம்; அங்கீகரிக்கவும் வேண்டும்.

மனிதர்கள் சுதந்திரப் பிரியர்கள். ஆனுல் இயற்கையானது தன் பிடியிலிருந்து மனிதனை விடுவதில்லை; அது விடவும் விடாது. சரீரம் உள்ள வரை மனிதன் இயற்கைக்கு அடங்கியவனே. ஆனுல் மனிதன் ஒன்றை நினைத்து விட்டால் அதைச் சாதிக்கும் வரை அவன் அமைதியாயிருப்பதில்லை. இருப்பினும் அவன் அந்தக் காரியத்தைச் சாதிப்பதற்கு ஒரு வழியைப் பின் பற்றுகிறானென்றால் அதன் மூலம் அவன் கெடுதியான பலனையும் அடையலாம். இவ்விதம் மாற்றுவதற்கு இயற்கை சக்தி படைத்ததாயிருக்கிறது. மாறிக் கொண்டு இருப்பதுதானே இயற்கையின் லட்சணமும். இந்த நிலைமையில் இயற்கைக்கும் மனிதனுக்கும் போராட்டம் ஆரம்பிக்கிறது. தன்னைப் பொருதிய அதை முறியடிக்க மனிதன் முயலுகிறான். ஆனுல் இருவரும் பரஸ்பரம் சம்பந்தமுள்ளவர்கள். நாம் நேற்றுச் செய்து முடித்த ஒரு காரியம் இன்று நாம் செய்ய இருக்கும் காரியத்திற்குக் காரணமாயிருப்பதைக் காண்கிறோம். அதாவது இந்த உலகத்திலே எந்த ஒரு காரியமும்,—அது யாரால் செய்யப்பட்டதா

யிருந்தாலும் நிலைத்து நிற்கக் கூடியது என்று சொல்லிவிட முடியாது. அதில் எத்தனையோ மாறுதலேற்படுவது சகஜம். ஏனெனில் இயற்கையின் லட்சணம் அடிக்கடி மாறுந் தன்மையதாயிருக்கும் போது அதன் ஆதீனத்திற்குட்பட்ட சமுதாய நிலைமைகள் மாத்திரம் எப்படி நிலை பெற்றதாயிருக்க முடியும்?

சமுதாயத்திலே மனிதனுக்கு மூன்று காரியங்கள் அத்தியாவசியமான முதல் தேவையுள்ளவை.

(1) அவன் உயிர் வாழ்வதற்கு வேண்டிய வசதி, அதாவது ஆகாரம். (2) கல்வி (3) அதிகாரம். இந்த மூன்றுமில்லாமல் மனித வாழ்க்கை பூரணமடையாது. இதில் ஏதாவது ஒன்று குறைவு ஏற்பட்டால் சமுதாயத்திலே உலைவு ஏற்படுகிறது. இதில் ஏதேனும் ஒன்று அளவுக்கு மீறி முக்கியத்துவம் பெற்று மற்றது தாழ்ந்து படினும் சமுதாய நிலைமை கெட்டு விடுகிறது. அப்பொழுது அந்தச் சமுதாயக் கட்டிடத்தை பழுது பார்ப்பது அவசியமாகி விடுகிறது; அல்லது சமுதாயத்தையே மாற்றியமைக்க வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. மனித சமுதாயம் இந்த உலகத்திலே வாழ்வதற்கு மேலே கூறப்பட்ட மூன்றும் மிக மிக அத்யாவசியமானவை. இவற்றில் ஏதேனும் ஒன்று குறைவுபடின் நாளடைவில் அது-அந்தக் குறைவு-சமுதாயத்திலே ஒரு பெரிய ஹீனத்தை உண்டு பண்ணுவது நிச்சயம்.

இனி இந்திய சமுதாயத்தின் நிலைமையை நோக்குவோம். அதற்கு அவசியமான அதாவது, ஆகாரம் கல்வி, அதிகாரம் முதலியவற்றை எவ்வளவு தூரம் அது பெற்றதாயிருக்கிறது? மனித சமுதாயம் உலகத்திலே நிலை பெற்றிருப்பதற்கு அத்யாவசியமான இந்த மூன்றும் இந்திய சமுதாயத்தில் பூஜ்யமாயிருக்கிறது! நம்முடைய அரசியல் அதிகாரம் பறிக்கப்பட்டு விட்டது. கல்வி விஷயத்திலோ, 100-க்கு 4 அல்லது 5 பேர்தான் படித்தவர்கள். ஆகாரமோ, பசி பசி என்று இந்திய சமுதாயம் அலறுவது உலகமெல்லாம் எதிரொலி கொடுக்கிறது. இந்த நோயை எப்படி அகற்றுவது? இந்த உலகத்திலே, இந்திய சமுதாயத்தை திரும்பவும் எப்படி நிலை நிறுத்துவது? இதற்கு வழியென்ன? அபேதவாதத்தைத் தவிர வேறு வழியில்லை. பலமான நோயாளியைச் சுற்றிச் சுற்றி வந்து அழுதுகொண்டிருப்பதில் பயனில்லை. நோய்க்குத் தகுந்த ஆபரேஷன் அவசியம் செய்யப்பட வேண்டும். மேல் பூச்சு மருந்தினால் கொஞ்ச காலத்திற்கு நோய் குறையலாம். சொல்லும் உபசாரமான தேர்தல் வார்த்தைகளால் நோயாளி சிறிது நேரம் மனத் தெளிவடையலாம். இதனாலெல்லாம் நோய் நீங்கி விடுமா?

மனித சமுதாயம் உழைப்பு என்ற ஒரு கயிற்றால் பிணைக்கப்பட்டிருக்கிறது. இதில் குறைவு ஏற்பட்டால் சமுதாயம் ஆட்டம் கண்டு விடும். உலகத்திலே நடந்த ஏழை மக்களுடைய புரட்சிகளைச் சரித்திரம் நமக்கு நிரூபித்துக் காட்டுகிறது. முதலாளித்துவம் வளர ஆரம்பித்த போதே அதனை தொடர்ந்தாற் போலவே—அதனோடு கூடவே—இந்த அபேதவாத

மும் வளர ஆரம்பித்து விட்டது. முதலாளித்துவம், இயந்திரத்தின் உதவியால் தொழிலாளருடைய உழைப்பைப் பறித்து விட்டது. உதாரணமாக 10 பேர் செய்த வேலையை இன்று ஒரு இயந்திரத்தின் உதவியால் ஒரு மனிதன் செய்து விடுகிறான். இயந்திர வேகத்தோடு மனிதனுடைய கை, போட்டி போட முடியாததல்லவா? இதனால் தொழிலாளர்கள் தங்களுடைய உழைப்பைக் குறைந்த கூலிக்கு விற்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அதாவது அவர்களுடைய உழைப்புக்குத் தகுந்த கூலி கிடைக்கவில்லை. முதலாளித்துவம் தன்னுடைய சுயநலத் தேவையை அமைதியாகப் பூர்த்தி செய்து கொண்டது. தொழிலாளிகளுக்கு, அவர்களுடைய உழைப்புத்தான் சம்பத்து. ஆனால் அந்தச் சம்பத்தை அவர்கள் முதலாளித்துவத்தினிடம் சொற்பக் கூலிக்கு விற்க வேண்டியதாகி விட்டது. அவர்கள் வாழ்க்கையை நடத்துவதற்கும் முடியாதவர்களாகி விட்டார்கள். அதாவது வாழ்க்கையே அவர்களுக்கு ஒரு சுமையாகி விட்டது. ஆனால் பொருள் உற்பத்திச் சாதனங்களைத் தன் ஆதீனத்தில் வைத்துக் கொண்டிருக்கிற முதலாளித்துவத்திற்கு இந்தத் தொழிலாளிகளின் வாழ்க்கையைப் பற்றி என்ன கவலை? அதற்கு லாபம் ஒன்றுதான் குறி. இந்த விதமாக முதலாளித்துவம் வளர்ந்து வர வர எத்தனையோ கோடிக்கணக்கான மக்களின் வாழ்க்கையே பாழ்பட்டு விட்டது. அதாவது முதலாளித்துவம் வளர்ந்து பிரகாசித்து வருகிறது என்றால் மனித சமுதாயத்திலே தரித்திரம் பெருகி விட்டது என்பது பிரத்தியட்சமாகி விடுகிறது. ஆனால் அபேதவாத சித்தாந்தம் இந்த நேர் முரணான குழப்பத்தைத் தெளிவு படுத்தி விடுகிறது. உற்பத்திச் சாதனங்களை அது சமுதாயத்திற்குச் சொந்தமாக்கி விடுகிறது. உழைப்புக்குத்தான் அதில் பிரதானம். அவர்களுடைய நிலைமைக்குத் தகுந்தவாறு வேலைவாங்கி தேவைக்குத் தகுந்தவாறு கொடுத்தல் என்பது அதனுடைய முக்கியமான கடமை.

ஆனால் இந்த அபேதவாத சித்தாந்தத்தை எதிர்ப்பவர்கள் பல காரணங்களைக் கூறுகிறார்கள். அவைகளைப் பற்றி ஆராய்வோம்.

1. தனிச் சொத்துரிமை இல்லையானால் மனிதன் உழைப்பதில் ஆர்வம் கொள்ள மாட்டான். உழைத்த பலனை நேரடியாக அவன் அடையாதபோது உழைப்பதற்கு ஆர்வம் இராது. இதனால் சோம்பல் பரவுகிறது.

2. அறிவு வளர்ச்சியில் மனிதர் அனைவரும் ஒரு படித்தானவர்களாயிருக்க வேண்டுமென்பது இயற்கைக்கும் முரணானது. ஏனெனில் அறிவும் உழைப்பும் எங்கும் ஒரே படித்தாயில்லை. அதாவது எல்லோரும் அறிவாளிகளாகவோ அல்லது எல்லாரும் உழைப்பாளிகளாகவோ இல்லை.

3. கடவுள் இருக்கிறார் என்பதை அபேதவாதம் மறுக்கிறது. இது நம்முடைய புராதனமான நாகரிகத்திற்கே விரோதமாயிருக்கிறது.

முதலாவது ஆட்சேபணையைக் கவனிப்போம். தனிச் சொத்துரிமையை ஆதரிக்கிற முதலாளித்துவத்தினுடைய ஆதீனத்திலே சமுதாயம் இருந்து விட்டதால் பலருக்கு இவ்வி

தம் தோன்றுவது சகஜம். சமுதாயத்தில் உழைப்புக்கு அதிக மதிப்பிருக்கும் போது சொந்த லாபத்தைப் பற்றிய பிரச்னையே ஏழாது. உழைப்பிலே, புகழும் சேவை மனப்பான்மையும் ஏற்பட்டு விடுகையில் சோம்பல் எவ்விதம் பரவும்? இந்த உலகத்திலே எத்தனையோ மஹான்கள் தோன்றி அரிய காரியங்கள் செய்திருக்கிறார்கள்; செய்கிறார்கள். இவர்கள் சொந்த உரிமைக்காகவா பாடுபடுகிறார்கள்? அவர்கள் அடைவது சேவை செய்கிறோமென்ற ஒரு திருப்திதான். இதுவரை எத்தனையோ விஞ்ஞானிகள் தோன்றி எத்தனையோ அற்புதங்களைக் கண்டு பிடித்திருக்கிறார்கள். இதற்காக அவர்கள் எத்தனை அரும்பாடு பட்டிருக்கிறார்கள்? இதனால் அவர்கள் அடைந்த லாபமென்ன? புகழ் ஒன்றுதான் அல்லவா? ஆனால் அவர்கள் கண்டு பிடித்த சித்தாந்தங்களால் முதலாளித்துவம் அளவிலடங்காத லாபம் சம்பாதித்து விட்டது. இது ஜன சமுதாயத்திற்கு உரியதாயிருப்பின் தேசியச் செல்வம் கொழித்து நிற்குமல்லவா? ஒரு குடும்பத்தில் உள்ளவர்கள் யாவரும் ஒரே சமானமான உழைப்பாளிகளாயிருக்க முடியாது. ஆனால் அவர்கள் அவர்களுடைய வாழ்க்கைத் தேவையைப் பொறுத்த மட்டில் யாதொரு பேதமுமில்லையே? இதே முறைதான் அபேதவாத சமுதாயத்தில் அனுஷ்டிக்கப்படும். இதனால் முதலாவது ஆட்சேபம் அர்த்தமற்றது என்பது நிரூபணமாகிறது.

2. பல பல மனிதர்கள் சேர்ந்த ஒரு சமுதாயத்திலே, சக்தியும், அறிவும் பலதரப்பட்டதாயிருப்பதை அபேதவாதி மறுக்கவில்லை. ஒரு விஞ்ஞானியினுடைய சக்தியும் ஒரு தொழிலாளியினுடைய சக்தியும் சமமானது என்று அபேதவாதி கூறவில்லை. ஆனால் அவர்களுடைய வாழ்க்கைத் தேவைகளில் பேதமிருக்கக்கூடாதென்று அபேதவாதி கூறுகிறான். அவன் அறிவை அலட்சியம் செய்யவில்லை. எத்தனையோ அறிவுப் பொக்கிஷங்கள் உபயோகிக்க வகையில்லாது இன்று மண்ணோடு மண்ணாய்ப் போகின்றன. இன்றைய சமுதாயத்தில் ஒரு ஏழை அவனுடைய அறிவை உபயோகித்து மேலேவர வகையில்லை. அவனுக்குக் கதவு தாளிடப்பட்டிருக்கிறது. ஆனால் அபேதவாதம், அறிவிலுள்ள பல படிகளை ஒப்புக்கொள்ளுகிறது. ஆனால் யாவருக்கும் முன்னுக்கு வருவதற்கு வசதி செய்து கொடுக்கிறது. அறிவுத் துறையிலே செல்வதற்குரிய மார்க்கம் யாவருக்கும் திறந்துவிடப் படுகிறது. இதனால் இரண்டாவது ஆட்சேபமும் அர்த்தமற்றதாகிறது.

3. கடவுளைப் பற்றிய இந்த ஆட்சேபம் மேலேயே விவாதிக்கப்பட்டிருக்கிறது. போல்ஷ்விஸத்தை அப்படியே இந்தியாவில் அமுலுக்குக் கொண்டுவர வேண்டுமென்ற அவசியமில்லை. அபேதவாதி, குருட்டுத்தனமாகப் பின்பற்றுபவன் இல்லை. அபேதவாத சித்தாந்தத்தை இந்தியாவின் நிலைமைக்குத் தகுந்தவாறு அமைத்துக் கொள்ள வேண்டுமென்று அபேதவாதி விரும்புகிறான். அவனுடைய உத்தேசம், ஏழ்மையையும் மூடத்தனத்தையும் அடியோடு அழிக்க வேண்டுமென்பதே.

தமயனின் கடிதம்—6

—தேவிதாசன்

பாழ்மனை

ஆந்தை யிருந்தலறும்—கெட்ட
அரவினம் குடிகள் செய்யும்
கந்தைகள் குப்பை கூளம்—அந்த
கனத்துக் குவிந் திருக்கும். 1
கள்ளி மரம் முளைக்கும்—கெட்ட
கற்றழைப் புதர் பெருகும்
முள்செடி கொடியினங்கள்—மண்டி
முளைத்துக் குதூ கலிக்கும். 2
கழுதைகள் கண்வளரும்—கெட்ட
காற்றும் உலவி வரும்
கொழுமைப் பன்றிகளும்—குலங்
கோத்திரமாய்ப் பெருகும். 3

அபேதவாதி, கர்ம பலனையும் ஆட்சேபிக்க வில்லை. இயற்கையின் நியதி யாவரும் உழைக்க வேண்டு மென்பது. அவனுடைய உழைப்புக்குத் தகுந்தவாறு இயற்கையிலிருந்து கூலி கிடைக்கிறது. கர்ம பலனை பகவான் கொடுப்பதில்லை. கர்மம் இயற்கையின் குழந்தை. இரண்டையும் பிரிக்க முடியாது. மற்றும் கர்ம பலனை ஏற்றுக் கொள்வது மனம். மனதில் எதுவரை அஞ்ஞானம் படிந்திருக்கிறதோ அதுவரை அது சுக துக்க பேத வயப்பட்டதா யிருக்கிறது. எப்பொழுது மனம் அறிவாகி ஈஸ்வர சாட்சாத்காரத்தை அடைகிறதோ அப்பொழுது மனம் என்ற நிலை மறைந்து விடுகிறது. அப்பொழுது கர்ம பலனைப்பற்றி பேச்சு எழுவதற்கு இடமெங்கே? இதனாலேயே கர்ம பலன் அஞ்ஞானிகளுக்குத்தான் என்றும், ஞானிகளுக்கில்லை யென்றும் வேதாந்தம் கூறுகிறது. தற்கால சமுதாயத்தின் சீரழிவுக்குக் காரணமாக கர்ம பலன் மீதும் கடவுளின் மீதும் பாரத்தைப் போட்டுத் தப்பமுடியாது. இதுவரை மனிதன் சொந்த உரிமைக்குப் பாடுபட்டான். அப்படியே பலனும் கிடைத்தது. ஆனால் இனி அவன் சமுதாய ஊழியனாயிருப்பான். அப்படியே பலனும் பெறுவான்.

அபேதவாதம், பெரிய பயப்படக் கூடிய காரிய மொன்று மில்லை. இன்றைய அழிவிலிருந்து மனித சமுதாயத்தை உய்விக்க வேண்டுமானால் அபேதவாத தத்துவத்தால்தான் முடியும். (மாதுரி)

புற்றுக்கள் மலிந்திருக்கும்—பொல்லாப்
பூச்சி வகை பெருகும்
நாற்றம் வீசி நிற்கும்—சொறி
நாயினம் அங்கிருக்கும். 4

முன்னொரு காலத்திலே—வானம்
முட்டியே நின்ற மனை
பின்ன மடைந்தது பார்—எனப்
பேசுவர் மாந்தர் களே. 5

பேய்கள் வாழ்ந்திருக்கும்—அந்தப்
பேய்மனை யண்டே லென
தாயுமே தன் மகவை—அரற்றித்
தாக்கீதும் செய்திடுவாள். 6

நல்ல மனையாகும்—இது
நமக்குப் பயனளிக்கும்—எனப்
பொல்லாங்கு மிக்கவர்கள்—அதனைப்
போற்றுதல் செய்வாரடா. 7

பொல்லாங்கு மிகுத்துள்ள—அம்மனை
புதுக்கிப் பெருக்கிடினே
எல்லாம் சரியாகும்—என்று
எண்ணவும் அச்சங் கொள்வார். 8

அல்லல் மலிந்திருக்கும்—இந்த
ஆகா மனையினைப் போல்
செல்லலு மாகாதடா—அதிற்
சிறுமைகள் மெத்த வுண்டு. 9

சிந்தனை உயர்த்திடு வாய்—என்றும்
சிறக்கும் மனையினைப் போல்
சுந்தரத் தேவிபுகழ்—நாளும்
சொல்லி மகிழ்ந்திடுவாய். 10

ஸ்ரீ சரத் சந்திர சட்டர்ஜி எழுதிய

: அக்கா :

—எம். வி. வேங்கடராமன்

குடும்பப் பெண்கள் விளக்கு ஏற்றும் போது எண்ணெயும் திரியும் போடுவது போல் விளக்கில் ஒரு தீக்குச்சியையும் போட்டு வைப்பார்கள். இது விளக்கு கொஞ்சம் மங்கும் சமயம் அந்தச் சின்ன குச்சி ரொம்ப உபயோகப்படும்—அதைக் கொண்டுதான் தீபத்தை தூண்டிவிட வேண்டும். அது இல்லாவிட்டால் எண்ணெயும் திரியும் இருந்தும் இல்லாதது போலத்தான்.

சுரேந்திர நாதனின் சுபாவமும் ஏறக்குறைய அதை யொத்ததுதான். அவனுக்குப் பலம், புத்தி, தன்னம்பிக்கை எல்லாம் இருக்கின்றன; ஆனால் தனியே அவனால் ஒரு வேலையும் முழுசாகச் செய்ய முடியாது; எடுத்துக் கொண்ட வேலையை ஆரம்பத்தில் கொஞ்சம் விறு விறுப்புடன் செய்வது போல் பாக்கி வேலையைச் சோம்பிச்செய்யாமல் விட்டுவிடுவான். அந்தச் சமயத்தில் அவனைத் தூண்டி விடுவதற்கு ஆள் தேவை.

அவனுடைய தகப்பனாருக்கு மேற்கே ரொம்ப தூரத்தில் வக்கீல் வேலை. அவருக்கும் வங்காளத்துக்கும் அதிக சம்பந்தம் கிடையாது. அங்கேதான் சுரேந்திரன் இருபதாவது வயதில் எம். ஏ. பாஸ் செய்தான்; பாஸ் செய்ததற்கு அவனுடைய குணங்களை காரணம் என்று சொல்லிவிட முடியாது. அவனுடைய மாற்றாந்தாய்க்கு அந்தப் பெருமையில் பங்கு உண்டு. அவள் எப்போதும் அவனையே சுற்றிக் கொண்டிருப்பாள்; சில சமயம் அவனுக்கு, 'நான், நான்தானா? என் சித்தியா?' என்று கூட சந்தேகம் உண்டாகிவிடும் அவள் செய்யும் தடபுடலில். சுரேந்திரன் என்கிற ஜீவனே உலகில் இல்லை போலவும், மாற்றாந்தாயின் விருப்பமே ஒரு மனித உருவெடுத்து எல்லா வேலை வெட்டிகளையும் தூங்குவது, உட்காருவது, எழுவது, படிப்பது, பரீக்ஷை பாஸ் செய்வது எல்லாவற்றையும் செய்கிறது போலவும் அவள் அவனைக் கண் காணித்து வந்தாள். அவள் தன் சந்தானத்தைப்பற்றி அதிக கவலைப்படுவதில்லை; ஆனால் அவள் சுரேந்திரனிடம் காட்டும் அக்கறையைச் சொல்லி முடியாது. அவன் தும்பினானா, இருமினானா என்கிற சின்ன விஷயங்கள்கூட அவளுக்கு எட்டிவிடும். அவள் தன் கடமையை நிறைவேற்றிக் கொண்டிருந்தது என்னவோ வாஸ்தவம்; ஆனால் அவளுடைய ஆட்சிக்கு அடங்கியிருந்த சுரேந்திரன் ஏதோ எழுதப்படிக்கக் கற்றுக் கொண்டா

னும் சொந்தமாக ஒரு வேலையும் அவனுக்குச் செய்யத் தெரியாது; செய்ய முடியும் என்கிற நம்பிக்கையும் அவனுக்குக் கிடையாது. இந்த சமயத்தில் இந்த சாமான்தான் தேவையாக இருக்கும் என்று கூட அவன் அறியான். பல சமயங்களில் தனக்குப் பசிக்கிறதா, தூக்கம் வருகிறதா என்று கூட அவனுக்குத் தெரியாமல் போய்விடும்; எல்லாவற்றையும் பிறர் ஒத்தாசை கொண்டுதான் அவன் அறிய வேண்டும். செய்ய வேண்டும். அவனுக்கு விவரம் தெரிந்து பதினைந்து வருஷம் ஆகிறது. அந்த நீண்ட காலத்தை அவன் மாற்றன்னையை அவலம்பித்தே கழித்து விட்டான்; அவனுக்காக அவள் பல வேலைகள் செய்து கொடுப்பாள். நாளின் இருபத்து நாலு மணி நேரத்தில் இருபத்திரண்டு மணி நேரம் திட்டுதல், கோபித்துக் கொள்ளல், வேலைகளில் கவனம் செலுத்துதல் எல்லா வற்றையும் பார்த்துக்கொண்டு, அவள் அவனுக்காகப்பண்ணும் வேலைகள் பல. பரீக்ஷைக் காலத்தில் அவன் படும்பாடு சொல்லி முடியாது; பரீக்ஷைக்கு ஒரு வருஷம் முந்தியிருந்தே அவன் எங்கே தூங்கிவிடப் போகிறானோ என்று அவளும் தூங்காமலேயே அவனோடு விழித்துக் கொண்டிருப்பாள். சக்களத்தி பிள்ளைக்காக யார் தான் இவ்வளவு சிரமப்படுகிறார்கள்? அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் எல்லோருமே அவளை ஒரு முகமாகப் புகழ்ந்து கொண்டிருந்தார்கள்.

சுரேந்திரனுக்காக அவள் செய்யும் முயற்சிகளில் குறையைக் காணவே முடியாது. வசவு மழைக்கப்புறம் அவனுடைய கண்களும் மூஞ்சியும் சிவந்துவிடும். அதை ஜ்வரம் வருவதற்குப் பூர்வ லக்ஷணம் என்று எண்ணி உடனே அவள் மூன்று நாள் அவனைப் பத்தியமாகச் சாப்பிடச் செய்வாள். அவனுடைய மனோ உயர்விலும் கல்வியிலும் அவளுக்குப் பரமசிரத்தை. சுரேந்திரன் ஒரு நாள் சுத்தமான, அல்லது புதிய மோஸ்தர் உடையணிந்து கொண்டால் போதும்; 'சரி, ஐயாவுக்கு ஷோக் பிறந்திருக்கிறது; மைனராக இருக்கப் பார்க்கிறார்' என்று அவளுக்குத் தோன்றிவிடும். முடிவு, மூன்று நாள் வரை சலவை செய்த வேஷ்டி அவனுக்குக் கிடைக்காது.

இப்படியே சுரேந்திரனுடைய காலம் கழிந்து கொண்டிருந்தது. சில சமயம் இந்த அன்பு நிறைந்த அதிகாரத்தில் அவனுக்குக் கசப்பு தட்டுவது உண்டு. 'போதும் இந்த ஜன்மம்' என்று கூடத் தோன்றிவிடும். சில சமயம் எல்லோருடைய வாழ்க்கையும் ஆரம்பத்தில் இப்படித்தான் என்று தன்னைத் தேற்றிக் கொள்வான். ஆனால் சுற்றியிருப்பவர்கள் அவனைக் கிளறி அவன் நினைவு தவறு என்று தோன்றச் செய்வார்கள்.

ஒரு நாள் அப்படியே நடந்தும் விட்டது. தன் நினைவு தப்பு என்று அவனுக்குப் புலப்பட்டு விட்டது.

அன்று அவனுடைய நண்பன் ஒருவன் வந்தான். 'உன்னைப் போன்ற புத்திசாலிகள் சீமைக்குப் போனால் வரும் காலத்தில் ரொம்ப முன்னுக்கு வரலாம். தேசத்துக்கு வேண்டிய நன்மைகளும் செய்யலாம்' என்று சொல்லி அவனைத் தூக்கி வைத்துப் பேசிவிட்டு நண்பன் போய் விட்

டான். சுரேந்திரனுக்கும் அவன் சொன்னது சரி என்றே பட்டது. காட்டுப் பறவையைவிட கூட்டுப் பறவைதான் அதிகமாகச் சிறகடித்துக் கொள்ளும். விடுதலை, விடுதலை என்று அவன் கற்பனை ஒளிகண்டான். அவனுடைய அடிமை உயிர் அதற்காக ஒரேயடியாகக் குதிக்க ஆரம்பித்தது.

தகப்பனாரிடம் போனான்; தான் எப்படியாவது சீமைக்குப் போயாக வேண்டும் என்று தெரிவித்தான்; அதனால் ரொம்பவும் முன்னுக்கு வரலாம் என்றும் சொல்லி வைத்தான். அப்பா, 'பார்க்கிறேன்,' என்று பதில் அளித்தார். ஆனால் வீட்டு எஜமானிக்கு அவனை அக்கரைக்கு அனுப்ப இஷ்டமில்லை. அப்பாவுக்கும் பிள்ளைக்கும் மத்தியில் சூறாவளி போல் அவள் புகுந்தாள்; அவளுடைய உரத்த சிரிப்பைக் கேட்டு இரண்டு ஆண்பிள்ளைகளும் திடுக்கிட்டுப் போய் விட்டார்கள்.

'சரி, சுரேந்திரன் சீமைக்குப் போக வேணுமா? நானும் அவன் கூடவே போகிறேன்! அவனைப் பார்த்துக் கொள்ள வேணும் அல்லவா? எந்த வேளையில் எப்படி துணி கட்டிக்கொள்ள வேணும், என்ன சாப்பிட வேணும் என்று தெரியாதவன் சீமைக்குப் போக வேணுமாம்—சீமைக்கு! நம்ம குதிரையை சீமைக்கு அனுப்பினால் கூட ஏதோ தப்பித்துக் கொள்ளும். பசிக்கிறது—சாப்பிடணும், தூக்கம் வருது—தூங்கணும் என்றாவது அதுக்குத் தெரியும் அல்லவா? ஆனால் நம்ம சுரேந்திரநாதனுக்கு அதுகூடத் தெரியாதே!' மறுபடியும் அவள் உரத்துச்சிரித்தாள்.

பெருமிதமான அந்தச் சிரிப்பைக் கேட்டு இருவரும் வெட்கிப் போய் விட்டார்கள். சுரேந்திரனுக்கு அவளை எதிர்த்துப் பேச தைரியமில்லை. பேச முடியவில்லை. மறுக்க முடியாத உண்மை அல்லவா! சீமை, எட்டாப்பழம் என்று அவன் தீர்மானித்து விட்டான். அவனுடைய தோழன் அதைக் கேட்டு மிகவும் வருத்தப்பட்டான். ஆனால் சீமைக்குப் போக வேறு உபாயம் இருக்கிறதா இல்லையா என்று அவன் கூறவில்லை. ஆனால் கடைசியில், 'இம்மாதிரி அடிமையாக இருப்பதைவிடப் பிச்சை வாங்கி வாழலாம்' என்று அவன் ஒரு போடு போட்டான்.

வீட்டுக்கு வந்த சுரேந்திரனுக்கு அதே யோசனை. நண்பன் சொன்னது சரிதான் என்று மூளையும் சொல்லிற்று. ஆம்; பிச்சை வாங்கியாவது வாழலாம்! ஆனால் கௌரவத்துடன் எம். ஏ. பாஸ் செய்த அவன் சோற்றுக்குத் திண்டாட வேண்டிய பிரமேயமே ஏற்படாது. எல்லோரும் சீமைக்குப் போக முடியாது என்பது என்னவோ வாஸ்தவம்; ஆனால் எவன் அடைபட்டு வாழச் சம்மதிப்பான்?

ஒரு நாள் கம்பீரமான இரவு வேளையில் அவன் ஸ்டேஷனுக்குப் போனான். கல்கத்தாவுக்கு ஒரு டிக்கெட் வாங்கிக் கொண்டு வண்டியில் ஏறி உட்கார்ந்தான். கொஞ்ச நாள் தான் வெளியே போவதாகவும், தன்னை வீணாகத் தேட வேண்டாம் என்றும், இருக்குமிடம் தெரிந்தாலும் தன்னை வீடு திரும்பச் செய்ய முடியாது என்றும் அவன்

அப்பாவுக்கு ஒரு தபால் எழுதிப் போட்டான்.

அப்பா அம்மாவிற்கு கடிதம் காட்டிக் கூறினார்—'சுரேந்திரனுக்கு வயது வந்து விட்டது; எழுதப் படிக்கத் தெரிந்து விட்டது. சிறகு முளைச்ச அப்புறம் ஓடாமல் வேறே எப்போது ஓடுவான்?'

ஆனாலும் அவர் அவனைத் தேடினார். கல்கத்தாவில் தெரிந்தவர்களுக்கு எல்லாம் கடுதாசி எழுதினார். ஆனால் சுரேந்திரனைப் பற்றி ஒரு தகவலும் தெரியவில்லை.

இரண்டாவது அத்தியாயம்.

கல்கத்தா ஜனங்களின் ஆரவாரத்தைக் கேட்டு சுரேந்திரன் திடுக்கிட்டுவிட்டான். அங்கே அவனை வைகிறவர்களோ திட்டுகிறவர்களோ யாருமில்லை. நாள் முழுதும் கண்காணித்துக் கொண்டிருக்கிறவர்களும் இல்லை. தொண்டை உலர்ந்தாலும் சரி, வயிறு காய்ந்தாலும் சரி ஏன் என்று கேட்பார் இல்லை; தன்னைத் தானே கவனித்துக் கொள்ள வேண்டும். பிச்சை கிடைக்கும்; கருணை கிடைக்கும்; புகலிடமும் கிடைக்கும்; ஆனால் எல்லாவற்றுக்கும் சொந்த முயற்சி வேண்டும். ஒருத்தன் வேலையில் இன்னொருத்தன் தானாகக் குறுக்கிடமாட்டான்.

எங்கேயாவது போக வேணும் என்றால் அவனாகவே போக வேண்டும். இங்கே தூக்கம், பசி எல்லாவற்றின் மாதிரியே வேறே!

அவன் வீட்டை விட்டு வந்து பல நாள்கள் ஆகிவிட்டன. தெருத் தெருவாக அலைந்து உடலும் நலிந்து விட்டது. கையில் இருந்த பணமும் தீர்ந்துவிட்டது. துணியெல்லாம் கந்தலாகிவிட்டது. ராத்திரி படுக்க இடமும் கிடையாது! அவன் கண்களில் நீர் நிறைந்தது. வீட்டுக்குக் கடிதம் எழுதலாம் என்றால்லோ வெட்கமாக இருக்கிறது; அதுவும் சித்தியின் 'அன்பால் கடூரமான முகம்' ஞாபகம் வந்ததும் வீடு போக வேண்டும் என்ற எண்ணமே அழிந்துவிடும்; ஏன், அங்கே நாம் இருந்தோம் என்று நினைத்துப் பார்க்கக்கூட அவனுக்குப் பயம் என்றால்—!

ஒருநாள் தன்னைப் போன்ற ஒரு தரித்திரனைச் சந்தித்துக்கேட்டான்—'ஏன் தம்பி நீங்கள் எல்லாம் இங்கே எப்படி சாப்பிடுகிறீர்கள்?'

அந்த மனுஷன் முட்டாள் போலிருக்கிறது; இல்லாவிட்டால் அவன் சுரேந்திரனைக் கேலி பண்ணி இருப்பான்.

'வேலை செய்து சம்பாதிக்கிறோம். சாப்பிடுகிறோம். கல்கத்தாவிலே அன்றாட வேலைக்கு என்ன குறைச்சல்?' என்று அவன் பதில் அளித்தான்.

'எனக்கு ஏதாவது வேலை வாங்கித் தருவாயா?

'உனக்கு என்ன வேலை தெரியும்?'

சுரேந்திரனுக்கு ஒரு வேலையும் தெரியாதாகையால் மௌனமாக யோசனையில் ஆழ்ந்தான்.

'நீ பணக்கார வீட்டுப் பையனா?'

சுரேந்திரன் தலையை ஆட்டினான்.

'அப்படியானால் எழுதப் படிக்க ஏன் கற்கவில்லை?

'தெரியும்!'

அந்த ஆசாமி கொஞ்சம் யோசித்துக் கூறினன். 'அப்படியானல் இந்தப் பெரிய வீட்டிலே போ. அதிலே ஒரு பெரிய ஜமீன்தார் இருக்கிறார். ஏதாவது வேலை செய்து தருவார்.'

அவன் போனதும் சுரேந்திரன் அந்த வீட்டு வாசலருகில் போய், கொஞ்ச நேரம் அங்கேயே நின்று கொண்டிருந்தான். பிறகு கொஞ்சம் பின் நகர்ந்தான். மறுபடியும் கொஞ்சம் முன்னே சென்றான். அப்புறம் பின்னல் போனன். அன்று ஒன்றும் நடக்கவில்லை. மறுநாளும் அப்படியே போய்விட்டது. இரண்டு நாளுக்குப் பிறகு துணிந்து உள்ளே சென்றான். எதிரில் ஒரு வேலையாள் நின்று கொண்டிருந்தான். அவன் 'என்ன வேண்டும்?' என்று கேட்டான்.

'ஐயாவை—'

'ஐயா வீட்டில் இல்லை!'

சுரேந்திரனுடைய முகம் மலர்ந்தது. ஒரு பெரிய கஷ்டம் தொலைந்தது. ஐயா வீட்டில் இல்லை. வேலை இல்லை. ரொம்ப கஷ்டமாக இருக்கிறது என்று மூக்கால் அழ வேண்டியதில்லை என்பது தான் அவனுடைய ஆனந்தத்திற்கு காரணம். இரும்டங்கு உற்சாகத்துடன் அவன் கடைக்குப் போய் வயிறு நிறையச் சாப்பிட்டான். கொஞ்ச நேரம் சந்தோஷமாகச் சுற்றிக் கொண்டிருந்தான். மனதிற்குள் மறு நாள் எப்படிப் பேசிக் காரியத்தை சாதித்துக் கொள்வது என்று நன்றாக யோசித்து வைத்துக் கொண்டான்.

ஆனல் மறுநாள் அந்த உற்சாகம் மறைந்து போய் விட்டது. அந்த வீட்டை நெருங்க நெருங்கத் திரும்பி விடலாம் என்று தோன்ற ஆரம்பித்தது. கடைசியில் வாசலருகில் சென்ற சமயம் உற்சாகமே அற்றுப் போனன். அவனுடைய கால்கள் உள்ளே போகவே மறுத்தன. நமக்காகத்தான் இங்கே வந்திருக்கிறோம் என்ற நினைவு கூட அவனுக்கில்லை; யாரோ வலுக் கட்டாயப் படுத்தி இழுத்துக் கொண்டு போவது போல் அவனுக்குத் தோன்றிக் கொண்டிருந்தது. ஆனல் வாசலருகில் நின்று எத்தனை நேரம் யோசிப்பது? ஆகையால் உள்ளே போனன். மறுபடியும் அதே வேலையாளைக் கண்டான்.

'ஐயா வீட்டில் இருக்கிறார்; நீங்கள் பார்க்க வேணுமா?'

'ஆம்.'

'அப்படியானல் வாருங்கள்.'

ஆனல் சுரேந்திரனுக்கு தர்மசங்கடமாகி விட்டது. ஜமீன்தார் வீடு ரொம்பப் பெரிசு. பெரிய மனுஷர்களுக்கு ஏற்ற அலங்காரங்கள். பளிங்குப் படிகள்; ஒவ்வொரு அறையிலும் பூச்சட்டிகள்; பெரிய பெரியகண்ணடிகள்; போட்டோக்கள்; ஆனல் இவை எல்லாம் அவனுக்குப் பெரிசாகப் படவில்லை. அவனுடைய தகப்பனர் குடிசையிலா வாழ்ந்தார்? அவனும் பெரிய அகத்துப் பிள்ளைதானே?

நாம் பார்க்கப்போகும் ஆள் என்ன கேள்விகேட்பார், நாம் எப்படி பதிலளிப்பது என்ற ஒரே யோசனைதான் அவனுக்கு. ஆனல் சரியாக யோசித்துக் கொள்ள முடிய

வில்லை. எதிரில் வீட்டு எஜமானர் உட்கார்ந் திருந்தார்.

'என்ன வேலையாக வந்தாய்?' என்று அவர் கேட்டார்.

மூன்று நாளாக சுரேந்திரனுக்கும் அந்த யோசனைதான். ஆனால் இப் போது எல்லாம் மறந்து விட்டது.

'நான்—நான்—' என்று தடுமாறினான்.

விரஜநாத் லாஹிடீ பூர்வ வங்காளத்து ஜமீன்தார். அவருடைய இரண்டொருதலைமயிரும் நரைத் விட்டது; அகாலத்தில் அல்ல; சரியான காலத்தில் தான். பெரியமனுஷர். ஆகையால் அவருக்கு சுரேந்திரனின் நிலைமை உடனே புரிந்து விட்டது.

'என்ன வேண்டும்?'

'எனக்கு ஏதாவது—'

'என்ன?'

'வேலை—'

விரஜராஜர் கொஞ்சம் புன்சிரிப்பு செய்து, 'நான் வேலை கொடுக்க முடியும் என்று உன்னிடம் யார்சொன்னார்கள்?' என்று கேட்டார்.

'தெருவிலே ஒரு ஆளைக்கண்டேன். அவனிடம் கேட்டேன். அவன் உங்களை—'

'சரி, உன்னுடைய வீடு எங்கே?'

'மேற்கே—'

'அங்கே உனக்கு யார் இருக்கிறார்கள்?'

சுரேந்திரன் விஷயத்தைச் சொன்னான்.

'உன்னுடைய தகப்பனாருக்கு என்ன வேலை?'

இக்கட்டான நிலைமை அவனுக்கு ஒரு புதுப்பாடம் கற்பித்திருந்தது. தயக்கத்துடன், 'சாதாரண வேலை தான்,' என்றான்.

'அவரால் முடிய வில்லை என்று நீயும் சம்பாதிக்கப் பார்க்கிறாயா?'

'ஆமாம்—,'

'இங்கு எங்கே இருக்கிறாய்?'

'எங்கேயும் இல்லை; கண்ட இடத்தில்—'

விரஜ பாபுவுக்கு இரக்கம் வந்து விட்டது. சுரேந்திரனை அருகில் உட்கார்த்திக் கொண்டு சொன்னார். 'நீ இன்னும் சின்ன குழந்தை. இந்த வயசிலே வீட்டை விட்டு வரநேர்ந்தது என்று கேட்டால் வருத்தமாக இருக்கிறது. என்னால் வேலை யொன்றும் கொடுக்க முடியாவிட்டாலும் ஏதாவது ஏற்பாடு செய்கிறேன்—'

உடனே, 'சரி' என்று கொண்டே சுரேந்திரன் நடை கட்டினான். விரஜ பாபு மறுபடியும் அவனைக்கூப்பிட்டார்.

'வேறே ஒன்றும் நீ கேட்கவேண்டியதில்லையா?'

'ஒன்றும் இல்லை.'

'இதுக்குள்ளே எல்லாம் ஆகி விட்டதா? நான் உனக்காக என்ன ஏற்பாடு செய்வேன், எப்படி செய்வேன் என்று கூட கேட்கவேண்டாமா?'

சுரேந்திரன் மலைத்து நின்று விட்டான். விரஜ பாபு சிரித்துக் கொண்டே சொன்னார்—'இப்போது எங்கே போகிறாய்?'

'எங்கேயாவது கடைக்கு—'

'அங்கே சாப்பிடுவாயா ?'

'ஆம், தினம் அப்படித்தான்—'

'என்ன படித்திருக்கிறாய் ?'

'ஏதோ கொஞ்சம்.'

'என் மகனுக்கு சொல்லித்தர முடியுமா ?'

'ஓ!' என்றான் சுரேந்திரன் சந்தோஷமடைந்து.

விரஜபாபு மறுபடியும் சிரித்தார். வருத்தமும் வறுமையும் அவன் மூளையைக் கலக்கிவிட்டன என்று நினைத்துக் கொண்டார்; இல்லாவிட்டால் யாருக்கு என்ன சொல்லித்தர வேண்டியிருக்கும் என்று தெரிந்து கொள்ளாமலேயே ஒருவன் அதற்குச் சம்மதிப்பானா ?'

'அவன் பி. ஏ. படித்துக்கொண்டிருந்தாலோ ?'

சுரேந்திரன் கொஞ்சம் கம்பீரமாகப் பதில் அளித்தான். 'அப்படியானால் இன்னும் சரிதான்—'

அதற்கு விரஜபாபு ஒன்றும் சொல்லவில்லை. வேலைக்காரனைக் கூப்பிட்டு, 'பங்கூ, இவர் இருப்பதற்காக இடம் வசதி பண்ணி கொடு; ஸ்னானத்துக்கும் சாப்பாட்டுக்கும் ஏற்பாடு செய்' என்று கட்டளை இட்டார். பிறகு அவர் சுரேந்திரனிடம், 'சாயங்காலம் ஆன அப்புறம் மறுபடி உன்னை கூப்பிடுகிறேன். என் வீட்டிலேயே இரு. ஏதாவது வேலை கிடைக்கிறவரை சௌக்கியமாக இங்கேயே இருக்கலாம்—' என்றுசொன்னார்.

மத்தியானம் சாப்பிடப்போன சமயம் அவர் தம்முடைய பெரிய பெண் மாதவியைக் கூப்பிட்டு, 'இன்றைக்கு ஒரு ஏழைக்கு வீட்டில் தங்க இடம் கொடுத் திருக்கிறேன்' என்று சொன்னார்.

'அது யார் அப்பா ?'

'ஏழை; அவ்வளவுதான் எனக்குத் தெரியும். ஏதோ எழுதப்படிக்கத் தெரியும் போல் இருக்கிறது. உன்னுடைய அண்ணாவுக்கு பி. ஏ. பாடம் சொல்லித் தரமுடியுமா என்று கேட்டேன்; முடியும் என்கிறான்! பி. ஏ. யுக்கு சொல்லிக் கொடுக்கமுடியும் என்கிறவன் உன் தங்கைக்கு சொல்லித்தரமுடியாதா ? அவனை பிரமீளாவின் மாஸ்டராக வைக்கப்போகிறேன்—'

மாதவி அதற்குத்தடை ஒன்றும் சொல்லவில்லை.

மாலையானதும் விரஜ பாபு அவனைக் கூப்பிட்டு விஷயத்தைத் தெரிவித்தார். அடுத்தநாளிலிருந்தே அவன் பிரமீளாவுக்குப் பாடம் கற்பிக்கத் தொடங்கினான்.

பிரமீளாவுக்கு ஏழுவயது. அவள் போதோதயம் படிக்கிறாள். தன் தமக்கை மாதவியிடம் இங்கிலீஷ் முதல் புஸ்தகத்தில் 'தவளைக்கதை' வரை படித்திருக்கிறாள். காபி, புஸ்தகம், சிலேட், பென்ஸில், படம் எல்லாம் எடுத்துக்கொண்டு அவள் படிக்க வந்தாள்.

சுரேந்திரன் சொல்லிக் கொடுக்க ஆரம்பித்தான், 'Do not move—அசையாதே—'

பிரமீளா படிக்க ஆரம்பித்தாள், 'Do not move—அசையாதே—'

பிறகு சுரேந்திரனிடைய மனது எங்கோ போய் விட்டது. சிலேட்டை எடுத்துப் பென்ஸிலால் ஏதோ கிறுக்க ஆரம்பித்தான். ஏதோ 'பிராப்ளங்' களை (Problem) 'ஸால்வ்' (Solve) செய்து கொண்டிருந்தது மனது. கடிகாரத்தில் ஏழுமணி ஆகி, எட்டாகி, ஒன்பது அடிக்க ஆரம்பித்தது. பிரமீளாவுக்கு இருப்புக் கொள்ளவில்லை. இப்படியும் அப்படியுமாகப் புரண்டு உட்கார்ந்து கொண்டிருந்தாள். கொஞ்ச நேரம் புஸ்தகத்தின் படம் நிறைந்த பக்கங்களைப் புரட்டிப் பார்த்துக் கொண்டிருந்தாள்; கொஞ்ச நேரம் படுத்துக்கிடந்தாள். பாவம், தலையார் உடம்பெல்லாம் மைஅபிஷேகம் செய்தாள். 'Do not move-அசையாதே' என்று வாசித்துக் கொண்டிருந்தாள்.

'ஸார், நான் உள்ளே போகட்டுமா?'

'போ.'

இப்படியே அவனுடைய காலை நேரம் கழிந்துவிடும். ஆனால் மத்தியானம் வேறு வேலைகள். விரஜபாபு அவனுக்கு வேலை செய்து வைக்க வேண்டும் என்று சில பெரிய மனுஷாளுக்குக் கடிதம் எழுதிக் கொடுத்திருந்தார். சுரேந்திரன் அந்தக்கடிதங்களைப் பையில் போட்டுக் கொண்டு வெளியே கிளம்பி விடுவான். விசாரித்துக் கொண்டு அவர்களுடைய வீட்டெதிரில் போய் நிற்பான். வீடு எத்தனை அறைகள், இரண்டு மாடி வீடா, மூன்று மாடி வீடா, வீட்டிற்கு எதிரில் ஏதாவது விளக்குக்கம்பம் இருக்கிறதா என்று நன்றாகப் பார்த்து வைத்துக் கொள்வான். பொழுது சாய்வதற்கு முந்தியே வீட்டுக்குத்திரும்பி வந்துவிடுவான்.

கல்கத்தாவிற்கு வந்த பின் அவன் சில புஸ்தகங்கள் வாங்கி யிருந்தான். அதைத் தவிர அவன் வீட்டிலிருந்து கையோடு கொண்டு வந்த சில புஸ்தகங்களும் இருந்தன. இப்பொழுது அவைகளைப் படித்துக் கொண்டிருப்பதுதான் அவனுக்கு வேலை.

விரஜபாபு வேலையைப் பற்றி கேட்டால் மௌனம் சாதித்து விடுவான்; இல்லாவிட்டால், 'அந்த ஆசாமியைக் காணவில்லை' என்று சொல்லி விடுவான். (தொடரும்)

தமிழ் நாட்டில் பிரதி வருஷமும் **625** உற்சவங்கள் நடை பெறுகின்றன. அதாவது சராசரி தினமொன்றுக்கு இரண்டு உற்சவங்கள். இதில் ஒவ்வோர் உற்சவத்திற்கும் ஏறக்குறைய **25** ஆயிரம் ஜனங்கள் கூடுகிறார்கள்.

கம்பர்

——நா. லக்ஷ்மீநரசிம்மம்

2 உவமைப்பகுதி (தொடர்ச்சி)

சொல்லும் அன்பும்

சொல்லொக்கும் கடிய வேகச் சுடுசரம்கரிய [செம்மல்
அல்லொக்கும் நிறத்தினான் மேல் விடுதலும்

தாடகை மேலேவிய பாணமானது சொல்லுக்கு உபமேயமாகின்றது. சுடுசொல்லைப் போன்று கொடுமை செய்கின்ற பாணம் எனக் கூறுவர் சிலர். சுடு சொல் என்றும் நீங்காது நின்று துன்புறுத்துவது. இராம பாணமோ ஊடுருவிச் சென்று அழியாத பேரின்பத்தைத் தர வல்லது. ஆதலால் தப்பறப்பலிக்கும் வன்மையுடைய பெரியோர் நிறை மொழியொக்கும் பாணம் எனக் கூறுவதே பொருந்தும்.

……………சடையன் வெண்ணெய்
அண்ணறன் சொல்லேயன்ன படைக்கலம்

என்று பிறிதோரிடத்திலும் இப்பொருளில் வருதல் காண்க. சொல் என்பதுவே வேதம். மறை மொழி போன்ற பாணம் எனினும் பொருந்தும்.

வேதம் தப்பினபோதும் அன்னான் தனுவுமிழ் சரங்கள் தப்பா.

நட்பும் ஞானமும்

இராமனும் இலக்குவனும் மிதிலைக் குட்புக்கனர். அதன் அழகு நிலையைக் கண்டு மகிழ்ந்து வருகின்றனர். ஓரிடத்தில் குதிரைகள் வையாளி வருகின்றன. கட்புலனுக்கு எட்டாத வேகத்தில் ஓடுகின்றன. அதன் வேகத்தை நான்கு உவமைகளால் விளக்குகின்றார்.

கொட்புறு கலினப்பாய்மான் குலான்மகன் முடுக்கி விட்ட
மட்கலத்திகிரிபோல வாளியின் வருவ மேலோர்
நட்பினின் இடையறுவாய் ஞானிகள் உணர்வி னென்றாய்
கட்புலத்தினையவென்று தெரிவில தெரியக் கண்டார்.

சுழன்றோடுகின்ற குதிரைகள், குயவன் விசையுடன் திருக்கிய சக்கரம் போலக் கற கறவென்று சுழன்றன. வில்லினின்றெழுந்த அம்பு போல் விசையுடன் சென்றன. மேலோர் நட்பினைப்போல் இடையறாது சென்றன. ஞானியர் ஞானம்போல ஒன்றேயாகிக் குதிரைகள் இத்துணைய என்ற வேற்றுமை தெரியாமல் ஓடின. சக்கரம் குயவனால் சுழற்றப்படுவது. அயனது உழைப்பின்றேல் வேகம் குறைவது. ஆகவே குதிரை யோட்டத்தின் ஆரம்ப நிலைக்கு உவமையாயிற்று. பரிகள் உதைப்போரால் செலுத்தப்படுகின்றன. அம்பு வீரன் வில்லினின்றும் புறப்பட்டபின் பிறர் உதவி பெறுவதின்றியே விசையுள்ள வரை செல்வது. ஆகவே பாகரால் செலுத்தப்பட்டபின் அவர் தூண்டுகோல் இன்றி ஓடும் இரண்டாவது நிலைக்கு உவமையாகின்றது. மேலோர் நட்பு இயல்பாக வுண்டாவது. என்றும் அழியா திருப்பது.

அதனால் தனக்கியல்பான தணியாத வேகத்துடன் குதிரைகள் ஓடும் நிலைக்கு உவமையாயிற்று. ஞானிகள் உணர்வு வேறுபட்ட இயல்புள்ள உலகத்தில் ஒற்றுமை கண்டது. முடிவான பரம்பொருளைக் கண்டது. ஆகவே குதிரைகள் பலவா யிருந்தும் தொடர்ந்தோடும் கடுப்பினால் ஒன்றே யாகத் தோன்றி முடிவிடத்தை நோக்கிச் செல்லும் தன்மைக்கு உவமையாயிற்று.

உயிரும் உடலும்

உயிரும் உடலும் பல இடத்தும் உவமையாகக் கூறப்படுகின்றன. விஸ்வாமித்திரர் தன் வேள்வி காவலுக்காக இராம லக்குவரை அழைத்துச் செல்கின்றார்.

அன்ன தம்பியும் தானும் ஐயனும்
மன்னன் இன்னுயிர் வழிக் கொண்டாலென
சொன்னமாதவற் றொடர்ந்து சாயைபோல்
பொன்னின்மா நகர்ப்புரிசை நீங்கினார்.

இராமலக்குவர் முனிவருடன் செல்வது தசரதன் உயிர் செல்வது போன்றிருந்தது. இக்கருத்தை விளக்கவே முன்னும் முனிவர் இராமலக்குவரைக் கேட்கையில் உயிர் இரக்கும் கொடுங் கூற்றின் என உவமிக்கப்பட்டார். ஈண்டு தசரதன் உடலாயினான். இராமலக்குவர் உயிராகின்றனர். உலகத்துக்கே உயிராகிய 'இராமலக்குவர் தசரதனுக்கு உயிராக உவமிக்கப்படுவது நியாயமேயன்றோ. இதனை வற்புறுத்துவார்போல மிதிலையில் இராமன் தசரதனை யடைந்ததை ஆவிவந் தென்னவந்தரசன் மாடணுகினான் எனக்கூறுகின்றார் மேலும்.

வனத்தில் இராவணன் வஞ்சனையால் தேவியைக் கவர்ந்து செல்கின்றான். மாயமான் பின் சென்ற இராமன் அதன் மாயத்தை உணர்ந்து பாணத்தால் கொன்றுவிட்டு விரைந்து திரும்புகின்றான். இடையில் சீதையால் தன்னைத்தேட அனுப்பப்பட்ட இலக்குவனைக் கண்டு அவனுடன் ஓடி வருகின்றான்.

தோடிவர்ந்த பூச்சுரிகுழலாள் தனைக்காணான்
கூடுதன்னுடையது பிரிந்த ஆருயிர் குறியூ
ரேடிவந்தது கண்டிலதாமென நின்றான்.

சீதையைக் காணவில்லை. உடலைப் பிரிந்து சென்ற உயிரானது தன் உடலே குறியாகத் தேடி வந்து காணாது நிற்பதைப் போல் நின்றான். ஈண்டு இராமன் உயிராகவே விளங்குகின்றான். மனைவிக்குக் கணவன் உயிரா யிருப்பது உண்மையே யன்றோ.

எல்லோர்க்கும் உயிராயுள்ள இராமனுக்கும் உயிர் இருக்கிறது. அந்த உயிருக்கு இராமன் உடலாகின்றான். அவ்வுயிர் யார்? இலக்குவனே இராமன் உயிர். இலக்குவனிடம் இராமன் கொண்டுள்ள அன்பையும் இலக்குவன் இராமனுக்குச்செய்யும் தொண்டையும் அவ்வவர் பகுதிகளில் பரக்கக் காணலாம்.

இந்திரஜித்தை வெல்வதற்காக நிகும்பலையை நோக்கி இலக்குவன் புறப்படுகின்றான். அப்பொழுது அவனைப் பிரிந்து நிற்கின்ற இராமன் எவ்வாறு இருக்கிறான்?

தான் பிரிகின்றில்லாத தம்பி வெங்கடுப்பிற் செல்லா
ஊன் பிரிகின்றிலாத உயிரென மறைதலோடும்
வான் பெரு வேள்வி காக்க வளர்கின்ற பருவ நாளில்
தான் பிரிந்தேகக் கண்ட தசரதன் தன்னை ஒத்தான்,

என்றும் பிரியாத தம்பியைப் பிரிந்து நிற்கின்றான் இராமன். உடலைப் பிரியாத உயிர் பிரிவதுபோல் இலக்குவன் போகின்றான். அப்பொழுது இராமன் நிலை யென்ன? விஸ்வாமித்திர முனிவரது யாகத்தைக் காப்பதற்காகத்தான் பிரிந்த பொழுது தன் பிரிவால் தசரதன் அடைந்த நிலையை இலக்குவன் பிரிவால் இராமன் அடைந்தான். இதனால் இராமன் வெற்றுடலாகின்றான்.

இவ்வாறு கூறியவர் இலக்குவன் மீண்டு வந்ததற்கு] தசரதனை மீண்டும் வந்தடைந்த இராமன்போல என்றன்றோ உவமை கூற வேண்டும். அவ்வாறு கூறவில்லை. ஏன்? மிதிலையில் இராமனை அடைந்ததால் தசரதன் கொண்ட சந்தோஷம் அல்ப சந்தோஷமாக முடிகிறது. மீண்டும் இராமன் வனம் புகுகின்றான். அதனால் தசரதன் இறக்க நேரிடுகின்றது. இத்தகைய துன்ப விளைவுகளைப் பின்னையுடைமையால் அவ்வுவமை கூற அவர் விரும்பவில்லை. இன்ப முடிவையே உவமை கூறுகிறார்.

விரதம் பூண்டுயிரினோடும் தன்னுடைய
மீட்சி நோக்கும்
பரதன் போன்றிருந்தான் தம்பி வருகின்ற
பரிசைப் பார்த்தான்.

முன்னுவமையால் இராமனுக்கு உயிராக விளங்கினான் இலக்குவன். ஈண்டு இலக்குவன் இராமனேயாயினன். இங்கு இலக்குவன் மேல் இராமன் கொண்டுள்ள அன்பு விளங்குகின்றது. விரதம்பூண்டு தன் உயிரைப் போக்கி இராமனது மீட்சி நோக்கும் பரதன் என்ற உவமையால் பரதனிடம் இராமன் வைத்த மதிப்பைப் பாருங்கள். பரதனது பக்திக்குத்தான் எல்லையுண்டோ?

இதுகாறும் இப்பகுதியிற் கூறி வந்த உவமைகளைக் கொண்டே கம்பரது உவமை கூறும் இயல்பை நன்கறியலாம். அவர் கூறிய உவமைகளை எஞ்சாது கூறுதல் இக்கட்டுரையால் இயலாதாதலின் கூறியவற்றைக் கொண்டே கூறாதவற்றையும் நன்கறிந்தின்புறலாம்.

கம்பர் எழுதிய வேறு நூல்களாவன:— சரசுவதி அந்தாதி, ஏரெழுபது, திருக்கை வழக்கம், சடகோபரந்தாதி, மும்மணிக் கோவை ஆகியவை யாகும், கம்பர் காலம், முதல் பிரதாப ருத்திரன் காலமாகிய கி.பி. 1162 என்பர் சிலர். இன்னுஞ் சிலர், கி.பி. 1155ம் வருஷமென்பர்.

—கம்பர்.

இந்திய தேசீய இயக்கம்—
எப்படி ஆரம்பித்தது?

—ஜி. டி. காரெட்

இந்திய தேசீய இயக்கமானது, எப்படி ஆரம்பித்து, எப்படி வளர்ந்து, எப்படி முதிர்ச்சி யடைந்திருக்கிறதென்பதைப் பற்றி, ஆங்கிலேயரும் இந்தியரும் பலபட ஆராய்ச்சி செய்திருக்கிறார்கள். ஜி. டி. காரெட் என்ற ஓர் ஆங்கிலேயர், 'இந்தியாவைப் பற்றி ஒரு வியாக்யானம்' என்று பெயரிட்டு வெளியிட்டுள்ள ஒரு நூலில், இந்திய தேசீய இயக்கத்தைப் பற்றி ஆராய்ச்சி செய்திருக்கிறார். அதனைச் சாரமாகத் திரட்டி மூன்று பகுதிகளாகத் தமிழில் எழுதி ஓர் அன்பர் நமக்கு அனுப்பி யிருக்கிறார். அதன் முதற் பகுதியை இந்தக் கதிரில் வெளியிடுகிறோம். இந்திய தேசீயத்தைப் பற்றி ஆங்கிலேயர்கள் எவ்வளவு கூர்மையாக ஆராய்ச்சி செய்து வைத்திருக்கிறார்கள் என்பது இதனின்று தெரிய வரும்.

1885ம் வருஷம் இந்திய தேசீய காங்கிரஸ் தொடங்கியதி லிருந்தும், லோகமான்ய பாலகங்காதர திலகர் அரசியல் கிளர்ச்சி செய்யத் தொடங்கிய காலத்திலிருந்துமே, இந்தியாவில் தேசீய இயக்கம் வளர்ச்சி பெறத் தொடங்கியதென்று சிலர் கருதுகிறார்கள். ஆனால், சரித்திர ரீதியாக நாம் ஆராய்ச்சி செய்யப்போனால், பத்தொன்பதாவது நூற்றாண்டுத்தொடக்கத்திலிருந்தே, இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சிக்கு விரோதமான உணர்ச்சி புகைந்து கொண்டு வந்திருக்கிறதென்பது நன்கு புலனாகும். யாராவது ஒரு சிலர் ஏதேனும் ஒரு வகையான துன்பத்திற்குள்ளானாலும், அல்லது இந்தியர்களின் மத உணர்ச்சியைப் பாதிக்கக்கூடிய விதமாக ஆங்கிலேயர்களில் யாராவது நடந்து கொண்டு விட்டாலும் பலாத்கார நிகழ்ச்சிகள் சில நிகழும். இந்த மாதிரியான சம்பவங்கள் ஒரு வருஷத்திற்கொருதரம் அல்லது இரண்டு வருஷத்தற் கொருதரம் நடைபெற்றுக் கொண்டுதான் வந்தன. ஆகையால், பூரண விடுதலையை லட்சியமாகக் கொண்ட ஒரு கிளர்ச்சி முதன் முதலாக எப்பொழுது இந்தியாவில் தொடங்கப் பெற்றதென்று நிச்சயமாகச சொல்ல முடியாது. பொதுவாகவே, தேசத்திலே ஏற்பட்ட அதிருப்தியானது, சட்டரீதியான ஒரு கிளர்ச்சியாகப் பரிணமிக்காமல், ஒரு சில்லரைக்கொலை செய்யும் முயற்சியாகவே பரிணமித்தது. இந்தியாவின் வைஸிராயாக இருந்த லார்ட் மேயோ கொலை செய்யப்பட்டதும், பரோடாவில் தளபதி பேயர் என்பவர் கொலை செய்யப்பட்டதும் இந்த மாதிரியான சம்பவங்கள் தான்போலும். 1857ம் வருஷத்தில் நடைபெற்ற சிப்பாய்க் கலகத்திற்குப் பின்னர், சுதேச பாஷா பத்திரிகைகளின் எழுத்து தோரணையே மாறி விட்டது. இதைக் குறித்து வங்காளக் கவர்னர்கள் கவலைப்படலானார்கள்.

பத்தொன்பதாவது நூற்றாண்டின் முற்பாதி காலத்தில், பிரிட்டிஷாருக்கு விரோதமாக ஏற்பட்ட உணர்ச்சியானது, அநேகமாக மத சம்பந்தமானதாகவோ, அல்லது ஏதோ ஒரு ஸ்தலப் பிரச்னை சம்பந்தமானதாகவோ இருந்தது. இந்த முதல் அரை நூற்றாண்டுக் காலத்தில், சீர்திருத்த வாதிகளென்று முன்னணிக்கு வந்த தலைவர்களில் பெரும்பாலோர் ஆங்கில மோகங் கொண்டவர்களாயிருந்தார்கள். ராஜாராம் மோகனராய் முதலியோர், மேனாட்டு முறைகளை இந்திய தேசிய வாழ்க்கையில் புகுத்த முயன்றார்கள். பிற்காலத்தில் இவர்களைப் பின் பற்றித் தோன்றின தலைவர்கள்தான் ரானடே, கேசவ சந்திரசேன், கோகலே முதலியோர். இவர்கள் ஐரோப்பிய நாகரிகத்தைப் பெருமையாகக் கொண்டாடியதோடு, ஹிந்து தர்மத்தை மேனாட்டு முறையில் சீர்திருத்தியமைக்க வேண்டுமென்ற எண்ணமும் கொண்டிருந்தார்கள்.

ஆனால் 1857ம் வருஷத்துச் சிப்பாய்க் கலகத்திற்குப் பிறகு, இந்தத் தேசிய உணர்ச்சியானது இரண்டு கிளைகளாகப் பிரிந்தன. அரசியல் காரணத்தைக் கொண்டோ, அல்லது மதக் காரணத்தைக் கொண்டோ எங்கேனும் ஒரு கிளர்ச்சி நடக்குமானால் அது தேசிய உருவெடுக்க ஆரம்பித்தது. அதாவது குறித்த அந்தக் கிளர்ச்சி, ஒரு மாகாணத்தையோ அல்லது ஒரு ஸ்தலத்தையோ பொறுத்ததென்றிராமல் அகில இந்தியாவுக்குமுரிய பிரச்னையாகக் கொள்ளப்பட்டது. இரண்டாவது, படித்த வகுப்பினர்களின் பிரிட்டிஷ் ஆட்சிக்கு விரோதமான எதிர்ப்பு பலப்பட்டுக் கொண்டு வந்தது. ஆனால் இந்தப் படித்த வகுப்பினர்கள், வைதிக ஹிந்துக்களிடையே செல்வாக்கிழந்து வந்தார்கள்.

சிப்பாய்க் கலகத்தின் முக்கியத்துவத்தைக் குறைத்துக்கூறுகிற சுபாவம், பொதுவாக இந்திய சரித்திரத்தை எழுதினவர்களுக்கு இருந்திருக்கிறது. இந்தக் கலகம் ராணுவத்தைச் சேர்ந்த ஒரு சிலர் செய்த கலகமேயென்றும், இது உடனே அடக்கப் பட்டுவிட்டதென்றும் இவர்கள் எழுதி வைத்துப் போயிருக்கிறார்கள். இந்தக் கலகத்திற்குப் பின்னர் அரசாங்கத்தினரால் எடுத்துக் கொள்ளப் பட்ட நடவடிக்கைகள் இங்கிலாந்தில் மறக்கப் பட்டு விட்டனவே யானாலும், இந்தியாவிலே மறக்கப் படவில்லை. பொதுவாக இந்தக் கலகத்திற்குப் பிறகு இந்தியாவிலே என்ன எண்ணம் ஏற்பட்டதென்றால், இந்தியர்களுடைய உயிர்கள் மிகவும் மலிவானதென்று ஐரோப்பியர்கள் கருதுகிறார்களென்று ஏற்பட்டது. இதனால், இந்தியர்களுக்கும் ஐரோப்பியர்களுக்கும் நடுவே ஒரு மனக்கசப்பு ஏற்பட்டது. இந்த மனக்கசப்பிலிருந்து வளர்ந்தது இந்திய தேசிய உணர்ச்சி என்று சொல்ல வேண்டும். இதே மனக்கசப்பு பிற்காலத்தில் அநேக துக்ககரமான சம்பவங்கள் நடைபெறுவதற்கும் காரணமாயமைந்திருக்கிறது. தனிப்பட்ட ஐரோப்பியர்களைக் கொலை செய்வதும், இந்தியர்களை ஐரோப்பியர்கள் இம்சிப்பதும் கேவலமாக நடத்துவதும் சேர்ந்து,

இரண்டு சமூகங்களுக்குமிடையே ஒரு பிரிவினையை உண்டு பண்ணி விட்டது.

ஆனால் இந்தமனக்கசப்பு மட்டுமே, இந்திய தேசிய உணர்ச்சி வளர்ந்து வந்ததற்கு முக்கிய காரணமென்று சொல்ல முடியாது. இன்னும் சில காரணங்களும் உண்டு. படித்த வகுப்பினர், தேசிய இயக்கத்தில் அதிகமாக ஈடுபட்டதற்கு அவர்களுடைய பொருளாதார நிலை ஒரு காரணம். மற்றொரு காரணம் மத சம்பந்தமானது. ஆங்கிலக் கல்வி முறை புகுத்தப்பட்டு அது வளர்ச்சி பெற்ற நிலையில், அந்தக் கல்வி முறையைப்பயின்றோரிடையே வேலை யில்லாத்திண்டாட்டம் அதிகமாயிற்று. தலை முறைக்குத் தலைமுறை இந்தத் திண்டாட்டம் அதிகரித்துக் கொண்டு தான் வருகிறதே தவிர குறைந்தபாடில்லை. படித்து விட்டு ஆனால் வேலை யில்லாமல் திண்டாடிக் கொண்டிருக்கிற இந்தக் கூட்டத்தினருக்கும் இந்தியாவின் கைத் தொழில்களில் தங்கள்மூலதனத்தைப்போட்டு அதன் மூலமாகத் தங்கள் செல்வத்தைப் பெருக்கிக் கொள்ள வேண்டுமென்ற நோக்க முடையவர்களுக்கும் ஒரு வித தொடர்பு ஏற்பட்டது. இந்திய தேசிய இயக்கத்தின் ஆரம்ப தசையிலிருந்தே, தீவிர மனப்போக்கு இல்லாதவர்கள், மில் முதலாளிகளுடைய உதவிபெற்று வந்திருக்கிறார்கள். இந்த மில் முதலாளிகள், பாது காப்புவரி முறையை ஆதரிக்கிறவர்கள். ஏற்றுமதி இறக்குமதி வரிவிதிக்கும் உரிமை இந்தியாவுக்கு இருக்க வேண்டு மென்று, காங்கிரஸ் ஆரம்பத்திலிருந்தே தீர்மானங்கள் நிறைவேற்றி வந்திருக்கிறது. ஆனால் இந்தத் தொழில் முதலாளிகள் எப்பொழுதும் திரைமறைவிலிருந்தே வேலைசெய்து வந்திருக்கிறார்கள்.

இந்திய தேசிய இயக்க வளர்ச்சியின் ஆரம்ப தசையில், மத உணர்ச்சியும் ஒரு முக்கிய காரணமாயிருந்திருக்கிறது. சென்றநூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்தே ஹிந்து மதமானது மிகவும் கீழ்நோக்கிய தசைக்கு வந்து விட்டது. பழைய குருமார்களிடத்திலும், கொள்கைகளிடத்திலும் ஏற்பட்டிருந்த நம்பிக்கை குறைந்து போய்விட்டது. 1835ம் வருஷத்திலிருந்து பள்ளிக்கூடங்களில் போதிக்கப்பட்டுவந்த கல்வியானது, அதற்குரிய பலனைக்கொடுத்து வந்தது. இந்தப்போக்கிலேயே போய்க் கொண்டிருந்தால், படித்த வகுப்பினரான இந்தியர், அடியோடு மேனாட்டு நாகரிகத்திலேயே ஈடுபட்டவர்களாகப் போயிருப்பார்கள். ஆனால் சிப்பாய் கலகத்தின் விளைவாக ஏற்பட்ட மனக்கசப்பானது, படித்த வகுப்பினரிடையே ஒரு புத்துணர்ச்சியை உண்டு பண்ணியது. 1870ம் வருஷத்தில் ஹிந்து மத உணர்ச்சியிலேயே ஒரு மாறுதலேற்பட்டது. பழைய மதசம்பிரதாயங்களை ஆதரித்துப் போற்ற வேண்டுமென்ற மனப்பான்மை வளர்ந்து வந்தது. ஆரிய சமாஜம் போன்ற இயக்கங்கள் தோன்றி, பழைய மதசம்பிரதாயங்களைச் சீர் திருத்தி அவைகளைப் பின்பற்ற வேண்டுமென்ற எண்ணம் விருத்தி யடையத் தொடங்கியது. இந்த ஆரிய சமாஜ இயக்கம், கல்வியை, தேசியமுறையில் கற்பிக்க வேண்டுமென்ற வேலையிலும் ஈடுபட்டது. பஞ்சாப், பம்பாய் முதலிய

மாகாணங்களில் இந்த ஆரிய சமாஜ இயக்கம் வலுத்து வந்தது. இதே காலத்தில் வங்காளத்தில் ராம கிருஷ்ண பரமஹம்ஸரும் அவருடைய சிஷ்யரான விவேகானந்தரும் வைதிக ஹிந்து தர்மத்தை ஆதரித்துப் பிரசாரம் செய்தார்கள். ஆனால் இவர்களை எதிர்த்து, பிரம்ம ஞான சங்கத்தைச் சேர்ந்த ஸ்ரீமதி பிளாவட்ஸ்கி, தளபதி ஆல்காட் முதலியோர் பிரசாரஞ் செய்து வந்ததனால், மேற்படி வைதிக ஹிந்து தர்மப் பிரசாரத்திற்கு அதிக ஆதரவு ஏற்பட்டது. இந்த வைதிக ஹிந்து தர்மப்பிரசாரத்திற்கும் அரசியலுக்கும் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது. 1882ம் வருஷம் சுவாமி தயானந்தர் கோ சம்ரட்சண இயக்கமொன்றை ஆரம்பித்து பசுக்களை வதைசெய்யக்கூடாதென்று பிரசாரஞ் செய்தார். இதனை பால கங்காதர திலகர் உற்சாகத்தோடு பின்பற்றினர். ஆரிய சமாஜம், லாலா லஜபதிராய் போன்ற அரசியல் வாதிகளின் செல்வாக்குக் குட்பட்டது. மதச்சீர்திருத்த இயக்கமானது, தனது ஆழ்ந்த முத்திரையை இந்திய தேசீய இயக்கத்தில் இட்டு வந்தது. இந்தியாவின் பண்டைப் பெருமையைப் புகழ்வதும், வேதங்களுக்கு விபரீதமான பொருள் கொள்வதை மறுப்பதும், இந்திய தேசீய இயக்கத்தின் அம்சங்களாகி விட்டன. இதனால், இந்தியா ஒரு காலத்தில் எல்லாச் செல்வங்களோடும் கூடியிருந்த தென்ற எண்ணம் ஏற்பட்டதோடு, அப்படிப்பட்ட புகழுடைய இந்தியாவை மீண்டும் காண வேண்டுமென்ற ஆவலும் உண்டாயிற்று. இதன் பரிணாமமாக, மேனாட்டு நாகரிகத்தின் மீதும், கலை ஞானத்தின் மீதும் ஒரு வெறுப்பு உண்டாயிற்று. மேனாட்டார் விஞ்ஞானத் துறையில் ஏதேனும் அபிவிருத்தி யடைந்திருப்பார்களானால் அவைகளெல்லாம் இந்தியாவில் ஒரு காலத்தில் இருந்தனவேயென்றும், இந்தியாவிலிருந்துதான் யாவும் சென்றன வென்றும் இந்தியர்களிடையே ஒரு நம்பிக்கை உண்டாயிற்று.

பிரிட்டிஷ் ஆட்சியின் காரணமாக வைதிக ஹிந்துக்கள் தாங்கள் வகித்து வந்த ஆதிக்கத்தை இழந்து விட்டதாகக் கருதியதாக மீண்டும் அதைப் புதுப்பித்துக் கொள்ளச் செய்யும் முயற்சியே இந்திய தேசீய இயக்கமாகப் பரிணமித்திருக்கிற தென்றும் ஸர்வாலண்டைன்சிரால் போன்ற சில ஆங்கில ஆசிரியர்கள் அபிப்பிராயப் படுகிறார்கள். தக்காணம் என்று சொல்லப்படுகிற மேற்கிந்தியாவில் பீஷ்வாக்கள் அரசாட்சி செய்து கொண்டிருந்தபோது, சித்பாவன் பிராமணர்கள் அதிக செல்வாக்குடனிருந்தார்கள் என்பது உண்மை தான். இந்தச் செல்வாக்கை மீண்டும் பெற வேண்டுமென்ற எண்ணம், திலகரும் அவரது கோஷ்டியினரும், இந்திய தேசீய இயக்க சம்பந்தமாகக் கொண்ட அபிப்பிராயங்களை உருவகப்படுத்தி யிருக்கலாம். ஆனால் இந்தியாவின் மற்றப் பாகங்களில், சிறப்பாக பஞ்சாபிலும் வங்காளத்திலும் தேசீய இயக்கத்தின் தலைவர்களாயிருந்தவர்கள் எல்லாரும் பிராமணரல்லாதாரே. அமிருத பஜார் பத்திரிகையை ஆரம்பித்து அதனைத் தொடர்ந்து நடத்தி வந்த கோஷ் குடும்பத்தினர் பிராமணரல்லாதாரே. திலகருடைய அரசியல் வாழ்க்கை

ஆரம்பமாவதற்கு முன்னரே, இந்த கோஷ் குடும்பத்தினர், மத சம்பந்தமாக ஏற்பட்ட தேசீய உணர்ச்சியை, அநுபவ பூர்வகமான அரசியல் வாய்க்காலில் பாய்ச்ச விட்டுக் கொண்டிருந்தார்கள். பஞ்சாபில், 1818ம் வருஷத்து மூன்றாவது ரெகுலேஷன்படி தேசப் பிரஷ்டம் செய்யப் பட்டவர்களான அஜீத்சிங், லாலாலஜபதிராய் முதலியோர் பிராமணர்களல்ல. வங்காளப் பிரிவினையை எதிர்த்துக் கிளர்ச்சி செய்த முக்கிய தலைவர்களான விபினசந்திர பாலரும், அரவிந்த கோஷும் பிராமணரல்லாதாரே இந்திய தேசீய இயக்மானது, ஒரு சிலரால் மட்டுமே வாழ்ந்து கொண்டிருக்க முடியாது. அவர்கள் அந்த இயக்கத்தை நடத்திக் கொண்டு சென்றார்கள் என்று தான் சொல்லலாமே தவிர, அவர்கள் தான் அந்த தேசீய இயக்கம் என்று சொல்லிவிட முடியாதல்லவா? ஆக, 1880ம் வருஷத்திலிருந்து இந்தியாவில் ஏற்பட்ட அரசியல் அதிருப்தியானது, எந்த அடிப்படையைக் கொண்டு வளர்ச்சி பெற்றிருக்கிற தென்று ஆராய்ந்து பார்ப்போமானால் சிப்பாய்க் கலகத்தின் விளைவாக ஏற்பட்ட மனக்கசப்புத்தான் காரணமாயிருக்கும் என்று சொல்லி விடலாம். இது மட்டுமல்லாமல், மேலே கூறிய மாதிரி மேனாட்டு நாகரிகத்தின் மீது ஏற்பட்ட ஒரு வெறுப்பும் இதற்குக் காரணம். மேனாட்டு நாகரிகம் மேற்பார்வைக்கு மிகவும் பகட்டாயிருக்கிறது என்றும், ஆனால் உள்ளே பார்த்தால் எல்லாம் அழுகலாயிருக்கிறது என்றும், இதில் ஆத்மப் பிரகாசம் ஒன்றும் காணப் படவில்லை. யென்றும் இந்தியர்கள் கருதலானார்கள். பத்தொன்பதாவது நூற்றாண்டின் முதற் பாகத்தில், மேனாட்டு நாகரிகத்தின் இந்த வெளிப்பகட்டைக் கண்டுதான் இந்தியர்கள் மயங்கிப் போயிருக்கிறார்கள். ஆனால் சிப்பாய்க் கலகத்திற்குப் பின்னர் இந்த மயக்கம் தீர்ந்தது. மேனாட்டு நாகரிகத்தினின்று எல்லா விதத்தொடர்புகளையும் அறுத்துக் கொள்ள வேண்டுமென்றும், அப்படி அதனின்று விடுதலை யடைவது ஒரு மதக்கடமையாகுமென்றும் இந்தியர்கள் கருதினார்கள். ஆங்கிலக் கல்வியில் ஒரு வெறுப்புக் கொண்டார்கள். வருஷந்தோறும் காலேஜ்களிலிருந்து படித்துத் தேறிய இளைஞர்கள், வேலை கிடைக்காமல் திண்டாடி நிற்க, அவர்களெல்லோரும் இந்தத் தேசீய இயக்கத்தில் ஈடு பட்டார்கள்.

சென்னையில் தேசீய இயக்கம்

சிப்பாய்க் கலகம் நடைபெறுவதற்கு முன்னரேயே, சென்னையில் ஸ்ரீ மான் குஜுலு லட்சுமிநரசு செட்டியார் என்பவர், அரசியல் கிளர்ச்சிக்கு விதை போட்டார். இவர், 1853ம் வருஷம் 'மதராஸ் நேடிவ் அசோசியேஷன்' என்ற பெயரால் ஒரு சங்கத்தை ஆரம்பித்து அதன் வாயிலாக, சென்னை மாகாணத்தில் அரசியல் உணர்ச்சியை உண்டு பண்ணி வந்தார். இந்த 'மதராஸ் நேடிவ் அசோசியேஷன்' என்பது தான், பின்னர் மதராஸ் மகா ஜன சபையாகப் பரிணமித்தது.

பார்லிமெண்ட் எப்படி நிருவாகம் செய்கிறது?

—மு. துரைசாமி

சாதாரணமாக, ஆங்கிலம் படித்த ஒரு சிலர் சேர்ந்து கொண்டு பொழுதைக் கழித்துத் தொலைப்பதற்காக எதைப்பற்றியேனும் பேசிக் கொண்டிருக்கிறபோது, பார்லிமெண்டைப்பற்றி ஏதேனும் பிரஸ்தாபம் வந்தால், 'பார்லிமெண்ட் என்ன ஸார்? அது, சட்டங்களை உற்பத்தி செய்கிற ஓர் இயந்திரந்தானே. உயிரில்லாத இயந்திரமாக அதனைச் சொல்ல உங்களுக்கு இஷ்டமில்லையானால் வாதப்போட்டி நடத்துகிற ஒரு சபை என்று வேண்டுமானால் வைத்துக் கொள்ளுங்களேன்' என்று சொல்வதைச்சிலர் பார்த்திருக்கலாம். ஆனால் இந்த இரண்டு வேலைகளைச் செய்வதோடு மட்டும் அது-அந்தப் பார்லிமெண்ட்-திருப்தி யடையவில்லை.

ஜன சமுதாயத்தின் அன்றாட வாழ்க்கையோடு சம்பந்தப் பட்ட பல முக்கியமான விஷயங்களைப் பற்றியும் பார்லிமெண்ட் கவனிக்கிறது. தேசத்தின் ஒவ்வொரு குடும்பத்தினுடையவும் நிலைமையையும் சுக சௌக்கியத்தையும் பாதிக்கக் கூடிய மாதிரியான அநேக காரியங்களை இந்தப் பார்லிமெண்ட் செய்கிறது. சட்டங்கள் இயற்றி அமுலுக்குக் கொண்டு வருவதைக் காட்டிலும் இவை முக்கியமான வேலைகளாகக் கருதப் படுகின்றன. இந்த வேலைகள் என்னவென்பதை வரிசைக் கிரமமாகக் கவனிப்போம்:—

குறைகளுக்குப் பரிகாரந் தேடல்

எந்த நிருவாக இயந்திரத்தின் மூலமாக ஜனங்கள் ஆளப்படுகிறார்களோ அந்த நிருவாக இயந்திரமானது, ஜனங்களுடைய பிரதிநிதிகளால் அடிக்கடி மேற்பார்வை செய்யப் பட்டு வர வேண்டுமென்பது முதல் வேலை. நிருவாக இயந்திர மென்பதுதான் நிருவாக அரசாங்கம். இந்த அரசாங்கம் செய்கிற ஒவ்வொரு வேலையையும் கண் குத்திப் பாம்பு போல் கவனித்து வருவது பார்லிமெண்டின்—அதாவது

காமன்ஸ் சபையின் வேலையாகும். நிருவாக அரசாங்கம் செய்கிற வேலை பிடித்த முள்ளதா யிருந்தால் அதனை காமன்ஸ் சபை அங்கீகரிக்கும். அப்படி பிடித்த மில்லாதிருக்குமானால் அதனைக் கண்டிக்கும். கண்டிக்கப் படுகிற சட்டங்கள் அல்லது வேறெந்தக் காரியங்களும் மாற்றப் படவேண்டும்.

உலகத்தின் ஜனநாயக நாடுகள் பல வற்றுள்ளும் நிருவாக முறையானது பல பலவிதமாகக் கையாளப் படு கின்றன. எந்தச் சட்ட சபை யானது, சட்டங்களியற்றும் அதி காரம் பெற்று அப்படியே இயற்று கிறதோ அந்தச் சட்ட சபைக்கும், மேற்படி சட்டத்தை அமுலுக்குக் கொண்டு வந்து நடத்தி வைக்கிற நிருவாக அரசாங்கத்திற்கும் எவ்வித சம்பந்தமும் அல்லது தொடர்பும் இல் லாமலே அநேக நாடுகளின் அரசாங்க முறைகள் இருக்கின்றன. உதார ணமாக அமெரிக்காவில் (யுனைடெட் ஸ்டேட்ஸ்) நான்கு வருஷத்திற்கொ ருதரம், அரசாங்கத்தை நடத்தும் ஒரு தலைவரைப் பொது ஜனங்கள் தெரிந்தெடுக்கிறார்கள். இவர் பிரஸி டெண்ட் என்று அழைக்கப் படுகிறார். மத்திய அரசாங்க நிருவாகத்தைப் பொறுத்த மட்டில் இவருக்குச் சர்வாதிகாரங்களும் உண்டு என்று சொல்லலாம். இவர், சட்ட சபைகளில் அங்கத்தினரா யில்லாதவ ரையும் தமது மந்திரிகளாகப் பொறுக்கி யெடுத்துக் கொள்ளலாம். சட்டத்திற்குட்பட்ட விரிவான அதி காரங்களுடைய ஒரு சர்வாதிகாரி என்று இவரைச் சொல்லலாம்.

பிரிட்டிஷ் பார்லிமெண்டைப் பொறுத்தமட்டில், இந்த மாதிரியான ஒரு சர்வாதிகாரத்துவம், பிரிட்டிஷ் பிரதம மந்திரியிடமோ, மந்திரிச் சபையிடமோ ஒப்படைக்கப்பட வில்லை. எந்த ஒரு சர்க்காரைப் பிர ஜையும், தன்னுடைய குறைகளை, தன் னால் தெரிந்தெடுக்கப்பட்ட பிரதிநிதி மூலம் பார்லிமெண்டுக்குத் தெரியப் படுத்திக்கொண்டு அதற்குப் பரிகாரந் தேடிக் கொள்ளலாம். பார்லிமெண் டுக்கு இரண்டே இரண்டு விதமான அதிகாரங்கள்தான் கிடையாது. ஒன்று, ஹைகோர்ட் ஜட்ஜுகள் செய் கிற தீர்ப்பை, அந்தத் தீர்ப்பு சரி யாக இருந்தாலும் தவறாக இருந்தா லும் அதனை பார்லிமெண்ட் மாற்ற முடியாது. ஆனால் லார்ட்ஸ் சபையும், காமன்ஸ் சபையும் ஒன்று கூடி மெஜாரிட்டி ஓட்டுகளினால் மேற்படி தீர்ப்பை யளித்த நீதிபதியை உத்தி யோகத்தினின்று விலக்கி விடலாம். இரண்டாவது, பார்லிமெண்ட் ஏதோ சில அர்த்தங்களுடன் ஒரு சட்டத் தை இயற்றுகிறதென்று வைத்துக் கொள்வோம். அந்த அர்த்தங்களுக்கு விரோதமாக ஒரு நீதிபதி தீர்ப்புக் கூறிவிட்டால், அந்தத் தீர்ப்பை மாற்ற பார்லிமெண்டுக்கு அதிகாரங் கிடையாது. ஆனால் நேர்மாறான அர்த்தத்தைக் கொடுக்கக்கூடிய மேற் படி சட்டத்திலுள்ள வாசகத்தை மாற்றி வேண்டுமானால் புதியதொரு சட்டத்தை இயற்றலாம்.

அரசாங்கம் செய்யும் காரியங்களை பார்லிமெண்ட் இரண்டு விதங்களில் கவனிக்கிறது. ஒன்று கேள்விகள் கேட்டுப்பதில்கள் பெறுவதன் மூலம். இதைப்பற்றி ஏற்கனவே, 'ஜோதி'

சுடர் 1—கதிர் 12ல் கூறியுள்ளேன். மந்திரிகளின் நிருவாகத் திறமை; பேச்சு வன்மை முதலியவைகளை இந்த வினாவிடைகளின் போது நன்றாகக் கண்டுகொள்ளலாம். எதிர்க் கட்சி அங்கத்தினர்கள், மந்திரி பீடங்களில் அமர்ந்திருக்கும் நபர்களை மதிப்பிடுவது இந்தச் சந்தர்ப்பத்திலேதான்.

அரசாங்க அங்கத்தினர் கூறும் பதிலைக் கண்டு, எந்தச் சங்கத்தினருக்கேனும் அதிருப்தி யிருக்குமானால் அவர், பொதுஜன முக்கியத்துவம் பெற்ற ஒரு பிரச்னையைப் பற்றி வாதிக்க சபையைத் தள்ளிவைக்க வேண்டுமென்று அவசரப் பிரேரணை கொண்டுவரலாம். சபையின் தலைவரான ஸ்பீகர், மேற்படி விஷயம் அவசரமானதல்லவென்றோ, முக்கியமானதல்லவென்றோ கருதுவாரானால், தகுந்த காரணங்காட்டி, மேற்படி பிரேரணையை நிராகரித்து விடலாம். மேற்படி பிரேரணையை அநுமதிக்கலாமென்று ஸ்பீகருக்குப் பட்டதேயானால், சபையார் இதற்கு அனுமதி கொடுக்கின்றனரா வென்று கேட்பார். அநுமதி கொடுப்பதாகக் குறைந்தபட்சம் நாற்பது அங்கத்தினர்கள் மௌனமாக எழுந்து நிற்பார்களேயானால், சபையினர் அநுமதி தந்து விட்டதாக ஸ்பீகர் அறிவித்து அன்று இரவு 8—15மணிக்குச் சரியாக இந்த விஷயம் வாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று கூறுவார். அந்நேரத்தில் வேறெந்த விஷயம் வாதிக்கப்பட்டு வந்தபோதிலும், அஃது உடனே நிறுத்தப்பட்டு, மேற்கண்ட அவசரப் பிரேரணை வாதத்திற் கெடுத்துக் கொள்ளப்படும். அத்தச்சமயத்தில், பிரேரணையைக் கொண்டுவந்தவரும் அவருடைய சகாக்களும் சேர்ந்து தங்களுடைய கட்சியை எடுத்துச் சொல்லி அரசாங்கத்தைத் தாக்குவார்கள். அரசாங்கத்தாரும் பதில் கூறுவர். அரசாங்கத் தாருடைய பதிலைக் கேட்டு எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் திருப்தியடையவில்லை யென்றால், பிரேரணையை ஓட்டுக்கு விடுமாறு இவர்கள் வற்புறுத்துவார்கள். இதன் காரணமாக, சபை தள்ளிவைக்கப் படுமானால், மந்திரிச் சபையானது ராஜீநாமா செய்து விடும். சாதாரணமாகக் குறித்த ஒரு நேரத்தில் சட்டசபை கலைய வேண்டுமென்று இருக்கும். அந்த நேரத்திற்குள் மேற்படி அவசரப் பிரேரணை ஓட்டுக்கு விடப்பெற்று, அது காரணமாகச் சபை கலைந்து விடுமானால், அஃது அரசாங்கத்தைக் கண்டித்ததே யாகும்.

இதையும் தவிர்த்தால் வேறொரு வழியும் இருக்கிறது. குறித்த ஒரு குறையைப் பற்றி அரசாங்கத்திற்குத் தெரிவித்து, இதைப் பற்றி ஒரு தீர்மானங் கொண்டு வரலாம். ஸ்பீகருடைய முடிவைக் கண்டித்துக் கூட தீர்மானங் கொண்டுவரலாம். ஆனால் இந்தமாதிரியான தீர்மானங்களை, வெறும் காகிதத் தீர்மானங்களாகச் செய்துவிடும் சக்தி அரசாங்கத்திடம் இருக்கிறது. தன்னுடைய அவசரத் தீர்மானத்தைப் பற்றி வாதஞ் செய்ய அவகாசம் கொடுக்க வேண்டுமென்று ஒரு தனிப்பட்ட அங்கத்தினர் கூறுகிற ஒவ்வொரு தடவையிலும், பிரதம மந்திரி எழுந்து, அரசாங்கப் பிரேரணைகள் மிக அதிக மாயிருக்

கின்றன வென்று சொல்லிக் கடத்தி வரலாம். கடைசியில் பார்லிமெண்ட் கூட்டமே தள்ளி வைக்கப்பட்டுவிடும். ஆனால் அரசாங்கத்தார் எப்பொழுதுமே இப்படிக் கடத்தி விடுவர் என்று சொல்ல முடியாது. தற்போதைய எதிர்க்கட்சித் தலைவரோ அல்லது பிற்காலத்தில் எதிர்க் கட்சித் தலைவராகக் கூடுமென்று மதிக்கப் படுகிறவரோ, இந்த மாதிரி தள்ளிவைக்கும் தீர்மானமொன்றைக் கொண்டு வருவாரானால், அதை அரசாங்கத்தார் ஒரு போட்டிப் பந்தயம் மாதிரி கருதி, வாதத்திற்கு இடங் கொடுப்பர்,

மற்றொரு விதமாகவும் அங்கத்தினர்கள் குறைகளைத் தெரிவித்துக் கொள்ளலாம். அதாவது, அரசாங்கத்தார், ஏதேனும் ஓர் இலாகாவின் நிருவாகச் செலவுக்குக் குறித்த ஒரு தொகை தேவை யென்று ஒரு பிரேரணை கொண்டுவருவர். இதைப்பற்றிப் பரிசீலனை செய்ய ஒரு கமிட்டி நியமிக்கப்படும். இந்தக் கமிட்டியின் அபிப்பிராயங்களுடன் இந்தப்பிரச்னை பார்லிமெண்ட் முன்னர் வாதத்திற்கு வரும். அப்பொழுது, வெட்டுப் பிரேரணைகள் கொண்டுவந்து, அந்த இலாகாவுக்குப் பொறுப்பான மந்திரியின் செயலைக் கண்டிக்கலாம். இந்தப் பிரேரணை நிறை வேறி விடுமானால், மேற்படி மந்திரியும், மற்ற மந்திரிகளும் ராஜீநாமா செய்து விடுவார்கள். ஏனென்றால், மந்திரிச் சபையானது, ஐக்கியப் பொறுப்புள்ள மந்திரிச் சபையாகும்.

அரசாங்கச் செலவைப் பரிசீலனை செய்தல்

அரசாங்கத்தின் பொக்கிஷ நிலைமை ஒழுங்காக இருக்கிறதா வென்று பார்த்துவரும் பொறுப்பும் பார்லிமெண்டி னுடையதாகும். இந்த வரவு செலவுத்திட்டத்தைப் பற்றிக் கவனிக்கும் உரிமை யாவும், காமன்ஸ் சபையைச் சேர்ந்ததென்பது ஈண்டுக் குறிப்பிடத்தக்கது. அரசாங்கத்தின் வருமானத்தையும் செலவையும் குறிப்பிடுகிற 'பட்ஜெட்' என்கிற வரவு செலவுத் திட்டமானது, வருஷத்திற்கொரு முறை பார்லிமெண்ட் முன்னர் ஆஜர் படுத்தப்படுகிறது. இது பிரதி வருஷமும் நடைபெறுகிற சாதாரணசம்பவம். ஆனால் அரசாங்கத்தின் செலவு வகைகளை அநுமதிப்பதில் சில முறைகள் கையாளப் படுகின்றன. அரசாங்கத்தின் பணமானது, ஒவ்வொரு இலாகாவின் பிரதிவருஷச் செலவுக்கும் இவ்வளவுபணமென்று இலாகா வாரியாகப் பிரிக்கப் பட்டு, அந்த ஒரு வருஷத்தில்—அதாவது மார்ச்மாதம் 31ந்தேதிக்குள்—மேற்படி அநுமதிக்கப் பட்ட தொகையை அந்த இலாகா செலவழித்து விடவேண்டும். செலவழிக்காமல் ஏதேனும் மிகுதி தொகை இருக்குமேயானால் அதனை அடுத்த வருஷத்திற்குக் கொண்டு போகமுடியாது. தவிர, எந்தக் காரியத்திற்காகப் பணம் அநுமதிக்கப் பட்டதோ அந்தக் காரியத்திற்காகத் தான் அந்தப்பணத்தைச் செலவழிக்கவேண்டும். பிரதி வருஷத்துக் கடைசியிலும், ஒவ்வோர் இலாகாவும், தங்களுடைய அடுத்த வருஷத்துச் செலவுக்கு இவ்வளவு பணம் வேண்டியிருக்குமென்று ஒரு உத்தேச திட்டம் போட்டு அனுப்பும். இந்தச் செலவினங்களைப் பொக்கிஷ இலாகா பரிசீலனை செய்யும். பிறகு, இந்த ஒவ்வொரு இலாகாவின் வரவு செலவுத்

திட்டமும் காமன்ஸ் சபையின் பரிசீலனைக்கு வரும். இங்ஙனம் பரிசீலனை செய்கிறபோது, காமன்ஸ் சபை முழுவதுமே ஒரு கமிட்டியாக மாறி விடும். அப்பொழுது இதற்கு 'சப்ளை கமிட்டி' (Committee of Supply) என்று பெயர். இதில், காமன்ஸ் சபையிலுள்ள அத்தனை அங்கத்தினர்களும் ஆஜராகி ஓட்டுக் கொடுக்கலாம். காமன்ஸ் சபையே, இங்ஙனம் கமிட்டியாக மாறுகிறபோது, ஸ்பீகர் தலைமைவகிக்க மாட்டார். கமிட்டியின் சேர்மென் என்று சொல்லப்பட்ட டெபுடி ஸ்பீகரே தலைமை வகிப்பார். இந்தக் கமிட்டியில், செலவினங்களெல்லாம் அங்கீகரிக்கப் பட்டபிறகு, ஸ்பீகருடைய தலைமையில் காமன்ஸ் சபைகூடி ஒவ்வொரு செலவினமாக அநுமதிக்கும்.

சட்டங்களை நிறைவேற்றுதல்

இதுதான் பார்லிமெண்டின் மூன்றாவது கடமை. சட்டமாக பார்லிமெண்டினால் நிறைவேற்றப் பட்டு, மன்னர்பிரானின் கையெழுத்தைப் பெற்ற பிறகுதான் சட்டம் என்ற பெயர் உண்டே தவிர, அதுவரையில் அதற்கு மசோதா வென்றுதான் பெயர். எந்த ஒரு தனிப்பட்ட அங்கத்தினரும் ஒரு மசோதா கொண்டு வரலாம். ஆனால் பெரும்பாலும் இந்த மாதிரியான மசோதாக்கள், பார்லிமெண்ட் முன்னர் வாதத்திற்குக் கூட வருவதில்லை. ஏனென்றால், அரசாங்கத்தார், தாங்கள் பார்லிமெண்ட் முன்னர் ஆஜர்படுத்தி நிறைவேற்றிக் கொள்ள வேண்டிய விஷயங்கள் பல இருக்கின்றன வென்றும், இவைகளுக்கே அவகாசம் பற்ற வில்லை யென்றும் சொல்லிக் கடத்தி வருவதுண்டு. அப்படி ஏதேனும் அவகாசம் கிடைத்து, தனிப்பட்ட அங்கத்தினர்களுடைய மசோதா வாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, கடைசியில் சட்டமாக நிறைவேறி விடுமானால், அது அந்த அங்கத்தினர் செய்த அதிருஷ்டந்தான். பார்லிமெண்டரி சம்பிரதாயங்களை ஆதியில் ஏற்படுத்தினவர்கள், தேசத்தின் நன்மைக்காகக் கொண்டுவரப் படுகிற ஒவ்வொரு சட்டமும், நுணுகி ஆராயப் படவேண்டுமென்ற நோக்கத்துடன் அநேக கட்டுப்பாடுகளை ஏற்படுத்தி யிருக்கிறார்கள். ஒவ்வொரு மசோதாவும் பதினொரு படிகளைத் தாண்டவேண்டும். அதன் பிறகு தான் அது சட்டமாகும்.

காமன்ஸ் சபையில்

1. முதல் ரீடிங்
2. இரண்டாவது ரீடிங்
3. கமிட்டியின் பரிசீலனை
4. மேற்படி கமிட்டியின் அறிக்கை காமன்ஸ் சபை முன்னர் ஆஜர் படுத்தப்படுதல்.
5. மூன்றாவது ரீடிங்

லார்ட்ஸ் சபையில்

6. முதல் ரீடிங்
7. இரண்டாவது ரீடிங்
8. கமிட்டியின் பரிசீலனை
9. மேற்படி கமிட்டியின் அறிக்கை லார்ட்ஸ் சபை முன்னர் ஆஜர்படுத்தப்படுதல்
10. மூன்றாவது ரீடிங்
11. மன்னர் பிரானின் அங்கீகாரம் பெறுதல்.

முதலில் கூறப்பட்ட பத்து படிகளில் எந்தப் படியிலும், மசோதாவானது அடியோடு நிராகரிக்கப் பட்டு விடலாம். 3, 4, 8, 9வது படிகளில், அதாவது பரிசீலனைக் கமிட்டி படிகளில்-மசோதாவின்

'குழந்தை மகாராஜா'

லாரன்ஸ் ஆல்மா டாடிமா

மொழிபெயர்த்தவர்——பொ. திரிகூட சுந்தரம்
M. A., B. L.,

'குழந்தை' மகாராஜா
அரியாசனத்தமர்ந்து
தனிச் சக்கரவர்த்தியாய்
அரசு செய்வதைப் பார். 1

அவர் அரியாசனம் ஏது?
அன்னையின் மிருதுவான மடி.
அவர் தவிர வேறு யாரும்
அதில் உட்கார முடியாது. 2

அவர் ராஜ்யம் ஏது?
அன்னையின் இதய கமலம்.
அது முழுவதும் அவர்க்கே சொந்தம்.
அரசபக்தி ததும்பு மங்கே. 3

அவர் சட்டங்கள் அனைத்தும்
தெய்வீக மானவை.
அவ்வளவு சுலப மானவை.
அன்பு மயமானவை. 4

வாசகங்கள் அடியோடு மாற்றப்படலாம். ஒரு மசோதாவைச் சட்டமாக நிறைவேற்றுவது, மேற்பார்வைக்கு இவ்வளவு கடினமாயிருந்தபோதிலும், இவையெல்லாம் அநுஷ்டானத்தில் மிகச் சுலபமாகவே நிறைவேறி விடுகின்றன. மூன்றுவது ரீடிங் என்ற நிலையில் வாதப் பிரதிவாதங்களும், திருத்தப் பிரேரணைகள் கொண்டு வருதல் முதலியனவும் நடைபெறும். இதற்குப் பிறகுதான், எந்த ஒரு மசோதாவும் சட்டமாக நிறைவேறக் கூடும்.

சுதந்திரத்தின் தேவைகள் யாவை?

ஸன்-யாட்-ஸென்னின் பிரசங்கங்கள்

——வெ. சா.

சீனாவில் 1912ம் வருஷம் குடியரசு ஸ்தாபிக்கப் பட்டது. இதற்குக்காரணமாயிருந்தவன் டாக்டர் ஸன்—யாட்—ஸென். இவன், 1866ம் வருஷம் நவம்பர் மாதம் 12ந் தேதி, க்வாங்டங் மாகாணத்திலுள்ள ஸியாங்ஷிங் என்ற ஊரில், விவசாயக் குடும்பத்தில் பிறந்தான். பாலியத்தில், கிராமப் பள்ளிக்கூடத்திலே, எல்லாப் பிள்ளைகளையும் போல் படித்து வந்தான். பதின் மூன்றாவது வயதில், மேற்கிந்தியத் தீவுகளில் ஒன்றான ஹோனோலூலுவுக்குச் சென்று, ஐந்து வருஷகாலம் அங்கிருந்து, ஹைஸ்கூல் படிப்பை முடித்துக் கொண்டான். இந்த ஐந்து வருஷகாலத்தில்தான் இவனுக்குச் சுதந்திர உணர்ச்சி உண்டாயிற்று. அமெரிக்கர்கள் எப்படி முன்னேற்ற மடைந்தார்கள் என்ற வரலாறுகள் இவன் மனதிலே நன்றாகப் பதிந்தன. இவன் திரும்பித் தன் தாய் நாட்டுக்கு வந்து ஹாங்காங் நகரத்திலுள்ள க்வீன்ஸ் காலேஜில் படித்து பி. ஏ. பட்டம் பெற்று, பின்னர் வைத்தியக் கல்லூரியில் சேர்ந்து படித்து 1891ம் வருஷம் அதில் தேர்ச்சி பெற்றான்.

ஆனால் இவன்மனம் வைத்தியத் தொழிலில் செல்ல வில்லை. 1894ம் வருஷம் நடைபெற்ற சீனா—ஜப்பானிய யுத்தத்தில் சீனா தோல்வி யுற்றுப்போனது இவன் மனதை நன்றாக உறுத்தியது. தவிர, அப்பொழுது, ஹாங்காங் தீவு பிரிட்டிஷாருடைய ஆதீனத்தில் இருந்ததல்லவா? அதே ஹாங்காங்கில் வசித்த இவன், தனது நாட்டார் எவ்வாறு அந்நியர்களால் அவமதிக்கப்படுகிறார்கள் என்பதை நேரில் கண்டுணர்ந்தான். தனது நாட்டு அரசாங்கம், அஸ்திவாரத்திலேயே அழுகிப்போயிருக்கிறதென்று நன்கு தெரிந்து கொண்டான். ஒரு புரட்சியை உண்டாக்க வேண்டுமென்று தீர்மானித்தான். சீனாவை, சுதந்திர நாடாகக் காண்பதையே தனது வாழ்க்கையின் லட்சியமாகக் கொண்டான்.

இந்த நோக்கத்தோடு இவன் அரசியல் வாழ்க்கையில் ஈடுபட்டதும் இவனுக்குப் பல ஆபத்துகள் ஏற்பட்டன. முதலில் இவன் நடத்தின புரட்சி தோல்வியடைந்தது. எனவே, 1895ம் வருஷம், வெளிநாடுகளுக்குச் சென்று விட்டான். ஜப்பான், அமெரிக்கா, இங்கிலாந்து முதலிய நாடுகளுக்குச் சென்று, அந்தந்த நாடுகளின் சமுதாய நிலையைப் பரிசீலனை செய்துவந்தான்.

1899ம் வருஷம், சீனாவில் அந்நியர்களின் மீது விபரீதமான துவேஷ உணர்ச்சி உண்டாயிற்று. இதுகாரணமாக ஒரு பெரியகலகம் ஏற்பட்டது. இதற்கு 'பாக்ஸர் கலகம்' என்று பெயர். இதை அந்நியர்கள் அடக்கிவிட்டார்கள். இது சீனாவில் புரட்சி இயக்கம் வலுவடைவதற்கு ஒரு தூண்டுகோலா யிருந்தது. அப்பொழுது, சீனாவின் சிம்மாசனத்தில் வீற்றிருந்த மஞ்சு அரச பரம்பரையை அகற்றிவிட வேண்டுமென்று, அந்நியநாடுகளிலிருந்த சீனர்கள் வேலைசெய்தார்கள். இதன் விளைவாக 1911ம் வருஷம் சீனாவில் பெரிய புரட்சி ஏற்பட்டது. மஞ்சு அரசபரம்பரை

வீழ்ந்து பட்டது. 1912ம் வருஷம் குடியரசு ஸ்தாபிக்கப் பட்டது. ஆனால் இதனைச் சீனர்கள் அனைவரும் ஒற்றுமையாக இருந்து ஆதரிக்கவில்லை. புதிய குடியரசுக்கு டாக்டர் ஸன்—யாட்—ஸென்னே தலைவனாயிருக்க வேண்டு மென்று பிரேரிக்கப் பட்டது. அப்படியே மூன்று மாதம் தலைவனாகக் கூட இருந்தான். ஆனால், இவனுடைய கொள்கைகளுக்கு விரோதமா யிருந்த யுவான்-ஷி-காய் என்பவன் குடியரசுத் தலைமைப் பதவியைக் கைப் பற்றிக் கொண்டான். இதற்குப் பிறகு, ஸன்-யாட்-ஸென், ஜனங்களிடையே அரசியல் பிரசாரஞ் செய்து வந்ததோடு, அவர்களுடைய பொருளாதார அந்தஸ்தையும் உயர்த்த வேண்டுமென்று பாடுபட்டான். ஏற்கனவே, தேசியக் கட்சியாக அமைக்கப் பட்டிருந்த 'டுங்-மெங்-ஹுவாயி' என்ற கட்சியை 'கோமிண்டாங்' என்ற புதிய பெயருடன் சீர்திருத்தி அமைத்தான். தேசத்தின் கைத்தொழில்களை அபிவிருத்தி செய்ய வேண்டுமென்று சில திட்டங்களை வகுத்தான். ஆனால் குடியரசுத் தலைவனா யிருந்த யுவான்-ஷி-காய், தானே சக்ரவர்த்தியாக முடி சூட்டிக் கொள்ளச் சூழ்ச்சி செய்து வந்தான். ஆனால், இவனுடைய சூழ்ச்சி பலிக்கவிடாமல், பின்னர் சியாங்-கை-ஷேக் செய்து விட்டான். 1925ம் வருஷம் மார்ச் மாதம் 12ந் தேதி, ஸன்-யாட்-ஸென் பீகிங் நகரத்தில் இறந்து விட்டான்.

1912ம் வருஷம் குடியரசு ஏற்பட்டதிலிருந்து 1925ம் வருஷம் வரை சுமார்-பதின்மூன்று வருஷ காலம்—ஸன்-யாட்-ஸென், சீனா வெங்கணும் சென்று பலத்த பிரசாரஞ் செய்து வந்தான். தன்னுடைய அரசியல் கோட்பாடுகளை மூன்று பகுதிகளாகப் பிரித்துக் கொண்டு அவற்றை அநேக பிரசங்கங்கள் வாயிலாகத் தெரிவித்தான். இந்த மூன்று தத்துவங்கள் முறையே (1) தேசிய தத்துவம் (2) ஜனநாயக தத்துவம் (3) ஜீவனோபாய தத்துவம் எனப்படும். இவைகளுக்கு சீன பாஷையில் 'ஸான்-மின் ஜுவாயி' என்று பெயர், அதாவது 'மூன்று ஜனக் கொள்கைகள்' என்று மொழி பெயர்த்துச் சொல்லலாம். இவைகளை விளக்கி 1924ம் வருஷம் ஜனவரி மாதம் 27ந் தேதியிலிருந்து வாரத்திற்கொரு பிரசங்கமாகச் செய்து வந்தான். இந்தப் பிரசங்கங்களில் இவன், சீனாவின் அப்போதைய நிலைமையைத் தெளிவாக எடுத்துக் காட்டி யிருப்பதோடு, சீனாவின் எதிர்கால வாழ்க்கை எப்படி அமைய வேண்டுமென்பதையும் வரையறுத்துக் கூறுகிறான்.

இவன் கூறிப் போந்தவை யாவும், இப்பொழுது சீனாவில் வேத வாக்குகளாகப் போற்றப்படுகின்றன. எவ்வளவோ கஷ்டப்பட்டு சீனாவின் தேசிய வாழ்க்கையை ஸன்-யாட்-ஸென் திருத்தி யமைக்க முயன்றான். அதனை அவனுடைய சகாக்கள் பிற்காலத்தில் நடைமுறையில் கொணர்ந்திருக்கிறார்கள். ஆனால் கூட, இப்பொழுது சீனாவின் தேசிய வாழ்வுக்கு உலை வைக்கப்பட்டு வருகிறது! இந்தியாவின் தேசிய வாழ்வு பண்பட்டு ஸ்திரமாக அமைய வேண்டு மென்ற நோக்கமுடையவர்கள், இந்தப் பிரசங்கங்களைத் தொடர்ந்து படிக்க வேண்டுமென்று நாம் விரும்புகிறோம். ஏனென்றால் சீனாவும், இந்தியாவும் பல விதங்களில் ஒன்று பட்டவை. இரண்டும் ஆசியா கண்டத்துப் பெரிய நாடுகள்; புராதன சரித்திரப் பெருமையுடையவை; சீதோஷ்ணம், இயற்கை வளங்கள், சரித்திர பரம்பரைகள், நாகரிகப் பெருமை முதலிய எல்லாவற்றிலும் ஒற்றுமை யுடையவை. ஆகையால், ஸன்-யாட்-ஸென்னின் பிரசங்கங்கள் இந்திய தேசிய வாதிகளுக்கு எவ்வளவு உபயோகமா யிருக்கு மென்பதை நாம் சொல்லத் தேவை யில்லை.

இந்தச் சந்தர்ப்பத்தில், சில உறவு முறைகளை 'ஜோதி' வாசகர்கள் தெரிந்து கொள்வது நல்லது. தற்போழ்து, சீனாவின் சர்வாதிகாரி போலிருந்து ஜப்பானுடன் எதிர்த்துப் போராடி வரும் சியாங்-கை-ஷேக் யார் தெரியுமா? கொஞ்சம் பூர்விகத்துக்குப் போவோம். சீனாவில் ஒய். எம். சி. ஏ. சங்கம் ஸ்தாபிதமாவதற்குக் காரணமாயிருந்தவர்களுள் ஒருவன் சார்லஸ் ஜோன்ஸ் ஸுங் என்பவன். இவன் அமெரிக்

காவில் கல்வி பயின்றவன். வியாபாரஞ் செய்து பொருள் திரட்டினன். இவனுக்கு மூன்று பெண்களும் மூன்று பிள்ளைகளும் உண்டு. பிள்ளைகளின் பெயர் முறையே (1) டி. வி. ஸூங்; (2) டி. ஏ. ஸூங்; (3) டி. எல். ஸூங். இந்த மூவரும் இப்பொழுது சீனுவிலேயே மிகப் பணக்காரக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். மூத்த குமாரனுன டி. வி. ஸூங், அநேக பாங்கிகளையும் தொழில் ஸ்தாபனங்களையும் வைத்து நடத்தி வருவதோடு, சர்வதேச சங்கத்தில் சீனுவின் கட்சியை அடிக்கடி எடுத்துச் சொல்லி வருவது யாவரும் அறிந்ததே. இந்த மூன்று சகோதரர்களுக்கும் வெளி நாடுகளில் நல்ல செல்வாக்கு உண்டு. சார்லஸ் ஜோன்ஸ் ஸூங்கின் மூன்று குமாரத்திகளுள் மூத்தவளான ஸூங்-எய்-லிங் என்பவள், டாக்டர் எச். எச். குங் என்ற பிரபல பாங்கரைக் கலியாணஞ் செய்து கொண்டாள். இந்தக் குங்தான், சீனுவின் பொக்கிஷ மந்திரியாகவும் பிரதம மந்திரியாகவும் இருந்தது. இரண்டாவது புத்திரியான ஸூங் சிங் லிங் என்பவள், டாக்டர் ஸன்-யாட்-ஸென்னின் மனைவி. இப்பொழுது விதவையாயிருக்கிருள். தற்போதைய சீன-ஜப்பானியப் போராட்டத்தில், சீனர்களுக்கு உற்சாக மூட்டக் கூடியவாறு அநேக காரியங்களைச் செய்து வருகிருள். மூன்ருவது மகளான ஸூங்-மேய்-லிங் என்பவள்தான், சியாங்-கை-ஷேக்கின் மனைவி. இந்த மூன்று சகோதரிகளும் மேனுட்டுக் கல்வி நன்கு பயின்றவர்கள். சீனுவின் புனருத்தாரண இயக்கத்தில் இந்த மூவரும் அதிகமாக ஈடுபட்டுழைத்து வருகிருர்கள். இப்பொழுது தெரிகிறதா சியாங்-கை-ஷேக் யாரென்று? டாக்டர் ஸன்-யாட்-ஸென்னுடைய பிரதம சிஷ்யன் மட்டுமல்ல; சகலைபுங்கூட.

கனவான்களே !

'ஸான் மின்' கோட்பாடுகளைப் பற்றி உங்களுக்கு இப்பொழுது சொல்லப் போகிறேன். 'ஸான்மின்' கோட்பாடுகள் யாவை? சுருக்கமாகக் கூறப்போனால், அவை, நமது தேசத்தின் விமோசனத்திற்காகக் கையாளப்படுகிற கோட்பாடுகள். கோட்பாடு அல்லது தத்துவம் என்றால் என்ன? அஃதொரு எண்ணம்; ஒரு நம்பிக்கை; ஒரு சக்தி. ஒரு பிரச்னையைப் பற்றி நாம் ஆழ்ந்து ஆராய்ச்சி செய்கிறபோது, முதலில் ஓர் எண்ணம் உண்டாகிறது. இந்த எண்ணம் தெளிவுபடத் தெளிவுபட, அதில் ஒரு நம்பிக்கை ஏற்படுகிறது. அந்த நம்பிக்கையிலிருந்து ஒரு சக்தி பிறக்கிறது. ஆகையால் எந்த ஒரு கோட்பாடும் அல்லது தத்துவமும் ஓர் எண்ணத்திலிருந்து தான் ஆரம்பிக்க வேண்டும். இந்த எண்ணமானது நம்பிக்கையை உண்டுபண்ண வேண்டும். அந்த நம்பிக்கையிலிருந்து சக்தி உதயமாகவேண்டும். அப்பொழுதுதான் அந்தக் கோட்பாடு ஸ்திரமாக அமையும். 'ஸான் மின்' கோட்பாடுகள் நமது தேசத்தைக் காப்பாற்றும் என்று நாம் ஏன் சொல்லுகிறோம்? ஏனென்ருல், மற்ற நாடுகளுக்கு மத்தியிலும், சர்வதேச விஷயங்களிலும், அரசாங்க நிருவாக விஷயத்திலும், பொருளாதார வாழ்க்கையிலும் சீனுவை, அவை—அந்தக் கோட்பாடுகள்—சம அந்தஸ்துடன் நிற்கச் செய்யும். அப்பொழுதுதான் சீனு, இந்த உலகத்தில் நிரந்தரமாக வாழமுடியும். 'ஸான் மின்' கோட்பாடுகள் நமது தேச விமோசனத்திற்காக ஏற்பட்ட கோட்பாடுகள். சீனுவுக்கு இப்பொழுது விமோசனம் தேவையில்லையா வென்று உங்களை நான் கேட்கிறேன். அப்படி தேவையானல், 'ஸான் மின்' கோட்பாடுகளில் நம்பிக்கை கொள்ளுங்கள்.

அந்த நம்பிக்கையானது, சீனாவைக் காப்பாற்றக் கூடிய ஒரு மகத்தான சக்தியை உற்பத்தி செய்யும்.

இன்று, தேசியம் என்ற கோட்பாட்டைப் பற்றி எடுத்துச் சொல்கிறேன். சமீபத்தில் 'கோமின்டாங்' கட்சியானது சீர்திருத்தியமைக்கப் பட்டபோது தேசிய விமோசனத்திற்குப் பிரசாரம் அவசியம் என்று வற்புறுத்தப்பட்டது. ஜனங்களிடத்தில் பிரசாரஞ் செய்ய வேண்டுமானால், அவர்களுக்கு நமது கோட்பாடுகளைப் பற்றி விஸ்தரித்துச் சொல்ல வேண்டும். சென்ற பத்து வருஷங்களுக்கு மேலாக, ஜனங்களுடைய மூன்று கொள்கைகள் (ஸான் மின் கோட்பாடுகள்) சில அறிஞர்களுக்குத் தெரிந்திருந்தாலும், பொதுவாக இவைகளைப் பற்றிப் பலரும் இன்னும் சரியாகத் தெரிந்து கொள்ளவில்லையென்று தான் சொல்ல வேண்டியிருக்கிறது. ஆகையால், தேசியம் என்ற கோட்பாட்டைப் பற்றி உங்களுக்கு விரிவாக எடுத்துச் சொல்கிறேன்.

தேசியத்தின் கோட்பாடு என்ன? சீனாவின் சமுதாய வாழ்க்கை, பழக்க வழக்கங்கள் இவற்றின் சரித்திரத்தை ஆராய்ந்து பார்த்தோமானால் தேசிய தத்துவமானது, ராஜ்யத்தின் தத்துவமாகவே இருந்திருக்கிறது. தாங்கள் எந்தக் குடும்பத்திலே பிறந்தார்களோ, அந்தக் குடும்பத்திற்கும், எந்த இனத்தில் ஜனித்தார்களோ அந்த இனத்திற்குமே, சீனர்கள் அதிகமான பக்தி விசுவாசத்துடன் நடந்து கொண்டு வந்திருக்கிறார்கள். இதனால் சீனாவில் குடும்ப பக்தியும் இன பக்தியும்தான் காணப்பட்டனவே தவிர்த்து, தேசபக்தி என்பது இல்லாமலே போய் விட்டது. சீனர்கள், மணல் மூட்டை போன்றவர்கள் என்று அந்நியர்கள் கூறுகிறார்கள். ஏன்? நமது ஜனங்கள் குடும்பத்திற்கும் இனத்திற்குந்தான் பக்தி செலுத்தினார்களே தவிர, தேசத்திற்கு—சமுதாயத்திற்கு—பக்தி செலுத்தவில்லை. இதனால் தேசியமென்பது இல்லவேயில்லை. நம்மிலே பலரையும் ஒன்றுபடுத்தக்கூடிய சக்தி, குடும்பத்திற்கும், இனத்திற்கும் இருந்திருக்கிறது. சீனர்கள், தாங்கள் எந்த இனத்தில் பிறந்தார்களோ அந்த இனத்தின் நலனுக்காக, தங்களையும் தங்கள் உயிரையும் தியாகஞ் செய்திருக்கிறார்கள். உதாரணமாக, க்வாங்டங் மாகாணத்தில் வசித்த இனத்தினருக்கும்—அல்லது வகுப்பினருக்கும் ஏற்பட்ட சண்டையானது எத்தனை உயிர்களைப் பலி வாங்கியது? தங்கள் வகுப்பின் நலனுக்காகச் சீனர்கள் எதையும் தியாகம் செய்யச் சித்தமாயிருக்கிறார்கள் என்பதை இந்தச் சம்பவம் புலப்படுத்தியது. ஆனால் தேச நலன் பொருட்டு இந்தத் தியாகம் செய்ய வேண்டுமென்ற எண்ணம் சீனர்களுக்கு ஏற்படவில்லை. சீனர்களின் ஒற்றுமை உணர்ச்சியானது, வகுப்பளவோடுதான் நின்று விட்டதே தவிர, தேசத்தின் அளவுக்கு விசாலமடையவில்லை.

தேசியக் கோட்பாடே ராஜ்யத்தின் கோட்பாடு என்று நான் மேலே சொன்னது சீனாவுக்குத்தான் பொருத்தமாகுமே தவிர, மேனாடுகளுக்குப் பொருந்தாது. மேனாட்டார், தேசம் (அல்லது ஜாதி) வேறே ராஜ்யம் வேறே என்று பிரிக்கிறார்கள்.

'மிண்ட்ஸு' என்ற சீன வார்த்தைக்கு ஆங்கிலத்தில் 'நேஷன்' (ஜாதி அல்லது சமூகம் என்று இதனைத் தமிழில் சொல்லலாம்.) என்று சொல்கிறார்கள். 'நேஷன்' என்ற வார்த்தைக்கு இரண்டு பொருள்கள் உண்டு. ஒன்று வமிசம்; மற்றொன்று ராஜ்யம். ஒரே வார்த்தைக்கு இவ்விரண்டும் இரு பொருள்களாயிருந்தாலும் இரண்டும் வெவ்வேறே. அநேக சீன வார்த்தைகளுக்கு இரண்டு பொருள்கள் உண்டு. உதாரணமாக 'ஷே—ஹுயி' என்ற வார்த்தைக்கு கூட்டம் என்றும், ஒழுங்காக அமைக்கப்பட்ட ஒரு ஸ்தாபனம் என்றும் இருபொருள்கள் உண்டு. சமூகம் என்பதும் ராஜ்யம் என்பதும் நெருங்கிய தொடர்பு கொண்டவை. ஆனாலும் வெவ்வேறானவை. சமூகமும் ராஜ்யமும் தொடர்புடையன வென்பது, சீனாவைப் பொறுத்த மட்டில் மிகவும் உண்மையானது. ஏன்? பூர்விக காலத்திலிருந்து, சீனாவில், ஒரு வம்சத்திலிருந்தே ஒரு தனி ராஜ்யம் விருத்தியடைந்திருக்கிறது. ஆனால் மற்றத் தேசங்களில், ஒரே வமிசத்திலிருந்து பல ராஜ்யங்கள் தோன்றியிருக்கின்றன. ஒரே ராஜ்யத்தில் பல பல சமூகத்தினர் அடங்கியிருக்கின்றனர். உதாரணமாக இங்கிலாந்தை எடுத்துக் கொள்வோம். வெள்ளைச் சமூகத்தினரை அடிப்படையாகக் கொண்ட இந்த ராஜ்யமானது, கறுப்பு நிறத்தவர், பழுப்பு நிறத்தவர் முதலியவர்களையும் சேர்த்துக்கொண்டு பிரிட்டிஷ் ஏகாதிபத்தியமாகப் பரிணமித்தது. ஆகையால், சமூகமும் ராஜ்யமும் ஒன்று என்று சொல்வது, இங்கிலாந்தைப்பொறுத்த மட்டில் சரியாகாது. அப்படியே, பிரிட்டிஷாருக்குச் சொந்தமான ஹாங்காங் தீவை எடுத்துக் கொள்ளுங்கள். இதில் ஆயிரக் கணக்கான சீனர்கள் வசிக்கிறார்கள். எனவே, இதனை பிரிட்டிஷாரைக் கொண்ட பிரிட்டிஷ் ராஜ்யம் என்று சொல்லிவிட முடியுமா? இல்லை. இப்படியேதான் இந்தியா முதலிய நாடுகளிலும்.

சமூகம் வேறு, ராஜ்யம் வேறு என்று எப்படி நாம் பிரிப்பது? இவ்விரண்டையும் எந்தெந்த சக்திகள் உருவகப் படுத்தினவோ அவைகளைக் கொண்டுதான் நாம் இதனைப் பார்க்க வேண்டும். வமிசம், அல்லது சமூகம் என்பது இயற்கைச்சக்திகளின் துணை கொண்டு அபிவிருத்தியடைந்தது. ராஜ்யமோ, ஆயுதபலத்தைக் கொண்டு விருத்தியடைந்தது. சீனர்கள் 'வாங்—டோ' என்ற ஒரு சொல்லை உபயோகிப்பார்கள். அதாவது இயற்கையாகச் செல்வதுதான் ராஜ பாட்டை என்பது இதன் பொருள். ஆயுத பலத்திற்கு 'பா—டோ' என்று பெயர். இந்த பலத்தைக் கொண்டு அமைவது தான் ராஜ்யம். உதாரணமாக, ஹாங்காங் தீவு வாசிகள், அந்தப் பிரதேசத்தை நன்றாக அமைக்குமாறு பிரிட்டிஷாரைக் கேட்டுக் கொண்டதன் பயனாக அது அமைக்கப்படவில்லை. ஆயுத பலத்தினால், பிரிட்டிஷார் ஹாங்காங்கைக் கைப்பற்றிக் கொண்டார்கள். இந்தியாவை, இங்கிலாந்து, முன்னேற்ற மார்க்கத்தில் செலுத்திக் கொண்டு வருவதும் இதே கதைதான். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் வளர்ச்சியடைந்ததெல்லாம் ஆயுதபலத்தை

அடிப்படையாகக் கொண்டேயாகும். ஆதி காலத்திலிருந்தே, உலகத்தில் எந்தராஜ்யமும் பலாத்கார சக்தி யில்லாமல் ஸ்தாபிக்கப் படவில்லை. ஆனால் ஒரு ஜாதி அல்லது வமிசம், அல்லது சமூகம் வளர்ச்சியடைவது இயற்கை வழியினால்தான். ஹாங்காங்கி லுள்ள ஆயிரக்கணக்கான சீனர்கள் ஒரே வமிசத்தினர் என்ற முறையில் ஒற்றுமைப் பட்டவர்கள். இந்த ஒற்றுமையானது, இயற்கை வழியாக ஏற்பட்டது. இங்கிலாந்து, எந்தவித மான பலாத்காரத்தை உபயோகித் தாலும், இந்த உண்மையை மாற்ற முடியாது. ஆக, இயற்கை வழியாக ஒன்றுபட்டு அபிவிருத்தி யடைந்த ஒரு கூட்டத்தை சமூகம் என்றும், மனிதசக்திகளால், அல்லது பலாத் கார சக்திகளால் ஒன்றுபட்டு அபி விருத்தியடைந்த ஒரு கூட்டத்தை ராஜ்யம் என்றும் சொல்லுகிறோம். சமூகத்திற்கும் ராஜ்யத்திற்கும் இது தான் வித்தியாசம்.

வமிச உற்பத்தியைக் கவனிப் போம். ஆதியில், மனிதன் பிராணி வர்க்கத்தைச் சேர்ந்தவனாகவே யிருந் தான். ஆயினும், நாம் இப்பொழுது சந்திக்கிற பிராணிகளி னின்றும் அவன் வேறுபட்டவனே. எல்லாப் படைப்புகளுக்கும் ஆத்மா போலிருக் கிறான் மனிதன் என்று சொல்லலாம். மானிடசமூகத்தை ஐந்து முக்கிய பிரிவினராகப் பிரித்திருக்கிறார்கள் அறிஞர்கள். வெண்மை நிறத்தவர், கறுப்பு நிறத்தவர், சிவப்பு நிறத்த வர், மஞ்சள் நிறத்தவர், பழுப்புநிறத் தவர். இவர்களை இன்னும் உபபிரிவின ராகப் பிரித்தால், மங்கோ லியர்கள், மலேயர்கள், ஜப்பானி யர்கள், மஞ்சூரியர்கள், சீனர்கள் என்று பலவாறு பிரிக்கலாம். இந்த வமிசங்கள் அபிவிருத்தியடைவதற்கு முக்கிய காரணமாயிருந்தது இயற் கைச் சக்திதான். ஆனால் இவைகளைச் சிறிது பரிசிலனை செய்து பார்த்தோ மானால், மிகச் சிக்கலா யிருக்கும். இந்த வமிசங்களின் அபிவிருத்திக்கு அடிப்படையா யிருப்பது ஒரே ரத்தம். சீனர்கள், மஞ்சள் நிற வமி சத்தைச் சேர்ந்தவர்கள். மஞ்சள் நிறத்தவரின் ரத்தக் கலப்பு இவர் களுக்கு இருக்கிறது. மூதாதையர் யர்களின் ரத்தமானது, வமிசபாரம் பர்யமாக ஒவ்வொரு தலைமுறைக்கும் புகுத்தப்படுகிறது. ஆகையால் ரத் தக் கலப்பினால் ஏற்படுகிற ஒற்றுமை யானது, மிகவும் வலுவுள்ள சக்தி யாகும்.

மற்றொரு முக்கிய சக்தியானது, அந்தந்தச் சமூகத்தினரும் கை யாண்ட ஜீவனோபாய முறைகள். மங்கோலியர்கள், எங்கெங்கு புல்லும் நீரும் இருந்தனவோ அங்கெல்லாம் தங்கள் வாசஸ்தலமாகக் கொண் டார்கள். இவர்கள் நாடோடி வாழ்க்கையை நடத்தி வந்தார்கள். இவர்களிடமிருந்துதான் மங்கோலிய ஆதிக்கம் ஏற்பட்டது. இந்தஆதிக்கம் ஆசியா,ஐரோப்பா ஆகிய இரண்டுகண் டங்களிலும் ஏற்பட்டது. வேறு எந்த சாம்ராஜ்யத்தினுடைய ஆதிக்கமும் இவ்வளவு தூரம் விஸ்தாரமடைய வில்லை. மங்கோலிய சாம்ராஜ்யம் இவ்வளவு வலுப்பெற்று நின்றதற் குக் காரணம், மைல் கணக்கைப் பாராமல் நீண்டதூரம் செல்லும் சுபாவமுடைய நாடோடி வாழ்க்கை தான்.

வமிச பாரம்பர்யங்கள் ஏற்படுவதற்கு மற்றொரு முக்கிய காரணம் பாஷை. நமது பாஷையை அந்நிய ஜாதியினர் கற்றுக் கொண்டால், நாம் நம்மை அவர்களுடன் எளிதில் கலக்க விட்டுக் கொள்கிறோம். அதே மாதிரி, நாம் அந்நிய பாஷைகளைக் கற்றுக் கொண்டால், நம்மையும் பிறர் கலக்க விட்டுக் கொள்கிறார்கள். ஆகவே, ஒரே ரத்தக் கலப்பும் ஒரே பொதுப் பாஷையும் உடைய இரண்டு சமூகத்தினர் ஒன்று சேர்வது மிகவும் சுலபமல்லவா! ஆகையால், ஒரு சமூகத்தின் அபிவிருத்திக்கு பாஷையும் ஒரு முக்கிய காரணம்.

நான்காவது மதம். ஒரே மாதிரியான கடவுள்களையோ, அல்லது ஒரே விதமான மூதாதையர்களையோ வணங்குகிறவர்கள் ஒரே சமூகத்தினராகிறார்கள். சமூகங்களின் அபிவிருத்திக்கு மதம் ஒரு முக்கிய துணையாயிருக்கிறது. அரேபியா சாம்ராஜ்யமும் ஜூடியா சாம்ராஜ்யமும் எப்பொழுதோ அழிந்து போயின. ஆனால் அரேபியர்களும் யூதர்களும் இப்பொழுதும் இருந்து கொண்டிருக்கிறார்கள். இவர்களுடைய சாம்ராஜ்யம் அழிந்து போனாலும் இவர்கள் நிரந்தரமாக வாழ்வதற்குக் காரணம் இவர்களுடைய மதந்தான். யூதர்கள் இப்பொழுது உலகத்தின் எல்லா நாடுகளிலும் இருக்கிறார்கள். உலகத்திற் சிறந்த மேதாவிகளான மார்க்ஸ், ஐன்ஸ்டீன் போன்றவர்கள் யூதர்களே. இங்கிலாந்து, அமெரிக்கா முதலிய நாடுகளில் பணப் புழக்கம் யூதர்களிடந்தான் அதிகம். யூதர்களுக்கு, அவர்களுக்கு இயற்கையாயமைந்த கூர்மையான அறிவோடு மத நம்பிக்கையும் அதிகமாயுண்டு. அதனால் தான், அவர்கள் தங்களுடைய வமிசப் பெருமையைக் காப்பாற்றிக் கொள்ள முடிகிறது. இங்ஙனமே தான் அரேபியர்களுக்கும், இந்தியர்களுக்கும் மத உணர்ச்சி நிரம்ப இருக்கிறது.

சமூக அபிவிருத்திக்கு, பழக்க வழக்கங்கள் முக்கிய சாதனமாகும். ஒரே மாதிரியான பழக்க வழக்கங்களுடைய பல ஜாதியினரும் ஒரே சமூகத்தினராக ஒற்றுமைப் படுவார்கள்.

ஆக, மேற்பார்வைக்கு வெவ்வேறு ஜாதியினர் போல் தெரியும் பல கூட்டத்தினர் ஒன்றுபடுவார்களானால் அதற்குக் காரணம், மேலே கூறப்பட்ட ஐந்து சக்திகளான ரத்தக் கலப்பு, பொதுவான பாஷை,* ஒரே மாதிரியான ஜீவனோபாயம், பொதுவான மதம், பொதுவான பழக்க வழக்கங்கள் ஆகிய இவற்றுள் ஏதேனும் ஒன்று இருக்க வேண்டும். இவையாவும் இயற்கையான சக்திகளைச் சேர்ந்தவை.

சீனாவையும், சீன சமூகத்தையும் நாம் காப்பாற்ற வேண்டுமானால், நாம் தேசியத்தை அபிவிருத்திச் செய்ய வேண்டும். இதனை நடைமுறையில் கொணரச் செய்வதற்கு முன்னர், இதனைப்பற்றி நாம் நன்கறிந்து கொள்ளவேண்டும். சீனாவில், மொத்தம் நாற்பது கோடி சீனர்கள் வசிக்கிறார்கள். மங்கோலியர்கள், திபேத்தியர்கள் போன்ற அந்நியர்கள் சுமார் ஒரு கோடி பேர் வசிக்கிறார்கள். எனவே, சீனாவில், சீனர்கள் என்ற தூய்மையான வமிச பரம்பரைப் பெருமை கொண்ட ஒரே

ஜாதியினர் வசிக்கிறார்கள் என்பது தெளிவாயிற்று.

ஆனால் நம்முடைய நிலைமை என்ன? மற்றச் சமூகங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கையில், நாம், அதிகமான ஜனத்தொகையுடையவர்களாகவும், சுமார் நாலாயிரம் வருஷத்துப் புராதனப்பெருமை நிறைந்த கலைஞானத்தையுடையவர்களாகவும் இருக்கிறோம். அமெரிக்கா, ஐரோப்பா முதலிய நாடுகளிலுள்ள ஜாதியாரைப் போல்நாம் முன்னேறிச் சென்றிருக்க வேண்டும். ஆனால் என்ன காண்கிறோம்? சீனர்களிடத்தில் தேசிய உணர்ச்சியே இல்லை. எனவே, நமது ஜனத்தொகை நாற்பது கோடியாயிருந்தாலும், நாம் கட்டுவிட்ட மணல் மூட்டை மாதிரி யிருக்கிறோம். உலகத்திலுள்ள எல்லா நாடுகளைக் காட்டிலும், நமது நாடுதான் ஏழ்மையான நாடு; பலஹீனமான நாடு. சர்வதேச விவகாரங்களில் நாம் கீழான அந்தஸ்தில் இருக்கிறோம். மற்ற நாட்டார், சோற்றை அள்ளும் கரண்டியாகவும் சோற்றுக் கலயமாகவும் இருந்தால், நாம் அவர்களுக்கு ஆகாரமாயிருக்கிறோம். நமது தற்போதைய நிலைமை மிகவும் ஆபத்தாயிருக்கிறது. நாம் உடனே, நம்மிடையில் தேசிய உணர்ச்சியை வலுக்கச் செய்து நாற்பது கோடி மக்களையும் ஒன்று சேர்க்காவிட்டால், நமது நாட்டை இழந்து விடுவோம்; நமது சீன சமூகம் அழிந்து விடும்.

இந்த ஆபத்தை ஜனங்களுக்கு எடுத்துச் சொல்லி, அதனைத் தடுக்க வேண்டுமானால், அவர்களுக்கு, சீனர்களை மற்ற நாட்டு ஜனங்களோடு ஒப்பிட்டுக்காட்ட வேண்டும். ஐரோப்பிய மகா யுத்தத்திற்கு முன்னர், வல்லரசுகள் என்று சொல்லப்பட்ட ஏழெட்டு நாடுகள் இருந்தன. இவற்றில் மிக விஸ்தீரணமா யிருந்தவை ஜெர்மனி, ஆஸ்திரியா, ருஷ்யா ஆகிய மூன்றும்; செல்வத்தோடு இருந்தது அமெரிக்கா; பாலிய தசையிலே இருந்தவை ஜப்பானும் இத்தலியும். இவற்றில், மேற்படி மகா யுத்தத்திற்குப்பின்னர் மூன்று நாடுகள் விழுந்து போயின. முதல் தரத்து வல்லரசுகளில் கிரேட் பிரிட்டன், பிரான்ஸ், ருஷ்யா, அமெரிக்கா ஆகிய நாடுகள், ஒரே ஜாதியினரிடமிருந்து உற்பத்தியான நாடுகள். ஆங்கிலோ—சாக்ஸன் ஜாதியாரிடமிருந்து கிரேட் பிரிட்டன் தோன்றியது. இங்கிலாந்திலும் வேல்ஸிலும், இந்த ஆங்கிலோ—சாக்ஸன் ஜாதியார் 380 லட்சம் பேரே யிருக்கின்றனர். ஆயினும், இந்த ஜாதியார் உலகத்திலே மிகச் சக்தி வாய்ந்தவர்களாகவும், பலம் பொருந்திய ஒரு சாம்ராஜ்யத்தைச் சிருஷ்டித்தவர்களாகவும் இருக்கிறார்கள். நூறு வருஷத்திற்கு முன் இவர்கள் 120 லட்சம் பேராகவே இருந்தார்கள். இப்பொழுது 380 லட்சம் பேரா யிருக்கிறார்கள்.

கீழ் நாட்டுக் கிரேட் பிரிட்டன் என்று சொல்லத்தக்க ஜப்பான், 'யமாடோ' என்ற ஒரு வமிசத்தினரிடமிருந்து தோன்றியதாகும். இந்த ஜப்பானிய சாம்ராஜ்யம் ஆரம்பத்திலிருந்து இதுவரை அந்நியர்களுடைய ஆதீனத்திற் குட்படவில்லை. ஜப்பானுடைய ஜனத்தொகை தற்போது 560 லட்சம். நூறு வருஷத்திற்கு

முன்னர், இதன் ஜனத்தொகை எவ்வளவு இருந்ததென்று தெரியாது. ஆனால் சென்ற நூறு வருஷத்திற்குள் ஒன்றுக்கு மூன்றாகஜனத்தொகை அபிவிருத்தியடைந் திருக்கிறதென்று சொல்லலாம். இந்த 'யமாடோ' ஜாதியினர்—ஜப்பானியர்—கால வேகத்திற்குத்தகுந்தபடி தங்களைச் சமாளித்துக் கொண்டு, மேனாட்டு விஞ்ஞான முறைகளை யெல்லாம் கற்று இப்பொழுது மேனாட்டாரோடு போட்டி போடுகின்றனர். ஐரோப்பியர்களோ, அமெரிக்கர்களோ, ஜப்பானியர்களைக் கேவலமாக மதிப்பதில்லை. ஜப்பானுடைய ஜனத் தொகையைக் காட்டிலும், நமது நாட்டு ஜனத் தொகை அதிகம். ஆயினும் நாம் இகழப்படுகிறோம். ஏன்? ஜப்பானியர்க்குத் தேசீய உணர்ச்சி இருக்கிறது. நமக்கு இல்லை. ஜப்பானியர்கள் கூட, ஒரு காலத்தில், மேனாட்டாருடைய ஆதிக்கத்தினால் தலை குனிந்து நின்றார்கள். இப்பொழுது—சுமார் ஐம்பது வருஷகாலத்திற்குள்—தேசீய உணர்ச்சி காரணமாக வலுவுள்ள சாம்ராஜ்யமாகத் தங்களை ஆக்கிக் கொண்டு விட்டனர். நாம் பலமுள்ள நாடாக வேண்டுமானால், ஜப்பானை முன் மாதிரியாகக் கொள்ள வேண்டும்.

ஐரோப்பியர்களையும் ஆசியாக் காரர்களையும் ஒப்பிட்டுப் பாருங்கள். வெள்ளையர்களுக்குத்தான் எல்லா வித அறிவும் திறமையும் இருக்கிறதென்று நாம் கருதி வந்ததனால், அவர்கள் எல்லாவற்றின் மீதும் ஆதிக்கம் கொண்டு விட்டார்கள். இதனால் ஆசியாக்காரர்களாகிய நாம் மனமுடைந்து விட்டோம். திடீரென்று ஜப்பான் தலை தூக்கி நின்றதனால், ஆசிய சமூகங்களுக்கே ஒரு வித நம்பிக்கை ஏற்பட்டது; பெருமையும் உண்டாயிற்று. வார்சேல் சமாதான மகா நாட்டில், ஐந்து வல்லரசுகளில் ஒன்றாக ஜப்பானும் அமர்ந்திருந்தது. ஆசியாவின் பிரதிநிதியாக அது பேசியது. இதனால் வெள்ளையர்களைப் போல் ஆசியாக் காரர்களுக்கும் திறமை யுண்டு என்பது நிரூபிக்கப்பட்டதல்லவா?

ஐரோப்பிய யுத்த காலத்தில், ருஷ்யாவில் ஒரு பெரிய புரட்சி உண்டாயிற்று. இதன் விளைவாக ஜார் ஆட்சி வீழ்ந்தது. ருஷ்யர்கள், ஸ்லாவிய ஜாதியைச் சேர்ந்தவர்கள். நூறு வருஷத்திற்கு முன், இந்த ஸ்லாவிய ஜாதியினர், நான்கு கோடி பேராயிருந்தனர். இப்பொழுது பதினாறு கோடி பேராயிருக்கின்றனர். இப்பொழுது ருஷ்யா, உலக வல்லரசுகளில் ஒன்றாயிருக்கிறது. ருஷ்ய—ஜப்பானிய யுத்தத்தின் போது, சீனா முழுவதையுமே ருஷ்யா ஆக்ரமித்துக் கொண்டுவிடுமோவென்று அஞ்சப்பட்டது. ஆனால் ஆங்கிலோ-ஜப்பானிய ஒப்பந்தம் இதனைத் தடுத்து விட்டது. ஐரோப்பிய யுத்தத்தின் போது, ருஷ்யாவில் ஒரு பெரிய புரட்சி ஏற்பட்டு, அதன் பயனாக அதனுடைய பழைய ஏகாதிபத்திய அரசாங்கமே விழுந்து விட்டது. அதன் ஸ்தானத்தில் அபேதவாத அரசாங்கம் ஏற்பட்டது. இந்தப் புரட்சி அரசாங்கம் ஏற்பட்டு ஆறு வருஷமே யானாலும், அங்கே மகத்தான மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன. தற்போதைய ருஷ்ய சோவியத் அரசாங்கத்தின் கொள்கையானது, பல சாலிகளைத் தடுத்து, பல ஹீனர்களைப் பாது காப்பதாயிருக்கிறது. நியாயமாகவே எல்லாரிடத்திலும் நடந்து

கொள்ள வேண்டுமென்று விரும்புகிறது. ஆனால் ருஷ்யாவின் தற்போதைய கொள்கைகளைக் கண்டு, உலக வல்லரசுகள் வேறொரு காரணத்திற்காக அஞ்சுகின்றன. ஏனென்றால், உலகத்திலேயே ஏகாதிபத்தியக் கொள்கையும், முதலாளித்துவமும் நிலவக் கூடாதென்று ருஷ்யா கருதுகிறது. இதற்கான முறைகளையும் அது கையாள்கிறது. இதனால் உலக நிலைமையிலேயே ஒரு பெரிய மாறுதல் ஏற்பட்டிருக்கிறது.

ஐரோப்பிய சரித்திரத்தை நாம் ஆராய்ந்து பார்த்தோமானால், சர்வதேச யுத்தங்கள் பல நடை பெற்றிருப்பதைக் காணலாம். 1914ம் வருஷத்து ஐரோப்பிய யுத்தத்தில், ஜெர்மனி, ஆஸ்திரியா, துருக்கி, பல்கேரியா ஆகிய நாடுகள் ஒரு கட்சியினராகவும், இங்கிலாந்து, பிரான்ஸ், ருஷ்யா, ஜப்பான், இத்தலி, அமெரிக்கா ஆகிய நாடுகள் வேறொரு கட்சியினராகவும் இருந்து சண்டை போட்டன. நான்கு வருஷ யுத்தத்திற்குப் பிறகு, இரண்டு கட்சியினரும் சலித்துப் போய் விட்டார்கள். இனிமேல் இத்தகைய மகத்தான யுத்தம் ஏற்படாதென்றும், அப்படி ஏற்படுமானால் ஒரு நிறத்தவருக்கும் —உதாரணமாக வெள்ளையர்களுக்கும், மஞ்சள் நிறத்தவர்களுக்கும்—மற்றொரு நிறத்தவருக்கும் ஏற்படுகிற போராட்டமாகவே இருக்குமென்றும் சில அறிஞர்கள் கூறுகிறார்கள். ஆனால் உலக சரித்திரத்தை நான் ஆராய்ந்து பார்க்கிற வரையில் எதிர்காலத்தில் சர்வதேசப் போராட்டங்கள் இன்னும் மும்முரமாக நடைபெறும் என்று எதிர் பார்க்கிறேன். இந்தப் போராட்டங்கள் ஒரு ஜாதியினருக்கும் மற்றொரு ஜாதியினருக்குமோ, ஒரு நிறத்தவருக்கும் மற்றொரு நிறத்தவருக்குமோ ஏற்படுகிற போராட்டங்களாயிரா. ஒரு ஜாதிக்குள்ளேயே, ஒரு நிறத்தவருக்குள்ளேயே ஏற்படுகிற போராட்டங்களாயிருக்கும். வெள்ளை நிறத்தவரும் மஞ்சள் நிறத்தவரும் தனித்தனியாக அடக்குகிறவர் என்றும், அடக்கப்பட்டவர் என்றும், வலுவுள்ளோர் என்றும் வலி விழுந்தார் என்றும் இரண்டு பகுதியினராகப் பிரிந்து போராடுவார்கள். ருஷ்யப் புரட்சிக்குப் பிறகு, ஸ்லாவிய சமூகத்தினர், பல முள்ளவர்களைத் தடுத்து, பலஹீனர்களை ஆதரிப்பதும், பணக்காரர்களை அடக்கி, ஏழை மக்களை ஆதரித்தும் வருகிற கொள்கைகளைப் பரப்பி வருகின்றனர். இந்த எண்ணங்கள், மெதுவாக ஐரோப்பாவில் புகுந்து, பலஹீனமுள்ள ஜனங்களால் வரவேற்கப் பட்டு வருகின்றன. இங்ஙனம் வரவேற்றவர்களில், துருக்கியர்களை முக்கியமானவர்களென்று சொல்லலாம். ஐரோப்பிய யுத்தத்திற்கு முன்னர், துருக்கி, மிகப் பலஹீனமுள்ளதாயும், மீண்டும் தலையெடுக்க முடியாதென்ற நிலையிலும் இருந்தது. 'கீழ் நாட்டின் நோயாளி' என்று ஐரோப்பியர்கள் அதனைக் கூறி வந்தார்கள்; துருக்கியைப் பங்கு போட்டுக் கொள்ளவும் விரும்பினார்கள். இந்தச் சமயத்தில், ருஷ்யா, துருக்கியின் உதவிக்கு வந்து, கிரேக்கர்களை விரட்டியடிக்கும்படி செய்தது. இப்பொழுது துருக்கி, எல்லாராலும் மதிக்கக் கூடிய ஒரு தேசமாக இருக்கிறது. இதற்குக்

காரணம் ருஷ்யாவின் உதவி தான். ஆகையால், இனி, உலகத்திலேயே, ஒடுக்கப் பட்ட தேசத்தின ரெல்லாரும் ஒன்று சேரக் கூடிய சந்தர்ப்பங்கள் பல ஏற்படும்.

அந்தக் காலத்தில்—ஐரோப்பிய யுத்தத்தின்போது—எந்த நாடு ஒடுக்கப் பட்ட நாடா யிருந்தது? இங்கிலாந்தும், பிரான்ஸும் சேர்ந்து, ஜெர்மனியின் ஏகாதிபத்தியத்தை ஒழித்துவிட வேண்டுமென்று தீர்மானித்தபோது, ருஷ்யா அவர்களுடன் சேர்ந்து கொண்டு அநேக விதமான தியாகங்களைச் செய்தது. ஆனால் யுத்தத்தின் நடுவில், அது-ருஷ்யா-தன் சைந்நியங்களை பின்னுக்கு வாங்கிக் கொண்டு, ஒரு புரட்சியை ஆரம்பித்தது. ஏனென்றால் ருஷ்ய ஜனங்கள், அவ்வளவு தூரம் ஏகாதிபத்திய ஆட்சியின் கீழ் கஷ்டப்பட்டுவிட்டார்கள். எனவே, அபேதவாத அரசாங்க முறையை ஏற்படுத்த புரட்சி செய்தார்கள். ஆனால் இந்தப் புரட்சித் தத்துவத்தை ஐரோப்பிய வல்லரசுகள் எதிர்த்தன. ருஷ்யாவை எதிர்த்துப்போராட சில சைந்நியங்களையும் அனுப்பின. ஆனால் ருஷ்யா, இவைகளை யெல்லாம் எதிர்த்து நின்றது. எனவே, ஐரோப்பிய வல்லரசுகள், ருஷ்யாவை நேர்முகமாக எதிர்த்துத் தாக்க முடியாமையினால், மறைமுகமாக அதனைத்தாக்குகின்றன. அதாவது ருஷ்ய அரசாங்கத்தை அங்கீகரிக்க மறுக்கின்றன. (பின்னர், இங்கிலாந்து ருஷ்யாவை அங்கீகரித்திருக்கிறது.) ருஷ்யாவின் புதிய தத்துவத்தை ஏன் ஐரோப்பிய வல்லரசுகள் எதிர்க்கின்றன? ஏனென்றால், வல்லரசுகள் பலாத்காரத்தை ஆதரிக்கின்றவை. ருஷ்யாவோ பலாத்காரத்தை எதிர்த்து நிற்கிறது. இதனால்தான், ருஷ்யாவுக்கு எதிர்ப்பு பலமாயிருக்கிறது. இதனால்தான், எதிர்கால யுத்தங்கள், பலாத்காரத்திற்கும் நியாயத்திற்குமாக நடைபெறும் என்று நான் கூறுகிறேன்.

சென்ற நூற்றாண்டில் உலகத்திலுள்ள நாடுகளின் ஜனத்தொகை எவ்வாறு பெருகிய தென்பதை எடுத்துக்குறிப்பிட விரும்புகிறேன். அமெரிக்காவில் 100க்கு 1000 சதவிகிதமும், இங்கிலாந்தில் 300 சதவிகிதமும், ஜப்பானில் 300 சத விகிதமும், ருஷ்யாவில் 400 சத விகிதமும், ஜெர்மனியில் 250 சத விகிதமும, பிரான்ஸில் 25 சத விகிதமும் ஜனத்தொகை பெருகியிருக்கிறது. இந்த ஜனத் தொகைப் பெருக்கத்திற்குக் காரணம் என்னவென்றால், விஞ்ஞான சாஸ்திரத்தின் அபிவிருத்தி, வைத்திய சாஸ்திரத்தின் அபிவிருத்தி, சுகாதார வசதிகள் அதிகமாயிருப்பது முதலியவைகளேயாகும். இந்த ஜனப் பெருக்கத்தை நோக்குகிற போது, சீனாவின் நிலைமை யென்ன? நூறு வருஷங்களுக்கு முன்னே, அமெரிக்காவின் ஜனத்தொகை 90 லட்சமாயிருந்தது. இப்பொழுது 10 கோடியாயிருக்கிறது. இதே பிரகாரம் ஜனத்தொகை பெருகிக் கொண்டு போனால், இன்னும் ஒரு நூற்றாண்டுக்குள் 100 கோடியாகிவிடும். சீனர்களாகிய நாமோ, ஜனத்தொகை பெருத்தவர்கள் என்று பெருமை பேசிக் கொண்டிருக்கிறோம். இதனால், யாரும் நம்மை அழித்துவிட முடியாதென்றும், வேறு எந்த ஜாதியார் வந்தா

னும், அவர்களை நாம் ஐக்கியப்படுத்திக் கொண்டு விடுவோம் என்றும் பெருமையாகப் பேசிக்கொள்கிறோம். ஆனால் நூறு வருஷங் கழித்து, அமெரிக்கா சீனாவை ஆக்ரமித்துக் கொள்ளுமானால், பத்து அமெரிக்கர்களுக்கு நான்கு சீனர்கள் விகிதந்தான் இருப்பார்கள். அப்பொழுது அமெரிக்காவுடன், சீனா ஐக்கியமாக வேண்டியதுதான்.

சீனாவின் ஜனத்தொகை 40 கோடியென்று எப்பொழுது ஜன கணிதம் எடுக்கப்பட்டது தெரியுமா? கி. பி. 1734லிருந்து 1795ம் வருஷம் வரை ஆண்ட சீன்–லுங் என்ற மன்னனுடைய காலத்தில். இதற்குப் பிறகு ஜன கணிதமே எடுக்கப்படவில்லை. சென்ற, இருநூறு வருஷ காலமாக, சீனாவின் ஜனத்தொகை ஒரே நாற்பது கோடியாக இருந்து வந்திருக்கிறது. இன்னும் நூறு வருஷம் கழித்தால் கூட, இந்த 40 கோடிதான் இருக்கும்.

பிரான்ஸின் ஜனத்தொகை மிகக் குறைவாயிருப்பதால், அந்த நாட்டு அரசாங்கம், குழந்தைகளை அதிகமாகப் பெறுவோருக்குச் சன்மானம் அளிக்கிறது. விவாகஞ் செய்து கொள்ளாதவர்கள் அபராதம் விதிக்கப்படுகிறார்கள். ஆகவே, சீனர்களாகிய நாம், நமது ஜனத்தொகை பெருகுவதற்கு வேண்டிய முறைகளைக் கையாள வேண்டும்.

அடுத்த நூற்றாண்டுக்குள் உலகத்தின் ஜனத்தொகை பன்மடங்கு பெருகி நிற்கும். ஐரோப்பிய யுத்தங் காரணமாகத் தங்களுக்கு ஏற்பட்ட சேதங்களினின்று மீட்டுக் கொள்ளும் பொருட்டு, ஜெர்மனியும் பிரான்ஸும் தங்கள் ஜனத்தொகையைப் பெருக்க அநேக உபாயங்களைக் கையாளுகின்றன. உலகத்தின் நில விஸ்தீரணத்தை நாம் எடுத்துப் பார்த்தோமானால், விஸ்தீரணத்தின் விகிதாசாரப்படி ஜனப்பெருக்கம் அதிகமாயிருக்கிறதென்பது நன்கு தெரியவரும். ஐரோப்பிய வல்லரசுகளில் பெரும்பாலன, சீதளப் பிரதேசத்திலேயே இருக்கின்றன. தங்களுக்கு உஷ்ணப் பிரதேசத்தில் இடம் வேண்டுமென்பதற்குத்தான், இவை, ஐரோப்பிய யுத்தத்தில் கலந்து கொண்டன. ஐரோப்பிய யுத்தத்திற்கு இஃதொரு காரணமாகச் சொல்லப்படுகிறது. ‘சூரியன் கீழே இடம் வேண்டும்’ என்றுஐரோப்பிய வல்லரசுகள்சென்ற மகா யுத்த காலத்தில் கூறியது இதனால் தான் போலும். சீனாவில், சமசீதோஷ்ணமும், இயற்கை வளமும் நிரம்பியிருக்கின்றன. வேறெந்த நாட்டிலும் இப்படியில்லை. சீனாவை மற்ற நாடுகள் ஆக்கிரமித்துக் கொள்ளாததற்குக்காரணம்,மற்றநாடுகளின் ஜனக் குறைவுதான். இன்னும் ஒரு நூற்றாண்டு கழித்து, மற்ற நாடுகளின் ஜனத்தொகை பெருக, நமது நாட்டின் ஜனத் தொகை அப்படியேயிருக்குமானால் நமது நாடு வெகு சுலபமாக விழுங்கப்பட்டு விடும். அப்பொழுது சீன சாம்ராஜ்யம் மட்டுமல்ல, சீன ஜாதியே அழிந்து விடும். பின்னொரு காலத்தில், மற்ற நாடுகள் சீனாவை அடிமைப் படுத்திக் கொள்ளுமானால், பெரிய தொகை சிறிய தொகையை அடக்கிக்கொண்டதுவே அதற்குக் காரணமாயிருக்கும். அந்தக் காலம் வருமானால், நம்முடைய தேவை யாருக்கும் அவசியமிராது. அப்பொழுது, நாம் அடிமைகளாயிருப்பதற்குக்கூட தகுதியுடையவர்களல்ல.

வில்ஸனுடைய பதினான்கு தத்துவங்கள் என்ன?

—"அரசியல் மாணாக்கன்"

சாதாரணமாக, அரசியல் வாதிகள் பலர் மேடை மீதேறிப் பிரசங்கம் செய்கிறபோது, வில்ஸனுடைய பதினான்கு பாயிண்டுகளென்றும், வில்ஸனுடைய சுய நிர்ணய தத்துவம் என்றும் என்னென்னவோ சொல்லி விடுகிறார்கள். இந்தப் பதினான்கு பாயிண்டுகள்-தத்துவங்கள்-என்ன வென்பதை எல்லாரும் தெரிந்து கொள்ள வேண்டியதவசியமல்லவா? ஏனென்றால், 1918ம் வருஷத்து வார்சேல் சமாதான உடன்படிக்கையானது, இந்தப் பதினான்கு தத்துவங்களை அடிப்படையாகக் கொண்டுதான் அமைக்கப்பட்டதென்று சொல்லப் படுகிறதல்லவா? வில்ஸனுடைய இந்தப் பதினான்கு தத்துவங்களில், எவையெவை நடை முறையில் கொணரப்பட்டிருக்கின்றன என்பதை வாசகர்கள் சமீப கால உலக நிகழ்ச்சிகளைப் பரிசீலனை செய்து பார்த்தார்களானால் நன்றாகத் தெரிய வரும். ஆனால் பரிசீலனை செய்து பார்த்துவிட்டு 'நாம் என்ன, கற்பனை உலகில் வாழ்கிறோமா?' என்று வாசகர்கள் மருண்டு விட வேண்டாம்.

பதினான்கு தத்துவங்கள்

1. எல்லாச் சமாதான ஒப்பந்தங்களும் பகிரங்கமாகவே செய்யப்பட வேண்டும். தனிப் பட்ட முறையில் ஒப்பந்தங்கள் செய்து கொள்வதோ ரகசியமாக ராஜ தந்திர விவகாரங்களை நடத்துவதோ கூடாது.

2. சர்வதேசங்களுக்கும் பொதுவான ஒப்பந்தங்களை அமுலுக்குக் கொண்டு வருவதற்காக மட்டும், சமுத்திரங்களில் கப்பல்களின் போக்கு வரத்து தடுக்கப் படலாமே தவிர, மற்றபடி சமாதான காலத்திலும் யுத்த காலத்திலும் எல்லாக் கடல்களிலும் எல்லா நாடுகளுக்கும் கப்பல் போக்கு வரத்துச் செய்ய உரிமை யுண்டு.

3. ஒரு நாட்டுக்கும் மற்றொரு நாட்டுக்கும் சரக்குகளின் போக்கு வரத்து இருக்குமானால் அதற்காக இப்பொழுது ஏற்படுத்தப் பட்டிருக்கும் சுங்கவரிச் சுவர்கள் யாவும் அகற்றப்பட வேண்டும். (வார்சேல்) சமாதான ஒப்பந்தத்தில் கையெழுத்திடுகிற எல்லா நாடுகளுக்கும் வியாபார விஷயத்தில் சம உரிமை இருக்க வேண்டும்.

4. அந்தந்த நாடுகளின் உள்நாட்டுப் பாதுகாப்புக்குத் தேவையான அளவு ஆயுதங்களை வைத்துக் கொண்டு, மற்றவகையில் யுத்த தளவாடங்களைக் குறைத்துக் கொள்வ

தாக ஒவ்வொரு நாடும் உறுதி மொழி பெறவும் கொடுக்கவும் வேண்டும்.

5. குடியேற்ற நாடுகளைச் சுவாதீனப்படுத்திக் கொள்கிற விஷயத்தில், பட்சபாதமில்லாத ஒரு சமரஸம் செய்யப்பட வேண்டும். அப்படிச் செய்கிற போது, அந்தந்தக் குடியேற்ற நாடுகளில் வசிக்கும் ஜனங்களின் நன்மையையும் நாட வேண்டும்.

6. யுத்தத்தின் காரணமாக ஆக்ரமித்துக் கொள்ளப் பட்டிருக்கும் ருஷ்யாவுக்குச் சொந்தமான எல்லாப் பிரதேசங்களையும் காலி செய்துவிட வேண்டும். ருஷ்யா, தனது அரசியல் வளர்ச்சியையும் கொள்கையையும் நிர்ணயித்துக்கொள்கிற விதமாக, அதன் விஷயமான எல்லாப் பிரச்னைகளையும் தீர்த்துவிட வேண்டும்.

7. அப்படியே பெல்ஜியம் காலி செய்யப்பட்டு பழைய மாதிரி அதன் ராஜாங்க உரிமை அதற்கு அளிக்கப் படவேண்டும்.

8. அப்படியே பிரான்ஸும் காலி செய்யப்பட்டு, ஆல்சேஸ்—லோரெயின் பிரதேசம் சம்பந்தமாக இழைக்கப்பட்ட தவறு திருத்தப்பட வேண்டும்.

9. இத்தலியின் எல்லைப்புறங்களில் வசிக்கும் பல சமூகத்தினருடையவும் தேசீய உணர்ச்சிகள் பாதிக்கப்படாமல் இத்தலியின் எல்லைகள் நிர்ணயிக்கப்பட வேண்டும்.

10. ஆஸ்திரியா—ஹங்கேரி ராஜ்யத்தில் வசிக்கும் ஜனங்கள், சுய வளர்ச்சி பெறக்கூடிய மாதிரி புதிய சந்தர்ப்பங்கள் அளிக்கப்பட வேண்டும்.

11. ருமேனியா, செர்வியா மாண்டிநீக்ரோ ஆகிய நாடுகள் காலி செய்யப்பட வேண்டும். செர்வியாவுக்குக் கடல் தொடர்பு இருக்கவேண்டும். பால்கன் நாடுகள், சரித்திரபரம்பரையை ஆதாரமாக வைத்துக் கொண்டு தங்களுடைய பரஸ்பர நட்பை ஊர்ஜிதம் செய்து கொள்ள வேண்டும். இந்த பால்கன் நாடுகளின் பொருளாதார, அரசியல் சுதந்திரங்கள் காப்பாற்றப் படுமென்று இவைகளுக்கு மற்ற வல்லரசுகள் உறுதி கொடுக்க வேண்டும்.

12. உதுமானிய ஏகாதிபத்தியத்தைச்சேர்ந்த துருக்கியானது ஒரு ஸ்திரமான ராஜாங்கமாக அமைய வேண்டும். டார்டனெல்ஸ் ஜலசந்தியானது, எல்லாத் தேசங்களும் போக்கு வரத்துச் செய்யக் கூடிய பிரதேசமாக இருக்கவேண்டும். அப்படி யிருக்குமென்று சர்வதேசங்களும் பரஸ்பரம் வாக்குறுதி கொடுக்க வேண்டும்.

13. போலிஷ் ஜனங்களைப் பெரும்பான்மை யோராகக் கொண்ட போலந்து நாட்டைச்சிருஷ்டி செய்து, அதற்குக் கடல் தொடர்பு இருக்குமாறு செய்ய வேண்டும்.

14. சிறிய தேசங்களும் பெரிய தேசங்களும் அவைகளின் எல்லைப் புறங்கள் பாதிக் கப்படாதென்றும், அவைகளின் அரசியல் சுதந்திரம் பாதிக் கப்படாதென்றும் உறுதிகொடுக்கக் கூடிய வகையில், சர்வதேச சங்கம் ஒன்று ஸ்தாபிக்கப் படவேண்டும்.

சமஷ்டி அரசியலின் நிர்வாகம்

—கே. வி. ராமசுப்ரமண்யம்
B. A., B. L.,

பொறுப்பு வாய்ந்த மந்திரிகள் ஆட்சியே ஜன நாயகத்தின் முக்கியக் கொள்கை யென்று பன் முறை கூறியிருக்கிறோம். மாகாணங்கள் சம்பந்தப்பட்ட மட்டில் இந்தக் கொள்கை ஒரு மட்டில் (சில நிர்ப்பந்தங்களுக்கும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு) அனுசரிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் சமஷ்டி ஆட்சி (Federal Government) சம்பந்தப்பட்ட மட்டில் பூராவும் பொறுப்பாட்சி அனுசரிக்கப்படவில்லை. ஒரு விதமான இரட்டையாட்சி முறை அனுசரிக்கப்பட்டிருக்கிறது. எந்தெந்த விஷயங்களில் சமஷ்டி சட்ட சபைக்கு சட்டங்கள் ஏற்படுத்த அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்று நாம் கூறியிருக்கிறோமோ, அந்த விஷயங்கள் எல்லாவற்றையும் நிர்வகிக்கும் பொறுப்பு கவர்னர் ஜெனரல் அவர்களைச் சேர்ந்தது. இந்த விஷயங்கள் இரண்டு பிரிவாகப் •பிரிக்கப்பட்டிருக்கின்றன. அதில் ஒரு பிரிவு மட்டும் மந்திரிகளின் அதிகாரத்துக்கு விடப்பட்டிருக்கிறது. மற்றொரு பிரிவு மந்திரிகளின் ஆதிக்கத்துக்கு உட்பட்டதல்ல. இந்த விஷயங்களை நிர்வகிப்பதில் கவர்னர் ஜெனராலுக்கு உதவி செய்ய சில கவுன்சலர்கள் (Counsellers) ஆலோசனை கூறுபவர்கள்) நியமிக்கப்படுவார்கள். இவ்விதம் மந்திரிகளின் ஆதிக்கத்துக்கு உட்படாத விஷயங்களாவன:—

(அ) ராணுவ விஷயங்கள், வெளிநாட்டுவிவகாரங்கள், கிருஸ்தவப்பிரதிநிதிகள் சம்பந்தமான சில விஷயங்கள்.

(ஆ) எல்லைப்புறதேச சம்பந்தமான விஷயங்கள், விவகாரங்கள்.

(இ) எந்தெந்த விஷயங்களை. கவர்னர் ஜெனரல் அவர்கள் தன் பகுத்

தறிவுப்படி (Discretion) நடத்த வேண்டும் என்று இந்தியா சட்டத்தில் கண்டிருக்கிறதோ அந்த விஷயங்கள். (இவைகளை அடியில் குறிப்பிட்டிருக்கிறோம்.)

மேற்படி விஷயங்கள் தவிர மீதம் எல்லா விஷயங்களும் மந்திரிகளின் நிர்வாகத்துக்குட்பட்டவைகள்.

மந்திரிகளின் நிர்வாகத்துக்குட்படாத விஷயங்கள் மிகவும் சொல்பமானவைகள் என்று தோன்றக் கூடும். ஆனால் இந்தியாவின் மொத்த வரும்படி (ரயில்வே வரவு செலவு நீங்கலாக) சுமார் 85 கோடி ரூபாய்கள் என்பதையும், அதில் 45 கோடி ராணுவத்திற்கு மட்டும் செலவழிக்கப்பட்டு வருகிறது என்பதையும் ஞாபகத்தில் வைத்திருக்கும் பட்சத்தில், எவ்வளவு முக்கியமான விஷயங்கள் மந்திரிகளின் ஆதிக்கத்துக்கு உட்படவில்லையென்று நாம் ஒரு மட்டில் அறியலாம்.

கவுன்சலர்களின் நியமனம்

மூன்று கவுன்சலர்களுக்கு அதிகமாக நியமிக்கப்படக் கூடாது. இவர்களை கவர்னர் ஜெனரல் அவர்கள் நியமிப்பார்கள். இவர்கள் சட்ட சபையில் பேச மட்டும் அதிகாரமுண்டு. ஓட் செய்ய அதிகாரமில்லை. இவர்களுக்கு எவ்வளவு சம்பளம், படி முதலியவை என்பதை கவர்னர் ஜெனரல் அவர்களே தீர்மானிப்பார். மேலும் மந்திரிகளின் ஆதிக்கத்துக்கு உட்படாத விஷயங்களின் நிர்வாக சம்பந்தமாக கவர்னர் ஜெனரல் அவர்களுக்கு பண விஷயங்களில் ஆலோசனை கூற பைனான்ஷியல் அட்வைசர் (Financial Adviser) என்ற ஒருவரும் நியமிக்கப்படுவார். இந்த உத்தியோகஸ்தருக்கு மற்றொரு அதிகாரமும் கொடுக்கப்பட்டிருக்கிறது. மந்திரிகளின் ஆதிக்கத்துக்கு உட்பட்ட விஷயங்கள் சம்பந்தமாக வரவு செலவு திட்டம் தயாரித்து பொருளாதார நிலைமையையும் பொறுப்பையும் மந்திரிகளில் ஒருவர் நிர்வகிப்பார். ஆனால் இந்த பொக்கிஷ மந்திரிகளின் ஏற்பாடுகள், மந்திரிகளுக்கு மாற்றப்படாமல் கவர்னர் ஜெனரல் அவர்கள் கவுன்சலர்களின் உதவியைக் கொண்டு நிர்வகிக்கும் விஷயங்களை பாதிக்கக் கூடியதாக இருந்தாலும், அல்லது பொக்கிஷ மந்திரியின் ஏற்பாடுகளினால் இந்தியாவின் பொருளாதார நிலைமைக்கே அபாயம் நேரிட்டு விடும் என்று இந்த பைனான்ஷியல் அட்வைசர் அபிப்பிராயப்பட்டாலும் அவர் இந்த விஷயங்களை உடனே கவர்னர் ஜெனரல் அவர்களுக்குத் தெரிவித்து அவருக்கு வேண்டிய ஆலோசனை கூறி பொக்கிஷ மந்திரியின் அயுக்தமான காரியங்களைத் தடுத்து விடலாம்.

ஆனால் இவ்விதம் முட்டுக்கட்டை போட வேண்டிய அவசியமே நேரிடாது என்றும், சில விஷயங்கள் சம்பந்தமாகப் பொறுப்பு மந்திரிகளுக்கும், சில விஷயங்கள் சம்பந்தமாகப் பொறுப்பு கவர்னர் ஜெனரல் அவர்களுக்கும் சட்டப்படி ஏற்பட்டிருந்த போதிலும், மந்திரிகள், கவர்னர் ஜெனரல், கவுன்சலர்கள் எல்லாரும் சேர்ந்தே எல்லா விஷயங்களையும் கலந்து தீர்மானத்துக்கு வர வேண்டும் என்று கவர்னர் ஜெனரல் அவர்களுக்கு மன்னரிடமிருந்து

கொடுக்கப்படும் ஆக்ஞா சாசனத்தில் (Instrument of Instruction) தலக்கப்படும்.

மந்திரிகளின் நியமனம்

1. சமஷ்டி சட்ட சபையில் மெஜாரிட்டி கக்ஷியாரின் தலைவரைக் கலந்து கொண்டு கவர்னர் ஜெனரல் அவர்களால் பொறுக்கி எடுக்கப்படுவார்கள். மந்திரிகள் கவர்னர் ஜெனரல் அவர்களால் நியமிக்கப்படுவார்கள்.

2. மந்திரிகள் சட்ட சபை மெம்பர்களாயிருக்க வேண்டும் அல்லது நியமித்து ஆறு மாதத்துக்குள் மெம்பர்களாக ஆக வேண்டும். தேர்தல் செய்யப்பட்ட மெம்பர்கள்தான் மந்திரிகளாயிருக்க வேண்டும் என்ற நிர்ப்பந்தம் இல்லை. நியமனம் செய்யப்பட்ட மெம்பர்களும் மந்திரிகளாக நியமிக்கப்படலாம்.

3. மொத்தம் 10 மந்திரிகளுக்கு மேல் நியமிக்கக்கூடாது. இவர்களின் சம்பளம், படி, முதலிய விஷயங்களை சட்ட சபை ஆக்ட் மூலம் நிர்ணயிக்க வேண்டும்.

இங்கிலாந்தில் வழங்கி வரும் முறை, அதாவது சட்ட சபையின் மெஜாரிட்டி கட்சியின் தலைவரை பிரதம மந்திரியாக நியமித்து, அவர் மூலம் மற்ற மந்திரிகளையும் பொறுக்கி எடுத்து அவர்களை கவர்னர் ஜெனரல் நியமுகம் செய்வார்கள் என்னும் முறையும் இந்தியாவில் அனுசரிக்கப்படும். மந்திரிகள் சட்ட சபைக்கு ஜவாப்தாரியாக இருப்பார்கள். அதாவது மந்திரிகளின் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் சட்ட சபையில் நிறைவேறினால் மந்திரிகள் ராஜீநாமா செய்ய வேண்டும். (இவ்விதம் ஆக்டில் வியக்தமாகச் சொல்லப்படாவிட்டாலும் இங்கிலாந்தில் வழங்கி வரும் சம்பிரதாயம் இந்தியாவிலும் அனுசரிக்கப்படும்.)

5. மந்திரிகளை நியமிப்பதில் என்னென்ன விஷயங்களை கவர்னர் ஜெனரல் அவர்கள் ஞாபகத்தில் வைக்க வேண்டும் என்பதை அவருடைய ஆக்ஞா சாசனத்தில் கண்டிருக்கிறது.

ஆக்ஞா சாசனம்

இங்கிலாந்தில் ஜன நாயக ஆட்சி ஏற்பட்டு சுமார் 250 வருஷங்கள் ஆகின்றன. அதற்கு முன் இங்கிலாந்து தேசத்து அரசர்கள் சுயேச்சாதிகாரிகளாகவே யிருந்தார்கள். மேலும், திடீரென்று ஒரே நாளில் (ருஷியா, பிரான்ஸ் முதலிய நாடுகளைப் போல்) சுயேச்சாதிகாரம் மாறிக் குடியாட்சி ஏற்படுத்தப்படவில்லை. படிக்கிரமமாகவே சுயேச்சாதிகாரம் ஜன நாயக ஆட்சியாக மாறிற்று. ஆரம்பம் முதல் இங்கிலாந்து அரசர்களுக்கு ஆலோசனை கூற கவுன்சலர்கள் இருந்து வந்த போதிலும் அவர்களுடைய ஆலோசனைப்படி அரசர்கள் நடக்க வேண்டுமென்ற நிர்ப்பந்தம் ஆரம்பத்தில் கிடையாது. பின்னால் சிறுகச் சிறுக மேற்படி ஆலோசனை சபையின் அதிகாரம் அதிகரித்து வந்தது. நாளடைவில் காமன்ஸ் சபையில் தலைவர்களாகவும் செல்வாக்குள்ளவர்களாகவும் இருப்பவர்களை மேற்படி ஆலோசனை சபையில் சேர்த்துக் கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டது. கடைசியாக, எல்லா அதிகாரமும்

பார்லிமெண்ட் சபைக்குப் பொறுப்பு வாய்ந்த மந்திரிகளிடம் வந்தடைந்து மந்திரிகளின் சம்மதம் அன்னியில் எந்தக் காரியமும் மன்னர் செய்யக் கூடாது என்ற சம்பிரதாயம் ஏற்பட்டு விட்டது. கானடா, ஆஸ்திரேலியா முதலிய குடியேற்ற நாடுகளுக்கு பொறுப்பாட்சி அளிக்கும் சமயத்தில் பூராப் பொறுப்பாட்சி, ஒரே சமயத்தில் அளிக்கப்படவில்லை. ஆரம்பத்தில் மன்னர் அவர்கள் ஸ்தானத்தில் கவர்னர் அல்லது கவர்னர் ஜெனரல் என்பவர் ஒருவரை நியமித்து ஒரு மந்திரி சபையையும் ஏற்படுத்தி, சில விஷயங்கள் சம்பந்தமாக மட்டும் மேற்படி மந்திரிகளின் ஆலோசனையைக் கேட்டு நடக்க வேண்டும் என்றும், மற்ற விஷயங்கள் சம்பந்தமாக கவர்னர் ஜெனரல் தன் யுக்தம் போல் நடக்கலாம் என்றும் திட்டப் படுத்தினார்கள். பின்னால், படிக்கிரமமாக குடியாட்சி ஸ்தாபனங்கள் விருத்தியாகி பொறுப்பாட்சி அனுபவம் மந்திரிகள் அடைந்து பூராப் பொறுப்பாட்சியை நிர்வகித்து நடத்த மேற்படி நாடுகளுக்குச் சக்தி அதிகரிக்க அதிகரிக்க மந்திரிகளின் ஆலோசனைப்படி கவர்னர் அல்லது கவர்னர் ஜெனரல் அவர்கள் நடக்க வேண்டிய விஷயங்களையும் விஸ்தரித்து, கடைசியாக எல்லா விஷயங்களையும் மந்திரிகளின் ஆலோசனைப்படியே நடத்த வேண்டும் என்றும், தன் யுக்தம் போல யாதொரு காரியத்தையும் நடத்தக் கூடாதென்றும் சம்பிரதாயம் அமுலுக்கு வந்திருக்கிறது. இவ்விதம் என்னென்ன விஷயங்களில் மந்திரிகளின் யோசனையை அங்கீகரிக்காமல் தன் யுக்தம் போல் நடக்கலாம் என்றும், மந்திரிகளின் நியமனம், மந்திரிகளிடம் கலந்து ஆலோசிக்கும் முறை முதலிய விஷயங்கள் சம்பந்தமாகவும் விபரங்கள் அடங்கிய ஒரு உத்திரவு ஒவ்வொரு கவர்னர் அல்லது கவர்னர் ஜெனரல் அவர்களுக்கு மன்னர் அவர்களிடமிருந்து கொடுக்கப்படும். அந்தந்த தேசத்தின் அந்தந்தக் காலத்து அபிவிருத்திக்குத் தக்கபடி மாறுதல்களும் மேற்படி உத்திரவில் செய்யப்படும். இந்த உத்திரவுக்குத் தான் ஆக்ஞா சாசனம் (Instrument of Instructions) என்று பெயர்.

இந்தியாவின் கவர்னர் ஜெனரல் அவர்களுக்குக் கொடுக்கப் படும் ஆக்ஞா சாசனத்தில் காணப்படும் விஷயங்கள் அடியிற் கண்டவைகள்:—

1. கவர்னர் ஜெனரல் தன் நியமுக உத்திரவை இந்தியாவின் சீப் ஜஸ்டிஸ் முன்பாகப் படித்து பகிரங்கப் படுத்த வேண்டும்.

2. சீப் ஜஸ்டிஸ் முன்பாகத் தன் கடமைகளைச் சரியாகச் செய்வதாகவும் ராஜபக்தியுள்ளவராகயிருப்பதாகவும் பிரமாணம் செய்ய வேண்டும்.

3. மந்திரிகளாகநியமிக்கப்பட்டவர்களையும் மேற்படி பிரமாணம் செய்விக்கவேண்டும்.

4. கவனர் ஜெனரல் உத்தியோகம் வகிக்கும் காலத்தில் லீவ் வாங்கிக் கொள்ளாமல் இந்தியாவை விட்டு வெளியேறக்கூடாது.

5. ஒழுங்கானதும் நியாயமானதுமான ராஜரீகம் செய்து, ஜனங்களுக்குள் மத சம்பந்தமான துவேஷ

யில்லாமலும், ஒற்றுமையும் நல்லெண்ணமும் உண்டாகும் படிக்கும், வேண்டிய பிரயத்தனங்கள் செய்வதுடன், தேச விருத்திக்கு ஆதாரமான எல்லா நடவடிக்கைகளும் நடத்த வேண்டும்.

6. மந்திரிகளை நியமிப்பதில் சட்டசபையில் மெஜாரிடி கக்ஷியின் தலைவரைக் கலந்து கொண்டு அந்தக் கக்ஷியின் ஆதரவையுடையவர்களை நியமிக்க வேண்டும். கூடிய மட்டில் இந்திய சமஸ்தானப் பிரதிநிதிகளையும், சிறுபான்மைக் கக்ஷியாரின் பிரதிநிதிகளையும் மந்திரி சபையில் சேர்க்க வேண்டும்.

7. கவர்னர் ஜெனரல் மந்திரிகளைக் கலக்காமல் தன் பகுத்தறிவுப்படி (Discretion) எந்தக் காரியங்கள் செய்யலாம் என்று ஆக்டில் சொல்லப்பட்டிருக்கிறதோ அந்தக் காரியங்கள் தவிர மற்ற எல்லாக் காரியங்களையும் நிர்வகிப்பதில், கவர்னர் ஜெனரல் அவர்கள் மந்திரிகளின் யோசனைப்படி நடக்க வேண்டும். ஆனால் அப்படி நடப்பது கவர்னர் ஜெனரல் அவர்களின் விசேஷப் பொறுப்புகளை பாதிக்கக் கூடுமென்று அபிப்பிராயப்பட்டாலும், அல்லது எந்த விஷயங்களில் தன் அபிப்பிராயப்படி (In his individual judgment) நடக்க வேண்டு மென்று ஆக்டில் கூறப் பட்டிருக்கிறதோ அந்த விஷயங்கள் சம்பந்தமாக மந்திரிகளின் யோசனைக்கு விரோதமாகத் தாம் அபிப்பிராயப் பட்டாலும், மந்திரிகளின் யோசனைக்கு மாறாக கவர்னர் ஜெனரல் நடக்கலாம். ஆனால் மந்திரிகள் தங்களுடைய பொறுப்பை நிர்வகிக்காமல் எல்லா விஷயங்களையும் கவர்னர் ஜெனரல் அவர்களே தன்னுடைய விசேஷப் பொறுப்பில் நிர்வகித்துக் கொள்ளட்டும் என்று எண்ணும் படியாக நடந்து கொள்ளக் கூடாது.

8. இந்தியாவின் பொருளாதார சம்பந்தமான விசேஷப் பொறுப்பு சம்பந்தமாக கவர்னர் ஜெனரல் அவர்கள் முக்கியமான விஷயத்தைக் கவனிக்க வேண்டும். அதாவது, வரவு செலவு திட்டம் தயார் செய்தல், கடன் வாங்குதல், இவைகள் சம்பந்தமாக மந்திரிகள் அனுஷ்டிக்கும் முறையினால் அன்னிய தேசங்களில் இந்தியாவின் கண்ணியத்திற்கும் மதிப்புக்கும் குறைவு ஏற்படாமலும், இந்தியா செலுத்த வேண்டிய கடன் வகையராத் தொகைகளை செலுத்தக் கூடிய திறமைக்கு பாதகம் ஏற்படாமலும் இருக்கும்படியாகப் பார்த்துக் கொள்ள வேண்டும். (விசேஷப் பொறுப்புகள் என்பதைப் பற்றி பின்னால் விவரித்திருக்கிறது.)

9. சிறுபான்மைக் கக்ஷியாரின் நியாயமான அக்கரைகளைப் பாதுகாத்தல் என்னும் விசேஷப் பொறுப்பை கவர்னர் ஜெனரல் அவர்கள் அடியிற் கண்டபடி நிர்வகிக்க வேண்டும்:—

அ. சட்டசபைகளில் ஜாதி சம்பந்தமாகவோ மத சம்பந்தமாகவோ, எந்த சிறுபான்மைக் கக்ஷிக்குத் தனித்த பிரதிநிதித்துவம் கொடுக்கப் பட்டிருக்கிறதோ (உதாரணமாக ஐரோப்பியர், ஆங்கிலோ இந்தியர், மகம்மதியர், இந்திய கிறிஸ்துவர்கள்) அந்த கக்ஷி அல்லது

மதத்தைச் சேர்ந்தவர்களும், ஜனத்தொகைக் குறைவினுலோ அல்லது கல்வி முதலிய விஷயங்களில் முன்னேற்றம் இல்லாததினுலோ எந்த வகுப்பு ஜனங்கள் சட்ட சபையில் மற்றக் கக்ஷிகளுடன் ஒத்துழைப்பதின் மூலமாக மட்டும் தாங்கள் நன்மையடையக் கூடும் என்று பூரண நம்பிக்கையடையக்கூடாத நிலைமையிலிருக்கிருர்களோ அந்த வகுப்பு ஜனங்களும் ஆக இந்த இரண்டு வகுப்பு ஜனங்களும் மட்டுமே இந்த விசேஷப் பொறுப்பு சம்பந்தமாகச் சிறுபான்மைக் கக்ஷியினர் என்று கருத வேண்டும். ஏதாவது ஒரு விஷயம் சம்பந்தமாக மெஜாரிடி கக்ஷியினருடன் அபிப்பிராய பேதம் உள்ள மைனுரிடி கட்சியை, இந்த விசேஷப் பொறுப்பு சம்பந்தமாகச் சிறுபான்மைக் கட்சியினர் என்று கருதக்கூடாது.

ஆ. நியாயமான அக்கரையைப் பாதுகாத்தல் என்பது மேற்படி சிறுபான்மைக் கட்சியினரைப்புறக்கணித்தல் அல்லது கொடுமைக்குட்படுத்துதல், இவைகளுக்கு இடங்கொடுக்காமல் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

இ. உத்தியோகங்களில் மேற்படி சிறுபான்மைக் கட்சியினரை நியாயமான வீதாசாரப்படி நியமனம் செய்ய வேண்டும். இது விஷயமாகத் தற்காலம் அமுலிலிருக்கும் விதிகளை மேற்படி கட்சியினரின் நன்மையை உத்தேசித்தோ, பொதுஜன நன்மையை உத்தேசித்தோ அல்லாமல், கவர்னர் ஜெனரல் அவர்கள் மாற்றக் கூடாது.

10. சர்க்கார் உத்தியோகஸ்தர்களின் உரிமையையும் அக்கரையையும் கிடைக்கச் செய்தல், பாதுகாத்தல் என்று சொல்லப்பட்டிருக்கும் விசேஷப் பொறுப்பில் உரிமைகள், அக்கரைகள் என்பவை ஆக்டிலும் ரூல்களிலும் வியக்தமாகச் சொல்லப்பட்டிருக்கும் உரிமைகள், அக்கரைகள் மட்டும் அல்ல. மேற்படி உத்தியோகஸ்தர்கள் சம்பந்தமாக சர்க்கார் (அதாவது மந்திரிகள்) எடுத்துக் கொள்ளும் நடவடிக்கைகள் நியாயமானதல்ல என்று கவர்னர் ஜெனரல் அபிப்பிராயப்படும் பக்ஷத்தில் அந்த நடவடிக்கைகளையும் நிறுத்திவிட வேண்டும்.

11. வியாபார சம்பந்தமாக விவேசனம் செய்வதை (பேதங் காட்டுவதை) த்தடுத்தல் என்ற விசேஷப் பொறுப்பை அடியிற்கண்டபடி அர்த்தம் செய்ய வேண்டும். அதாவது ஆக்டில் எங்கெந்த விஷயங்களில் விவேசனம் செய்யக்கூடாது என்று சொல்லியிருக்கிறதோ, அந்த விவேசனத்தைத் தடுப்பதுமட்டு மன்றி, ஒரு உத்திரவு சட்டத்திற்கும் ரூல்களுக்கும் விரோதமாக இல்லாவிட்டாலும், காரியத்தில் விவேசனம் செய்யக்கூடியதாக யிருப்பதாக கவர்னர் ஜெனரல் அபிப்பிராயப்பட்டால் அந்த உத்திரவையும் ஊர்ஜிதத்துக்கு வராமல் நிறுத்த வேண்டும்.

12. ஏற்றுமதிகள் சம்பந்தமாக விவேசனம் செய்யக்கூடிய அல்லது தண்டம் விதிக்கக்கூடிய நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளாமல் தடுத்தல் என்ற விசேஷப்பொறுப்பை அடியிற்கண்டபடி நிர்வகிக்க வேண்டும்:—

அ. இந்தியா கவர்ன்மெண்டாரும், இந்தியா சட்டசபையும் அரசிறை வரும்படி சம்பந்தமாகவோ பொருளாதார சம்பந்தமாகவோ தங்களுக்கு நியாயம் என்று தோன்றும் முறையைக் கைக்கொள்வதை கவர்னர் ஜெனரல் தடுக்கக்கூடாது.

ஆ. இந்தியா கவர்ன்மெண்டார் இங்கிலாந்துடனோ அல்லது எந்த அன்னிய தேசத்துடனோ பரஸ்பரம் ஏற்றுமதி இறக்குமதி சம்பந்தமாக, உபய தரப்பாருக்கும் அனுகூலமான ஒப்பந்தங்கள் செய்து கொள்வதையும் கவர்னர் ஜெனரல் அவர்கள் தடுக்கக்கூடாது.

இ. ஆனால் மேற்படி ஒப்பந்தம் இந்தியாவின் நன்மையை உத்தேசித்து ஏற்படுத்தப்படாமல், இங்கிலாந்தின் அக்கரைகளைப் பாதிக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் ஏற்படுத்தப்பட்டிருந்தால், கவர்னர் ஜெனரல் அவர்கள் அதைத் தடுக்கலாம்.

ஈ. விவேசனம் என்பது நிஷ்கபடமான விவேசனம், கபடமான விவேசனம் இரண்டையும் குறிக்கும். அதாவது இங்கிலாந்திலிருந்து வரும் சாமானுக்கு ஒரு வரி, மற்ற தேசங்களிலிருந்து வரும் அதே சாமானுக்குக் குறைந்த வரி; இங்கிலாந்திலிருந்து சாமானை வரக்கூடாது, அல்லது இவ்வளவுதான் வரலாம்; மற்ற தேசங்களிலிருந்து சாமான்கள் வரலாம், அல்லது அதிகமாக வரலாம் என்ற ஏற்பாடுகள்; இங்கிலாந்திலிருந்து வரும் சாமான்கள் சம்பந்தமான நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளுதல், மற்ற தேசங்களிலிருந்து வரும் சாமான்கள் சம்பந்தமாக வேறு விதமான நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளுதல்; இவை எல்லாவற்றையும் குறிக்கும்.

உ. இங்கிலாந்தின் அக்கரைகளுக்குத் தீங்கு உண்டாக்க வேண்டுமென்ற எண்ணத்துடன் அதிகப்படியாகச் சுங்கவரி (Duty) போட்டால், அதையும் கவர்னர் ஜெனரல் தடுத்துவிடலாம்.

ஊ. எழுத்தில் விவேசனம் செய்யப் படுவதாகக் காணப்படாவிட்டாலும், காரியத்தில் ஒரு நடவடிக்கை விவேசனம் செய்யக் கூடியதாகயிருந்து, அந்த நடவடிக்கை இங்கிலாந்தின் அக்கரைகளுக்குத் தீங்கு உண்டாக்க வேண்டுமென்ற எண்ணத்துடன் எடுத்துக் கொள்ளப் பட்டிருந்தால் அதையும் கவனர் ஜெனரல் தடுத்துவிடலாம்.

எ. எழுத்தில் விவேசனம் செய்யப்படுவதாகக் காணப்படாவிட்டாலும், காரியத்தில் ஒரு நடவடிக்கை விவேசனம் செய்யக் கூடியதாகயிருந்து, அந்த நடவடிக்கை இங்கிலாந்தின் அக்கரைகளுக்குத் தீங்கு உண்டாக்க வேண்டுமென்ற எண்ணத்துடன் எடுத்துக் கொள்ளப் பட்டிருந்தால் அதையும் கவர்னர் ஜெனரல் தடுத்து விடலாம்.

ஏ. இந்த விசேஷப் பொறுப்பை நிர்வகிப்பதில் இங்கிலாந்துக்கும் இந்தியாவுக்கும் உள்ள நீடித்தகால கூட்டுறவு பாந்தவ்யத்தையும், அதிலிருந்து பரஸ்பரம் ஏற்படும் கடமைகளையும் கவர்னர் ஜெனரல் அவர்கள் சிந்தையில் வைக்க வேண்டும்.

13. இந்திய சமஸ்தானங்களின் அக்கரைகளைப் பாது காத்தல் என்னும் விசேஷப்பொறுப்பை அடியிற் கண்டபடி நிர்வகிக்க வேண்டும். அதாவது ஒரு சமஸ்தானத்தின் பொருளாதார நிலைமையை பாதிக்கக் கூடியதாகவோ, அல்லது சமஸ்தானங்களால் சமஷ்டி சர்க்காருக்கும் சமஷ்டி சட்டசபைக்கும் மாற்றப் படாத விஷயங்கள் சம்பந்தமாக சமஸ்தானங்களுக்குரிய பாத்தியங்களை பாதிக்கக் கூடியதாகவோ, மந்திரிகள் யாதொரு நடவடிக்கைகளும் எடுத்துக் கொள்ளாமலும், அத்தகைய சட்டங்கள் ஏற்படுத்தாமலும் பார்த்துக் கொள்ள வேண்டும்.

14. சமஷ்டி சர்க்காரின் நிர்வாகத்தை மந்திரிகள் நடத்துவதில் மற்ற மந்திரிகளுடைய பிரஸ்தாவனை அல்லது ஏற்பாடு சமஷ்டி அரசியலின் பண விஷயத்தைப் பொறுத்ததாக யிருக்கும் பக்ஷத்தில், பொக்கிஷ மந்திரியைக் கலந்து கொள்ள வேண்டும் என்றும், அவர்களுக்குள் அபிப்பிராய பேதம் ஏற்பட்டால் எல்லா மந்திரிகளும் கலந்து கொள்ள வேண்டுமென்றும், கவர்னர் ஜெனரல் அவர்கள் விதிகள் ஏற்படுத்த வேண்டும்.

15. சமஷ்டி கவர்ன்மெண்ட் நிர்வாக சம்பந்தமாக்ச் சில விஷயங்களைக் கவுன்சலர்களின் உதவியைக் கொண்டு தன் யுக்தப்படிக்கும் மற்ற விஷயங்களை மந்திரிகளின் உதவியைக் கொண்டும் கவர்னர் ஜெனரல் அவர்கள் நிர்வகிக்க வேண்டுமென்று ஆக்டில் சொல்லி யிருந்தபோதிலும் எல்லா விஷயங்களையும், மந்திரிகளும் கவுன்சலர்களும் சேர்ந்து கலந்து கொள்ள வேண்டும் என்ற வழக்கத்தை கவர்னர் ஜெனரல் ஏற்படுத்த வேண்டும்.

16. இந்தியாவின் பாதுகாப்பு சம்பந்தமான விஷயங்களில் இந்தியர்களுக்குத் தற்காலத்தைவிட அதிகமாகக் கரிசனை அல்லது சிரத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கத்துடன் பாதுகாப்பு சம்பந்தமான விஷயங்களை கவர்னர் ஜெனரல் நிர்வகிக்க வேண்டும். முக்கியமாக இந்திய ராணுவத்தில் இந்திய ஆபீஸர்களை நியமிக்கும் விஷயத்திலும், இந்திய ராணுவத்தை இந்தியாவுக்குவெளியே யுத்தத்திற்காக அனுப்பும் விஷயமாகவும், கவர்னர் ஜெனரல் அவர்கள் மந்திரிகளின் அபிப்பிராயத்தைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

17. பாதுகாப்பு டிபார்ட்மெண்டை கவர்னர் ஜெனரல் அவர்கள் நிர்வகிப்பதில் சேனாதிபதியையும், கலந்து கொள்ள வேண்டும். இது விஷயமாக இந்தியா செக்ரடெரிக்குத் தகவல் கொடுக்கும்போது சேனாதிபதியின் அபிப்பிராயத்தையும் அவருக்குத் தெரிவிக்க வேண்டும்.

18. பாதுகாப்பு டிபார்ட்மெண்டுக்கு வேண்டிய தொகைகளைச்செலவிடுதல் கவர்னர் ஜெனரல் அவர்களின் யுக்தத்தைப் பொறுத்தாக இருந்த போதிலும் மேற்படி செலவு விபரத்தை பொக்கிஷ மந்திரிக்கு தெரியப்படுத்துவதல்லாமல், மேற்படி செலவு திட்டம் தயார் செய்வதற்கு முன் அது சம்பந்தமாக பொக்கிஷ மந்திரியையும் கலக்க வேண்டும்.

19. சமஷ்டி சர்க்காருடைய தனித்த நிர்வாகத்துக்கும் சமஷ்டி சட்ட சபைக்கும் எந்தெந்த விஷயங்கள் மாற்றப் பட்டிருக்கின்றனவோ அந்த விஷயங்கள் சம்பந்தமாக மாகாண கவர்னர்களுக்கும் சமஷ்டியை ஒப்புக் கொண்டிருக்கும் சமஸ்தானாதிபதிகளுக்கும் கட்டளைகள் பிறப்பிவிக்க கவர்னர் ஜெனரல் அவர்களுக்கு ஆக்ட் மூலம் அதிகாரம் கொடுக்கப்பட்டிருப்பதில், மேற்படி அதிகாரத்தை உபயோகிப்பதில் யாதொரு பக்ஷபாதமில்லாமல், மாகாண கவர்னர்கள் சமஸ்தானாதிபதிகள், சமஷ்டி மந்திரிகள் இவர்களின் அபிப்பிராயத்தைக் கலந்து கொண்டு உபயோகிக்க வேண்டும்.

20. சமஷ்டி ஆட்சி, மாகாண ஆட்சி, சமஸ்தான ஆட்சி, இவைகளுக்குள் ஒரு சீரான நிர்வாகம் இருக்கும் பொருட்டு, சமஷ்டி சர்க்கார், மாகாண சர்க்கார், சமஸ்தானாதிபதிகள் இவர்கள் ஒருவரையொருவர் கலந்து கொள்ள வேண்டும் என்ற வழக்கத்தை கவர்னர் ஜெனரல் அவர்கள் ஆதரிக்க வேண்டும். மாகாணங்கள், சமஸ்தானங்கள் இவைகளின் அபிவிருத்திக்காக அந்தந்த மாகாணங்களிலும் சமஷ்டி சர்க்கார் ஏற்படுத்தும் ஆராய்ச்சி ஸ்தாபனங்களின் சம்ரக்ஷணைக்கு மாகாண சர்க்காரும், சமஸ்தானாதிபதிகளும் உதவி புரியுமாறு கவர்னர் ஜெனரல் அவர்கள் பிரயத்தனம் செய்ய வேண்டும்.

21. மாகாணங்களுக்கும் சமஸ்தானங்களுக்கும் அக்கறையுள்ள வரி விதிக்கும் சட்டங்கள் சமஷ்டி சட்ட சபையில் பிரவேசனம் செய்யப்படு முன், மாகாணங்கள், சமஸ்தானங்கள் இவைகளின் அபிப்பிராயத்தை கவர்னர் ஜெனரல் அவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.

22. சமஷ்டி சட்ட சபையில் வருமான வரியின் பேரில் உபவரி (Surcharge) விதிப்பதற்குச் சட்டப் பிரவேசனம் செய்ய கவர்னர் ஜெனரல் அவர்கள் அனுமதி கொடுக்கு முன், சமஷ்டி சர்க்காருக்குரிய மற்ற வரும்படிகளை எல்லா விதத்திலும் விருத்தி செய்தும், எல்லா டிபார்ட்மெண்டுகளிலும் கூடுமான சிக்கனம் செய்தும் மாகாணங்களுக்கு வருமான வரியில் ஒரு பங்குத் தொகையை கொடுக்க வேண்டும் என்று ஆக்டில் சொல்லியிருப்பதைக் கொடுக்காமல் நிறுத்தியும், சமஷ்டி சர்க்காருக்குச் செலவுக்குப்போதுமான தொகை இல்லையென்று கவர்னர் ஜெனரல் நிச்சயம் செய்து கொண்டு, அதன் பிறகு அனுமதி கொடுக்க வேண்டும்.

23. மாகாணங்களுக்கு சமஷ்டி சர்க்கார் கடன் கொடுக்கும் விஷயமாகவோ, அல்லது மாகாணங்கள் மற்றவர்களிடம் கடன் வாங்கும் தொகைகளுக்கு ஜாமீன் கொடுக்கும் விஷயமாகவோ, சமஷ்டி சர்க்கார் பொது விதிகள் ஏற்படுத்தி அதன்படி நடக்க வேண்டும். ஆனால் அவசர சந்தர்ப்பங்களில் வேற்படி பொது விதிகளுக்கு மாறாகவும் கவர்னர் ஜெனரல் அவர்கள் நடக்கலாம்.

24. சில விஷயங்கள் சம்பந்தமாகச் சட்டம் ஏற்படுத்தும் அதிகாரம் சமஷ்டி சட்ட சபைக்கும் மாகாண சட்ட சபைகளுக்கும் கொடுக்கப்பட்டிருப்பதில், மேற்படி விஷயங்கள்

சம்பந்தமாக சமஷ்டி சட்ட சபையில் ஏற்படுத்தப்பட்ட சட்டங்களை மாகாணங்களில் மாகாண சர்க்கார் அமுலுக்குக் கொண்டுவர வேண்டுமென்று மாகாண சர்க்காருக்கு சமஷ்டி சர்க்கார் கட்டளை பிறப்பிக்கலாம் என்றும் அப்படிக் கட்டளை பிறப்பிப்பதற்கு சமஷ்டி சட்ட சபை சட்டத்திலேயே அனுமதி கொடுக்கப்பட்டிருக்க வேண்டுமென்றும், அப்படிப்பட்ட சட்டத்தை சமஷ்டி சட்ட சபையில் பிரவேசனம் செய்வதற்கு கவர்னர் ஜெனரல் அவர்களின் முன் அனுமதி வேண்டும் என்றும் ஆக்டில் சொல்லப்பட்டிருக்கிறது. அவ்விதம் கவர்னர் ஜெனரல் அனுமதி கொடுக்குமுன், மாகாணங்களின் அபிப்பிராயத்தைக் கவர்னர் ஜெனரல் அவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.

25. சமஷ்டி சட்ட சபை, மாகாண சட்ட சபைகள் இவைகள் இரண்டுக்கும் பொதுவாக பாத்தியப்பட்ட விஷயங்கள் சம்பந்தமாக சமஷ்டி சட்ட சபையில் வெளிப்படுத்தப்பட்ட ஒரு சட்டத்திற்கு விரோதமாக மாகாண சட்ட சபையில் ஒரு சட்டம் வெளியிடப்பட்டால், அந்தச் சட்டத்திற்கு அனுமதி கொடுக்கு முன், மாகாண சட்டசபை மேற்படி சட்டத்தைஎன்ன காரணத்தை யுத்தேசித்து வெளியிட்டது என்று கவனிப்பதுடன் மேற்படி விஷயங்கள் சம்பந்தமாக எல்லா மாகாணங்களிலும் வித்தியாசமில்லாமல் ஒரே மதிரியான சட்டம் இருக்க வேண்டுமா என்பதை கவனிக்க வேண்டும். (அவ்விதம் ஒரே மாதிரியான சட்டம் எல்லா மாகாணங்களிலும் இருக்க வேண்டுமென்று அவர் அபிப்பிராயப்பட்டால் மேற்படி சட்டத்துக்கு அவர் அனுமதி கொடுக்கக்கூடாது என்று நாம் அனுமானிக்கலாம்.)

26. அடியிற் கண்ட சட்டங்களுக்கு கவர்னர் ஜெனரல் அவர்கள் அனுமதி கொடுக்கக்கூடாது. அவைகளை மன்னர் அவர்களின் அபிப்பிராயத்துக்கு நிறுத்தி வைக்க வேண்டும் :—

அ. பார்லிமெண்ட் சபையில் வெளியான ஒரு சட்டத்திற்கு விரோதமாகவோ, அல்லது அதை ரத்து செய்யக் கூடியதாகவோ இருக்கும் சட்டம்.

ஆ. ஹைக்கோர்ட்டுகளின் அதிகாரத்தை மாற்றக்கூடிய சில சட்டங்கள்.

இ. மாகாணங்களில் கவர்ன்மெண்டுக்குச் செலுத்த வேண்டிய தீர்வை அல்லது கிஸ்தியை' சாஸ்வதமாகத் தீர்மானித்திருப்பதை மாறுபடுத்தும் சட்டங்கள்.

ஈ. வியாபார சம்பந்தமாக விவேசனம் செய்கிறதா அல்லது அல்லவா என்று கவர்னர் ஜெனரல் அவர்களுக்குச் சந்தேகமிருந்தால், அந்தச் சட்டம்.

27. இந்தியாவின் அமைதியையும் சாந்தத்தையும் உத்தேசித்து சமஷ்டி சட்டசபையில் ஒரு மசோதா அல்லது பிரேரணையை விவாதம் செய்யாமல் நிறுத்த கவர்னர் ஜெனரல் அவர்களுக்கு அதிகாரமிருப்பதில் மேற்படி விவாதத்தினாலேயே தேசத்தின் அமைதிக்கும் சாந்தத்துக்கும் பங்கம் ஏற்படும் என்று கவர்னர்

ஜெனரல் அவர்கள் அபிப்பிராயப்பட்டாலொழிய மேற்படி விவாதத்தை நிறுத்தக் கூடாது.

28. ஐக்கிய ராஜாங்க சபையில் (Council of State) 6 மெம்பர்களை கவர்னர் ஜெனரல் நியமிப்பதில் அடியிற்கண்ட விஷயங்களை கவனத்தில் வைத்துக் கொள்ள வேண்டும் :—

அ. தேர்தலில் ஒரு கக்ஷி அல்லது வகுப்புக்குச்சரியான பிரதிநிதித்துவம் கிடைக்காவிட்டால் அதைச் சீர்ப்படுத்த வேண்டும்.

ஆ. தாழ்ந்த ஜாதியார்கள், ஸ்திரீகள் இவர்களுக்குப் போதுமான பிரதிநிதித்துவம் கிடைத்திருக்கிறதா என்பதைக் கவனிக்க வேண்டும்.

இ. பிரத்தியேகமாக ஸ்தானங்கள் ஒதுக்கி வைக்கப்படாத சிறுபான்மைக்கட்சியாருக்கு அஸெம்பிளியில் எந்த வீதாசாரம் பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறதோ அதே வீதாசாரம் ராஜாங்க சபையில் கிடைக்குமாறு பிரயத்தினப் படவேண்டும்.

29. இந்தியாவுக்கும் இங்கிலாந்துக்கும் உள்ள கூட்டுறவு பாந்தவ்யம் அபிவிருத்தியடைந்து, குடியரசு நாடுகளுக்குள் இந்தியாவும் தனக்குரிய ஸ்தானத்தை அடையுமாறு கவர்னர் ஜெனரல் அவர்கள் தன் அதிகாரத்தைச் செலுத்தவேண்டும்.

மேலே கண்டவைகளிலிருந்து கவர்னர் ஜெனரல் அவர்களுக்கு மிகவும் அதிகமான அதிகாரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்று நன்கு விளங்கும். மேற்படி ஆக்ஞா சாசனத்தில் 'விசேஷப் பொறுப்புகள்' எவ்விதம் நிர்வகிக்கப்பட வேண்டும் என்று துலக்கப்பட்டிருக்கிறது. இந்த விசேஷப் பொறுப்புகளின் அவசியம் என்னவென்றால் இந்தியாவின் மந்திரிகளுக்குப் பொறுப்பாட்சி அனுபவம் இல்லாததாலும், பொறுப்பாட்சி ஸ்தாபனத்துக்கு அத்தியாவசியமான சில அம்சங்கள், அதாவது (1) மெஜாரிட்டி கட்சியின் ஆட்சி (2) அதை மைனாரிட்டி கட்சியார் ஒப்புக்கொள்ளுதல் (3) வகுப்புவாதக் கொள்கையை அனுசரிக்காமல் தேச நன்மையையும் தேச முன்னேற்றத்தையும் அடிப்படையான கொள்கைகளாகவுடைய கக்ஷிகள் (4) எந்தக் கக்ஷியையும் சேராமல் பொது ஸ்தானம் வகித்து தங்கள் அபிப்பிராயத்தை, அப்போதைக் கப்போது வெளியிட்டு அப்போதைக் கப்போது மந்திரிகளின் காரியங்களை ஆமோதித்தும் கண்டித்தும், மந்திரிகளைச் சரியான வழியில் திருப்பக்கூடிய பொதுஜன அபிப்பிராயம் (Public Opinion) ஆகிய இந்த அம்சங்கள் இந்தியாவில் இல்லாததாலும் மந்திரிகள் தங்கள் அறியாமையாலும் அனுபவக் குறைவாலும் தவறுதல் செய்யும் பக்ஷத்தில் அவைகளைத் திருத்துவதற்காக வென்றே இந்த விசேஷப் பொறுப்புகள் கொடுக்கப் பட்டிருக்கின்றன.

இந்த விசேஷப் பொறுப்புகள் கவர்னர் ஜெனரலுக்குக் கொடுத்திருப்பதிலிருந்து மேற்படிவிஷயங்கள் சம்பந்தமாக மந்திரிகளின் பொறுப்பு நீங்கிவிட்டது என்று நாம் எண்ணுவது தவறு. மந்திரிகளுடைய ஆதிக்கத்திற்கு விடப்பட்டிருக்கும் விஷயங்களை நிர்வாகம்செய்யும் பொறுப்பு மந்திரிகளைச் சேர்ந்ததே. ஆனால் மேற்படி

விசேஷப் பொறுப்புகள் கொடுக்கப்பட்டிருக்கும் விஷயங்கள் சம்பந்தமாக மந்திரிகளின் தீர்மானம் அல்லது பிரஸ்தாபனை சரியல்ல என்று கவர்னர் ஜெனரல் அவர்களுக்குப் புலப்பட்டால் மேற்படி தீர்மானம் அல்லது பிரஸ்தாவனைக்கு மாறாக நடக்க கவர்னர் ஜெனராலுக்கு அதிகாரமுண்டு. இவ்விதம் கவனர் ஜெனரல் அவர்களும் மந்திரிகளும் அடிக்கடி ஒருவர்க்கொருவர் சண்டை போட்டுக்கொள்ள வேண்டிய சந்தர்ப்பங்கள் ஏற்படாதென்றும் கவர்னர் ஜெனரல் அவர்களும் மந்திரிகளும் எல்லா விஷயங்களிலும் கலந்து அபிப்பிராய பேதமில்லாமலேயே எல்லா விஷயங்களும் நிர்வகிக்கப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

மேற்படி விசேஷப் பொறுப்புகள் சம்பந்தமாக கவர்னர் ஜெனராலுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரங்கள் தவிர வேறு சில விஷயங்களிலும் மந்திரிகளைக் கலக்காமலே தன் பகுத்தறிவுப் படியும் இன்னும் (in his discretion) சில விஷயங்களில் மந்திரிமார்களைக் கலந்த பின்னும் தன் யுக்தப்படிக்கும் (in his individual judgment) நிர்வகிக்க அதிகாரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவைகளைக் கீழே கூறுவோம்.

அ. மந்திரிகளைக் கலக்காமலேயே அடியிற்கண்ட விஷயங்களைக் கவர்னர் ஜெனரல் அவர்கள் தீர்மானம் செய்யலாம்:—

(1) பைனான்ஷியல் அட்வைசர் இந்தியாவின் அட்வகேட் ஜெனரல், இவர்களின் நியமனம், சம்பள நிர்ணயம்.

(2) சமஷ்டி ஆட்சியின் நிர்வாக சம்பந்தமாக விதிகள் ஏற்படுத்துதல், இலாக்காக்களை மந்திரிகளுக்குள் பிரித்துக் கொடுத்தல்.

(3) சட்டசபைகளைக் கூட்டுவித்தல், கலைத்தல்.

(4) மசோதாக்களை ஆமோதித்துச் சட்டமாக்குதல்.

(5) சட்டசபையில் சில விஷயங்கள் சம்பந்தமாக பிரேரணை செய்ய அனுமதி கொடுத்தல்.

(6) பிரிட்டிஷ் பலுசிஸ்தான் என்ற மாகாணத்தை கமிஷனர் மூலம் நிர்வகித்தல்.

(7) சமஷ்டி சபையைச்சேர்ந்த விஷயங்கள், மாகாண சபையைச் சேர்ந்த விஷயங்கள், இரண்டுக்கும் பொதுவாக உள்ள விஷயங்கள் ஆகிய இவை மூன்று ஜாப்தாக்களில் கொடுக்கப் பட்டிருக்கின்றன. இந்த மூன்று ஜாப்தாக்களிலும் அடங்காதவிஷயத்தைப்பற்றி எந்தச் சட்டசபை சட்டம் ஏற்படுத்த வேண்டும் என்று நிர்ணயித்தல்.

(8) சில மசோதாக்களை சட்டசபையில் கொண்டு வருவதற்கு முன் அனுமதி கொடுத்தல்.

(9) சமஷ்டி சட்ட சபையில் நிறைவேற்றிய சில சட்டங்களை சமஸ்தானங்களுக்குள் அமுலுக்கு கொண்டு வருதல்.

(10) மாகாணங்களுக்கு வருமான வரியில் ஒரு பாகம் பங்கிட்டுக் கொடுத்தல்.

(11) இந்தியன் ரிசர்வ் பாங்கியின் கவர்னர், இரண்டு டிப்டி கவர்னர்கள், 4 டைரெக்டர்கள் இவர்களை நியமுகம் செய்தல். ரிசர்வ் பாங்கியின் மத்திய போர்டைக் கலைத்தல். ரிசர்வ் பாங்கியை கலைத்து முடிவு செய்தல்.

(12) சமஷ்டி சர்க்காருக்கும் மாகாண சர்க்கார்களுக்கும் ஏற்படக்கூடிய சில விவாதங்களைப் பைசல் செய்தல்.

(13) இந்தியா சம்பந்தமாகச் சீமையில் செலவு செய்யப்படும் தொகை சம்பந்தமான கணக்குகளைப் பரிசீலனை செய்ய ஆடிட்டர் நியமித்தல்.

(14) புதிய ஆக்டுப்படி ரெயில்வே நிர்வாக சபையில் (Railway Authority) சில மெம்பர்கள் நியமித்தல், சமஷ்டி ஹைகோர்ட்டுக்கு ஆக்டிங் சீப் ஜஸ்டிஸ் நியமுகம் செய்தல்.

(16) சமஷ்டி ஹைகோர்ட் சம்பந்தமாக ஏற்படுத்தப்பட்ட விதிகளை ஆமோதித்தல்.

(17) சட்ட சம்பந்தமான விஷயங்களில் சமஷ்டி ஹைகோர்ட்டின் அபிப்பிராயம் கோருதல்.

(18) சமஷ்டி ராஜாங்க சபைக்கு 6 மெம்பர்கள் நியமுகம் செய்தல்.

(19) இன்னும் பல சில்லரை அதிகாரங்கள்.

(ஆ) அடியிற்கண்ட விஷயங்களில் கவர்னர் ஜெனரல் அவர்கள் மந்திரிகளின் அபிப்பிராயத்தைத் தெரிந்துகொண்டு, அந்த அபிப்பிராயத்தைத் தான் அங்கிகரிக்கவில்லையென்றால் அந்த அபிப்பிராயத்துக்கு மாறாக உத்திரவு செய்யலாம்:—

(1) கவர்னர் ஜெனரல் அவர்களுக்கு விசேஷப் பொறுப்பு கொடுக்கப்பட்டிருக்கும் விஷயங்கள்.

(2) சில குறிப்பிட்ட உத்தியோகங்களுக்கு ஆபீஸர்கள் நியமித்தல்.

(3) இந்தியா செகரடிரி (Secretary of State for India) அவர்களால் நியமுகம் செய்யப்பட்ட உத்தியோகஸ்தர்களைத் தண்டித்தல்.

(4) ரெயில்வே சீப் கமிஷனரை நியமித்தல்.

(5) ரெயில்வே அதிகாரி (Authority) யின் மெம்பர்களை வேலையிலிருந்து நீக்குதல்.

(6) இங்கிலாந்தில் இந்தியாவின் ஹை கமிஷனர் என்ற பிரதிநிதியை நியமித்தல்.

இது தவிர கவர்னர் ஜெனரல் அவர்களுக்கு அடியிற்கண்ட அதிகாரங்களும் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

(1) சட்டசபையின் சம்மதம் அன்னியிலேயே, சட்டசபையின் அபிப்பிராயத்துக்கு விரோதமாகவும் சில குறிப்பிட்ட சந்தர்ப்பங்களில் சட்டங்கள் ஏற்படுத்தலாம்.

(2) சட்டசபையால் நிறைவேற்றப்பட்டிருக்கும் சட்டங்களுக்கு சம்மதம் கொடுக்க மறுக்கலாம். அல்லது மன்னர் அவர்களின் அபிப்பிராயப்படி நடப்பதற்காக அதை நிறுத்தி வைக்கலாம்.

(3) குறிப்பிட்ட சந்தர்ப்பங்களில் ஆர்டினன்ஸ் (Ordinance) என்ற அவசரச் சட்டம் ஏற்படுத்தலாம். இந்த அவசரச் சட்டத்தை மந்திரிகளின் வேண்டுகோளின் பேரில், சட்ட சபை கூடி சட்டம் ஏற்படுத்தப் போதுமான அவகாசமில்லாத சமயங்களில் ஏற்படுத்தலாம். அல்லது சட்ட சபையின் அபிப்பிராயத்துக்கு விரோதமாகத் தன் சொந்தப் பொறுப்பின் பேரில் குறிப்பிட்ட சந்தர்ப்பங்களில் ஏற்படுத்தலாம்.

ஆகவே இந்திய அரசியலில் சமஷ்டி ஆட்சி சம்பந்தமாக பூராப் பொறுப்பாட்சி மந்திரிகளிடம் ஒப்புவிக்கப்படவில்லை. ஒப்புவிக்கப்பட்ட விஷயங்கள் சம்பந்தமாகவும் எவ்வளவோ நிர்ப்பந்தங்களும், நிபந்தனைகளும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. சமஷ்டி சட்டசபையிலோ ஜனநாயகக் கட்சித் தலைவர்களுக்கு மெஜாரிட்டி ஆதரவு கிடைக்கக்கூடும் என்ற நிச்சயமுமில்லை. இரண்டு சபைகளிலுமாகச் சேர்ந்து மொத்தம் 635 மெம்பர்களில் 229 மெம்பர்கள் சமஸ்தானங்களைச் சேர்ந்தவர்கள். சுமார் 135 மெம்பர்கள் முஸ்லிம்கள். தற்காலம் இந்தியாவில் இந்து முஸ்லீம் ஒற்றுமை யில்லாமல் வகுப்பு வாதக் கக்ஷிகள் தாண்டவமாடுகின்றன. சமஸ்தானங்களிலோ, ஜனநாயக ஆட்சி முறை யில்லாததுடன் பெரும்பான்மையான சமஸ்தானங்களில் சமஸ்தானப் பிரஜைகளுக்கு சமஸ்தான நிர்வாகங்களில் யாதொரு பொறுப்பும் கிடையாது. இந்த நிலைமையில், சமஷ்டி அரசியலைச் சரிவர நடத்தி, அதன் மூலம் இந்தியா அபிவிருத்தி யடைந்து பூரண சுய ஆட்சி நாளடைவில் அடைவது என்பது தெய்வ சங்கல்பம் இருந்தாலொழிய மனுஷ யத்தனத்தினால் முடியாது என்று தோன்றுகிறது.

மகனே! நீ கட்டிடம் கட்டும்போது, அது நிரந்தரமாக இருக்கவேண்டுமென்ற எண்ணத்தோடு கட்டு. தற்காலிக மகிழ்ச்சிக்காகவோ, தற்காலிக உபயோகத்திற்காகவோ நீ அதனைக் கட்டாதே. நாம் கட்டி வைத்த கட்டிடத்திற்காக, நமது சந்ததியார் நம்மை வந்தனஞ் செய்யட்டும். நாம் சமைக்கிற கட்டிடத்தின் ஒவ்வொரு கல்லும் புனிதமானது என்று நமது சந்ததியார் சொல்லும்படியாக இருக்கட்டும்.

—ரஸ்கின்

கண்ணால் காண்பதுவும் பொய்யா?

—"விஞ்ஞான போதகர்"

சாதாரணமாக ஒருவர் ஏதாவதோர் காரியத்தில் சினங்கொண்டு அடாது செய்யப் புகின் நாம் அவரைப்பார்த்துப் பரிந்துபேசி 'கண்ணால் காண்பதுவும் பொய், காதால் கேட்பதுவும் பொய், தீர்க்க விசாரிப்பதே மேல்' என்று கூறி சாந்தப் படுத்துவது வழக்கம். இவ்வாறு சொல்லுவதும், நடப்பதும் ஓர் சில நற்குணவான்களேயன்றி எல்லாரிடத்திலும் எதிர் பார்ப்பது மிகத் துர்லபம். இதை விளக்க ஒரு சிறு கதை.

ஓர் ஊரில் ஓர் அரச குடும்பத்துப்பஞ்சணை மெத்தை மேல் பரப்புவதற்கு மணம், குணம் நிறைந்த பலவித புஷ்பங்களைக் கொண்டு வரும் ஓர் பண்டாரம் இருந்தான். அவன் வழக்கம் போல் மாலை நேரத்தில் புஷ்பங்களைக் கொணர்ந்து பஞ்சணை மெத்தை மீது நன்றாய்ப் பரப்பி விட்டு ஒரு நிமிஷம் அம்மெத்தையை உற்று நோக்கி 'ஆஹா, இதன் மீது அரசனும் அரசியும் நித்திரை செய்கிறார்களே ; அதின் அருமை எவ்வாறுதானிருக்குமோ ?' என்று கூறி அம்மெத்தையின் மீது சிறிது படுத்தான். கல்லிலும், மண்ணிலும் படுத்தவன் தேகம் இது கண்டால் சும்மா யிருக்குமா ? படுத்ததும் தூக்கம் வந்து அயர்ந்து நித்திரை செய்தான், வழக்கம் போல் பட்டத்தரசி பஞ்சணை அறைக்கு வந்து மெத்தையில் படுத்திருப்பது தன் கணவனென மதித்துப் பக்கத்தில் பேசாது தானும் படுத்து நித்திரை செய்து விட்டாள். அரசன் வெகு நேரம் கழித்து வந்து பார்க்க தன் மனைவி மாற்றானோடு நித்திரை புரிவதைக் கண்டு இருவரையும் வாளுக்கிரையாக்க வாளை உருவினன். வாள் உறையிலிருந்து ஒரு கடிதத் துண்டு வாளோடு சேர்ந்து வரவே அதனை எடுத்துப் பார்க்க அதில் 'கண்ணால் காண்பதுவும் பொய்' என்று மந்திரியின் கையொப்பத்துடன் எழுதி யிருந்ததைக் கண்டு ஒருவாறு திகைத்துப் பிறகு மந்திரியைக் கூப்பிட்டு நித்திரை செய்வோர்களையும் எழுப்பி அவர்களின் பாவமற்ற செய்கையைத் தெரிந்து மன்னித்தான்.

அதனால் அரசன் கண்ணால் கண்டு அவர்களின் செய்கை உண்மை யென்றுணர்ந்து இருவரையும் கொலை செய்யத் துணிந்தது பொய்யான—பாவமான—காரியந்தானே. ஆகவே நாம் நமது கண்ணைப் பெரும் பாலும் நம்புவது கூடாதல்லவா ?

நாம் பார்க்கும் ஒரு பொருள் அவ்விடத்தில் அத்தன்மையில் தோன்றும் வகை என்ன ? சூரியனின் அல்லது விளக்கின் ஒளியானது அப்பொருளின் மீது விழுகிறது ; அவ்விதம் விழும் வெளிச்சக் கதிர்களை அப்பொருள் நாலா பக்கமும் சிதற அடிக்கிறது. அவ்வாறு சிதற அடிக்கப் படும் வெளிச்சம் பொருளின் உருவத்தைப் பொருத்திருக்கிறது. பள்ளமான பாகத்தில் வெளிச்சம் விழாமலும், மேடான பாகங்களில் ஒளி

மிருதியாகத் தாக்கிச் சிதறியோடவும் ஏற்படுகிறது. இவ்விதமாகச் சிதறப் பட்ட வெளிச்சக் கதிர்கள் நமது கண்ணில் வந்து விழுந்து கண்ணுக்குப் பின்னுள்ள 'ரெட்டினு' (Retina) வென்னும் உருவ உணர்ச்சித் 'திரை' யில் உருவத்தின் சாயல் விழுகிறது. அதினின்று சில நரம்புகள் மூளைக்கு தந்தி போல் செய்தி தெரிவிக்கவும் அவ்வுருவப் படத்தை யுணர்ந்து நம் முன் தோன்றும் உருவம் ஒன்று உளது என்று காண்கிறோம். இது பெரும்பாலும் படம் பிடிக்கும் கருவியை ஒத்திருக்கும். படம் பிடிக்கும் கருவிக்கு முன் ஒரு பெரிய லென்ஸ் என்ற கண்ணாடியுளது. அதற்குப் பின் இருட்டறையோடுங் கூடி உருவத்தின் நிழல் விழுந்து படம் பிடிக்கும் கண்ணாடி வைக்கப்பட்டிருக்கிறது.

அதுபோலவே நமது கண், மேற் கூறிய 'லென்ஸ்' கண்ணாடி போன்று முன்னேயுள்ள உருவத்தின் சிதறி வரும் வெளிச்சக் கதிர்களை ஒன்று சேர்த்து 'ரெட்டினு' வென்னும் படம் பிடிக்கும் திரையில் விழச் செய்கிறது. பின்பு, பார்வையின் உணர்ச்சியை மூளையி னுதவியால் உணர்கிறோம். இதனுல் ஒரு பொருளின் தோற்றம் அதின் பால் விழும் வெளிச்சத்தைப் பொறுத்துள்ளது. இப்பொழுது அதே பொருள் ஒரு இருட்டறையில் இருந்தால் அப்பொருளின் உருவம் நமக்குத் தோன்றுகிறதா? இல்லை. ஏன்? இருட்டறையில் யாதொரு வெளிச்சமுமின்றி அப் பொருள் மீது வெளிச்சக்கதிர்கள் சிதறப்பட்டு நமது கண்ணுக்கு வரவில்லை. வெளிச்சமிருந்தால் உருவத் தோற்றம் உண்டு. இன்றேல் இல்லை. அவ்வளவு தான். உருவங்கள் தோன்ருமல் செய்வதற்கு மற்றொரு விதம் உளது. அதாவது கண்ணையே மூடி விடுவது. இதனுல் யோகிகள் அசத்துக்களை வெளிப் பொருள்கள் தோன்ரு வண்ணம் கண்ணை மூடி யோக நிலையிலிருக்கிருர்கள். உருவங்கள் பலவித நிறங்களுடன் தோன்றுவதேன் என்பதைப் பின்பு விவரிப்போம். உருவங்களைச் சிலர் அருகில் சென்று அல்லது தூரமாய்ச் சென்று பார்த்துணர்வதெல்லாம் கண்ணின் கூட்டின் வளைவைப் பொருத்திருக்கிறது. கண் கூட்டின் வெளி வளைவு திகமாயிருந்தால் உள் வளைவுக் கண்ணுடி கொண்டு சரி படுத்திக் கொள்ளுகிருர்கள். இவர்கள் 'கிட்டப் பார்வை' (Short Sight) யாளர் என்று கூறுவது வழக்கம். கண் கூடு சிறிது ஒடுக்கமா யிருந்தால் கண்ணின் 'லென்ஸ்' கண்ணுடி உருவத்தை கண் கூட்டுக்கு வெளியில் படும்படியான நிலையிலிருப்பதால் வெளி வளைவான கண்ணுடி சேர்த்து சரிப்படுத்திக் கொள்ளுகிருர்கள். இவர்கள் தூரப் பார்வை (Long Sight)யாளர் எனப் படுகிருர்கள். இவை யாவும் கண் அமைப்பின் காரணமே யன்றி வேறல்ல. வெளிச்சமிருந்தால் தான் நம் பார்வையுமுண்டு. அதாவது நாம் பார்க்கும் பொருள்கள் படமென்றும், மேஜையென்றும், வீடு என்றும் இவ்வாருக நாம் கண்டு தொடவோ, உட்காரவோ முடிவதெல்லாம் வெளிச்சத்தினுதவியால்தான். வெளிச்சமே யில்லாவிட்டால் ஒன்றுமே யில்லை—படமில்லை, மேஜை யில்லை, வீடில்லை, சகலமுமில்லை!

இவ்வாறு வெளிச்சத்தி னுதவி கொண்டு நாம் ஒரு பொருளின் உண்மை நிலைமை, தன்மை முதலிய வற்றைத் தெரிந்து கொள்ளுகிறோம். ஆனால் ஒன்று. வெளிச்சத்தினுதவியால் உருவம் உண்டு என்பதைத் தெரிகிறோம் என்பது நிசசயம். ஆனால் அப்பொருளின் தன்மை அதாவது அதின் அளவு, உயரம் முதலிய அம்ச அடையாளங்கள் அதின்பால் விழும் வெளிச்சத்தைப் பெரும்பாலும் பொருத்திருந்தாலும் அப்பொருளின் செயற்கையையும் பொருத்திருக்கிறது. இதனால் அதே பொருள் ஒரு சேர்க்கையால் ஒருவிதத் தன்மையாயும், மற்றொரு செயற்கையால் மற்றொருவிதத் தன்மையாயும் தோன்றும். இதனால் நாம் ஒரே பொருளையே ஒரே வெளிச்சத்தால் பார்த்தாலும் அதின் செயற்கை நிலையால் நம்மை ஏமாற்றி வெவ்வேறு தன்மையுடனிருப்பதாகக் காண்கிறோம். இதனால் நாம் ஒரே கண்களால் ஒரு பொருளைப் பலவித நிலையுடன் கண்டு ஏமாந்து போய் விடுகிறோம் என்பது உண்மை. ஆகவே நாம் கண்ணாரக் காண்பது பொய்யாகப் போகிறதல்லவா? அதின் உண்மை நிலைமை ஒருவிதமாயிருந்தால் நாம் ஏமாந்து வேறொரு நிலைமையுடனிருப்பதாக மதித்துக் கொள்ளுகிறோம். இதற்குத் தான் 'பார்வையின் மாய்கை'— பார்வையின் பொய் (Optical Illusion) என்று கூறப்படுகிறது.

செங்குத்தாய் நிற்கும் மூன்று உருவங்களில் தூரமாயிருக்கும் உருவம் பார்வைக்கு உயரமாய் காணப்படுகிறதல்லவா? ஆனால் அளந்து பார்த்தால் மூன்றும் ஒரே உயரமானதா யிருப்பதைக் காண்பீர்கள்.





நீண்ட கோடுகளெல்லாம் ஏதோ ஒடுங்கி வந்து சேரும் பாவனையில் தோன்றுகின்றன வல்லவா? ஆனால் ஒன்றுக் கொன்றுள்ள தூரத்தை அளந்து பார்த்தீர்களானால் ஒரே அளவுடன் கூடி (Parallel) ஒன்றுக் கொன்று கிட்டினாற் சேராமற் போவதைக் காண்பீர்கள்.



செங்குத்தான கோடு படுக்கைக் கோட்டை விட நீளமாயிருப்பதாகக் காணப்படுகிறதல்லவா? அளந்து பாருங்கள் இரண்டும் ஒரே நீளந்தான்.



கீழிருக்கும் நேரானகோடு மேலிருக்குங் கோட்டைவிட நீளமாகத் தோன்றுகிறதல்லவா? அளந்து பார்த்தால் இரண்டும் ஒரே நீளமாகவிருப்பதைக் காண்பீர்கள்.

துவக்கத்தில் கூறிய கதையில் கண்ட தோற்றத்தை அவசரக்காரன் ஒருவிதமாகக் கண்டு பாவச் செயல் என்று தெரிந்து கொள்ளவும் அமைதிக்காரன் வேறொருவிதமாகக் கண்டு பாவமற்ற—தெரியாத செய்கையென்று தெரிந்து கொள்ளவும் ஏதுவுண்டு. அதாவது நிதான புத்தியுடன் அவசரப்படாமல் அவர்கள் நித்திரை புரிவது தெரிந்தா தெரியாமலாவென்று ஆற அமர விசாரித்தால் பாவமற்ற செயல் என்று யாரும் கண்டு கொள்ள முடிகிறது. ஆனால் மேலே காட்டிய படங்களில் உண்மையான நிலைமை ஒருவிதமாயினும் யாவரையும் ஏமாற்றி பொய்யான நிலைமையை உணர்த்திக் காண்பிப்பது அதிசயமாயில்லையா? கை தேர்ந்த பலர் அவரவர் துறைகளில் உண்மையைக் கண்டு கொள்ளுகிறார்கள். கையிலெடுத்து இஃது சுமார் இவ்வளவு நிறையென்றும், இதின் நீளம் சுமார் இவ்வளவு அடிதானென்றும் கிட்டத்தட்ட சரியான விதமாகக் கூறமுடிகிறது. ஆனால் மேற் காட்டிய படங்கள் எல்லாரையும் ஏமாற்றி விடுவதைப் பார்க்கலாம். இதின் காரணம் இன்னதென இன்னும் சரியாகக் கூற முடியாத நிலையில்தானிருக்கிறார்கள். ஆதலால் கண்ணாற் காண்பதுவும் பொய் என்று கூறுவதில் என்ன தடையிருக்கிறது.

பலவித நிறங்களுடன் பொருள்கள் காணப்படுவதேன்?

சூரிய வெளிச்சம் 'வெண்மை' நிறமாகக் காண்கிறோம். ஆனால் அஃது அவ்வாறன்று. சூரிய ஒளியின் சிறிய கதிரை ஒரு துவாரத்தின் வழியாக முக்கோணக் கண்ணாடியினுள் (Prism) விடுத்தால் ஒரே நிறமாகத் தோன்றிய சூரிய வெள்ளை வெளிச்சமானது சிவப்பு, ஆரஞ்சு, மஞ்சள், பச்சை, ஊதா, கருத்த ஊதா, சிவந்த ஊதா ஆக ஏழு நிறங்களாகப் பிரிக்கப்பட்டுப் போகிறது.

இவ்வாறு கண்ணாடியினின்று வெளிவந்து ஏழு நிறங்களைக் கொடுக்கும் ஒளியை, முற்றிலும் அதே மாதிரியான மற்றொரு முக்கோணக் கண்ணாடியை வைத்து முன் வந்த நேர் வழியில் செல்ல வைத்தால் மறுபடியும் முன் போலவே வெள்ளை நிறமான வெளிச்சமாகி விடுகிறது. இதனால், கண்ணாடி வெள்ளை வெளிச்சத்தின்



சூரிய வெளிச்சத்தை எழுவித நிறங்களாகப் பிரித்து விடும்விதம்.
அ—சூரிய வெளிச்சக்கதிர்
ஆ—சிறு துவாரம்
உ—முக் கோணக்கண்ணாடி (Prism)
இ—திரை
எ—சிவப்பு
ஏ—சிவந்த ஊதா
எ ஏ—எழு நிறங்கள்



(2)

ஏழு நிறங்களைப் பிரித்துக்காட்டிய முதற் கண்ணாடியின் பக்கமாக மற்றொரு கண்ணாடியைப் படத்திலுள்ள வாறுவைத்தால் முந்திய ஏழு நிறங்களும் சேர்ந்து மறுபடியும் 'வெள்ளை' வெளிச்சமாய் வெளிவரும் வகை.

உண்மை நிறங்களைப் பிரித்து விடுவதல்லாமல் அதுதானாக அவ்வித நிறங்களை உண்டு பண்ணுவதில்லை என்பது அறியக்கிடக்கிறது.

காலை அல்லது மாலையில் மழை பெய்து நின்றவுடன் சூரியனைப் பின்புறமாக வைத்து வானவில் ஆகாயத்தில் ஏழுவித அழகான நிறங்களுடன் உண்டாவதைக் காண்கிறோம். மழை நின்றவுடன் ஆகாயத்தில் சிறு மழைத் துளிகள் தூசுகளில் தங்கி அந்தரத்தில் தங்க ஏற்படுகின்றன. அப்பொழுது அஸ்தமனமாகப் போகும் சூரிய வெளிச்சக் கதிர்கள் இத்துளிகளினுட் பிரவேசிக்க ஏற்படுகிறது. இத்துளிகள் மேற் கூறிய முக்கோணக் கண்ணாடிகளைப் போலிருந்து உட்பிரவேசிக்கும் சூரிய வெளிச்சக் கதிர்களைப் பல தடவை பிரதிபிம்பிக்கச்



மழைத் துளிகளால் சூரிய வெளிச்சத்தின் ஏழு நிறங்கள் பிரிக்கப்பட்டு வானவில் போன்று தோன்றும் விதம்.

சூ—சூரிய வெளிச்சக்கதிர்கள்
அ—சிறிய, பெரிய வானவில்லுகள்
ம—மழைத்துளிகள்
க—மனிதன்,

செய்து கடைசியில் அவைகளின் உண்மை நிறங்களைப் பிரித்து வெளிப் படுத்துகின்றன. சூரியனினின்று புறப் படும் வெளிச்சக் கதிர்கள் யாவும் மழைத் துளிகளினுட் சென்று பிரிக் கப்படுவதில்லை. சூரியனினின்று புறப் பட்டுத் துளியினுட் செல்லும் வெளிச் சக்கதிரும், துளியினின்று நேர் வழி மாற்றப்பட்டு நாம் காணும்படி ஓடி வரும் வெளிச்சக் கதிரும் 42°2′ கோணமான சந்திப்பாயிருந்தாலன்றி த்துளிகள் பிரிக்கும் பல நிறங்களை நாம் பார்க்க வியலாது. இதனால் எல்லாத் துளிகளும் பிரிப்பதை நாம் பார்க்க முடியாது. அரை வட்ட மான பாகங்களில் மாத்திரம் உள்ள துளிகள் பிரித்து விடும் பல நிறங் களைத்தான் நாம் காண முடிகிறது.

இவ்வாறு சூரிய வெளிச்சம் ஏழு வித நிறங்களையுடையது வென்று கண்டோம். இவ்விதமான சூரிய வெளிச்சம் பூமியின்பாலுள்ள வஸ்துக் கள் மீது தாக்கியவுடன் அது முழு வதும் அப்படியே பிரதிபிம்பித்து சிதறஅடிக்கப்படுவதில்லை. ஆனால் சகல வஸ்துக்களும் தங்கள் தங்கள் இயல் புக்குத் தகுந்தவாறு தங்கள்மீது விழும் வெளிச் சத்திலுள்ள ஏழு நிறங்களில் சிலவற்றை கிரகித்துக் கொண்டு மீதி யான நிறத்தை மாத்திரம் பிரதி பிம் பித்து விடுகிறது. அவ்வாறு பிரதி பிம் பிக்கும் வெளிச்ச நிறத்தைக் கொண்டு தான் அப்பொருளின் நிறம் இன்ன தென நாம் பார்க்கிறோம். ஒரு ரோஜா புஷ்பத்தை எடுத்துக் கொள்ளுவோம். அது சிவப்பாய்த் தோன்றுவது வெளிச் சத்திலுள்ள சிவப்பு நிறத்தை மாத்திரம் பிரதி பிம்பித்து ஏனைய நிறங்களை கிரகித்துக் கொண்டு விடு கிறது. இதே புஷ்பத்தை வெளிச் சத்தின் ஏழுவித நிறங்களில் மாற்றி



• நான்கு கருப்புச் சதுரங்களின் முனைகள் கூடும் வெள்ளையான சந்துப் பாகத்தைக் குறிப்பாய் பாருங்கள். இலேசான கருப்பாடுதலைக் காண்கிறீர்க ளல்லவா? உண்மைக்கு இது மாறல்லவா!



இடது புறமுள்ள கருப்புச்சதுரம் வலது புறமுள்ள வெள்ளைச் சதுரத்தைவிட சிறிதாகக் காணப்படுகிற தல்லவா? அளந்து பாருங்கள்; இரண்டும் ஒரே அளவுள்ளதாகக்காணும்.



ஊடேயிருக்கும் பாகத்தின் மற்றிரண்டு பாகத்தோடு சேர்ந்திருக்கும் ஓரத்தைக் கவனியுங்கள். வலது ஓரம் தன்னைவிட சிறிது வெண்மையோடு சேர்ந்திருப்பதால் கருப்பாகவும், இடது ஓரம் தன்னைவிட சிறிது கருப்பான பாகத்தோடு சேர்ந்திருப்பதால், அவ்வோரம் சிறிது வெண்மை யாகவும் காணப்படுகிறதல்லவா?

மாற்றி வைத்துப் பார்த்தோமானால் அப்புஷ்பம் சிவப்பு பாகத்தில் மிகச் சிவந்ததாக மாத்திரம் தோன்றி மற்றப் பாகங்களில் கருப்பாய்த் தோன்றும். இதேவிதமாகத்தான் ஏனைய பச்சை, ஊதா முதலிய வஸ்த்துக்கள் அவ்வித நிறங்களாகத் தோன்றுகின்றன.

வெளிச்சத்தை உட்பிரவேசிக்க விடும் கண்ணாடிகள் பலவித நிறங்களாகத் தோன்றும் விதமும் இதே மாதிரிதான். கண்ணாடிகள் ஏனைய நிறங்களை யெல்லாம் கிரகித்துக் கொண்டுளந்த ஒரு நிறத்தைமாத்திரம் வெளிவர விடுகிறதோ அவ்வெளிச்சத்தின் நிறத்தைப் போலத் தோன்றும். சிவப்புக் கண்ணாடி சிவப்புநிற ஒளியை மாத்திரம் வெளிவர அனுமதித்து மற்றவைகளை யெல்லாம் கிரகித்துக் கொண்டு விடுகிறது.

இப்பொழுது, எந்த நிறமான பொருளையும் வெளிச்சமே யில்லாத இருட்டில் வைத்தால் அப்பொருள் கருப்பாகவே தோன்றும். ஆகவே எப்பொருளும் அதின் இயற்கைக்குத் தகுந்த வண்ணம் தோன்றுவதற்கு வெளிச்சம் பிரதிபிம்பிக்கவோ, ஊடுருவி வெளி வரவோ வேண்டும். ஆகவே வெளிச்சத்தால் தான் ஒரு பொருள் இருப்பதாக அறிகிறோம். அப்படி அறியும் பொருள் உணர்த்தும் நிறமும் அவ் வெளிச்சத்தின் பெரும்பாகம் கிரகிக்கப் பட்டு வெளியே பிரதிபிம்பிக்கப்படும் நிற ஒளியைப் பொருத்திருக்கிறது. இதனால் நாம் காணும் பொருள்கள் பலவித நிலையிலிருந்து பலவித தோற்றங்களால் நம்மை ஏமாற்றக் கூடியவைகளா யிருப்பதை நன்குணர முடிகிறது.

இயற்கைக்கு மாறுன தோற்றம் உண்டாவதேன்?

நல்ல உஷ்ணமான நாளில் கொஞ்ச தூரத்தில் பார்ப்போமானால் அங்கு ஏதோ தண்ணீர் தடாகம் போல் பிரதிபிம்பிப்பதைப் பார்க்கலாம். இவைகளைச் சாதாரணமாக ரோடுகளில் தூரத்தில் பள, பள வென்று தண்ணீர் போல் ஒளிப்பதைப் பார்க்கலாம். ஆனால் அருகில் சென்றால் ஒன்று மிராது. பாலை வனங்களில் பிரயாணிகள் இவ்வித தோற்றத்தால் தண்ணீர் தடாக மென்று கருதி ஓடிச் சென்று ஒன்றுமில்லாமல் ஏமாந்து போகின்றனர். உஷ்ணமான காலங்களில் பூமியை ஒட்டி யிருக்கும் காற்று வெகு உஷ்ணமாயும் மேலே போகப் போக உஷ்ணம் குறைந்து கொண்டே போகும். இதனால் சூரிய வெளிச்சம் பூமியை நாடி வரும் போது தாரதம்மியமான உஷ்ணம் பொருந்திய காற்றால் அவ்வெளிச்சம் சிறிது சிறிதாக வளைக்கப் பட்டு கொஞ்ச தூரத்தில் மறுபடியும் மேல் நோக்கி வரும்படி முற்றிலும் மாற்றப்பட்டு விடுகிறது. (Total reflection) அவ்வாறு வளைக்கப்பட்டு வரும் வெளிச்சமே நாம் பார்க்கும் போது அந்நேர் பாதையில் பளபளப்பாய் பிரகாசித்துக்காட்டுகிறது. இதே விதமாக சமுத்திரத்தை மேவியுள்ள காற்று குளிரானதாயும் மேலே போகப் போக உஷ்ணமாயுமிருப்பதால் மேல் நோக்கிச்செல்லும் வெளிச்சம் சிறிது தூரம் போனவுடன் முற்றிலும் வளைக்கப்பட்டு கீழ்நோக்கி வந்து விடுகிறது. இதனால் மாலுமிகள் சில சமயம் முன்னால் வரும் கப்பல்கள்

தண்ணீரிலில்லாமல் ஆகாயத்தில் அந்தரத்தில் தோன்றுவதைப் பார்க்கிறார்கள். மின்சார விசிறியில் இரண்டே இதழ்களிருந்தாலும் அது வேகமாய் சுழன்று வரும்போது ஏதோ ஒரு வட்டமான தகடு போன்று தெரிவதை அநேகர் பார்த்திருப்பீர்களல்லவா? இது போன்று இன்னும் எத்தனையோ அக்காட்சிகள் உண்டு. இதனால் கண்ணால் காண்பதும் பொய் என்று கூறுவது முற்றிலும் உண்மையல்லவா?



மரத்தினின்று வெளிச்சக்கதிர் கீழ் நோக்கிவந்து தாரதம்மிய உஷ்ணக் காற்றால் வளைக்கப்பட்டு மறுபடியும் மேல் நோக்கி வந்து மனிதன் கண்ணில் படவே அவன் பார்க்கும் நேர்முகத்தில் மரத்தைத் தலை கீழாக மறுபாகத்தில் பார்க்க முடிகிறது. என்ன ஏமாற்றம்! (Mirage)

உலகத்திலுள்ள மற்றச் சமூகங்களின் வீழ்ச்சியின் மீது நாம் வாழ வேண்டுமென்ற விருப்பம் நமக்கு இல்லை. இந்தியாவின் பிரஜைகளாயிருப்பது போல், உலகப் பிரஜைகளாகவும் இருப்போம் என்று நாம் சொல்லக் கூடிய காலம் ஒன்று வரும்.

—மகாத்மா காந்தி

ஸத்யேந்திர பிரசன்ன சின்ஹா

ஜனனம் 1864

மரணம் 1928

—"ஒரு காங்கிரஸ்வாதி"

இந்தியர்களில் லார்ட் பட்டம் பெற்றவர் ஒருவர் தான். அவரே ஸர் சத்தியேந்திரப் பிரசன்ன சின்ஹா. 1919ம் வருஷத்து இந்தியா அரசாங்கச் சட்டத்தை அமுலுக்குக் கொண்டு வந்து, அதிலுள்ள குறைபாடுகளையெல்லாம் இந்தியர்கள் கவனியாமல் அவர்களுடைய கவனத்தை வேறொரு வழியில் திருப்பிவிடுவதற்காகவே, அப்பொழுது இந்தியா மந்திரியாயிருந்த எட்வின் மாண்டேகு, சின்ஹாவுக்கு லார்ட் பட்டங் கொடுத்து உதவி இந்தியா மந்திரி பதவிக்கு நியமித்தாரா என்று ஒரு சிலர் கேட்கலாம். லார்ட் சின்ஹாவுக்கு முன்னே, பின்னே, வேறெப் பொழுதுமே இந்தியர்களுக்கு இந்த உயர் பதவி கொடாததை முன்னிட்டு, ஒரு சிலர்க்கு இந்தச் சந்தேகம் ஏற்படுவது நியாயமேயாகும். ஆனாலும், சின்ஹாவின் கூரிய அறிவினையும், இந்திய அரசியல் வாழ்வில் அவருக்கிருந்த மகத்தான செல்வாக்கையும் யாரும் குறைத்துக் கூற முடியாது.

1915ம் வருஷம் பம்பாயில் நடைபெற்ற முப்பதாவது காங்கிரஸில் தலைமை வகித்த ஸர் ஸத்யேந்திர பிரசன்ன சின்ஹா, வங்காள மாகாணத்தைச் சேர்ந்த பீர்பம் ஜில்லாவிலுள்ள ராய்பூர் கிராமத்தில் 1864ம் வருஷம் ஜூன் மாதம் பிறந்தார். இவர் தகப்பனார், கிழக்கிந்தியா கம்பெனியின் கீழ் முனிசிப்பாகவும், சதர் அமீனாகவும் வேலை பார்த்து வந்தார். ஸத்யேந்திருடைய இரண்டாவது வய

திலேயே தகப்பனார் காலமாகி விட்டார். ஸத்யேந்திரருடன் கூடப் பிறந்தவர்கள் மொத்தம் மூன்று பேர். இவர்கள், ஸத்யேந்திரருக்கு முன்னாலேயே இறந்து விட்டார்கள்.

ஸத்யேந்திரர், பாலியத்தி லிருந்து மாதாவின் சம்ரட்சணையின் கீழ்தான் இருந்து வந்தார். பிரபம் ஜில்லா ஸ்கூலில் பயிற்சி பெற்றார். அப்பொழுது முதலே மிகச் சூடிகையாகப் படித்து வந்தார். சீக்கிரத்தில் எதையும் கிரகித்து, அதை மனதில் பதித்துக் கொள்ளும் ஆற்றல் இவருக்கு இருந்தது. 1877ம் வருஷம் மெட்ரிகுலேஷன் பரீட்சையில் தேறி, பின்னர் கல்கத்தா பிரசிடென்ஸி காலேஜில் சேர்ந்து படித்து எம். ஏ. வகுப்பில் முதலாவதாகத் தேறினார். 1880ம் வருஷத்தில் இவருக்கு விவாகம் ஆயிற்று. இதே வருஷத்தில், இவருடைய எதிர்கால வாழ்வையே மாற்றக்கூடிய ஒரு சம்பவம் நடைபெற்றது. இவருடைய தகப்பனார், உத்தியோகத்தி லிருந்தபோது, ஏராளமான பொருளீட்டி அதை எர்ஸ்கைன் கம்பெனி என்ற ஒரு கம்பெனியில் போட்டு வைத்திருந்தார். இது விஷயம், ஸத்யேந்திரருடைய மூத்த சகோதரரான என். சி. சின்ஹாவுக்குத் தெரிந்தது. அந்தப் பணத்தை இருவரும் சேர்ந்து எடுத்துக் கொண்டு, குடும்பத்தினருக்குத் தெரியாமல், இங்கிலாந்து செல்லத் தீர்மானித்தனர். அப்படியே இரண்டு சகோதரர்களும் 1882ம் வருஷம் இங்கிலாந்து சென்றனர்.

ஸத்யேந்திரர் இங்கிலாந்து சென்றதும் ரோமன் லா, ஜூரிஸ் ப்ருடன்ஸ், கான்ஸ்டிடியூஷனல் லா முதலிய சட்டத்துறைகளில் பயிற்சிபெற்றார். இவருடைய அறிவுத் திறமையைக்கண்டு அதிகாரிகள், இவருக்கு வருஷம் ஐம்பது பவுன் விகிதம் உபகாரச் சம்பளம் கொடுத்தனர். 1886ம் வருஷம் பாரிஸ்டர் பரீட்சையில் தேறினார்; சன்னதும் பெற்றார்.

1886ம் வருஷம் ஸத்யேந்திரர் கல்கத்தாவுக்குத் திரும்பி வந்து, 23வது வயதில் பாரிஸ்டர் தொழிலை நடத்தத் தொடங்கினார். தமது புத்தி கூர்மையினாலும், சலியாத உழைப்பினாலும், சொற்ப காலத்திற்குள் இவருக்கு நல்ல பெயர் கிடைத்தது. ஏராளமான பொருள் சம்பாதிக்கலானார். 1903ம் வருஷம் இவர் இந்தியா அரசாங்கத்தின் நிரந்தர வக்கீலாக நியமிக்கப்பட்டார். 1908ம் வருஷத்தில் அட்வோகேட்-ஜெனரலாக நியமனம் செய்யப் பெற்றார். இந்தியா அரசாங்கத்து நிருவாக சபையில் மிண்டோ-மார்லி சீர்திருத்தப்பிரகாரம் ஓர் இந்தியரை நியமிக்க வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்ட போது, அந்தப் பதவி இவருக்குத்தான் முதன் முதலாகக் கிடைத்தது.

1894ம் வருஷத்துக் காங்கிரஸில் தான் இவர் முதல் முதலாக ஆஜராயிருந்து, நடவடிக்கைகளில் கலந்து கொண்டார். இதன் பிறகு, ஏறக்குறைய ஒவ்வொரு காங்கிரஸிலும் பிரசன்னமாயிருந்து, தமது நாவன்மையைக் காட்டியிருக்கிறார். 1915ம் வருஷத்துக் காங்கிரஸில் தலைமை வகித்து, இவர் செய்த பிரசங்கமானது, ஒரு சிறந்த ராஜ தந்திர நிபுணருடைய பிரசங்கமாக ஐரோப்பிய அறிஞர்களால் புகழப்பட்டது.



அரசகுல யூதன்

எழுதியவர்: திரு வி. மரிய இருதயம் பிள்ளை; புஸ்தகம் கிடைக்குமிடம்: திரு வி. மரிய இருதயம் பிள்ளை; இன்கம்டாக்ஸ் ஆபீஸ், காரைக்குடி, ராமநாதபுரம் ஜில்லா; டெமி அளவு 1x8; 184 பக்கங்கள்; விலை; உள்நாடு 0-12-0; வெளிநாடு ரூ1-0-0.

ரோம ஏகாதிபத்தியம் உச்ச நிலையிலிருந்த காலத்தில், உண்மையிலேயே இந்தக் கதை நடந்ததாகச் சொல்லப்படுகிறது. 'பென் ஹூர்' என்ற பெயருடைய இந்தக் கதை ஆங்கிலத்தில் எழுதப்பட்டு, புஸ்தக ரூபமாக வெளி வந்திருப்பதோடு, சினிமாவிலும் காட்டப் படுகிறது. இந்த 'பென்ஹூர்' கதையைத் தழுவி எழுதப்பட்ட 'அரச குல யூதன்' என்ற இந்த நூல் நன்றாக எழுதப் பட்டிருக்கிறதென்று சொல்ல வேண்டும். பென்ஹூர் பிரபுவின் மனைவியும் மகளும் சிறைச்சாலையில் அநுபவிக்கிற துன்பங்களைப் பற்றி வருணித்திருக்கும் பாகம் மிகவும் உருக்கமாயிருக்கிறது. (பக்கம் 30.) யூதாவின் வீரச் செயல்களும், அவன் தனது தாயையும் சகோதரியையும் மீட்கச் செய்த முயற்சிகளையும், ஆசிரியர் ஸ்வாரஸ்யமாக எழுதிக்கொண்டு போகிறார். கிறிஸ்தவ சம்பிரதாய சொற்றொடர்கள் மலிந்திருந்தாலும்,

---

இந்தக் காங்கிரஸிலிருந்து இந்தியப் பொது ஜனங்கள், காங்கிரஸ் விஷயங்களில் அதிகமான சிரத்தை காட்டலானார்கள்.

1918ம் வருஷம் லண்டனில் நடைபெற்ற ஏகாதிபத்திய மகா நாட்டுக்கு பிக்கானீர் மகாராஜாவும், ஸத்யேந்திரரும் இந்தியாவின் பிரதிநிதிகளாகச் சென்றார்கள். அப்பொழுது நடைபெற்ற யுத்த மகா நாட்டிலும் இவர் கலந்து கொண்டார். இதன் பிறகு, இவர் வங்காள அரசாங்க நிருவாக சபையிலும் ஓர் அங்கத்தினராயிருந்து வேலை பார்த்தார். 1918ம் வருஷம் நடைபெற்ற வார்சேல் சமாதான மகா நாட்டில் இந்தியாவின் பிரதிநிதியாக இவர் ஒருவரே யிருந்தார். பின்னர் லார்ட் பட்டம் பெற்று இந்தியா உதவி மந்திரியாயிருந்து வேலை பார்த்தார்.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் பாதுகாப்பின் கீழ்தான் இந்தியா சௌக்கியமாக வாழ முடியும் என்ற நம்பிக்கை கொண்ட இவர் 1918ம் வருஷம் மார்ச் மாதம் 5ந் தேதி இறைவனடி சேர்ந்தார்.

ஆவணிமீ சுநி.

கதை படிப்பதற்கு ருசியா யிருக்கிறது.

உயிரின் உண்மை

அல்லது

நாம் உயிரா? உடலா?

இயற்றியவர்: திரு டி. எஸ். ராஜப்பிள்ளை; வெளியிட்டோர்: அருளாலயம், நெ. 43, அரண்மனைக்காரன் தெரு, ஜி. டி. மதராஸ்; டபின் கிரவுன் 1x16 அளவு; 83 பக்கங்கள். விலை: 8 அணா.

ஆசிரியர், இந்நூலின் முகவுரையில், தாம் இந்நூல் எழுதிய தன் காரணத்தை எவ்வளவு சுருக்கமாக ஒரே வாக்கியத்தில் கூறுகிறார் பாருங்கள்:—

> இந்நூல், கற்றுணர்ந்த அறிஞர் சிலருக்குப் பயன்படா விடினும் பழைய பழக்கமே ஒழுக்கமென்னும் வழக்கமான ஐதீக ஆசாரங்கள் சாங்கிய சடங்குகளென்னும் இப்படுகுழிகளை விட்டு அகலாது திகைப்புற்றுக் காலங் கழித்து வரும் (For those who cannot get out of the common and customary ruts of routine) சகோதர சகோதரிகள் பலருக்கும் பயன்படவும் இஃதல்லாது அவர்கள் ஜெக, ஜீவ, பரமென்னும் இம் மூன்றினது உண்மைத் தத்துவ ஞான விசார விஷயங்களில் பரோட்சமமாகவாவது (Superficially) ஒருவாறு தெளிவுற்று லோகாயதர்கள் (Materialists) செய்து வரும் பெரும் புரட்சிகளுக்கு மதிமயக்கமுறாது இருக்கவும் சாதாரண லௌகிக (உலக) உதாரணங்களைக் கொண்டு ந்யாயம், பொருத்தம், அனுபவமென்கிற மும்முகத்தானும் யாவரும் உணருமாறு மிக எளிய நடையில் "உயிரின் உண்மை தத்துவ விளக்க வினுவிடை"யாக இதனுடன் மக்கள் ஒவ்வொருவரும் கட்டாயமாய் கேட்டுத் தெளியவேண்டிய கேள்வி அதாவது "நாம் உயிரா? உடலா?" என்னும் கேள்வியையும் சேர்த்து இச்சிறிய நூலுக்கு மகுடமாக சூட்டி ஆங்கிலம் பயின்ற நண்பர்களுக்கு பிரியமுண்டாக இவ்வபிப்பிராயங்களைத் தர்க்கங்களை ஆங்கில பாஷையிலிருந்து மேற்கோளாக இடையிடையில் சந்தர்ப்பத்திற்கேற்றவாறு எடுத்துக் கூறியும், சாத்தியப்பட்ட சிற்சில இடங்களில் ஆங்கில மொழி பெயர்ப்புடனும்—"சீடன் ஆசிரியர்"—வினுவிடையாக [மனிதர் தனக்குத்தானே ஆராய்ச்சி செய்யவும் தனது உள்ளத்தில் பட்டதை வெளியிடவும் ஒவ்வொருவருக்கும் உரிமை இருத்தலால்] யாமும் தெய்வத்திருவருளைத் துணை கொண்டு உலக நன்மைக்கென எமது சிற்றறிவின் விளக்கமெவ்வளவோ அவ்வளவிற்கு இந்நூலை வரையத் துணிந்தனம்.

அப்படியானுல் இந்நூலைப் பொறுத்த மட்டிலாவது நாம் 'கற்றுணர்ந்த அறிஞர் சிலரு'டைய கூட்டத்தில் சேர்ந்து கொண்டுவிட விரும்புகிறோம்.

ஸ்ரீ அரவிந்தரும் அவரது யோகமும்

எழுதியவர்: திரு பி. கோதண்டராமன்; பிரசுர கர்த்தர்: பி.ஜி. பால்

அண்ட் கம்பெனி, ஜார்ஜ் டவுன், சென்னை; டபிள் கிரவுன் அளவு 1X16; 128 பக்கங்கள்; விலை: ஒன்பது அணா.

ஸ்ரீ கோதண்டராமன், தேசத் தொண்டிலும் பத்திரிகைத் தொண்டிலும் ஈடுபட்டு அநேக கஷ்ட நிஷ்டூரங்களைப் பட்டது நமக்கு நன்கு தெரியும். இப்பொழுது இவர் புதுச்சேரி ஸ்ரீ அரவிந்தாசிரமத்தில் சேர்ந்து கடவுட் பணியாற்றி வருகிறார். ஸ்ரீ அரவிந்தருடைய வாழ்க்கை வரலாற்றைப்பற்றிக் கூறும் இந்த நூலின் முதற் பாகத்தில், அநேக புதிய விவரங்கள் காணப்படுகின்றன. அரவிந்தருடைய சாந்த சுபாவத்திற்கு உதாரணமாக—அவர் பரோடாவிலிருந்த காலத்தில்—ஆசிரியர் பின் வரும் சில விவரங்களைக் கூறுகிறார்:—

ஸ்ரீ அரவிந்தர் சாதாரண உணவையே உட்கொண்டார். சாதம், ரொட்டி, பருப்பு, முதலிய வங்காளிகள் சகஜமாகப் புசிக்கும் சாப்பாட்டு வகைகளே அவரது உணவு. சாதத்தைவிட ரொட்டியையே கொஞ்சம் அதிகமாகச் சாப்பிடுவார். சாப்பாட்டைப் பற்றி அவர் எப்பொழுதும் கவலைப் பட்டதேயில்லை. எல்லா வேலைகளையும் போல அதுவும் ஒரு வேலையெனக் கருதுவார். மிகவும் மிதமாகவே சாப்பிடுவார். அவர் நாக்குச் சுவையைக் கவனிப்பதில்லை. அவரது சமையற்காரன் செய்து போட்ட உணவைப்பற்றி அவர் ஒரு நாளும் புகார் கூறியதில்லை. சுவையாயிருப்பினும் சுவையற்றிருப்பினும், பாகமாகாதிருப்பினும் கூட வாய் திறந்து ஒரு வார்த்தை சொல்லமாட்டார். ஒரு நாள் இங்கிலாந்திலிருந்து திரும்பி வந்த கலைஞரான சசி குமார் ஹஷ் என்பவரைத் தமது வீட்டிற்குச் சாப்பிட அழைத்திருந்தார். அது சமயம் அவரது வங்காள சமையற்காரன் படுமோசமாய்ச் சமைத்திருந்தான். ஸ்ரீ அரவிந்தர் நகைத்தனரே யொழிய அவன் மீது சிறிதும் கோபமோ ஆத்திரமோ கொள்ளவில்லை.

நூலின் இரண்டாவது மூன்றாவது பாகங்களில் அரவிந்தரின் யோக தத்துவங்களைப்பற்றி ஆசிரியர் அழகாகவும் சுருக்கமாகவும் எடுத்துச் சொல்கிறார். இந்த நூலைத் தமிழ் நாட்டார் அனைவரும் படித்துப் பயனடைய வேண்டுமென்று நாம் விரும்புகிறோம்.

கூட்டுறவு

ஆசிரியர்: திரு அ. முத்தையா எம். ஏ; வெளியிட்டோர்: புத்தறிவுப் பதிப்பகம், தியாகராய நகர், சென்னை; டபிள் கிரவுன் அளவு 1x16; 312 பக்கங்கள்; விலை: ஒன்றரை ரூபாய்.

இந்தியாவில் கூட்டுறவு இயக்கம் வெற்றிகரமாக நடைபெறவில்லை யென்பது பொருளாதார நிபுணர்களின் ஏகமுகமான அபிப்பிராயம். இதற்குரிய காரணங்களை, இந் நூலாசிரியர் பின்வருமாறு விளக்குகிறார்:—

ஒரு நாட்டில் கூட்டுறவு இயக்கமானது செவ்வையாக நடைபெற வேண்டுமானால், அந்நாட்டு மக்கள் தாங்களாகவே கூட்டுறவின் உண்மையை அறிந்து, அவசியத்தைக் கண்டு, ஆர்வத்துடன் கூட்டுறவு

ஸ்தாபனங்களை ஏற்படுத்தி, உற்சாகத்துடன் அவைகளை நடத்தி வர வேண்டும். நம் நாட்டிலோ, அப்படி இல்லை. கூட்டுறவு இயக்கத்தை இந்தியாவில் தொடங்கியவர், அரசாங்கத்தினர். அதை இன்றும் பாதுகாப்பவர் அரசாங்கத்தினர். அதில் அக்கரை உள்ளவரும் அரசாங்கத்தினர். எனவே, அரசாங்கத்தினரின் முயற்சியாலும் ஆதரவாலுந்தான் கூட்டுறவு இயக்கம் நம் நாட்டிலே தோன்றி நடைபெறுகிறது. கூட்டுறவு இயக்கத்தின் மேன்மையையும் அவசியத்தையும் அவ்வியக்கம் தொடங்கி 35 ஆண்டுகள் ஆன போதிலும், அவ்வியக்கத்திற் சேர்ந்தவர்களிற் பலர் இன்னுங்கூட அறிந்துகொள்ளவில்லை. மக்கள் தாங்களாகவே தொடங்கி நடத்தாத இயக்கமாதலால், இது இந்நாட்டிலே நல்ல சக்தியைப் பெறவில்லை.

இந்த நிலையில் கூட்டுறவு இயக்கத்தைப் பற்றியும், அதனால் ஏற்படுகிற சாதகங்களைப் பற்றியும் ஜனங்களுக்குத் தெரிவிக்க வேண்டுமென்ற அவசியத்தை ஸ்ரீ முத்தையா அவர்கள் உணர்ந்து, இந்த நூலை வெளியிட்டிருக்கிறார். பொருளாதார சம்பந்தமாகத் தமிழில் எல்லார்க்கும் புரிகிற மாதிரி எழுதுவது மிகக் கடினம். இந்தக் கடினமான வேலையை ஆசிரியர் மிக வெற்றிகரமாக நிறைவேற்றியிருக்கிறார். இத்தகைய நூல்கள் பல தமிழில் வெளிவர வேண்டுமென்பது நமது பேரவா. அந்த அவா, இந்த ஆசிரியரின் மூலமாகவே நிறைவேறும் என்று நம்புகிறோம்.

வியாபாரக் கப்பல்களின் விவரம்.

ஒவ்வொரு நாட்டு வாரியாக

தேசம்			நிறைடன்
கிரேட் பிரிட்டன்	....	....	17,436,000
பிரிட்டிஷ் டொமினியன்கள்	....	....	2,932,000
அமெரிக்கா	....	....	11,788,000
ஜப்பான்	....	....	4,475,000
நார்வே	....	....	4,374,000
ஜெர்மனி	....	....	3,928,000
இத்தலி	....	....	3,174,000
பிரான்ஸ்	....	....	2,884,000
ஹாலந்து	....	....	2,631,000
கிரீஸ்	....	....	1,855,000
ஸ்வீடன்	....	....	1,494,000
டென் மார்க்	....	....	1,118,000
ஸ்பெயின்	....	....	1,044,000
மற்ற நாடுகள்	....	....	6,175,000

கவுண்ட் லியோ டால்ஸ்டாய்

அவர் தம் மனைவிக்கு எழுதின கடைசி நிருபம்

—ச. முனிஸ்வாமி பிள்ளை

தத்துவ சாஸ்திரத்திலும், நுண்ணறிவிலும், கவுண்ட் லியோ டால்ஸ்டாய்க்கு ஈடானவர்களைத் தற்காலம் ஐரோப்பாவில் காண்பதரிது. இவர் தம் இல்லாளுக்கு எழுதிய கடைசி நிருபத்தில் தாம் இறந்த பின்னர்தான், கீழ்க் காணும் கடிதத்தைப் பிரித்துப் பார்த்துப் பிரசுரஞ் செய்ய வேண்டுமென்று குறிப்பிட்டதானது, ஆழ்ந்த புத்தியுள்ள ஒவ்வொருவனும், அநித்தியமான உலக இன்பங்களையும் நெருங்கிய சுற்றத்தாரையும் விட்டுப், பிரிவதற்கு முந்தி அவனுக்குண்டாகும் மனப் போராட்டத்தின் அனுபவம் இத்தன்மையானது என்பதை வெளிப்படுத்துகிறது. நன்றாய்க் கவனித்து ஒவ்வொருவரும் வாசிப்பதற்கு மதிப்புப் பெற்ற இந்த லிகிதத்தின் சாராம்சமாவது :—

என் அன்புள்ள சோபியா,

உலக வாழ்க்கைக்கும், நான் கொண்ட எண்ணத்திற்கும் ஒத்துவராத காரணத்தைக் கொண்டு, நான் மனம்நொந்தது இவ்வளவுதானென்று சொல்ல முடியாது. நானே உனக்குப் பழக்கிக் கொடுத்த அப்பியாசங்களை இப்பொழுது விட்டுவிடு என்று உன்னை வற்புறுத்தக் கூடாதவனாயிருக்கிறேன். சிறு குழந்தைகளைக்காப்பாற்ற வேண்டும் என்ற பொறுப்பை வகித்தவனாயிருக்க, அவர்களைக் கை விடுவதனால், குழந்தைகளுக்கும் துக்கம் உண்டாக்க வேண்டியிருக்குமே என்று எண்ணியே இது வரையிலும் உங்களை விட்டுப் பிரிவதற்கு முடியாமலிருந்தது. பதினாறு வருஷ காலமாக இல்வாழ்க்கையிலேயே இருப்போமென்றால் எனக்கு வழக்கமாக ஏற்பட்டு என்னைச் சூழ்ந்து கொண்டிருக்கும் கோபதாபங்களுக்கு நீங்கள் உள்ளாகி அதனால் நேரிட்ட சண்டைச்சச்சரவுகளைப் போல் இனியும் ஏற்படும் என்பதை அறிவேனாகையால், அப்படியே சமுசார வாழ்க்கையில் நீடித்திருக்கவும் முடியாமலிருக்கிறது. ஆகையினால் நெடு நாளாய் என் மனதில் குடிகொண்டிருந்த எண்ணத்தை நிறைவேற்றிக் கொள்வதற்குத் தருணம் இதுவே என்று தீர்மானித்து விட்டேன். வயது முதிர முதிர, இல்வாழ்க்கையிலிருந்து வருவது தொல்லையென்று கண்டு என் மனம் ஏகாந்தத்தை நாடுகிற காரணத்தினாலும், குழந்தைகள் இப்போது பெரியவர்களானதினால், நான் உங்கள் மத்தியில் இல்லாமல் இருத்தலை அவ்வளவாக உணர மாட்டார்கள் என்ற இரண்டாவது காரணத்தினாலும் இல்வாழ்க்கையை விட்டொழித்து தனிமையாய் வாழப் பிரியப்படுகிறேன்.

அறுபது வயதானவுடனே இந்துக்கள் இல்வாழ்க்கையை விட்டு, வனத்திற்கேகுவதைப் போலவும், பண்டைய வைதீக முதியோர், தங்கள் கடைசி காலத்தில், சமுசார வாழ்க்கையில் மூழ்கி வேடிக்கை, விநோதம் இவைகளில் காலத்தைக் கழிக்காமல் அவைகளை விட்டொழித்து ஏகாந்தத்திலிருந்து கடவுளைத் தியானஞ் செய்வதில் தங்கள் காலத்தைக் கழிப்பது போலவும், இப்பொழுது எழுபத்தொன்பதாவது வயதிலிருக்கும் எனக்கும், இல்வாழ்க்கையில் இருந்து நீங்கிச் சஞ்சலமில்லாத மனதுடன் ஏகாந்தமாயிருக்க விருப்பமுண்டாகிவிட்டது.

என் எண்ணத்தைப் பகிரங்கமாகப் பூர்த்தி செய்துகொள்ள முயன்றிருந்தால் நீங்கள் இவ்விதம் செய்தல் கூடாதென்று என்னைக் கெஞ்சிக் கொண்டும், வாதாடியும், தூஷணை செய்தும், சச்சரவு செய்துமிருப்பீர்கள். அப்பொழுது ஒருகால், என் எண்ணம் நிறைவேறாமற் போய்விடுமோ என்று ஊகிக்க வேண்டியிருக்குமேயன்றி என் மனம் எப்பொழுதும் நான் செய்த தீர்மானத்திற்கு விரோதமாகப் போகாதென எனக்குத் திண்ணமாகத் தெரியும். ஆகையால், பிரியே! நான் செய்த காரியம் உனக்கு மன வருத்தத்தையும் ஆத்ம வருத்தத்தையும் உண்டாக்கி யிருந்தால் அதற்காக மன்னிப்புக் கேட்டுக் கொள்ளுகிறேன். சுயேச்சையாக இருக்க விட்டுவிடு. என்பேரில் மன வெறுப்பு வேண்டாம்.

நான் உன்னை விட்டுப் பிரிந்தது உன்பேரில் அதிருப்தி யடைந்ததனால் என்று எண்ணவேண்டாம். கண்களால் பார்க்கக் கூடியவைகளிலும், தேகத்தால் உணரக் கூடியவைகளிலும், எனக்கிருக்கும் வெறுப்பை நான் உணருவதுபோல் நீ உணரவில்லை; உன்னால் உணரவும் முடியாது. அப்படி யிருக்க, நீ அறிய முடியாத இந்த விஷயத்தில் வெறுப்படைந்து அதற்குத் தகுந்தபடி உன் வாழ்க்கையை மாற்றிக்கொள்ள உன்னால் கூடாது. சக்தி யற்றவளாயுமிருக்கிறாய் என்பது எனக்குத் தெரிந்த விஷயமே. ஆகையால், உன்பேரில் நான் குற்றங் கூறமாட்டேன். நாமிருவரும் இல்லறம் நடத்தி வந்த அந்த நீண்ட காலமான முப்பது வருஷங்களுள் முக்கியமாக அதன் முதல் பகுதியில் உனக்கு ஏற்பட்ட கடமையென்று தோன்றின விஷயங்களில் உன்னுடைய சுபாவ விசுவாசத்தினால் நீ என்னிடத்தில் காட்டி வந்த பொறுமைக் குணத்தை இப்பொழுது ஞாபகத்திற்குக் கொண்டு வருவதினால், எனக்குண்டாயிருக்கும் சந்தோஷத்திற்களவே யில்லை.

என்னிடத்திலும், உலகத்தாரிடத்திலும், நடக்கவேண்டிய விதமறிந்து நீ நடந்து வந்தாய். என்னிடத்தில் காட்டிய விசுவாசத்திற்கும் பக்திக்கும் நான் எப்படிப் பிரதியுபகாரம் செய்வேனோ அறிகிலேன். ஆனால் நம் வாழ் நாட்களின் கடைசி பாகமாகிய சென்ற பதினைந்து வருஷ காலமாக நாம் பிரிந்திருக்கிறோம். அதற்காக நீ என்பேரில் நொந்து கொள்வது கூடாது. ஏனெனில் நான் என் வாழ் நாளை இவ்விதமாகக் கழிக்க வேண்டுமென்பது மிகவும் அவசியமாக இருந்ததை உணர்ந்து,

புராதன எகிப்து

(காப்பிரைட்)

—"துரோணன்"

2. எகிப்தின முதல் மன்னன்

எகிப்தானது, மேல் எகிப்து என்றும் கீழ் எகிப்தென்றும் இரண்டு விதமாகப் பிரிக்கப்பட்டிருந்ததென்றும் இவை யிரண்டையும் ஒன்று சேர்த்து ஒருமன்னன் ஆண்டு வந்தானென்றும் மேலே கூறினோமல்லவா? இந்த மன்னன் யார்? இவன்தான் மெனெஸ் என்ற மன்னன். எகிப்தியர்கள் இந்தப் பெயரை மீனு என்று அழைக்கிறார்கள். மெனெஸ் என்ற பெயரானது கிரேக்கர்களால் கொடுக்கப்பட்டது. மீனு என்ற இந்த மன்னன், மேல் எகிப்தினுள்ள தேனு என்ற ஊரில் பிறந்தான். இவனுடைய மூதாதையர்கள், மேல் எகிப்தில் ஆட்சி செலுத்தி வந்தார்களென்று சொல்லப்படுகிறது. இவன் கீழ் எகிப்தையும் வெற்றி கொண்டு, இரண்டையும் ஒன்று சேர்த்து ஆண்டு வந்தான். இவனைத்தான், தங்களுடைய முதல் மன்னனென்று எகிப்தியர்கள் கொண்டாடுகிறார்கள். எகிப்தின் சரித்திரம் இவனிடத்திலிருந்தே ஆரம்பிக்கிறதென்று சொல்ல வேண்டும்.

மெனெஸ் மன்னன், மேல் எகிப்து, கீழ் எகிப்து ஆகிய இரண்டு பிரதேசங்களையும் சேர்த்து ஆள்வதற் கறிகுறியாக இரட்டை கிரீடங்கள் தரித்துக் கொண்டிருந்தான். இரண்டு பிரதேசங்களையும் சேர்த்து ஒழுங்காக நிருவாகம் செய்ய வேண்டுமென்றால், இரண்டு பிரதேசங்களுக்கும் மத்தியமாயுள்ள ஓர் ஊரைத்தான் ராஜதானியாக்கிக் கொள்ள வேண்டுமென்று இவன் தீர்மானித்தான். அப்படியே, மேல் எகிப்தும் கீழ் எகிப்தும் சந்திக்கிற இடத்தை இவன் தலை நகரமாக்கிக் கொண்டான். பிற்காலத்தில் சில சந்தர்ப்பங்களில் எகிப்தின் தலை நகரம் தெபெஸ் என்ற ஊருக்கும் அலெக்ஸாண்ட்ரியா என்ற ஊருக்கும்

அதற்குத் தகுந்தபடி மாற்றிக்கொண்டேன். நீ என்னுடன் வரவில்லையென்று உன்பேரிலும் எனக்கு மன வருத்தமில்லை. ஆனால் நீ என்னிடத்தில் வைத்திருந்த விசுவாசத்தை மட்டும் என்றும் மறவேன்.

மாற்றப் பட்டபோதிலும், சொற்ப கால அளவுக்கே இவை மாற்றப் பட்டிருந்தனவே தவிர, நிரந்தரத் தலை நகரமாக, மெனெஸ் ஏற்படுத்தின ஊரே இருந்தது.

மெனெஸ் மன்னன், புதிய நகரைத் தெரிந்தெடுத்த போது, இயற்கையும் செயற்கையுமான பல எதிர்ப்புகளைச் சமாளிக்க வேண்டி யிருந்தது. நைல் நதிக்குக் குறுக்கே ஓர் அணை போட்டு அதன் போக்கைக் கிழக்குப் பக்கமாகத் திருப்பினான். இந்தத் திருப்பின இடத்தில் தான், புதிய தலை நகரம் நிர்மாணிக்கப் பட்டது. தவிர, மேல் எகிப்திலுள்ளவர்களும் கீழ் எகிப்திலுள்ள வர்களும், ஒரே ஊரை பொதுவான தொரு தலை நகரமாகச் செய்து கொள்ள வேண்டுமென்பதில் கொஞ்சம் முணு முணுத் தார்கள். ஆனால் புதிய இடமானது, இயற்கை வசதிகள் நிரம்பிய தாயும், சத்துருக்களின் பாதுகாப்பினின்று எளிதில் பாதுகாத்துக் கொள்ள கூடிய தாயும் இருந்தது. புதிய இடத்திற்கு 'மென்—னெபர்' என்று பெயரிடப்பட்டது. அதாவது 'நல்ல இடம்' என்று பொருள். இந்த 'மென்—னெபர்' என்ற பெயரையே கிரேக்கர்கள் 'மெம்பிஸ்' என்று அழைத்தார்கள். இந்தத்தலை நகரத்தின் அழிவுச் சின்னங்கள் இப்பொழுது காணப்படுகின்றன. இதனை 'டெல்—மானப்' என்று அழைக்கிறார்கள்.

மெம்பிஸ் நகரம் ஆற்றுப்பாய்ச்சலுடையதாய், கோடை காலத்தில் குளிர்ச்சியாயும், குளிர் காலத்தில் வெப்ப முடையதாயும் இருந்தது. இந்த நகரத்தில் 'ப்தாஹ்' என்ற எகிப்தியர்களின் தெய்வத்திற்கு ஒரு கோயிலும் இருந்தது. இதனை, மெனெஸ் மன்னன் விஸ்தரித்துக் கட்டினான். இவனைப்பற்றி வேறு விவரங்கள் தெரியவில்லை. இவன் 62 வருஷங்கள் ஆண்டதாகவும், கடைசியில் ஒரு நீர்யானையினால் கொல்லப்பட்டதாகவும் சொல்லப்படுகின்றன.

இந்த மெனெஸ் அரசன் சம்பந்தமாக ஒரு சின்னமும் இப்பொழுது கிடைக்காமையினால், இத்தகைய அரசன் ஒருவன் உண்மையிலேயே இருந்திருக்கக் கூடுமோ வென்று சில சரித்திரா சிரியர்கள் சந்தேகிக்கிறார்கள். ஆனால் எகிப்தியர்கள் மெனெஸ் என்ற மன்னன் இருந்ததாகவே நம்புகிறார்கள். ஏனென்றால், இந்த மெனெஸ் மன்னனுடைய பரம்பரையினர் என்று சொல்லப்பட்ட சுமார் 25 அல்லது 30 அரசர்களின் பெயர்கள் வரிசைக் கிரமமாகக் கூறப்படுகின்றன. இந்த அரச பரம்பரையின் உண்மையை யாரும் சந்தேகிக்கவில்லை. அப்படியிருக்க, மெனெஸ் மன்னனைப் பற்றிய சந்தேகம் மட்டும் ஏன்?

மனக்கோயில்—கடவுள் வாழிடம்

—எஸ். கே. நாராயண ஐயர்

B. A., B. L.,

மனத்துக் கண் மாசிலனாதல்
அனைத்தறன் ஆகுல நீரபிற.

எக்கருமத்தையும் உண்மை விசுவாசத்தோடு செய்யின் அதன் பலன் எப்போதும் நன்மையே பயப்பதாகும். குற்றமற்ற நெஞ்சத்தினனாய் எல்லாம் வல்ல இறைவனை நினைத்து உண்டதனாலேயே பிரஹ்லாதனுக்கு நஞ்சும் அமுதாயது. எண்ணம் களங்கமுற்றிருப்பின் வெளித்தோற்றமெல்லாம் தம் நிலைமாறி காமாலை கொண்ட கண்ணார் எல்லாப் பொருள்களையும் மஞ்சளாகவே பார்ப்பது போன்று தத்தம் நோக்கத்திற்குகந்தாற் போலேயே மாறுபாடோடு தோன்றும். நெஞ்சம் பிழைபடாதிருந்தமையாலேயே சுயோதனன் திடீரென வந்ததறிந்த பானுமதி சொக்கட்டான் ஆடுவதினின்றும் எழுந்து சென்றபோது செல்லவிடாது அவள் மேகலையைப் பிடித்திர்த்து மணிகள் சிந்தும்படி செய்த கர்ணனிடம் உதிர்ந்த மணிகளைக் கௌரவர் முதல்வன் கோர்க்கவோ சேர்க்கவோ என்றான். நம்பிக்கையற்று பொறாமை என்னும் நஞ்சு நெஞ்சிற்குடி கொண்டிருப்பின் அக்கணம் ஆடவரில் ஒருவனும் பானுமதியுமேனுமறித்தொழிந்திருப்பரன்றோ.

உண்மையுள்ளத்தையும் உயரிய காதலையும் காட்ட கண்ணன் சரிதையிலும் எண்ணிறந்த நிகழ்ச்சிகள் உள்ளன. ஒருகால் நாரதர் தமக்குத் துணையாய்த் தவத் தொழிலில் தொண்டு செய்யத் தன்னோடு பாண்டவர் சகாயன் வந்தே தீரவேண்டுமென்று வற்புறுத்தினார். காமியமான ஆசைமிக்கவுள்ள சத்தியபாமை அவ்விதம் கண்ணனைவிட்டுப் பிரிந்திருக்கத் தனக்கியலாதென்றும், கண்ணனுக்குப் பதிலாகத் தன்னிடமுள்ளதெதனைக் கேட்டாலும் கொடுக்கச் சித்தமாயிருப்பதாகவும் அத்தகைய பொருளைப் பெற்று கண்ணனை விடுத்தேகும்படியும் நாரதரை வெகுவாய் வேண்டிக் கொண்டனள். முனிபுங்கவரும் பாமையின் பிரார்த்தனைக்கு மிகவும் இணங்கி கிருஷ்ணன் இடைக்குச் சமமான பொன்தரின் அதனைப் பெற்று கண்ணனை விட்டுச் செல்லத் தமக்குச் சம்மதமென்றும் கூறினார். நாம ரூபங்களோடு தோன்றும் கண்ணன் மற்றெவரையும் போன்று ஓரளவே நிறையுடையனாயிருப்பனென்றெண்ணி சத்தியபாமையும் துலாக்கோல் கொண்டு வரச்செய்து ஒரு தட்டில் கிருஷ்ணனை வைத்து மற்றோர் தட்டில் தன்னிடமிருந்த பல்வேறு நகைகளையும் ஆபரணங்களையும் ஏனைய அணிகளையும் இட்டனள்.

தங்கம் என்றால் தாங்கக்கூடாததாயினும் ஏந்திச் சுமக்கும் மங்கையரினும் மாறுபடாத சித்தம் நிறைந்த சத்திய பாமா தனக்குரிய அணிகள் முதலிய யாவையுமிட்டும் கண்ணனிருந்த தட்டு உயர்ந்திலது. இன்னது செய்வதென்றறியாது பிரமை கொண்ட பாமா, மற்றவர்களிடம் சென்று இணங்கிய வரையில் பொன்னைக் கடனாகப் பெற்றிட்டும் கிருஷ்ணன் தட்டு உயர்ந்தபாடில்லை.

வழக்கம் போல் தம்மில்லங்கள் தோறும் பிரதிதினம் வந்து போகும் கோபாலன் அன்று வெகு காலம் தாழ்ந்தும் வாராமையால் கோபிகள் கவலையுற்று கிருஷ்ணனைத் தேடுவாராயினர். பல இடங்களில் தேடிப் பின்னால் சத்திய பாமையின் வீட்டில் நடக்கும் விஷயமறிந்து அதனுண்மையறிய அங்கு வந்து சேர்ந்தனர். நடந்ததை விசாரித்தறிந்து தமக்கும் கண்ணனின்றி காலம் கடத்துவது முடியாதென்னும் பாமரக் கொள்கையால், மையல் கொண்டோர் போல் தாமும் தத்தம்மிட மிருந்த ஆடகவணிகளைக் கொண்டு வந்து துலையிலிட்டனர். அப்படி இட்டும் என்? கண்ணன் தட்டு உயர்ந்திலது.

இதற்கிடையில் இச்செய்தி காட்டுத் தீப்போல் கோகுல மெங்கும் பரவியது. கிருஷ்ணனுடைய ஏனைய பாரியரும் இவ்விஷய மறிந்தனர். நிஷ்காமியமாய்க் கண்ணனிடம் உண்மையன்போடு அபிமானம் கொண்டுள்ள ருக்மணியும் இச்செய்தி யறிந்தனள். கேவலம் துராசையால் கிருஷ்ணன் தனக்கே வேண்டுமென்று பிறரடையாவாறு தனக்கெனவே கொள்ள எண்ணம் கொண்ட பாமாவின் செய்கையால் நேர்ந்துள்ளதைக் கண்டு மனம் நொந்து சர்வலோக சரண்யன் எங்குமுளன்; எவர்க்கு முளன் என்றுணர்ந்து உம்பர்க்கும் எவர்க்குமொத்து உலகெங்கும் பரந்துளானைத் தன் மனத்தூய்மையால் ஒரு துளசிதளத்தைமட்டு மிட்டு நிறை சரி செய்தனள். பாமாவுடையவும் கோபிகளுடையவும் நகைகள் அவரவர்களுக்கே திரும்பிச் சென்றன. கண்ணன் சிறிய துளசி தளத்தின் இடையளவே நின்றனன். எனினும் உண்மையன்பும் உயரிய பிரேமையும் மனத்தூய்மையும் நிறைந்த ருக்மணியின் நெஞ்சமும் சேர்ந்துளது. அதன் எடை அளக்கற்பாலதன்று; ஆயினும் அளவு கடந்த நிறையுளது.

இது ஒரு புராணக் கதை. இதில் ஈசன் வெளி வேஷத்தால் செய்யும் பூஜைகளையும் பெருமையையும் டம்பத்தையும் ஆடம்பரங்களையும் ஒரு சிறிதும் பொருட்படுத்துவதில்லையென்றும், மனத்தின் கண் எத்துணை மாசிலனா யிருக்கின்றானென்றும், அம்மனக் கோயிலைத் தனக்குத் தந்துள்ளானென்றும் நோக்குகின்றானென்பதும் போதரும். இப்பொருளையே விவிலிய நூலிலும் 'கடவுள் இராஜ்யம் உன்னுள்ளேயே இருக்கின்றது' என்று சொல்லியுள்ளது. தெய்வ வழிபாட்டில் நியதியோடும் நேரிய அன்போடும் தாமிருந்ததன்றி உலகத்தினருக்கும் தம் கருத்தை இயன்றவரை எளிதில் தெரிவிக்க முயன்ற பெரியார் தாயுமானவர் 'அல்லாமலிருகை தான் குவிக்கவெனிலோ நாணும் என்னுளம் நிற்றிநீ' என்றார். இதன்றியும் அறுபத்து மூன்று நாயன்மார்களில் அப்பூதியடிகள் சிவபெரு

மானுக்கு முனக்கோயில் கட்டிக் கண்டானந்தித்ததும் இந்நீர்மைத்தே. அதனையும் இவன் விளக்குவது விரியுமென்பதால் விடப்பெற்றது.

தன்னைத் தொழுவோர் மனத் தூய்மையோடு அவர் உள்ளத்தே தன்னை வைத்துப் பேணுவதுபோல் ஈசனும் மனத் தூய்மையோடுள்ளானென்று கொள்வதும் முறைமை. இவ்வுண்மையையும் விளக்கக் கண்ணன் சரிதையில் நிகழ்ச்சி யில்லாமலில்லை. கண்ணன் லீலைகளே நீதிபுகட்டவென வந்த நிகழ்ச்சிக் குறிப்புகளாதலின் மக்கள் தெரிந்துகொள்ள வேண்டியவை யாவும் அவன் செயல்களாகவே குறிப்பிடப்பெற்றுள்ளன.

பாண்டவர்கள், தமக்குத் தாயமாய்த் தந்த காட்டை மயன் உதவி கொண்டு சாலச்சிறந்த நகரங்களாக்கி வாழ்ந்து வந்தனர். அவ்வித முண்டாக்கிய இந்திரப் பிரஸ்தத்தில் தம் வெற்றியைக் குறிக்க வெனவும் உண்மை வழிபாட்டிற்காகவும் இராஜசூய மென்னும் யாக மியற்றினர். அவ்வியாகத்தில் வந்துள்ள பெரியார்களைப் பூசிப்பதும் அதிதிகளை கவனிப்பதும் கூட முக்கிய கடமைகள். ஆனல் அவ்விதம் பூஜிப்பதிலும் சில முறைகள் குறிக்கப் பெற்றுள்ளன. முதன்மை ஸ்தானமெனக் குறிக்கப் பெறும் அக்கிரபூஜையை யாருக்குச் செய்வதென யோசனை பிறந்த போது பாண்டவர் தமக்கு சகாயனுயுள்ள கண்ணனையே வணங்குவதென நிச்சயித்தனர். ஆனல் அத்தகைய பூஜையை நைஷ்டிகப் பிரம்மசாரியா யிருக்கு மொருவருக்குச் செய்தால் சிலாக்கிய மென்றும், எல்லா விதத்திலும் தகுதியுள்ள பீஷ்மருக்குச் செய்வது நல்லதென்றும், இடையர்களி லொருவனுகிய கிருஷ்ணனுக்குச் செய்வது யுக்தமற்றதென்றும் அங்குவந்திருந்தசிசுபாலன் சொன்னன். அதனைக் கேட்ட ஏனையோரும்கிருஷ்ணன் நைஷ்டிகப்பிரம்மசாரியல்லவா வென்று ஐயுற்றனர். சிலர், அஷ்டபாரிகளையும்கோபியரையுமுடைய கண்ணன் எங்ஙனம் நைஷ்டிகப் பிரம்மசாரியாக முடியும் என்றும் கூறினர். இதறிந்த கண்ணன் தமக்குப் பாதபூஜை செய்வதென வைத்திருந்த தட்டைத்தான் நைஷ்டிக பிரம்மசாரி யென்பது உண்மையாயின் சிசுபாலன் தலையைக் கத்தரிக்கட்டுமென்று எறிந்தார். உடனே சிசுபாலன் தலையும் அற்று வீழ்ந்ததென்பது புராணகதை.

இதனின்றும் நாமறியக் கிடப்பது கதையின் பொருத்த நிமித்தங்களல்ல. யாவரும் கொண்டாடும் ஈசனும் உண்மை நெஞ்சினனுயிருக்கின்றனனென்பதே. மனைவி மக்களின்றி தனிமையில் வாழும் ஒருவன் பிரம்மசாரியாக மாட்டான். சரீரத்தாலன்றி மனத்தாலேயே பிரம்மசரியத்தைஇழக்கலாம். மனத்தூய்மையே அவசியம். இப்போதையநம் நாட்டு அறிவிற்பெரியார் மஹாத்மா காந்தியடிகளும் கிரஹஸ்தாச்சிரமத்திலிருந்தும் அநேகவாண்டுகளாகவே பிரம்மசரியம் பூண்டொழுகுகின்றேனென்று கூறி நிரூபிக்கின்றனர். மனத் தூய்மைதான் மக்கள் வாழ்க்கைக்கு இன்றியமையாத பொக்கிஷம். ஒன்றுமில்லாத இடத்திலிருந்து என்றுமில்லாத இன்பமும் இசையும் உண்டாகும். மனத்தின்கண் குற்றமில்லா திருப்பதே உயர்ந்த தருமம். அதனாலேயே எல்லாவித புருஷார்த்தங்களையும் தானக வந்தடையும்படி செய்யலா மென்பது பெரியார் கூற்று.

உடலும் உயிரும்

—வித்துவான் எஸ். உமைதாணு பிள்ளை.

1 இன்ன தென்றே யானுன்னை
இன்னு மறியேன் உயிரே நான்
என்னை விட்டுக் கணப்பொழுதில்
இன்றே பிரிவாய் என்றறிவேன்.

2 எந்த விதமாய் எக்காலம்
எங்கே நாமும் சந்தித்தோம்
அந்தச் செய்தி அறியாமல்
ஐயோ! யானு மலைகின்றேன்.

3 இன்ப துன்ப மிரண்டிலும்யாம்
எந்த நாளும் பிரியாமல்
அன்ப ராகக் கூடி நின்றே
ஆண்டு பலவாய் வாழ்ந்திட்டோம்.

4 உண்மை நண்பர் பிரிவதினில்
உள்ள மடையு மாற்றத்தை
நண்ப! யானும் நவிலாதே
நன்று நீயு மறிவாயே!

5 என்னை விட்டுப் பிரியவுனக்
கேற்ற தருணம் வாய்க்கும்போ
தென்னை யறியா தேகிடயான்
இரங்கி யானும் வேண்டுகின்றேன்.

6 இந்த வேளை விடை சொல்லி
என்னை விட்டு நீங்கிடினும்
சிந்தை மகிழ மீண்டும் நாம்
சேர்ந்து கூடி வாழ்வோமே.

காதற் பிரிவு

—மு. ரா. லி.

அலை கடல் புடை கொளுமிவ்வவனியின் மக்கட் பிறவி தாங்கிய மாந்தர் நின்றாற்றும் துறையென முன்னோர் வகுத்தன, பிரமச்சரியம், கிருகஸ்தம், வானப்பிரஸ்தம், சந்நியாசம் என நான்காம். அன்னவற்றுள் ஏனைய மூன்றினுக்கும் ஆதரவு நல்குவதும் இம்மை மறுமைப் பயனை அடைதற் கேதுவாம் அறமுதலிய கருமங்களை யாற்றுதற்கு இடனாயுள்ளதும் கிருகஸ்த ஆச்சிரமமேயாம். அதுதானும்:—

துறந்தார்க்குந் துவ்வாதவர்க்கும்
இறந்தார்க்கும்
இல்வாழ்வான் என்பான் துணை.

தென்புலத்தார் தெய்வம்விருந்து
ஒக்கல் தான் என்றாங்கு என்னும்
ஐம்புலத்தார் ஓம்பல் தலை.

என்னும் தெய்வப் புலமைத் திருவள்ளுவர் தம்திருக்குறள் செப்பும்.

அத்தகைய இல்லற வாழ்க்கையைப் பழுதற நடத்துதற்குப் பொருட்டுணை முக்கியமாய் வேண்டப்படும். அறத்தாறு வழுவாது பொருளீட்டி இல்லற வாழ்க்கையைப் பழுதுறாது திறம்பட நடாத்திய செம்மைசால் அறிஞர் நம் முன்னையோர். அதுவும் காதலிருவர் கருத்தொருமித்து ஆதரவுபட்ட இன்ப வாழ்க்கையே இல்லறத்துக்கு இன்றியமையாததாம். அத்தகைய இன்ப வாழ்க்கை வாழ்ந்த காதலரிருவரின் அன்பியல் நாடகக் காட்சியொன்றைக் காணவிழைவீரேல் நண்பர்காள்! குறுந்தொகை யென்னும் கவின் பெறு இலக்கியக் குளிர் பூஞ்சோலையில் எம்மொடு வம்மின்!

உடலிரண்டுயிரொன்றென மருவிய காதலரிருவர் தம் இல்லற வாழ்க்கையைப் பழுதறச் சின்னாள் நடாத்திய வழி, பொருண்முட்டால் இனி வறியார்க் கீதலும் வருவிருந்தோம்புதலும் முதலிய கடனிற்குப் பொருளீட்டினாலன்றி இல்வாழ்க்கை யென்னும் இயல்புடைய இச்சகடம் செல்லாதென்று துணிந்ததும், மகன், தனதாருயிர்த் தலைவிக்கு இனியன புகன்று 'எனதாருயிரனையாய்! நமது இல்லற வாழ்க்கையை முட்டின்றி நடாத்த வேண்டும்; பொருளீட்டி விரைவின் மீள்வல். உளங்கவலற்க' என உரைத்துச் சேண்புகுந்தானாக, ஈண்டு தலைவனின் பிரிவு என்னும் காதற்றீயானது தகிக்க வாடுகின்றாளிம் மடவரலைத் தோழி தேற்றப் புகுகின்றாள்.

பொத்தில் காழ அத்த யாஅத்துப்
பொரியரை முழுமுத லுருவக்குத்தி
மறங்கெழு தடக்கையின் வாங்கி உயங்குநடைச்
சிறுகட் பெருநிரை யுறுபசி தீர்க்குந்

தடமருப்பியானை கண்டனர், தோழி!
கடன் கடன் இறீஇய ரெண்ணி இடந்தொறுங்
காமர் பொருட்பிணிப் போகிய
நாம் வெங் காதலர் சென்றவாறே.

(பலதிறத்தார் மாட்டும் தாம் செய்யக் கடவனவாகிய கடன்களைச் செலுத்தும் பொருட்டு விரும்பத்தக்க பொருளை ஈட்டும் ஆசையால் அகன்ற நாம் விரும்புங் காதலர் சென்ற காட்டு வழியில் உள்ளே, துணையில்லாதபடி வயிரத்தையும் பொரியரையையும் உடைய யாமரத்தின் மூலவேரை நன்றாய்ப் பாயும்படி கொம்பாற்குத்தி வலிமை பொருந்திய தனது விசாலமாகிய துதிக்கையினாலே பறித்தெடுத்து வருந்தும் நடையையும் சிறிய கண்களையும் உடைய பெரிய பெண்யானைகட்குக் கொடுத்து அவற்றின் மிகுந்த பசியைத் தவிர்க்கும் வளைந்த தந்தங்களையுடைய ஆண் யானைகளைக் காண்பர். ஆதலின் மேற்செல்லாது கடிதின் மீள்வர்)

ஆருயிர்த் தோழி நவில்கின்றாள், 'அம்ம! பொருள் ஈட்டும் ஆசையாற் சென்ற நங்காதலர் விரைவில் மீள்வர். ஏனெனில் அன்னவர் ஏகிய காட்டு வழி அத்தகைமைத்து. யாதெனின், பிடியும் களிறும் குலவி யுலவுமக் காட்டு வழியில் ஆண் யானையானது மெலிந்த நடையை யுடைய தனது பெண் யானையின் பசியைத் தவிர்க்கும் பொருட்டு வயிரஞ் செறிந்த யாமரத்தின் வேரைத்தனது தந்தத்தாற் குத்திப் பெயர்த்துத் தனது விசாலமாகிய துதிக்கையினால் அன்புடன் கொடுவந்து அப்பெண் யானைக்குக் கொடுத்து அதன் பசியைத் தீர்க்குங் காட்சியை நம்காதலர் காணுமற் போவரோ? அவ்வினிய காட்சியைக் காணுங்கால் நமது நினைவு அவர்க்குண்டாம் போழ்து நாம் இங்கு அவரை நினைந்து நினைந்து உருகும் பரிதாபக் காட்சி கற்றறிந்த உள்ளத்தராம் அவர்க்குத் தோற்றிடாதோ? அவ்வாறு தோற்றுங்கால் தன் உயிரினுமினிய நின் விரகநோய் தவிர்ப்பான் ஈண்டு விரைவில்வருவதல்லது மீண்டும் பொருள் நாடிச் செல்வரோ? செல்லார். செல்லார். விலங்கினங்களும் தத்தம் காதலியின் வருத்தங் காணச் சகியாது அவற்றின் துயர் தீர்க்க முயலும் காட்சியைக் காணும் நந்தலைவர் தமது ஆருயிர்த் தலைவியாம் நின் உள்ளநோய் தீராரோ? தீர்ப்பர். தலைவி! கவலற்க' எனத் தேற்றுவாளாயினள். ஈண்டுச் சிந்தித்தற் கொன்றுளது. அறத்தாறுவழாது இல்வாழ்க்கையை நடத்தல் வேண்டுமெனின் பொருள் இன்றியமையாததாய் நிற்கின்றது. அஃதுணராளோ இத்தோழி? உணர்வாள். எனின், எற்றுக்கோ அத்தலைவனைத் தன் கருமம் முற்றுமுன்னர் மீண் வர விழைகின்றாள்? ஐயம் பெரிதுடை இச்செவ்வியில் பொய்யாமொழிப் புலவர் பெருமானை வினாவிடில் மருட்கை நீக்குவார். செப்புவாரவர் :—

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது.

(ஒருவனது இல்வாழ்க்கை தன் துணைவிமேற் செய்யத்தகும் அன்பினையும் பிறர்க்குப்பகுத்துண்டலாகிய அறத்தினையும் உடைத்தாயின் அவ்வுடைமை அதற்குப் பண்பும் பயனுமாம்.)

பண்பின்வழி பயன் முகிழ்த்தலின் அன்பின் வழியதாகிய பண்புடை

மையை முற்கூறி அதன்பயனாக ஆற்றும் அறவழி நிற்றலைப்பிற் கூறினார். காதலனும் காதலியும் மாறுபாடின்றித் தம்முளொத்து இல்வாழ்க்கை நடத்துதற்கு அன்புடைமை முதற்கண் வேண்டப்படுதலின் அன்புடைமை பண்பாயிற்று. அப்பண்பின்வழி ஆற்ற நிற்றலின் அருளுடைமை பயனாயிற்று.

அன்புடைமை யென்னும் பண்பினாலன்றி அருளுடைமை யென்னும் பயன் எய்தாதாதலின் இங்குத் தோழியின் அவா இயற்கையே யாயிற்று. எவ்வாறெனின் தன் ஆருயிர்த்தலைவி தன் பிரிவு ஆற்றாளாய் உருகிக் கரைந்து உணர்வழிந்து கிடப்ப, இத்தலைவன் அன்னவன்பால் அன்புளா னேனும் அன்பிலான் போன்று சேண்புகுந்து பொருள் தேடப் புக்கா னெனில் இவன் மீளுமளவும் இத்தலைவி உயிர் தரித் திருந்திடி னன்றோ இவன் கொணரும் பொருட் குவைகொண்டு மீண்டும் இருவரும் இல்லறத்தை நடத்துதற்கியலும். இவ்வாறன்றித் தலைவனின் பிரிவாற்றாளாய்த் தலைவி இறந்து படுவாளெனின் இன்னவன் கொணர்ந்த பொற் குவையாற் பயன் யாதோ? பாவம்! இவ்வொருவன் எங்ஙன் தனது இல்வாழ்க்கை யென்னும் சகடத்தை இழுத்துச் செல்லற்கியலும்? இது பற்றியே அத்தோழி, தலைவன் விரைவில் மீண்டு, தலைவிக்கு மீளவுந் தேறுதல் கூறி ஆற்றுவித்துப் பொருள் வயிற்பிரிவானாயின், நலமிகப் பயக்குமென்னுங் கருத்துடனேயே, அவ்விதம் விரும்பினளாதல்வேண்டும்.

பொருள் வயிற்பிரியுந்தலை மகன்வருமளவும் பொறுமோரா. உயர்குல மங்கையர்! எனு மொருகடா விற்கு எதிர் தந்துளாள் வள்ளுவர்வாயாக ஓர் மாதராள். செப்புவாள்:—

செல்லாமை யுண்டேல் எனக்குரை மற்றுநின்
வல்வரவு வாழ்வார்க் குரை.

(நீயெம்மைப் பிரியாமை யுண்டெனின் அதை யெனக்குச் சொல். அல்லது, இப்பொழுது பிரிந்து போய் மீண்டும் விரைந்து வருவதைச்சொல்ல விரும்பிடில் அதுவரை உனதுவரவுக்கு எதிர்பார்த்து உயிர் வைத்திருக்கும் மடவாரிடஞ் சென்று அதைச் சொல்)

என்பாளாயின், பாவம், அத்தோழியின் அவாவைப் பேதைமை யென்னலாமோ?

வல்லரசுகளின் கப்பற் படைபலம்

	யுத்தக் கப்பல்கள்	க்ரூஸர்கள்	நாசகாரிகள்	ஆகாய விமானந் தூக்கிச்செல்லும் கப்பல்கள்	நீர் மூழ்கிக் கப்பல்கள்
பிரிட்டன்	15	64	174	7	55
பிரான்ஸ்	7	24	58	1	78
ஜெர்மனி	5	6	22	—	70
இத்தலி	4	21	60	—	102
ஜப்பான்	10	39	118	5	60
அமெரிக்கா	15	35	206	5	93



1939

ஜூலை

27 டான்ஜிக்கிலுள்ள யூதர்கள் தங்களுடைய வியாபார பாண்டுகளைத் தாங்களே நிருவகிக்கக்கூடாதென்று டான்ஜிக் செனெட் சபையார் தீர்மானித்திருக்கின்றனர்.

அமெரிக்காவுக்கும் ஜப்பானுக்கும் புதிய ஒப்பந்தம் ஏற்படுவதைப் பற்றிப் பேச்சு வார்த்தைகள் நடைபெறுகின்றன.

28 இந்தியாவிலிருந்து துருப்புகள் எகிப்துக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன.

அஸ்ஸாம் மாகாணத்தில் பிரதம காங்கிரஸ் தலைவராயிருந்த ஸ்ரீ டி. ஆர். பூக்கன் இறந்து விட்டார்.

இலங்கைப் பள்ளிக்கூடங்களில் ஆசிரியர்களா யிருக்கும் இலங்கைய ரல்லாதாரை அப்புறப்படுத்தி விடும முயற்சிகள் நடைபெறுவதாகத் தெரிகிறது.

வங்காளச் சிறைச்சாலைகளில் உண்ணாவிரதம் இருக்கும் அரசியல் கைதிகளை விடுதலைசெய்யும் பிரச்னையை முன்னிலைப்படுத்தி, காங்கிரஸ் மந்திரிகள் ராஜீநாமா செய்யத் தேவையில்லை யென்று பண்டித நேரு, பம்பாய்க் கூட்டமொன்றில் பேசினார்.

மகாத்மா காந்தி, எல்லைப்புறச் சுற்றுப் பிரயாணத்தை முடித்துக் கொண்டு சிவ கிராமத்திற்கு வந்துசேர்ந்தார்.

இன்று டோக்கியோவில் ஆங்கிலோ-ஜப்பானிய சமரஸப் பேச்சுகள் நடைபெற்றன. டீன்ட்ஸினிலுள்ள சீனர்களின் வெள்ளி நாணயச் சேமிப்பைத் தங்கள் வசம் ஒப்புவித்துவிட வேண்டுமென்று ஜப்பானியப் பிரதிநிதிகள் கூறுகிறார்கள்.

29 இன்று பாபு ராஜேந்திர பிரசாத்தும், மஹாதேவ தேசாயும், வங்காள மாகாணத்திலுள்ள அலிபூர், டம்டம் சிறைச்சாலைகளில் உண்ணாவிரதமிருக்கும் அரசியல் கைதிகளைச் சென்று பார்த்தார்கள்.

தென்னாப்பிரிக்காவில் இந்தியர்களுக்கு விரோதமாகச் செய்யப்படும் சட்டங்களைக் கண்டித்து, தொடங்கப்படப் போகும் சத்தியாக்கிரக இயக்கத்தைத் தற்காலிகமாக நிறுத்தி வைக்க வேண்டுமென்று மகாத்மா காந்தி, மேற்படி இயக்கத்தின் தலைவராகிய திரு. தாதுவுக்குத் தந்தி கொடுத்திருக்கிறார்.

1940ம் வருஷ ஆரம்பத்தில் நடக்க வேண்டிய தேர்தல்கள், இரண்டு வருஷ காலம் வரை தள்ளி வைக்கப்பட்டிருக்கின்றன வென்று பிரெஞ்சு அரசாங்கத்தார் உத்திரவிட்டிருக்கின்றனர்.

அஹிம்சா தர்மமும் நிர்மாண வேலைத்திட்டங்களும் காங்கிரஸின் அடிப்படையான கொள்கைகளா யிருந்து சரியான பயன் உண்டாக வில்லையென்று தெரிந்தால் இவற்றைப்பற்றி ஆலோசிக்க அ. இ. கா. கமிட்டியைக் கூட்டலாமென்று மகாத்மா காந்தி 'ஹரிஜன்' பத்திரிகையில் எழுதியிருக்கிறார்.

ஜப்பானுக்கும் அமெரிக்காவுக்கும் ஏற்பட்டிருந்த ஒப்பந்தம் ரத்து செய்யப்

பட்டணத்தைப்பற்றிச் சீனுவுக்குப் பரம திருப்தி என்று தெரிகிறது.

30 18 வயதுக்கு மேல் 50 வயதுக்குட்பட்டவர்கள் அனைவரும் வருஷத்தில் 15 நாட்கள் கட்டாய வேலை செய்ய வேண்டுமென்று ஸ்பெயினில் பிராங்கோ அரசாங்கத்தார் ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கின்றனர்.

31 ஆகஸ்ட் மாதம் முதல் தேதியிலிருந்து, இந்தியாவிலிருந்து இலங்கைக்குத்தொழில் திறமையில்லாதவர்கள் செல்லக் கூடாதென்று இந்தியா அரசாங்கத்தார் ஓர் அறிக்கை விடுத்திருக்கின்றனர்.

ஆகஸ்ட்

1 இந்தியா சட்ட சபையின் ஆயுள் 1939ம் வருஷம் அக்டோபர் மாதத்திலிருந்து ஒரு வருஷத்திற்கு நீடிக்கப்பட்டிருக்கிறது.

பம்பாயில் இன்று மதுவிலக்குச் சட்டம் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது. எல்லா மதுபானக் கடைகளும் மூடப்பட்டன. பொது ஜனங்கள் கிளர்ச்சி செய்ததன் காரணமாக போலீஸ்காரர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

பிரிட்டிஷ் பார்லிமெண்டில் என்ன பேசப்பட்ட போதிலும், அதைப் பொருட்படுத்தாமல், டான்ஜிக் பிரதேசம் ஜெர்மனிக்குள் போய்ச் சேர்ந்துவிடுமென்று ஜெர்மன் பத்திரிகைகள் எழுதுகின்றன.

ஹங்கேரியும் ருமேனியாவும் சந்திக்கிற எல்லைப்புறத்தில், இரண்டு நாட்டுத் துருப்புகளும் சச்சரவிட்டுக் கொண்டன.

வங்காள அரசியல் கைதிகள் இன்னும் உண்ணுவிரதத்தை அநுஷ்டித்துக் கொண்டிருப்பதைத்தாம் விரும்பவில்லையென்று மகாத்மா காந்தி ஓர் அறிக்கை விடுத்திருக்கிறார்.

போலந்து அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்காகச் சூழ்ச்சி செய்ததாக நூறு உக்ரேனியர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

சீனுவிலுள்ள பீகிங் நகரத்தில் வசிக்கும் பிரிட்டிஷாரிடம் வேலை செய்யும் சீனர்கள், உடனே தங்கள் வேலையை விட்டு விலகிவிட வேண்டுமென்று இவர்களுக்கு ஓர் அறிக்கை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

3 வங்காள உண்ணுவிரதக் கைதிகள், தங்கள் உண்ணுவிரதத்தை நிறுத்திக்கொண்டார்கள்.

4 சீனக்கடல் பக்கம் போதுமான கப்பற் படைபலம் இல்லாத காரணத்தினுல் தான் ஜப்பானைப் பிரிட்டன் எதிர்த்துப் போராடவில்லை யென்று பிரிட்டிஷ் பத்திரிகைகள் கூறுகின்றன.

இன்று லண்டனில் பெரிய வெடிகுண்டு விபத்து ஏற்பட்டது.

ஸ்பெயினிலுள்ள பாசிஸ்டகட்சிக்கு அதிகமான அதிகாரங்கள் கொடுத்திருப்பதாக தளபதி பிராங்கோ ஓர் அறிக்கை விடுத்திருக்கிறுன்.

சீனுவின் தற்போது தலைநகரமாயுள்ள சுங்கியாங் என்ற தலைநகரத்தின் மீது, ஜப்பானிய ஆகாய விமானங்கள் அநேக வெடிகுண்டுகளை வீசின. பிரிட்டிஷ் ஜெர்மன் ஸ்தானீகர் காரியாலயத்தில் சேதம் ஏற்பட்டது.

இந்தியாவில் மாகாணப் பொறுப் பாட்சி ஏற்பட்டதன் தொடர்ச்சியாக சமஷ்டியும் ஏற்பட வேண்டியது அவசியமென்று காமன்ஸ் சபையில் தளபதி மூர் ஹெட் கூறினுர்.

5 டீண்ட்ஸின் நகரத்தில் பிரிட்டிஷாருக்கு விரோதமான கலகங்கள் நடைபெற்றன. ஜப்பானியருடைய முற்றுகை பலப்படுத்தப்பட்டிருக்கிறது.

ஸ்பெயின் அரசாங்கத்திற்கு தளபதி பிராங்கோவை, சட்டரீதியான தலைவராகத்தெரிந்தெடுத்திருப்பதாக ஓர் அறிக்கை கூறுகிறது.

6 ஜர்மனியின் உரிமைகள் எந்த வகையால் பாதிக்கப்பட்டாலும் அதைச் சும்மா விட்டுப்போவதில்லை யென்றும், மற்றொரு

வார்சேல் ஒப்பந்தம் நிறைவேறப் பார்த்துக் கொண்டிருக்க முடியாதென்றும் தளபதி கோரிங் ஓரிடத்தில் கூறியிருக்கிறார்.

வங்காள அரசியல் கைதிகள், உண்ணாவிரதத்தை நிறுத்துமாறு செய்த சுபாஷ் பாபுவை, மகாத்மா காந்தி பாராட்டுகிறார்.

7 ஜெக்கோ ஸ்லோவேகியாவின் வீழ்ச்சிக்குப்பிறகு அமெரிக்காவில் சுற்றுப்பிரயாணஞ் செய்து கொண்டிருந்த டாக்டர் பெனேஷ், லண்டனுக்குத் திரும்பி வந்து ஜனநாயகத்தைப்பற்றி முதன் முதலாக ஒரு பிரசங்கம் செய்திருக்கிறார்.

8. சீனாவின் வட பாகம் இப்பொழுது ஏறக்குறைய ஜப்பானியருடைய ஆதிக்கத்தில் இருக்கின்றதல்லவா? இந்தப் பிரதேசங்களில் பிரிட்டிஷாருக்கு விரோதமான உணர்ச்சிகள் கிளப்பி விடப்பட்டிருக்கின்றன.

பிலிப்பைன் தீவுக்கு 1946ம் வருஷம் சுதந்திரம் கிடைப்பதென்று அமெரிக்காவின் பிரசிடெண்டான ரூஸ்வெல்ட் ஒரு மசோதாவில் கை யெழுத்திட்டார்.

இந்தியர்களின் குடியேற்றத்தைத் தடுப்பதென்கிற இலங்கை அரசாங்கத்தின் கொள்கைப்படி இன்று வரை, இந்தியர்களில் 800 பேருக்கு மேல் வேலை யில்லாமற் போய் விட்டது.

9 காங்கிரஸ் காரியக் கமிட்டி இன்று வார்தாவில் கூடியது, மத்திய மாகாணச் சட்ட சபையில் காங்கிரஸ் கட்சி அங்கத்தினரான உதோஜி என்பார், காங்கிரஸ் அங்கத்தினர் பதவிகூட வகிக்கக் கூடாதென்று ஒரு தீர்மானமும், சுபாஷ் சந்திர போஸ், அ. இ. கா. கமிட்டி தீர்மானங்களைக் கண்டித்து 9-7-39ல் கூட்டங்கள் நடத்தியதற்காக மூன்று வருஷ காலம், எந்த காங்கிரஸ் ஸ்தாபனத்திலும் உத்தியோகம் வகிக்கக்கூடாதென்று ஒரு தீர்மானமும், இந்தியப் பொது ஜனங்களின் அபிப்பிராயத்திற்கு விரோதமாக, இந்தியத் துருப்புகள் வெளி நாடுகளுக்கு அனுப்பப்பட்டதைக் கண்டிக்கும் பொருட்டு, காங்கிரஸ் கட்சி அங்கத்தினர்கள், இந்தியா சட்ட சபையின் கூட்டத்திற்குச் செல்லக் கூடாதென்று ஒரு தீர்மானமும், இவ்விதமாகச் சில முக்கியமான தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டன.

10 இன்றும் காங்கிரஸ் காரியக் கமிட்டி கூடி இலங்கை இந்தியர்களுக்கு அநுதாபஞ் செலுத்தி ஒரு தீர்மானமும், டெல்லி மாகாண காங்கிரஸ் கமிட்டியைக் கலைத்து விட்டதாக ஒரு தீர்மானமும் நிறைவேற்றின.

11 இத்தலிக்கும் ஜெர்மனிக்கும் உள்ள கூட்டுறவைப் பலப்படுத்த கவுண்ட் சியானோவும், வான் ரிப்பெண்ட்ராப்பும், ஸால்ஸ்பர்க் என்ற ஊரில் சந்தித்துப் பேசினார்கள்.

12 டீண்ட்ஸின் நகரத்தில் ஜப்பானியர்களால் சந்தேகிக்கப்பட்ட நான்கு சீனர்கள் இருக்கிறார்கள் என்றும் இவர்களைத் தங்கள் வசம் ஒப்புவித்துவிட வேண்டுமென்றும் ஜப்பானிய அரசாங்கத்தார் பிரிட்டிஷ் அரசாங்கத்தாரைக் கேட்கின்றனர்.

13 கவுண்ட் சியானோவும், வான் ரிப்பெண்ட்ராப்பும் சந்தித்ததன் பயனாக இத்தலிக்கும் ஜெர்மனிக்கும் ரோம் பெர்லின் அச்சைப்பலப்படுத்திக் கொள்ளும் விஷயத்தில் ஒற்றுமையான அபிப்பிராயங் கொண்டிருக்கின்றனவென்று தெரிகிறது.

14 டீண்ட்ஸின் நகரத்தில் பிரிட்டிஷாருக்கு விரோதமாகப் பலத்தகலகம் ஏற்பட்டது. ஐரோப்பிய வியாபார ஸ்தலங்கள் சில தாக்கப்பட்டன.

ப்ரேக் நகரத்தி லுள்ள யூதர்களுக்கு விரோமான பல தடையுத்திரவுகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன.

அரசாங்க உத்தியோகஸ்தர்கள், சரியாக 55 வது வயதில் 'ரிடையர்' ஆகவேண்டுமென்று பம்பாய் அரசாங்கத்தார் ஓர் உத்திரவு பிறப்பித்திருக்கின்றனர்.

15 துருக்கியில் ராணுவ முஸ்தீப்புகள் நடைபெறுகின்றன.

டீண்ட்ஸினிலுள்ள பிரெஞ்சுப் பிரதேசத்திற்குள் ஓர் அமெரிக்க ஸ்திரீ நுழையும்போது, அவரை ஒரு ஜப்பானியக் காவலாளி கன்னத்தில் அடித்து விட்டான்.

இத்தலியுடன் யூகோஸ்லேவியா எப்பொழுதும் ஒத்துழைக்கத் தயாராயிருப்பதாக யூகோஸ்லேவியாவின் பிரதம மந்திரி, முஸோலினிக்கு ஒரு செய்தி அனுப்பியிருக்கிறார்.

டான்ஜிக் சம்பந்தமாக யுத்தந் தொடுக்க வேண்டுவதில்லையென்று ஹிட்லரும் முஸோலினியும் அபிப்பிராயப் படுவதாகத் தெரிகிறது.

16 ஹாங்காங் தீவுப் பிரதேசத்தை ஜப்பானியர்கள் முற்றுகை யிடுவார்களென்று சொல்லப்படுகிறது.

ஜிப்ரால்டர் துறைமுகப் பிரதேசம், பிரிட்டனுடைய ஆதீனத்தில் இருப்பதை ஸ்பெயின் விரும்பவில்லையென்று ஜெர்மன் பத்திரிகையொன்று கூறுகிறது.

டான்ஜிக் காரணமாக, ஐரோப்பிய யுத்தம் ஏற்படாதென்று பிரிட்டிஷ் பத்திரிகைகள் நம்பிக்கையோடு கூறுகின்றன.

17 ஜூலை மாதம் 9ந் தேதி நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டதற்காக ஏன் ஒழுங்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ளக் கூடாதென்றும், அப்படிக் கலந்துகொண்டது தவறு என்று மன்னிப்புக் கேட்டுக்கொள்ள வேண்டுமென்றும் பம்பாயைச் சேர்ந்த பதினொரு காங்கிரஸ் வாதிகள் கேட்கப்பட்டனர். ஸ்ரீ நரிமன் உள்பட பதினொரு பேரும், தாங்கள் மன்னிப்புக் கேட்டுக்கொள்ள முடியாதென்று தெரிவித்து விட்டனர்.

புதிய உத்தியோகஸ்தர்களைத் தெரிந்தெடுப்பதற்காக 26-7-39ல் கூடிய வங்காள மாகாண காங்கிரஸ் கமிட்டி கூட்டம் செல்லுபடியாகாதென்று பாபு ராஜேந்திர பிரசாத் தீர்ப்புச் சொல்லி யிருக்கிறார்,

18 போலந்தில் ஜெர்மானியர்களுக்கு சொந்தமாயுள்ள எல்லா நிலங்களையும், அவரவர்களுடைய தேவைகளுக்குத் தகுந்தபடி பிரித்துக் கொடுக்க வேண்டுமென்று ஒரு போலந்து அரசாங்கத்தின் அறிக்கை கூறுகிறது.

ஜெர்மனியும் ஸ்லோவேகியாவும் ஒரு ராணுவ ஒப்பந்தம் செய்து கொண்டது. இதன்படி, ஜெர்மனியின் பாதுகாப்பின் கீழ் ஸ்லோவேகியா இருக்கும்.

ஹாங்காங் பிரதேசத்தின் மீது பதினைந்து ஜப்பானிய ஆகாய விமானங்கள் பறந்து சென்றன.

இன்று வங்காள மாகாண காங்கிரஸுக்கென்று புதியதொரு கட்டிடத்திற்கு ரவீந்திர நாத் டாகூரினால் அஸ்திவாரக் கல் நாட்டப்பட்டது. இந்தக் கட்டிடத்திற்கு 'மஹா ஜாதி சதனம்' என்று பெயர்.

19 சமஷ்டி விஷயமாக சுதேச மன்னர்கள் கொண்ட அபிப்பிராயங்களை அவர்கள் மாற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது.

20 ஐரிஷ் குடியரசுத் தலைவரான டிவேலரா, அமெரிக்காவில் சுற்றுப்பிரயாணஞ் செய்வாரென்று தெரிகிறது.

21 ருஷ்யாவும் ஜெர்மனியும் பரஸ்பர சிநேக ஒப்பந்தம் செய்து கொள்ளுமென்றும், வான் ரிப்பெண்ட்ராப் இது சம்பந்தமாக மாஸ்கோ நகரத்திற்கு ஆகாய விமானத்தில் செல்கிறாரென்றும் ஒரு செய்தி கூறுகிறது.

சீனா—ஜப்பானிய யுத்தத்தில், சீனாவிலுள்ள காட்டிங் என்ற ஊரில், 36 ஜப்பானிய ஆகாய விமானங்கள் வெடிகுண்டுகளை வீசி யெறிந்தன. சுமார் ஆயிரம் பேர் இறந்து போயினர் என்று சொல்லப்படுகிறது.

ஆங்கிலோ-பிரெஞ்சு பிரதிநிதிகளும், ருஷ்யப் பிரதிநிதிகளும், மாஸ்கோ நகரத்தில் ராணுவப் பிரச்னை சம்பந்தமாகக் கலந்து பேசினார்கள்.

22 ஐரோப்பிய நெருக்கடியைப்பற்றி ஆலோசிப்பதற்காக பிரிட்டிஷ் மந்திரிச் சபை இன்று கூடியது.

ருஷ்ய-ஜெர்மன் ஒப்பந்தம் ஏற்படுமாயின், அதனால் போலந்துக்குத் தான் கொடுத்த வாக்குறுதிகள் எவ்விதத்திலும் பாதிக்கப்படாதென்று பிரிட்டிஷ் அரசாங்கம் கூறுகிறது.

23 காங்கிரஸ் கட்சியின் நிருவாகத்தின் கீழுள்ள ஏழு மாகாணங்களின் பிரதம மந்திரிகளின மகாநாடொன்று இன்று புனாவில் கூடியது.

எந்த விதமான நெருக்கடிகள் ஏற்பட்டாலும், அதனைச் சமாளிக்கக்கூடிய சக்தி தன்னிடம் இருக்கிறதென்று பிரிட்டிஷ் அரசாங்கம் கூறுகிறது.

ஸ்லோவேகியா பிரதேசத்திலிருந்து எடுத்துக் கொள்ளப்பட்ட பிரதேசங்களை மீண்டும் தன்னிடம் கொடுத்துவிட வேண்டுமென்று ஸ்லோவேகியா மாகாணத்தின் தலை நகரான ப்ராடிஸ்லாவாவில் நடைபெற்ற ஒரு பொதுக்கூட்டம் தீர்மானித்திருக்கிறது.

போலந்தும் ஜெர்மனியும் சந்திக்கிற எல்லைப்புறத்தில் போலந்து துருப்புகளுக்கும் ஜெர்மன் துருப்புகளுக்கும் சண்டை நடைபெற்றது.

ஹாங்காங் தீவில், சீனர்கள் வசிக்கும் பிரதேசத்திற்கும் பிரிட்டிஷ் பிரதேசத்திற்கும் மத்தியில் உள்ள பாலத்தை உடைத்துப் போட வேண்டுமென்று ஜப்பானியர்கள் உத்திரவு செய்திருக்கின்றனர்.

ஐரோப்பிய அரசியல் நிலை நெருக்கடியாயிருப்பதன் காரணமாக, பிரிட்டிஷ் மன்னர் தம்பதிகள் பால்மோரலிலிருந்து லண்டனுக்கு வந்து சேர்ந்தனர்.

24 பிரிட்டனிலுள்ள அமெரிக்கர்கள் அனைவரும், அமெரிக்காவுக்குத் திரும்பிச் சென்றுவிட வேண்டுமென்று லண்டனிலுள்ள அமெரிக்க ஸ்தானீகர் உத்திரவு செய்திருக்கிறார்.

ஹெர் பாரஸ்டர், டான்ஜிக் பிரதேசத்தின் தலைவராக ஹிட்லரால் நியமிக்கப்பட்டிருக்கிறார்,

ஐரோப்பிய அரசியல் நிலைமையை விளக்கி நெவில் சேம்பர்லேன் காமன்ஸ் சபையில் நீண்டதொரு பிரசங்கம் செய்தார்.

இங்கிலாந்திலிருந்து, ஈயம், செம்பு முதலிய உலோகப் பொருள்கள் ஒன்றும் ஏற்றுமதி செய்யக் கூடாதென்று பிரிட்டிஷ் அரசாங்கத்தார் உத்திரவு செய்திருக்கின்றனர்.

ஹாங்காங்கிலுள்ள பிரிட்டிஷ் குடும்பத்தினர், கப்பலேறுவதற்காகச் சித்தமாயிருக்க வேண்டுமென்று பிரிட்டிஷ் அரசாங்கத்தாரின் அறிக்கை கூறுகிறது.

சமாதானத்தை ஏற்படுத்த எல்லா வகையாலும் முயற்சி செய்ய வேண்டுமென்று முஸோலினிக்கு, அமெரிக்காவின் பிரஸிடெண்டான ரூஸ்வெல்ட் ஓர் அறிக்கை விடுத்திருக்கிறார்.

முஸோலினி, தனது ராணுவத் தளகர்த்தர்களுடன் சர்வதேச நிலைமையைப் பற்றிக் கலந்து பேசினார்.

ஆங்கிலோ-ருஷ்ய ஒப்பந்தம் செய்து கொள்வதன் சம்பந்தமாக மாஸ்கோ நகருக்குச் சென்றிருந்த பிரிட்டிஷ் ராணுவ தளகர்த்தர்கள் உடனே லண்டனுக்குத் திரும்பி வந்துவிடும்படி உத்திரவு செய்யப்பட்டிருக்கிறார்கள்.

டான்ஜிக்

1938ம் வருஷம் ஆகஸ்ட் செப்டம்பர் மாதங்களில் எப்படி ஜெக்கோ-ஸ்லோவேகியா, ஐரோப்பிய நெருக்கடிக்கு ஒரு மூலகாரணமாயிருந்ததோ, அப்படியே 1939ம் வருஷம் ஆகஸ்ட் செப்டம்பர் மாதங்களில் ஏற்பட்டுள்ள ஐரோப்பிய நெருக்கடிக்கு டான்ஜிக் மூலகாரணமாயிருக்கிறது. இந்த டான்ஜிக் என்பது எங்கேயிருக்கிறது, அதன் விவகாரங்கள் என்ன வென்பதைப் பற்றிச் சிறிது தெரிந்து கொள்வோம்.

வார்சேல் சமாதான உடன்படிக்கைக்குப் பிறகு, ஐரோப்பாவில் ஜெர்மனிக்குச் சொந்தமாயிருந்த பல பிரதேசங்கள் பங்கிடப் பட்டன வல்லவா? அதில் ஒன்று டான்ஜிக். ஜெர்மனியின் கிழக்குப் பாகத்தை இரு துண்டாக்கி, இரண்டுக்கும் நடுவே ஒரு பிரதேசத்தைச் சிருஷ்டித்து இதனை போலந்தின் சுவாதீனத்திற்குட் படுத்தினார்கள். இந்த போலந்து பிரதேசத்திற்குக் கிழக்கிலும், கிழக்கு ப்ரஷ்யாவுக்கு மேற்கிலும் டான்ஜிக் என்ற பிரதேசம் உண்டு பண்ணப்பட்டது. டான்ஜிக்குக்கு மேற்கே, ஜெர்மனிக்குக் கிழக்கே, போலந்துக்குச் சொந்தமாயுள்ள பிரதேசத்திற்கு 'காரிடர்' (Corridor) என்று பெயர். இந்த 'காரிடர்' தான் பொமரேனியா மாகாணம். இதுவும், டான்ஜிக்கும், 1914ம் வருஷம் ஐரோப்பிய யுத்தம் வரையில் ஜெர்மனிக்குச் சொந்தமாயிருந்தன.

டான்ஜிக் என்ற இந்தப் பிரதேசம் 754 சதுர மைல் விஸ்தீரணமுடையது. இந்தப் பிரதேசத்தில் அநேக நகரங்களிருக்கின்றன. இவற்றுள் முக்கியமானதும், இந்தப் பிரதேசத்திற்குத் தலை நகரமாயிருப்பதுமானது டான்ஜிக் என்ற ஊர். இதனாலேயே இந்தப் பிரதேசத்திற்கும் டான்ஜிக் என்று பெயர் வந்தது. சென்னையைத் தலைநகராகக் கொண்ட மாகாணத்திற்குச் சென்னை மாகாணம் என்று நாம் சொல்ல வில்லையா? டான்ஜிக் பிரதேசத்தின் மொத்த ஜனத்தொகை 412,000; டான்ஜிக் நகரத்தின் ஜனத்தொகை 231,000.

ஐரோப்பிய யுத்தத்தின் போது, ருஷ்யாவின் ஆதிக்கத்துக்குட்பட்டிருந்த போலிஷ்காரர்கள், தங்களைப் பெரும்பாலோரான ஜனத்தொகையாகக் கொண்ட போலந்தைச் சுதந்திர நாடாக அங்கீகரிக்க வேண்டுமென்றும், பால்டிக் கடலோரத்தில், தங்களுக்கு ஒரு துறை முகப் பிரதேசம் வேண்டுமென்றும் கேட்டார்கள். அப்படியே போலந்து சுதந்திர நாடாக அங்கீகரிக்கப்பட்டது. அதற்குக் கடல் தொடர்பு இருக்க வேண்டுமென்பதற்காக, ஜெர்மனியின் கிழக்குப் பாகத்தை வெட்டி, அதற்கிடையில் ஒரு பிரதேசம் (காரிடர்) போலந்தின் சுவாதீனத்திற்கு விடப்பட்டது. கடல் தொடர்பு வேண்டுமென்ற இந்தக் கோரிக்கையைப் பூர்த்தி செய்வதற்காகவே, டான்ஜிக் என்ற 754 சதுர மைல் விஸ்தீரணமுள்ள பிரதேசம் தனி நாடாக்கப்பட்டது.

இந்தப் பிரதேசத்தின் அரசியல் நிருவாகம், சர்வதேச சங்கத்தின் மேற் பார்வைக்கு விடப்பட்டது. சர்வதேச சங்கத்தினால் நியமிக்கப் படும் ஒரு ஹை கமிஷனர் இந் நிருவாகம் செய்கிறார். 'செனெட்' என்றும், 'டையட்' என்றும் இரண்டு விதமான சட்ட சபைகள் உண்டு. பெயரளவுக்கு சர்வதேச சங்கத்தின் ஹை கமிஷனரின் மேற் பார்வையில் இருக்கிறதே தவிர, ஜெர்மானியர் களின் ஆதிக்கந்தான் இங்கு அதிகம். ஏனென்றால், ஜனத் தொகையில் 100க்கு 96 பேர் ஜெர்மானியர்.

டான்ஜிக் சம்பந்தமாக ஜெர்மனிக் கும் போலந்துக்கும் உள்ள தகரா றைச் சுருக்கமாகச் சில வரிகளில் கூறுவோம்.

டான்ஜிக்கில் போலந்துக்கு எவ்வித உரிமையுமே கிடையாது. இந்தப் பிரதேசம், ஜெர்மனியைச் சேர்ந்த ப்ரஷ்யா மாகாணத்தினுடைய தாகவே அநேக காலம் இருந்தது. தவிர, டான்ஜிக்கில் ஜெர்மானியரின் ஜனத்தொகையே அதிகம். போலந் துக்கார் மிகச்சொற்ப தொகையினர் தான். ஆகையால் போலந்து, இதில் உரிமையே கொண்டாட முடியாது. இது ஜெர்மனியின் கட்சி.

டான்ஜிக் பிரதேசத்தின் நடுவில் ஓடும் விஸ்டுலா நதியின் மீதுள்ள துறை முகம் இந்த டான்ஜிக் ஒன்றுதான். இதுதான் போலந்தின் ஜீவநாடி. பால்டிக் கடலோரமாக ஒரு துறை முகம் இருக்க வேண்டுவது போலந் துக்கு மிகவும் அவசியமாயிருக்கிறது. இந்தத் துறைமுகத்தின் மூலமாகத் தான் அது வெளியுலகத் தொடர்பு வைத்துக் கொள்ள முடியும். ஆகை யால், டான்ஜிக்கின் நிருவாகத்தில் போலந்துக்கும் பங்கு வேண்டும். இது போலந்தின் கட்சி.

தனக்குக்கடல் தொடர்பு வேண்டு மென்றுகூறுகிற போலந்தைப்பார்த்து ஜெர்மனி என்ன கூறுகிறதென்றால், 'ஏ! போலந்தே! உனக்குத்தான் கிட்னியா என்ற துறைமுகம் பால்டிக் கடலோரமாகச் சிருஷ்டித்துக் கொண்டு விட்டாயே. அதன் மூல மாக உன்னுடையவியாபாரம் செழிப் பாக நடைபெற்று வருகிறதே. இன் னும் உனக்கு ஏன் டான்ஜிக்' என்று கேட்கிறது. ஆனால் போலந்தோ, டான்ஜிக் கைவிட்டுக் கொடுத்து விட் டால் 'காரிடர்' பிரதேசமும் ஜெர் மனி வசத்திற்கே போய்விடு மென்றும் அதனுடன் கிட்னியா துறைமுகமும் அதன் கைக்குள் அகப்பட்டுக் கொண்டுவிடு மென்றும், எனவே, தனக்குக் கடல் தொடர்பே இல்லாமலே போய்விடுவ தோடு, தான் சுலபமாக ஜெர்மனி யினால் விழுங்கப்பட்டு அடிமைப்பட்டு விட்டுவிடும் என்று கூறி ... கொள்ளப்படலா மென்றும் கூறிப் பயப்படுகிறது.

டான்ஜிக்கின் பூர்வ சரித்திரத்தை சுருக்கமாகக் கவனிப்போமா? கி. பி. 1308ம் வருஷத்தில், டான்ஜிக் என்ற இந்தச் செழிப்புள்ள துறைமுகம், ட்யூடன் வம்சத்தினரின் வசமிருந் தது. 1455ம் வருஷம், போலந்தின் ஆதிக்கத்தின் கீழ் வந்தது. 1734ம் வருஷத்தில், ருஷ்யா, இதனைத் தன் சுவாதீனப் படுத்திக் கொண்டது. 1793ம் வருஷம் மீண்டும் ப்ரஷ்யா வசம் போய்ச் சேர்ந்தது. 1807ம் வருஷம் போலந்துக்கும், 1815ம் வருஷம் ப்ரஷ்யாவுக்கும்

முறையே மாறி மாறிப் போய்ச் சேர்ந்தது. 1918ம் வருஷம் சர்வ தேச சங்கத்தின் மேற்பார்வைக்கு வந்தது.

டான்ஜிக்குக்கும் இங்கிலாந்துக்கும் நீண்ட காலமாகவே வியாபாரத் தொடர்பு இருந்துகொண்டு வந்திருக்கிறது. இதற்காதாரமாக, இப்பொழுதும் டான்ஜிக் நகரத்தில் இங்கிலீஷ் தெரு, பழைய ஸ்காத்லாந்து புதிய ஸ்காத்லாந்து முதலிய பாகங்கள் இருக்கின்றன. பிரிட்டிஷ் வியாபாரிகளும் இங்கு அதிகம்.

டான்ஜிக், பால்டிக் கடலோரத்திலுள்ள முக்கியமான துறைமுகமென்று சொன்னோமல்லவா? இதில், போலந்துக்குத் தேவையான ஆகார வகைகள், விவசாயப் பொருள்கள், இயந்திர வகைகள் முதலியன வெளி நாடுகளிலிருந்து இறக்குமதியாகின்றன. நிலக்கரி, மரம், சர்க்கரை, தானிய வகைகள், இரும்பு, எஃகு முதலியன இங்கிருந்து ஏற்றுமதி செய்யப்படுகின்றது.

இப்பொழுது ஏற்பட்டிருக்கும் நெருக்கடியின் விளைவாக டான்ஜிக் யாருடைய வசத்தில் இருக்கும்? போலந்து வசமா? ஜெர்மனி வசமா?



கறுப்பு மை படிந்திருக்கும் பிரதேசந்தான் டான்ஜிக்.

இரண்டாவது வருஷம்

"ஜோதி"யின்

பைண்டு வால்யூம்

இரண்டு புஸ்தகங்களாக

தயாராகிவிட்டது.

விலை ரூபா 4—8—0

தபால் செலவு

பர்மாவுக்கு 1-6-0 இந்தியாவுக்கு 1-8-0

மலேயா முதலிய வெளி நாடுகளுக்கு ரூ. 2

தபால் செலவுடன் மணியார்டர் செய்யுங்கள்

ஜோதி பப்ளிஷிங் கம்பெனி, லிமிடெட்,

47, 31-வது வீதி, இரங்கோன்.

கலைமகள்

ஓர் உயர்ந்த மாதப் பத்திரிகை

(1932-ம் ஸூ ஆரம்பிக்கப்பட்டது)

தமிழ் நாட்டிலுள்ள சிறந்த அறிவாளிகளுடைய கட்டுரைகளோடு வெளி வருவது. அழகிய சித்திரங்கள், இனிய கட்டுரைகள், சுவையுள்ள கதைகள், சிறந்த தொடர் கதை, விஞ்ஞான சரித்திரம் சம்பந்தமான விஷயங்கள் முதலிய பல அருமையான பகுதிகளோடு உயர்ந்த முறையில் அச்சிடப்பெற்று மாதந்தோறும் தவறாமல் மலர்வது.

வருஷ சந்தா:

உள் நாடு	:	ரூ. 4-0-0
பர்மா	:	ரூ. 4-8-0
வெளி நாடு	:	ரூ. 6-0-0

தனிப் பிரதி அணா ஆறு.

கிடைக்கும் விலாசம்:—

மானேஜர், கலைமகள் காரியாலயம்,

மயிலாப்பூர் : : : : மதராஸ.

ஜோதி ஆசிரியர் வெ. சாமிநாத சர்மா எழுதியவை.

பிரபஞ்ச ஜோதி பிரசுரம்—6.	பிரபஞ்ச ஜோதி பிரசுரம்—7.
கமால் அத்தா தூர்க்	**பாலஸ்தீனம்**
விலை ரூ. 1-8-0	விலை 8 அணா.

பல ஐரோப்பிய யாத்ரீகர்களும், இலக்கிய கர்த்தாக்களும் ஆங்கிலத்தில் கமாலின் சரிதையை எழுதி யிருக்கிறார்கள். ஆனால், தமிழில் இதுதான் கமாலைப் பற்றி நல்ல ரீதியில் எழுதப்பட்டுள்ள முதல் புத்தகம். எளிய, உணர்ச்சி நிரம்பிய தமிழ் பாஷையில் எல்லோரும் புரியக் கூடிய விதமாக ஸ்ரீ சாமிநாத சர்மா கமாலின் கதையைச் சொல்லுகிறார். இன்றைய இந்தியாவின் அடிமைத்தனத்தை ஓட்டி வீரத்தை அளிக்க உதவும் நூல்களின் ஜாபிதாவில் இதுவும் சேர்க்கப்பட வேண்டும்—**ஹனுமான்,**

ஸ்ரீ சர்மாவின் மற்ற வெளியீடுகளுள் அத்தா தூர்க்கைப் பற்றியதே மிகச் சிறந்தது எனலாம்—**கலைமகள்.**

புத்தகத்தைப் படித்தால் மகா அலெக்ஸாந்தர் காலம் முதல் அராபிய துருக்கியில் ஒரு பகுதியாயிருந்த வரையில் இந் நாட்டின் கதி இப்படியே இருந்து வந்திருப்பதைக் காணலாம். மகா யுத்த சமயத்தில் துருக்கிக்கு எதிராக அராபியர்களை பிரிட்டிஷ்காரர் தூண்டியதிலிருந்தும் அரபு நாடுகளுக்கு சுதந்திரமளிக்கப்படும் என்று ஸர் மக்மோஹன் கூறியதிலிருந்தும் தங்களுக்குச் சுதந்திரம் கிடைக்கும் என பாலஸ்தீன அராபியர்கள் நம்பி ஏமாந்த கதையை ஆசிரியர் ஸ்ரீ சர்மா அழகாக வர்ணிக்கிறார்—**ஹிந்துஸ்தான்.**

திரு சர்மா அவர்களால் எழுதப்பட்டுள்ள மற்ற புத்தகங்களைப் போன்றே இதுவும் சிறந்து விளங்குகிறது. பாலஸ்தீனத்தைப்பற்றி அறிந்து கொள்ள வேண்டிய இன்றியமையாத சந்தர்ப்பம் இதுவே யாகும். இப்புத்தகம் ஒன்பது பகுதியாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. பாலஸ்தீனத்தின் தற்கால நிலைமையை உள்ளங்கை நெல்லிக்கனியாக விளக்கி நிற்கிறது. அரசியல் உலகில் ஆர்வமுற்று நிற்கும் தமிழ் மக்கள் உணர்ச்சியை எழுப்பும் இந்நூலைப் படிக்கக் கடமைப் பட்டிருக்கின்றனர்—**குமரன்.**

பிரபஞ்ச ஜோதி வரிசையில்.		ரூ. அ. ப.
1—	முஸோலினி	1—4—0
2—	அபிசீனிய சக்ரவர்த்தி	0—8—0
3—	ஹிட்லர்	2—4—0
4—	ஸ்பெயின் குழப்பம்	0—10—0
5—	ஜெக்கோ ஸ்லோவேகியா	1—0—0

கிடைக்கும் இடங்கள்:—

1. சென்னை 'சண்டே டைம்ஸ்' புக்ஸ்டால்கள்
2. பாரதி பிக்சர் பாலேஸ், காரைக்குடி.
3. சுதேசி நிலையம். 38, மார்க்கெட் ஸ்ட்ரீட் சிங்கப்பூர்.
4. P. சிவகுரு பிரதர்ஸ், தபால்பெட்டி 225, கோலாலம்பூர்.
5. வேதம் கம்பெனி, மோகல் தெருவு, இரங்கூன்.

பாரத பந்தர், புத்தக வியாபாரிகள்,
47, 31வது வீதி, இரங்கூன்.

கலப்பற்றது

அறுசுவை உண்டிக்கு அவசியமானது.

PURE ROSE BRAND ANNASUDHI
LINGAM & Co. COIMBATORE

ரோஜா மார்க்கு

அசல் அன்ன சுத்தி

புத்தம் புதிய வெண்ணையில் உத்திர வாதத்துடன் கைபடாமல் தயாரிக்கப்பட்டது.

ஒரு முறை வாங்கி உபயோகித்தால் உண்மை விளங்கும்.

நிகரற்றது

எல்லா கடைகளிலும் கிடைக்கும்.

பர்மா சோல் ஏஜெண்டுகள் :—

வேதம் அண் கோ.,

89, முகல் வீதி, ரங்கூன்.

விலையோ சரசம்!
வாடையோ அதி உன்னதம்!!
பெயர் பெற்றதோ அதிகம்!!!
} அது யாது?

மேல் நாட்டு பிரன்ச் சென்டுகளில், வாடையிலும், பெயராலும், விலையிலும், சிறு பிள்ளைகள் முதல் வயோதிகர் வரை நன்குணர்ந்த செட்டியார் மயில் மார்க்கு சென்டுகளை உபயோகித்து ஆனந்தமடையுங்கள்.

ஒரு முறை பரீக்ஷியுங்கள்.

குறிப்பு:—மயில் மார்க்கும் செட்டியார் என்ற பெயரையும் கவனித்து வாங்கக் கேட்டுக் கொள்கிறோம்.

சிங்கப்பூர், பினாங், முதலிய மலாய் பிரதேசங்களுக்கும் பர்மாவைச் சேர்ந்த ஜில்லாக்களிலும் தக்க திறமையுள்ள ஏஜண்டுகள் தேவை தக்க கமிஷன் கொடுக்கப்படும். விபரத்துக்கு எழுதவும்.

பர்மா சோல் ஏஜண்டு:—

பெங்களூர் அகர்பத்தி வாசனை சாலை,

119 மொகல் வீதி, இரங்கூன்.